வருங்காலத் தமிழுலகம்,
“பழங்காலத் தமிழர்கண்ட
அறிவியல் செய்திகள் உண்டு”
என்பதை உணர்ந்து,
தமிழ் வழியிலே சிந்தித்தும்
கலைச் சொற்களைப் படைத்தும்
நூல் ஆக்கம் செய்ய வேண்டும்.
தம் ஆய்வுகளையும் கண்டுபிடிப்புகளையும்
தமிழிலேயே எழுதி, அவற்றை
உலக நலனுக்குப் பிற மொழிகளில்
பெயர்க்கும் கடைப்பிடியைக்
கொள்ள வேண்டும் என்பவற்றுக்குத்
தூண்டலாக இச்சுவடி வரையப்படுகிறது.

\- இரா. இளங்குமரனார்

2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017

19

இளங்குமரனார் தமிழ்வளம்

இளங்குமரனார்

# தமிழ்வளம்

19



தமிழர் வாழ்வியல் இலக்கணம்

இளங்குமரனார்

# தமிழ்வளம்

## 19

## தமிழர் வாழ்வியல் இலக்கணம்

*ஆசிரியர்*

*முது முனைவர்* **இரா. இளங்குமரன்**

**வளவன் பதிப்பகம்**

*சென்னை - 600 017.*

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **இளங்குமரனார் தமிழ்வளம் - 19** |
| ஆசிரியர் | : | இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : | இ. இனியன் |
| பதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16+ 272 = 288 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **270/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை ஓவியம் | : | ஓவியர் மருது |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**வளவன் பதிப்பகம்**

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

# பதிப்புரை

இலக்கிய இலக்கணச் செம்மல் முதுமுனைவர் **அய்யா இளங்குமரனார்** அவர்கள் எழுபத்தைந்து ஆண்டு நிறைவு எய்தியதைப் போற்றும் வகையில் தமிழ் இளையர்க்கென்று அவர் எழுதிய நூல்களையெல்லாம் சேர்த்து எழுபத்தைந்து நூல்கள் கடந்த 2005 - ஆம் ஆண்டு திருச்சித் திருநகரில் வெளியிட்டு எம் பதிப்புப் பணிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.

அந்த வகையில் 2010 - ஆம் ஆண்டு இப்பெருந் தமிழாசான் 81 - ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் தமிழ்மொழி - இன - நாட்டின் காப்பிற்காகவும், மீட்பிற்காகவும், மேன்மைக்காகவும் இவர் எழுதிய அனைத்து அறிவுச் செல்வங் களையும் தொகுத்துப் பொருள் வழிப் பிரித்து 20 தொகுதிகளாக வெளியிட்டுள்ளோம். மதுரைத் தமிழ்ச் சங்கச் **செந்தமிழ் இதழுக்கும்,** சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திவரும் **செந்தமிழ்ச் செல்வி, குறளியம்** மற்றும் பிற இதழ்களுக்கும், மலர்களுக்கும் இவர் எழுதிய அறிவின் ஆக்கங்களைத் தொகுத்துத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளோம்.

இப்பெருமகன் வாழும் காலத்திலேயே இவர் எழுதிய எழுத்துக்கள், பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது என்பது தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் போற்றி மகிழ்வதற்கான, அனைவரும் பின்பற்றுவதற்கான அரும்பெரும் தமிழ்ப் பணியாகும்.

இவர் தந்நலம் கருதாமல் தமிழ் நலம் காத்து வருபவர். தம்மைமுன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தும் பெருந்தமிழறிஞர். தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்பவர். ஒருநாளின் முழுப் பொழுதும் தமிழாகவே வாழும் தமிழ்ப் போராளி. சங்கச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அருந்தமிழறிஞர். தமிழ் இலக்கண - இலக்கிய மரபைக் காத்து வரும் மரபு வழி

அறிஞர். ஆரவாரம் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் படாடோபம் இன்றியும், விளம்பரப் போலிமை இன்றியும், தமிழ் மொழியின் ஆழ அகலங்களை அகழ்ந்து காட்டும் தொல்தமிழறிஞர். மொழிநூல் கதிரவன் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வில் அவர் காட்டிய வழியில் தம் தமிழாய்வைத் தொடர்பவர்.

இவர் எழுதிக் குவித்த தமிழ் அறிவுச் செல்வங்களை அவரிடமே வேண்டிப் பெற்று 20 தொகுதிகளாக **இளங்குமரனார் தமிழ் வளம்** எனும் தலைப்பில் பொருள்வழிப் பிரித்து வெளியிடு கிறோம். தமிழாய்வுக் களத்தில் தம் ஆய்வுப்பயணத்தைத் தொடங்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் தங்கத் தட்டில் வைத்துப் பொற் குவியலாகத் தந்துள்ளோம். எம் தமிழ் நூல் பதிப்புப் பயணத்தில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வையும், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளையும், மொழிநூல் கதிரவன் பாவாணரையும், தமிழ்க் மொழிக் காவலர் இலக்குவனாரையும் வழிகாட்டியாகக் கொண்டு தமிழ் நூல் பரப்பின் எல்லையைக் கண்டு காட்டும் சங்கத்தமிழ்த் சான்றோராக விளங்கும் ஐயா இளங்குமரனார் வாழும் காலத்திலேயே அவர் நூல்களை வெளியிடுவதை யாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். தமிழர் இல்லம்தோறும் இருக்கத் தக்க இவ்வருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் இளம் தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம்.

**“ ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்**
**முன்னேற்றம் ஒவ்வொன்றும்**
**உன்முன் னேற்றம்!**

.......... .....

**இதுதான்நீ செயத்தக்க**
**எப்பணிக்கும் முதற்பணியாம்**
**எழுக நன்றே.”**

எனும் பாவேந்தரின் தமிழியக்க உணர்வுகளை நெஞ்சில் ஏந்தி வாழ முற்படுவோம்.

- பதிப்பாளர்.

# பெறும் பேறு

**வளம்** *எங்கே இருக்கிறது?*

*வளம் எங்கேயும் இருக்கிறது! அஃது இல்லாத இடமே இல்லை!*

*வளம் எங்கும் இருப்பதை எப்படி அறியலாம்?*

*வளத்தைத் தேடும்* **உளம்** *இருந்தால், வளம் எங்கேயும் இருப்பதை அறியலாம்?*

*வளத்தின் அளவு என்ன?*

***வளத்தின் அளவும் உளத்தின் அளவேயாம்!***

*உளத்தில் வளம் இல்லையானால், உள்ள வளமும் உடையவனுக்கும் உதவாது ஊருக்கும் உலகுக்கும் உதவாது!*

*வளத்தைத் தரும் உளத்தை ஒருவர் வாய்க்கப் பெற்றால் போதும்!*

**அவ்வளம் குன்றியளவானால் என்ன?**

**குன்றத்தனைய வளமானால் என்ன?**

**தினை அளவானால் என்ன?**

**பனை அளவானால் என்ன?**

**வளம் வளமே!**

*தேனீ வளம்? தினைத்தனை அளவுப் பூவில், தேனீ கொள்ளும் தேன் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணரும் தேன் வளம் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணர்வதே வளம், தேனீ கொணர்வது வளமில்லை என எவராவது கூறுவாரா?*

*வளம் வளமே! அவரவர் உழைப்பு, அறிவுத்திறம், உண்மையறிவு, பட்டறிவு, கால-இட-சூழல் கொடை- ஆகியவற்றைப் பொறுத்தது அது.*

**பொருள் மட்டுமா வளம்?**

**புலமை வளமில்லையா?**

*ஊக்குதல் உதவுதல் உறுதுணையாதல் ஒன்றுதல் ஆயவை - வளமில்லையா?*

*எல்லாம் வளமே! "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம். (உரி.7) உடலாலும் வளம்; உழைப்பாலும் வளம்; உணர்வாலும் வளம்; உரையாலும் வளம்; "**வளம் பட** வாழ" வேண்டாதார் எவர்? **வளம் பெற** வேண்டாதார் எவர்?*

**"வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்"**

*என்பது சிலம்பு! வளத்தின் அளவு, "**அளந்து கடை அறியாவளம்**" என்பது (25:33-34)*

**"நாடென்ப நாடா வளத்தன"**

*என்பது நாட்டின் இலக்கணம்! **எளிமை, இனிமை, இறைமை, நிறைமை** என மக்கள் வாழ்ந்த நாள் இலக்கணம்! இன்றோ,*

**நானில வளங்களையும் நாடா நாடில்லை!**

**எந்த நாடு ஏற்றுமதி செய்யவில்லை?**

**எந்த நாடு இறக்குமதி செய்யவில்லை?**

*பாலைவளத்தை நாடிச்சோலை நிற்றல் வெளிப்படை என்றால், சொல்வானேன்?*

*நாடாவளத்தில் குப்பைக்கீரை சேராதா? குறுந்தூறு சேராதா?*

**வளத்தை வழங்குதல் தான் பிறவிக் கடனே யன்றி அளவிடும் பொறுப்பு வழங்குவார்க்கு இல்லை! பெறுவார் பொறுப்பு.** *ஆனால்,*

*வளம் பெற்றுப் பெற்றுப் பெருகி வாழ்ந்தவர், அவ்வளத்தைத் தமக்கு வழங்கிய மண்ணுக்கு மறித்து வழங்கிப் 'பெற்ற கடனைத் தீர்க்காமல் போனால்' கடன்காரராகவே போவது மட்டுமன்றி, பிறவி அடையாளமே இல்லாமலும் போய்விடுவார்!*

*பெற்றவர் வழியாகக் கருவிலே பெற்ற திரு என்ன! கற்ற கல்வியால் பெற்ற வளம் என்ன! பட்டறிவால் - ஆழ்மன ஆய்வால் - தேடிக் கொண்ட வளங்கள் என்ன என்ன!* **பிஞ்சுப் பருவ முதல் பெரும் பிரிவு வரை பெற்றவற்றை, அந்நிலைப்பருவத்தர்க்குப் பருவமழை போலப் பலப்பல வகையாலும் வழங்குதல் வாழ்வார் வாழ்வுச் சீர்மையாதல் வேண்டும்!**

*புரிவு தெரிந்த நாள் முதல் புலமை பெருகிவரும் அளவுக்குத் தகத்-தகத் தொல்காப்பியர் ஆணை வழி,*

**"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"**

*என்னும்* **நால்நெறிக் கடன்களையும் நிறைவேற்றல் வேண்டும்! கூற்றையும் ஆடல் கொள்ளும் கொள்கை இதுவென உணர்வார் ஓயார், ஒழியார்; சாயார்; சரிந்தும் போகார்!**

*என் இளந்தைப் பருவமே, ஆசிரியப் பருவமாகிவிட்டது. அக்காலச் சூழல் அது.*

*பிறந்தநாள் : **30.01.1930***

*ஆசிரியப் பணி ஏற்ற நாள்: **08.04.1946***

*கால் சட்டை போடும் மாணவப்பருவத்தில் வேட்டி கட்டும் ஆசிரியனாகி விட்டேன்! "மூன்றாண்டு ஆசிரியப் பணி செய்தால் போதும்! புலவர் தேர்வைத் தனியாக எழுதலாம்" என்னும் வாய்ப்பு! அவ்வாய்ப்பைச் சிக்கெனப் பற்றியமையால்* ***1949, 1950, 1951*** *ஆகிய மூவாண்டுகளில் தொடர்ந்து நுழைவுத் தேர்வு, புலவர்*

இடைநிலைத் தேர்வு, புலவர் நிறை நிலைத் தேர்வு எனச் சிறப்புற வெற்றி வாய்ப்பு எய்தியது. உயர்பள்ளி, மேல்பள்ளி என்பவற்றிலும் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுக் களத்திலுமாக ஏறத்தாழ 43 ஆண்டுகள் தமிழ்வாழ்வாக வாழ வாய்த்தது. தமிழ்த்தொண்டும், தமிழ்நெறித் தொண்டும் என்றும் விடுதல் அறியா விருப்பொடு செய்து கொண்டிருத்தலே இயற்கையோடு இயைந்த வாழ்வாகி விட்டது!

புலமைத் தேர்வுக்குரிய பாடத்தளவிலோ, நூல்களின் அளவிலோ என் கல்வி நின்றது இல்லை! தொல்காப்பியம் முதல் இற்றைநாள் நூல்கள் வரை இயன்ற அளவால் தமிழ்வளம் பெறுதலை நோன்பாகக் கொண்டு கற்கும் பேறுபெற்றேன். பேராசிரியர் சி.இலக்குவனார், மொழிஞாயிறு பாவாணர், நாவலர் ச.சோ.பாரதியார், வரலாற்றுச் செம்மல் அரசமாணிக்கனார், பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமியார், மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார், தாமரைச் செல்வர் வ.சுப்பையனார், ஈரோடு வேலா, குழித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி, பதிப்புச் செம்மல் மெய்யப்பனார், பாரதி சோ.சாமிநாதனார், தமிழ்ப்போராளி இளவழகனார், தமிழ் மீட்புக்குத் தலைநின்ற ஆனாரூனா, பாவாணர் அறக்கட்டளையர் கோவலங்கண்ணனார், மலையக மாரியப்பனார் இன்னர் நெருக்கத் தொடர்புகள் வாய்த்தன.

இளந்தைப் பருவத்திலேயே பாவேந்தர், ஓகி சுத்தானந்த பாரதியார், கவிமணியார், கவிராச பண்டித செகவீர பாண்டியனார், அறிஞர் மு.வ. ஆயோர் அரிய காட்சியும் சின்முறைச் சந்திப்புகளும் என்னுள் பசுமை நல்கின.

தமிழ்ப் பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும், குடும்பச் சடங்குகளும் என் மீட்டெடுப்புப் பணிகள் ஆயின!

எம் குடும்பக் கடமைகள் எம் பணியையோ தொண்டையோ கவர்ந்து கொள்ளா வகையில் இனிய துணையும் மக்களும் அமைந்தனர்.

அதனால், காலமெல்லாம் கற்கவும் கற்பிக்கவும் நூல் படைக்கவும் வாய்த்த வாய்ப்புப் பெரிதாயிற்று.

"அன்பும் அறிவும்" என்னும் நூல் தொடங்கிச் செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம் எனத் தொடர்ந்து ஏறத்தாழ 400 நூல்கள் இயற்றவும் வெளியிடவும் வாய்த்தன.

குழந்தை நூல்கள், நூலக நூல்கள், ஆய்வு நூல்கள், அகராதிகள், உரைநூல்கள், பதிப்பு நூல்கள், பா நூல்கள், காப்பியங்கள், கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள் இலக்கண நூல்கள் எனப் பலப்பல திறத்தனவாய்ப் பால் வாய்ப் பருவத்தர் முதல் பல்கலைக் கழக ஆய்வர் வரைக்கும் பயன் கொள்ளும் வகையில் அவை அமைந்தன.

எதை எடுத்தாலும் பாடலாக்கல் ஒருகாலம்; கதையும் நாடகமும் ஆக்கல் ஒருகாலம்; பதிப்புப் பணியே ஒரு காலம்; உரை காணலே ஒரு காலம்; படிப்படியே சொல்லாய்வே வாழ்வென ஆகிவிட்ட காலம் என அமைந்தன.

இக் கொடைகள் வழங்கியவை பாரதி பதிப்பகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணி பதிப்பகம், முருகன் பதிப்பகம், வேலா பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வேமன் பதிப்பகம், மூவேந்தர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்மண் பதிப்பகம், அமிழ்தம் பதிப்பகம், வளவன் பதிப்பகம், மாணவர் பதிப்பகம், அமிழ்தமணி பதிப்பகம், திருவள்ளுவர் தவச்சாலை அறக்கட்டளை வெளியீடுகள் என விரிந்தன.

நூலுருப் பெற்று அச்சக வழியும் பதிப்பக வழியும் காணப்பெறாமலும் எதிர்பாரா மறைவுகளாலும் ஏறத்தாழச் சிறிதும் பெரிதுமாய் ஒழிந்தவை இருபதுக்கு மேல் ஆயின.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பாவை, குறள் நெறி, குறளியம், மலர்கள், ஆய்வரங்கங்கள் எனக் கட்டுரைகள் பெருகின. அச்சுக்கு வாராதவையும் ஆகின! இவை என்றும் ஒருமுகமாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

எம் நூல்கள் எம்மிடமே முப்பதுக்குமேல் இல்லாமல் மறைந்தன. எழுதியன எல்லாவற்றையும் ஒருமுகமாகப் பெறப் பலர் அவாவினார். தவத்திரு **ஆத்துமானந்த அடிகளார்**

(ஆருயிர்க்கு அன்பர்) **அதில் தலைப்பட்டு நின்றார். ஆயர் ஆண்டகை சூசைமாணிக்கனார் சுடரேற்றினார்.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் வழங்கியது. அதற்கு மகிழ்வுற்ற வகையால் பாவாணர் தமிழியக்கம் முதலாம் அமைப்புகளும், முனைவர் **திருமாறனார் முதலாம்** ஆர்வலர்களும் விழா ஒன்று எடுத்தனர். அவ்விழாத் தலைமையைத் திருத்தகு துணைவேந்தர் **பொன்னவைக்கோ** ஏற்றார். தவத்திரு ஆத்துமானந்த அடிகளார் வாழ்த்துரைத்தார். பொறிஞர் தமிழறிஞர் **பாலகங்காதரனார்** என் நூல்கள் சிலவற்றை ஒளிப்படியாக்கி உயரட்டைக் கட்டில் வழங்கி அவற்றை முழுதுறப் பெற மீளச்சிடுதல் வேண்டும் என்றார். தமிழாக்கப் பதிப்பே வாழ்வாக ஒன்றிய இளவழகனார் முழுதுற அச்சிட ஒப்பினார். அடிகளார் வெளியீட்டுப் பொறுப்பு ஏற்பதாகக் கூறினார். கிடைக்கும் நூல்கள் தவிர்த்துப் பிறவற்றையெல்லாம் அச்சிடும் திட்டம் கொண்டு ஏறத்தாழ இருபது, இருபது தொகுதிகளாக வெளியிடுவது என உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வகையில் வாய்ப்பதே, **“இளங்குமரனார் தமிழ்வளம்”** என்னும் இத் தொகை நூல்களாம்! இத் தொகையில் விடுபடும் நூல்கள் கட்டுரைகள், பாடல்கள் பல்லபல. தொகுக்க வாய்க்கா வகையில் கிட்டாவகையில் மறப்பு வகையில் விடுபாடுடையவை உள. எனினும் தொண்ணூறு விழுக்காடேனும் ஒரு முகமாகப் பெறும் பேறு வாய்க்கின்றது என்பது மகிழ்வூட்டுவதாம்!

மக்கள் வாழ்வு வளர்நிலையது! நூல்களும் வளர் நிலையவை! ஆதலால் ஒருவாழ்வுக் கொடை மட்டுமன்று ஈது; ஒருவாழ்வு பெறத் தக்க பல்பருவக் கொடையுமாம் எனல் சாலும்! இதன் அடிப்படையாம் எத்தேடலிலும் பெரிதும் தோயாமல் தமிழ்வளத் தேடலிலேயே காலமெல்லாம் சோம்பலைச் சுட்டெரித்து, இடுக்கணுக்கு இடுக்கண் ஆக்கி வாழ்ந்த வாழ்வுக் கொடையாம் இது!

இவ்வளத்தை முழுதுற எண்ணின் ஒன்று உறுதியாக வெளிப்படும். “நலவாழ்வு நல்வாழ்வு கருதாத - இயற்கை இறைமைப் பொதுமை கருதாத - எப்படைப்பும் எம்படைப்பில் இரா” என்பதேயாம். இவற்றைப் பயில்வார் பெறும் பேறும் அதுவாக அமையின் அப்பேறே யாம் **பெறும் பேறாம்.**

*இவ்வளம் வெளிவர விரும்பினோர் உழைத்தோர் உதவினோர் ஆய அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்! வாழிய நலனே! வாழிய நிலனே!*

*"நெல்லுக்கு உமியுண்டு"*

*"நீருக்கு நுரையுண்டு"*

*"புல்லிதழ் பூவுக்கும் உண்டு"*

*"குறைகளைந்து நிறை பெய்து"*

*"கற்றல், கற்போர் கடனெனல் முந்தையர் முறை"*

*இன்ப அன்புடன்,*
***இரா. இளங்குமரன்***

# முன்னுரை

*தமிழ் இலக்கணம், மொழி பற்றி மட்டும் கூறி அமைவது இல்லை. தமிழர் வாழ்வியல் விளக்கமாக மொழி அமைந்தமையைத் தொல்காப்பியம் தெளிவாகக் கூறும். அதன் பொருளதிகாரம், முழுநூறு தமிழர் செவ்விய வாழ்வியல் செப்பேடு என்பது வெளிப்படை.*

*குடும்ப வாழ்வுக்கு 'அகம்' என்ற அருமையும் குடும்ப வாழ்வு விரிவாக்கமாம். வெளிவாழ்வுக்குப் 'புறம்' என்ற பெற்றிமையும் எண்ணுதோறும் இன்பச் சுரப்பாம்.*

*திணை என்னும் கட்டொழுங்கே வாழ்வு என்று தெளிந்து அகத்திணை புறத்திணை ஆகிய இரண்டும் அறநெறிக்கு உட்படுத்திக் கட்டிக்காக்கும் திறம் வாழ்வியல் வல்லார் பாராட்டுக்கு உரியதாம்.*

*'அரசு' என்னும் அமைப்பும், காவல் கடனும், கலை விளக்கமும், அவாவறுத்த மெய்யுணர்வு மேன்மையும், ஆன்ம நேயப் பார்வையின் விழுப்பமும், அருளியல், பொருளியல், அறிவியல் மேம்பாடுகளும் எல்லாம் நாம் மூவாயிரம் ஆண்டு களுக்குப்பின் வந்தும், அன்று கொண்டிருந்த நெறிமை இன்றும் அறிந்து கொண்டு போற்றும் சீர்மையில் இலங்கித் திகழ்வது தொல்காப்பியமேயாம்.*

*எழுத்தின் பெயர் சுட்டுமாற்றாலே மெய்ப்பொருள் காட்ட இயலுமா?*

*உயிரியல் இயக்கம் உடலியல் நிலை என்பவற்றைத் தெளிவாக்க முடியுமா?*

*மக்கள் இயல் செயல் மாற்றங்கள் நேர்வகையை விளக்கக் கூடுமா?*

சொல்லமைப்பிலேயே அதன் அடிமூலப் பொருள் வழியை விளக்க வாய்க்குமா?

தனிவாழ்வியக்கம் கூட்டு வாழ்வு நாட்டு வாழ்வு இயக்க மென மாற்ற முறுங்கால், எய்த வேண்டும் பண்பாட்டுச் சீர்மை அளவீடு என்ன?

- இவற்றை எல்லாம் நிலைமாறாது நின்று காட்டும். மலையென வெளிப்படக் காட்டி வியப்புறச் செய்யும் விழுப்பம் தொல்காப்பியம் போல ஒன்றற்கு இல்லை என்பதை மற்றை மற்றை இலக்கணங்களையும் மொழிகளையும் கற்றுத் துறைபோயவர் காட்டுதல் வியப்புக்குரியதாம்.

வழூவுதல் அமைந்த வண்ணனை மொழிநூலரும், தம் ஆய்வுக்குத் தொல்காப்பியக் களஞ்சியத்தில் இடமுண்டு என்று என்னும்போது வியப்பாக உள்ளது.

அத்தகு வான்கூடமாக அமைந்து தமிழர் வாழ்வியல் காட்டும் தொல்காப்பியத்தில் அவ்வப்போது கலந்து விட்டதும், கலக்கப்பட்டதுமாம் அழுக்குகளை அகற்றும் முயற்சியும் - மூலத்தைச் சிதைக்காத முயற்சியும் - மேற்கொள்ளப்பட்ட பெற்றிமையது இவ்வாழ்வியல் இலக்கணம் என்பதைச் சுட்டி அமைதல் முறையாம்.

இந்த அருமையான வெளியீட்டை எழிலொழுகும் வகையில் அச்சிட்டு தமிழர் கைகளில் தவழவிடும் தனித்தமிழ்த் தோன்றல் திரு. **இளவழகனாரின் துணைவியார் இ. வளர்மதிக்கு** இனிய நன்றி.

தமிழ்த் தொண்டன்
**இரா. இளங்குமரன்**

# உள்ளடக்கம்


பதிப்புரை ................................................................ iii

பெறும் பேறு ................................................................ v

முன்னுரை ................................................................


## நூல்


**தமிழர் வாழ்வியல் இலக்கணம்**

1. தொல்காப்பியம் ................................................................ 1
2. எழுத்ததிகார இயலமைதி ................................................................ 14
3. எழுத்ததிகார வாழ்வியல் விளக்கம் ................................................................ 16
4. பாயிரம் – தெளிவுரை ................................................................ 18
5. சொல்லதிகார இயலமைதி ................................................................ 25
6. சொல்லதிகார வாழ்வியல் விளக்கம் ................................................................ 28
7. பொருளதிகார இயலமைதி ................................................................ 35
8. பொருளதிகார வாழ்வியல் விளக்கம் ................................................................ 41
9. இளம்பூரணர் ................................................................ 107
10. நச்சினார்க்கினியர் ................................................................ 115
11. சேனாவரையர் ................................................................ 116
12. தெய்வச்சிலையார் ................................................................ 125
13. கல்லாடர் ................................................................ 128
14. பேராசிரியர் ................................................................ 132

# தமிழர் வாழ்வியல் இலக்கணம்

# தொல்காப்பியம்

பழந்தமிழ் நூல்களின் வழியே நமக்குக் கிடைத்துள்ள முழு முதல் இலக்கண நூல் தொல்காப்பியமே. ஆசிரியர், தொல்காப்பியம் என்னும் நூலை இயற்றியமையால்தான் தொல்காப்பியன் எனத் தம் பெயர் தோன்றச் செய்தார் என்பதைப் பாயிரம் "தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி" என்று தெளிவாகக் கூறுகிறது.

தொல்காப்பியம் 'பழமையான இலக்கண மரபுகளைக் காக்கும் நூல்' என்பதற்குப் பலப்பல சான்றுகள் இருப்பவும், 'பழமையான காப்பியக்குடியில் தோன்றியவரால் செய்யப்பட்டது' என்னும் கருத்தால், "பழைய காப்பியக்குடியில் உள்ளான்" என நச்சினார்க்கினியர் கூறினார்.

பழைய காப்பியக்குடி என்னும் ஆட்சியைக் கண்டு 'விருத்த காவ்யக்குடி' என்பது ஒரு வடநாட்டுக்குடி என்றும், பிருகு முனிவர் மனைவி 'காவ்ய மாதா' எனப்படுவாள் என்றும் கூறித் தொல்காப்பியரை வடநாட்டுக் குடி வழியாக்க ஆய்வாளர் சிலர் தலைப்படலாயினர். இம்முயற்சிக்கு நச்சினார்க்கினியர் உரையின் புனைவையன்றி நூற் சான்றின்மை எவரும் அறியத்தக்கதே. இவ்வாய்வுகளையும் இவற்றின் மறுப்புகளையும் **தமிழ் வரலாறு** முதற்றொகுதி[1] (பக். 255 - 257) **தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி**[2] (பக். 2, 3) **தமிழிலக்கிய வரலாறு** - தொல்காப்பியம்[3] (பக்.17-23) என்பவற்றில் கண்டு கொள்க.

### காப்பியர்

தொல்காப்பியர் சிறப்பால் அவர் வழிவந்தவரும், அவரை மதித்துப் போற்றியவரும் அவர் பெயரைத் தம் மக்கட்கு இட்டுப் பெருக வழங்கின ராதல் வேண்டும். இதனால் காப்பியாற்றுக் காப்பியன், வெள்ளூர்க் காப்பியன் என ஊரொடு தொடர்ந்தும், காப்பியஞ் சேத்தன், காப்பியன் ஆதித்தன் எனக் காப்பியப் பெயரொடு இயற்பெயர் தொடர்ந்தும் பிற்காலத்தோர் வழங்கலாயினர். இனிப் பல்காப்பியம் என்பதொரு நூல்

---

1. இரா. இராகவ ஐயங்கார் 2. மு. இராகவ ஐயங்கார்
3. க. வெள்ளைவாரணனார்

என்றும் அதனை இயற்றியவர் பல்காப்பியனார் எனப்பட்டார் என்றும் கூறுவார் உளர். அப்பெயர்கள் 'பல்காயம்' என்பதும் பல்காயனார் என்பதுமேயாம்; படியெடுத்தோர் அவ்வாறு வழுப்படச் செய்தனர் என்று மறுப்பாரும் உளர்.

### தொல்காப்பியர் தமிழ் நாட்டாரே

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும்" ஆய்ந்து, தமிழியற்படி "எழுத்தும் சொல்லும் பொருளும்" ஆகிய முப்பகுப்பு இலக்கணம் செய்தவரும்,

*"போந்தை வேம்பே ஆரென வரூஉம்*
*மாபெருந் தானையர் மலைந்த பூவையும்"* (1006)

*"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*
*நாற்பெய ரெல்லை அகத்தவர் வழங்கும்*
*யாப்பின் வழியையும்"* (1336)

*"தமிழென் கிளவியும் அதனோ ரற்றே"* (385)

எனத் தமிழமைதியையும்,

*"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"* (884)

என வடவெழுத்துப் புகாது காத்தலையும் கூறிய தொல்காப்பியரை வலுவான அகச்சான்று வாய்த்தால் அன்றி வடநாட்டவர் என்பது வரிசை இல்லை என்க. இனி, சமதக்கினியார் மகனார் என்பதும் திரணதூமாக் கினியார் இவர் பெயர் என்பதும் பரசுராமர் உடன் பிறந்தார் என்பதும் நச்சினார்க்கினியர் இட்டுக் கட்டுதலை அன்றி எவரும் ஒப்பிய செய்தி இல்லையாம்.

### தொல்காப்பியப் பழமை

சங்க நூல்களுக்குத் தொல்காப்பியம் முற்பட்டதா? பிற்பட்டதா? ஆய்தல் இன்றியே வெளிப்பட விளங்குவது முற்பட்டது என்பது. எனினும் பிற்பட்டது என்றும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு அளவினது என்றும் குறித்தாரும் உளராகலின் இவ்வாய்வும் வேண்டத் தக்கதாயிற்று.

தொல்காப்பியர் பரிபாடல் இலக்கணத்தை விரிவாகக் கூறுகிறார். அவ்விலக்கணத்துள் ஒன்று, கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்து என்னும் நான்கு உறுப்புகளையுடையது அது என்பது. மற்றொன்று, காமப் பொருள் பற்றியதாக அது வரும் என்பது.

இப்பொழுது கிடைத்துள்ள பரிபாடல்கள் இருபத்திரண்டனுள் "ஆயிரம் விரித்த" என்னும் ஒரே ஒரு பாடல் மட்டும் பலவுறுப்புகளை யுடையதாக உள்ளது. எஞ்சிய பாடல்கள் இருபத்து ஒன்றும் உறுப்பமைதி

பெற்றனவாக இல்லை. பரிபாடல் திரட்டிலுள்ள இரண்டு பாடல்களுள் ஒரு பாடல் பலவுறுப்புகளை யுடையதாக உள்ளது. மற்றது உறுப்பற்ற பாட்டு.

பரிபாடல் காமப் பொருள் பற்றியே வரும் என்பது இலக்கணமாக இருக்கவும் கடவுள் வாழ்த்துப் பொருளிலேயே பதினைந்து பாடல்கள் வந்துள்ளன. பரிபாடல் உயர் எல்லை நானூறடி என்பார். கிடைத்துள்ள பரிபாடல்களில் ஒன்றுதானும் சான்றாக அமையவில்லை. இவற்றால் அறியப்படுவது என்ன?

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள இலக்கணங்களையுடைய பரி பாடல்கள் இவையில்லை. அவ்விலக்கணங்களையுடைய பரிபாடல்கள் இறந்தொழிந்தன. தலைச்சங்கத்தார் பாடியதாக வரும் 'எத்துணையோ பரிபாடல்களின்' அமைதியைக் கொண்டது தொல்காப்பிய இலக்கணம். ஆதலால், பாடலமைதியாலும் பொருள் வகையாலும் இம்மாற் றங்களையடைய நெடிய பலகாலம் ஆகியிருக்க வேண்டும் என்பதே அது.

தொல்காப்பியர் குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி என்பவற்றை எழுத்தளவு வகையால் சுட்டுகிறார். அவ்வடிவகை கட்டளை யடி எனப்படும். அவ்வாறாகவும் சங்கப் பாடல்கள் சீர்வகை அடியைக் கொண்டனவாக உள்ளனவேயன்றிக் கட்டளை யடிவழி யமைந்தவையாக இல்லை. முற்றாக இம்மாற்றம் அமைய வேண்டுமானால் நெட்ட நெடுங்கால இடைவெளி ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

தொல்காப்பியர் நேர், நிரை அசைகளுடன் நேர்பசை, நிரைபசை என்பவற்றையும் குறிக்கிறார். இந்நேர்பசை நிரைபசையை வேறு எவ் விலக்கண ஆசிரியரும் கொண்டிலர்; நேர் நிரை என்னும் இருவகை அசை களையே கொண்டனர். கட்டளையடி பயிலாமை போலவே, இவ்வசை களும் பயிலாமை தொல்காப்பியப் பழமையை விளக்குவதேயாம். யாப்பருங்கலத்திற்கு முற்பட்டது காக்கைபாடினியம். அந்நூலிலும் அவிநயம் முதலிய நூல்களிலும் இவ்விருவகை அசைகளும் இடம் பெறாமையால் இவற்றுக்கு மிகமுற்பட்ட நூல் தொல்காப்பியம் என்பது விளங்கும். காக்கைபாடினிய வழிவந்ததே யாப்பருங்கலம் ஆதலின் அதன் பழமை புலப்படும்.

பாட்டுயாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, வாய்மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, முதுசொல்யாப்பு என எழுவகை யாப்புகளை எண்ணுகிறார் தொல்காப்பியர் (1336). இவற்றுள் பாட்டுயாப்பு நீங்கிய எஞ்சிய யாப்புகள் எவையும் சான்றாக அறியுமாறு நூல்கள் வாய்த்தில. ஆகலின் அந்நிலை தொல்காப்பியத்தின் மிகுபழமை காட்டும்.

பேர்த்தியரைத் தம் கண்ணெனக் காக்கும் பாட்டியரைச் ‘சேமமட நடைப் பாட்டி’ என்கிறது பரிபாட்டு (10:36-7). பாட்டி என்பது பாண்குடிப் பெண்டிரைக் குறிப்பதைச் சங்கச் சான்றோர் குறிக்கின்றனர். ஆனால், தொல்காப்பியம் “பாட்டி என்பது பன்றியும் நாயும்” என்றும் “நரியும் அற்றே நாடினர் கொளினே” என்றும் (1565, 1566) கூறுகின்றது. பாட்டி என்னும் பெயரைப் பன்றி நாய் நரி என்பவை பெறும் என்பது இந் நூற்பாக்களின் பொருள். முறைப்பெயராகவோ, பாடினியர் பெயராகவோ ‘பாட்டி’ என்பது ஆளப்படாத முதுபழமைக்குச் செல்லும் தொல் காப்பியம், மிகு நெட்டிடைவெளி முற்பட்டது என்பதை விளக்கும். இவ்வாறே பிறவும் உள.

சங்கச் சான்றோர் நூல்களில் இருந்து சான்று காட்டக் கிடையாமை யால் உரையாசிரியர்கள் “இலக்கணம் உண்மையால் இலக்கியம் அவர் காலத்திருந்தது; இப்பொழுது வழக்கிறந்தது” என்னும் நடையில் பல இடங்களில் எழுதுவாராயினர். ஆதலால், சங்கச் சான்றோர் காலத்திற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்பது வெள்ளிடைமலையாம்!

“கள் என்னும் ஈறு அஃறிணைக்கு மட்டுமே தொல்காப்பியர் காலத்தில் வழங்கியது. அது திருக்குறளில் ‘பூரியர்கள்’ ‘மற்றையவர்கள்’ எனவும் கலித்தொகையில் ‘ஐவர்கள்’ எனவும் வழங்குகின்றது. ‘அன்’ ஈறு ஆண்பாற் படர்க்கைக்கே உரியதாகத் தொல்காப்பியம் கூறுகின்றது. இரப்பன், உடையன், உளன், இலன், அளியன், இழந்தனன், வந்தனன் எனத் தன்மையில் பெருவரவாகச் சங்கநூல்களில் இடம் பெற்றுள்ளன.

“தொல்காப்பியத்தில் வழங்காத ஆல், ஏல், மல், மை, பாக்கு என்னும் இறுதியுடைய வினையெச்சங்கள் சங்கநூல்களில் பயில வழங்குகின்றன.

“தொல்காப்பியத்தில் வினையீறாக வழங்கப்பட்ட ‘மார்’, ‘தோழிமார்’ எனப் பெயர்மேல் ஈறாக வழங்கப்பட்டுள்ளது.

“வியங்கோள்வினை, முன்னிலையிலும் தன்மையிலும் வாராது என்பது தொல்காப்பிய விதி. அவற்றில் வருதலும் சங்கப் பாடல்களில் காணக்கூடியது.

“கோடி என்னும் எண்பற்றித் தொல்காப்பியத்தில் குறிப்பு இல்லை. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பனபோல எண்ணுப் பெயர்கள் (ஐ அம் பல் என்னும் இறுதியுடையவை) வழங்குவதைச் சுட்டும் அவர், கோடியைக் குறித்தார் அல்லர். சங்கப் பாடல்களில் கோடி, ‘அடுக்கியகோடி’ என ஆளப் பெற்றுள்ளது. ஐ, அம், பல் ஈறுடைய எண்ணுப் பெயர்கள் அருகுதலும் சங்க நூல்களில் அறிய வருகின்றன.

*"சமய விகற்பம் பற்றிய செய்திகள், சமணம் புத்தம் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் இல்லை. ஆனால் சங்க நூல்களில் இவற்றைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. எழுத்து சொல் ஆகிய அளவில் நில்லாமல் வாழ்வியலாகிய பொருள் பற்றி விரித்துக் கூறும் தொல்காப்பியர் காலத்தில் இவை வழக்கில் இருந்திருந்தால் இவற்றைக் கட்டாயம் சுட்டியிருப்பார். ஆகலின் சமண, பௌத்தச் சமயங்களின் வரவுக்கு முற்பட்டவரே தொல் காப்பியர். ஆதலால் தொல்காப்பியர் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதே யன்றிப் பிற்பட்டதாகாது." இக்கருத்துகளைப் பேரா. க. வெள்ளைவாரணரும் (தமிழிலக்கிய வரலாறு - தொல்காப்பியம், பக். 87 - 96), பேரா.சி. இலக்குவனாரும் (தொல்காப்பிய ஆராய்ச்சி, பக். 12 - 14) விரித்துரைக்கின்றனர்.*

*சிலப்பதிகாரத்தால் இலங்கை வேந்தன் கயவாகு என்பான் அறியப்படுகிறான். அவன் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டு என்பர். அச் சிலப்பதிகாரத்தில் 'திருக்குறள்' எடுத்தாளப்பட்டுள்ளது. ஆகலின் திருக்குறள் சிலப்பதிகாரக் காலத்திற்கு முற்பட்டது என்பது வெளிப்படை. இளங்கோவடிகள் காலத்து வாழ்ந்தவரும், மணிமேகலை இயற்றியவரும், சேரன் செங்குட்டுவன் இளங்கோவடிகள் ஆகியோருடன் நட்புரிமை பூண்டவரும், 'தண்டமிழ் ஆசான் சாத்தன்' என இளங்கோவடிகளாரால் பாராட்டப்பட்டவருமாகிய கூலவாணிகன் சாத்தனார், திருவள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்றும், திருக்குறளைப் 'பொருளுரை' என்றும் குறித்துக் கூறிப் பாராட்டுகிறார். ஆகலின், சிலப்பதிகார மணிமேகலை நூல்களுக்குச் சில நூற்றாண்டுகளேனும் முற்பட்டது திருக்குறள் எனத் தெளியலாம்.*

*அத் திருக்குறளுக்கு முப்பால் கொள்கை அருளியது தொல்காப் பியம். 'அறமுதலாகிய மும்முதற் பொருள்' என்பது தொல்காப்பியம். 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' என வருவதும் தொல்காப் பியம். அது வகுத்தவாறு அறம் பொருள் வழக்காறுகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளதுடன், இன்பத்துப்பாலோ, புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனத் தொல்காப்பியர் சொல்லும் உரிப்பொருள் ஐந்தற்கும் முறையே ஐந்தைந்து அதிகாரங்களாக 25 அதிகாரங்கள் கொண்டு முற்றாகத் தொல்காப்பிய வழியில் விளங்க நூல் யாத்தவர் திருவள்ளுவர். ஆகலின் அத்திருக்குறளின் காலத்திற்குப் பன்னூற்றாண்டு முற்பட்ட பழமையுடையது தொல்காப்பியம் என்பது தெளிவுமிக்க செய்தியாம். திருக்குறள் 'அறம்' என்று சுட்டப்பட்டதுடன், குறள் தொடர்களும் குறள் விளக்கங்களும் பாட்டு தொகை நூல்களில் இடம் பெற்ற தொன்மையது திருக்குறள். அதற்கும் முற்பட்டது தொல்காப்பியம்.*

இனித் தொல்காப்பியத்தில் வரும் 'ஓரை' என்னும் சொல்லைக் கொண்டு தொல்காப்பியர் காலத்தைப் பின்னுக்குத் தள்ள முயன்றவர் உளர். ஓரை அவர் கருதுமாப்போல 'ஹோரா' என்னும் கிரேக்கச் சொல் வழிப்பட்டதன்று. அடிப்பொருள் பாராமல் ஒலி ஒப்புக் கொண்டு ஆய்ந்த ஆய்வின் முடிவே அஃதாம்.

'யவனர் தந்த வினைமாண் நன்கலம்' இவண் வந்ததும், அது 'பொன்னொடு வந்து கறியொடு (மிளகொடு)' பெயர்ந்ததும், 'யவன வீரர் அரண்மனை காத்ததும்' முதலாகிய பல செய்திகள் சங்க நூல்களில் பரவலாக உள. அக்காலத்தில் அவர்கள் 'தோகை' 'அரி' முதலிய சொற்களை அறிந்தது போல அறிந்து கொண்ட சொல் 'ஓரை' என்பது. அச்சொல்லை அவர்கள் அங்கு 'ஹோரா' என வழங்கினர்.

கிரேக்க மொழிச் சொற்கள் பல தமிழ்வழிச் சொற்களாக இருத்தலைப் பாவாணர் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஓரை என்பது ஒருமை பெற்ற - நிறைவு பெற்ற - பொழுது. திருமணத்தை முழுத்தம் என்பதும், திருமண நாள் பார்த்தலை முழுத்தம் பார்த்தல் என்பதும், திருமணக் கால்கோளை 'முழுத்தக்கால்' என்பதும், 'என்ன இந்த ஓட்டம்; முழுத்தம் தவறிப்போகுமா?' என்பதும் இன்றும் வழக்கில் உள்ளவை. முழுமதி நாளில் செய்யப்பட்ட திருமணமே முழுத்தம் ஆயிற்று. இன்றும் வளர்பிறை நோக்கியே நாள் பார்த்தலும் அறிக.

ஆராய்ந்து பார்த்து - நாளும் கோளும் ஆராய்ந்து பார்த்து - 'நல்லவையெல்லாம் ஒன்றுபட்டு நிற்கும் பொழுதே நற்பொழுது' என்னும் குறிப்பால் அதனை ஓரை என்றனர். இத்திறம் அந்நாள் தமிழர் உடையரோ எனின்,

*"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்*
*பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்*
*வளிதிரிதரு திசையும்*
*வறிது நிலைஇய காயமும்*
*என்றிவை சென்றளந் தறிந்தோர் போல,*
*இனைத்தென்போரும் உளரே"*

என்னும் புறப்பாடலை அறிவோர் ஓரையைப் பிறர்வழியே நம் முன்னோர் அறிந்தனர் என்னார். உண்கலத்தைச் சூழ வைத்திருந்த பக்கக் கலங்களை, "நாள்மீன் விரவிய கோள்மீனுக்கு" உவமை சொல்லும் அளவில் தெளிந் திருந்த அவர்கள், ஓரையைப் பிறர் வழியே அறிந்தனர் என்பது பொருந்தாப் புகற்சியாம்.

**தொல்காப்பியர் சமயம்**

தொல்காப்பியனார் சமயம் பற்றியும் பலவகைக் கருத்துகள் உள. அவர் சைவர் என்பர். சைவம் என்னும் சொல் வடிவம் மணிமேகலையில் தான் முதற்கண் இடம் பெறுகிறது. பாட்டு தொகைகளில் இடம் பெற்றிலது. சேயோன், சிவன் வழிபாடு உண்டு என்பது வேறு. அது சைவ சமயமென உருப்பெற்றது என்பது வேறு. ஆதலால் தொல்காப்பியரைச் சைவரெனல் சாலாது.

இனி, முல்லைக்கு முதன்மையும் மாயோனுக்குச் சிறப்பும் தருதல் குறித்து 'மாலியரோ' எனின், குறிஞ்சி முதலா உரிப்பொருளும் காலமும் குறித்தல் கொண்டு அம் முதன்மைக் கூறும் பொருள்வழி முதன்மை எனக் கொள்ளலே முறை எனல் சாலும்.

தொல்காப்பியரை வேத வழிப்பட்டவர் என்னும் கருத்தும் உண்டு. அஃதுரையாசிரியர்கள் கருத்து. நூலொடுபட்ட செய்தியன்றாம். சமயச் சால்பில் ஓங்கிய திருக்குறளை - வேத ஊழியைக் கண்டித்த திருக்குறளை - வேத வழியில் உரை கண்டவர் இலரா? அது போல் என்க.

தொல்காப்பியரைச் சமணச் சமயத்தார் என்பது பெருவழக்கு. அவ்வழக்கும் ஏற்கத்தக்கதன்று. அதன் சார்பான சான்று தொல்காப்பியத்தில் இல்லை. ஆனால் அச்சமயம் சார்ந்தார் அல்லர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

சமணச் சமய நூல்களாக வழங்குவன அருக வணக்கம் சித்த வணக்கம் உடையவை. அவ்வாறு பகுத்துக் கூறாவிடினும் அருக வணக்கம் உடையவை. சமணச் சமய நூல்களாகக் கிடைப்பவற்றை நோக்கவே புலப்படும். தொல்காப்பியர் காலத்தில் கடவுள் வாழ்த்து நூன் முகப்பில் பாடும் மரபில்லை எனின், அவர் சமணச் சமயத்தார் என்பதும் இல்லை என்பதே உண்மை. என்னெனின் சமணர் தம் சமயத்தில் அத்தகு அழுந்திய பற்றுதல் உடையவர் ஆதலால்.

சமணச் சமயத்தார் உயிர்களை ஐயறிவு எல்லையளவிலேயே பகுத்துக் கொண்டனர். ஆறாம் அறிவு குறித்து அவர்கள் கொள்வது இல்லை. "மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்னும் தொல்காப்பியர், "மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்றும் கூறினார். நன்னூலார் சமணர் என்பதும் வெளிப்படை. அவர் ஐயறிவு வரம்பு காட்டும் அளவுடன் அமைந்ததும் வெளிப்படை.

சமணச் சமயத்தார் இளமை, யாக்கை, செல்வ நிலையாமைகளை அழுத்தமாக வலியுறுத்துவர். துறவுச் சிறப்புரைத்தலும் அத்தகையதே. ஆகவும் நிலையாமையையே கூறும் காஞ்சித் திணையைப் பாடுங்காலும்,

“நில்லா உலகம் புல்லிய நெறித்தே” என ‘உலகம் நிலையாமை பொருந்தியது’ என்ற அளவிலேயே அமைகிறார்.

> *“காமஞ் சான்ற கடைக்கோட் காலை*
> *ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி*
> *அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
> *சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”* (1138)

என அன்பு வாழ்வே அருள் வாழ்வாம் தவவாழ்வாக வளர்நிலையில் கூறுகிறார். இல்லற முதிர்வில் தவமேற்கும் நிலை சமணம் சார்ந்ததன்று. அஃது இம்மண்ணில் தோன்றி வளர்ந்து பெருகிய தொல் பழந்தமிழ் நெறி.

தொல்காப்பியர் சமணச் சமயத்தார் எனின் அகத்திணையியல் களவியல் கற்பியல் பொருளியல் என அகப் பொருளுக்குத் தனியே நான்கு இயல்கள் வகுத்ததுடன் மெய்ப்பாட்டியல் செய்யுளியல் உவம இயல் என்பனவற்றிலும் அப்பொருள் சிறக்கும் இலக்கணக் குறிப்புகளைப் பயில வழங்கியிரார்.

காமத்தைப் ‘புரைதீர்காமம்’ என்றும் (1027) ‘காமப் பகுதி கடவுளும் வரையார்’ என்றும் (1029) கூறியிரார்.

> *“ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது*
> *தேனது வாகும்”*

என்பது போலும் இன்பியல் யாத்திரார். கிறித்தவத் துறவு நெறிசார் வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கப் பொருளதிகாரம் காண்பார் இதனை நன்கு அறிவார். சிந்தாமணியாம் பாவிகத்தை எடுத்துக்காட்டுவார் எனின் அவர், திருத்தக்கதேவர் பாடிய நரிவிருத்தத்தையும் கருதுதல் வேண்டும். பாட இயலாது என்பதை இயலுமெனக் காட்ட எழுந்தது அந்நூல் என்பதையும், காமத்தைச் சூடிக் கழித்த பூப்போல் காவிய முத்திப் பகுதியில் காட்டுவதையும் கருதுவாராக.

**கடவுள் நம்பிக்கை**

தொல்காப்பியர் கடவுள் வாழ்த்துக் கூறவில்லை எனினும்,

> *“கொடிநிலை கந்தழி வள்ளி என்ற*
> *வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்*
> *கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே”*

என்றும் (1034), புறநிலை வாழ்த்து,

> *“வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்*
> *பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து*
> *பொலிமின்”*

என்பது என்றும் ஆளும் இடங்களில் தெளிவாகக் கடவுள் வாழ்த்து என்பதையும் ‘வழிபடு தெய்வம்’ என்பதையும் குறிக்கிறார். மேலும்

கருப்பொருள் கூறுங்கால் 'தெய்வம் உணாவே" என உணவுக்கு முற்படத் தெய்வத்தை வைக்கிறார். உலகெலாம் தழுவிய பொதுநெறியாக இந்நாள் வழங்கும் இது, **பழந்தமிழர் பயில்நெறி** என்பது விளங்கும். ஆதலால் பழந்தமிழர் சமய நெறி எந்நெறியோ அந்நெறியே தொல்காப்பியர் நெறி எனல் சாலும்.

வாகைத் திணையில் வரும், 'கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை', 'அருளொடு புணர்ந்த அகற்சி', 'காமம் நீத்தபால்' என்பனவும், காஞ்சித் திணையில் வரும் தபுதார நிலை, தாபத நிலை, பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து என்பனவும் பழந்தமிழர் **மெய்யுணர்வுக் கோட்பாடுகள்** எனக் கொள்ளத்தக்கன.

கொற்றவை நிலை, வேலன் வெறியாட்டு, பூவைநிலை காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல் என வரும் வெட்சிப் பகுதிகள் பழந்தமிழர் வழிபாட்டியலைக் காட்டுவன.

சேயோன் மாயோன் வேந்தன் வண்ணன் என்பார், குறிஞ்சி முதலாம் திணைநிலைத் தெய்வங்களெனப் போற்றி வழிபடப்பட்டவர் என்பதாம்.

ஆசிரியர் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடினாலும், அவர் இன்ன சமயத்தவர் என்பதற்குரிய திட்டவட்டமான அகச்சான்று இல்லாமை போலத் தொல்காப்பியர்க்கும் இல்லை. ஆகவே சமயக் கணக்கர் மதிவழிச் செல்லாத பொதுநெறிக் கொள்கையராம் வள்ளுவரைப் போன்றவரே தொல்காப்பியரும் என்க.

### தொல்காப்பியக் கட்டொழுங்கு

தொல்காப்பியம் கட்டொழுங்கமைந்த நூல் என்பது மேலோட்டமாகப் பார்ப்பவர்க்கும் நன்கு விளங்கும். இன்ன பொருள் இத்தட்டில் என்று வைக்கப்பட்ட ஐந்தறைப் பெட்டியில் இருந்து வேண்டும் பொருளை எடுத்துக் கொள்வதுபோல் எடுத்துக்கொள்ள வாய்த்தது தொல்காப்பியம். அதனையே பாயிரம் 'முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்த'தாகக் குறிக்கின்றது.

எழுத்து சொல் பொருள் என்னும் மூன்றதிகாரங்களைக் கொண்ட தொல்காப்பியம் ஒவ்வோர் அதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பது இயல்களைக் கொண்டிருத்தல் அதன் கட்டமைதிச் சிறப்புக் காட்டுவதாம்.

"ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் பஃதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்"

என்பது தொல்காப்பிய நூற்பா அளவினைக் கூறுவதொரு வெண்பா. ஆனால் உரையாசிரியர்களின் அமைப்புப்படி 1595 முதல் 1611 நூற்பா வரை பல்வேறு எண்ணிக்கையுடையவாய் அமைந்துள்ளன. இக்கணக்கீடும்,

தொல்காப்பியர் சொல்லியதோ, பனம்பாரனார் குறித்ததோ அன்று. உரையாசிரியர்களின் காலத்தவரோ அவர்களின் காலத்திற்கு முன்னே இருந்த மூலநூற்பா எல்லையில் கணக்கிட்டறிந்த ஒருவரோ கூறியதாகலாம்.

தொல்காப்பிய அடியளவு 3999 என்று அறிஞர் வ.சுப. மாணிக்கனார் (தொல்காப்பியக்கடல் பக். 95) எண்ணிக் கூறுவர். ஏறக்குறைய 5630 சொல் வடிவங்கள் தொல்காப்பியத்தில் உள்ளமையையும் கூறுவர். அவர் "தொல்காப்பிய இலக்கணத்தைக் காண்பதற்குத் தொல்காப்பியத்தையே இலக்கியமாகக் கொள்ளலாம். தன்னைத் தானே விளக்கிக் காட்டுதற்குரிய அவ்வளவு பருமனுடையது தொல்காப்பியம்" என்று வாய்மொழிகின்றார்.

**முப்பகுப்பு**

தனியெழுத்துகள், சொல்லில் எழுத்தின் நிலை, எழுத்துப் பிறக்கும் வகை, புணர் நிலையில் எழுத்தமைதி என்பவற்றை விரித்துரைப்பது எழுத்ததிகாரம். நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பன எழுத்ததிகார இயல்கள்.

எழுத்துகள் சொல்லாம் வகை, பெயர்கள் வேற்றுமையுருபேற்றல், விளிநிலை எய்தல், பெயர் வினை இடை உரி என்னும் சொல் வகைகள் இன்னவற்றைக் கூறுவது சொல்லதிகாரம். கிளவியாக்கம், வேற்றுமை யியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பன சொல்லதிகார இயல்கள்.

இன்ப ஒழுக்க இயல்பு, பொருள் அற ஒழுக்க இயல்பு, களவு கற்பு என்னும் இன்பவியற் கூறுகள், பொருளியல் வாழ்வில் நேரும் மெய்ப் பாடுகள், பொருளியல் நூலுக்கு விளக்காம் உவமை, செய்யுளிலக்கணம், உலக வழக்கு செய்யுள் வழக்கு என்பவற்றின் மரபுகள் ஆகியவற்றைக் கூறுவது பொருளதிகாரம். அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்பன பொருளதிகார இயல்கள்.

எடுத்துக்கொண்ட பொருளின் அடிக்கருத்தை முதற்கண் கூறி, பின்னர் வித்தில் இருந்து கிளரும் முளை இலை தண்டு கிளை கவடு பூ காய் கனி என்பவை போலப் பொருளைப் படிப்படியே வளர்த்து நிறைவிப்பது தொல்காப்பியர் நடைமுறை.

எழுத்துகள் இவை, இவ்வெண்ணிக்கையுடையன என்று நூன் மரபைத் தொடங்கும் ஆசிரியர், குறில் நெடில் மாத்திரை, உயிர் மெய் வடிவு உயிர்மெய், அவற்றின் ஒலிநிலைப்பகுப்பு, மெய்ம்மயக்கம், சுட்டு வினா எழுத்துகள் என்பவற்றைக் கூறும் அளவில் 33 நூற்பாக்களைக் கூறி அமைகிறார். முப்பத்து மூன்றாம் நூற்பாவை,

*"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்*
*உளவென மொழிப இசையொடு சிவணிய*
*நரம்பின் மறைய என்மனார் புலவர்"*

என்கிறார். இயலிலக்கணம் கூறும் ஆசிரியர் இசையிலக்கணம் பற்றிய நூல்களில் இவ்வெழுத்துகளின் நிலை எவ்வாறாம் என்பதையும் சுட்டிச் செல்லுதல் அருமையுடையதாம். அவ்வாறே ஒவ்வோர் இயலின் நிறைவிலும் அவர் கூறும் புறனடை நூற்பா, மொழிவளர்ச்சியில் தொல் காப்பியனார் கொண்டிருந்த பேரார்வத்தையும் காலந்தோறும் மொழியில் உண்டாகும் வளர்நிலைகளை மரபுநிலை மாறாவண்ணம் அமைத்துக் கொள்வதற்கு வழிசெய்வதையும் காட்டுவனவாம்.

*"உணரக் கூறிய புணரியல் மருங்கின்*
*கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே"* (405)

என்பது குற்றியலுகரப் புணரியல் புறனடை

*"கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்*
*வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்*
*விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்*
*வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்*
*நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்"* (483)

என்பது எழுத்ததிகாரப் புறனடை.

*"அன்ன பிறவும் கிளந்த அல்ல*
*பன்முறை யானும் பரந்தன வரூஉம்*
*உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட*
*இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்*
*வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்*
*தோம்படை ஆணையிற் கிளந்தவற் றியலாற்*
*பாங்குற உணர்தல் என்மனார் புலவர்"* (879)

என்பது உரியியல் புறனடை.

இன்னவற்றால் தொல்காப்பியர் தொன்மையைக் காக்கும் கடப்பாட்டை மேற்கொண்டிருந்தவர் என்பதுடன் நிகழ்கால எதிர்கால மொழிக் காப்புகளையும் மேற்கொண்டிருந்தவர் என்பது இவ்வாறு வரும் புறனடை நூற்பாக்களால் இனிதின் விளங்கும்.

தொல்காப்பியம் இலக்கணம் எனினும் இலக்கியமென விரும்பிக் கற்கும் வண்ணம் வனப்பு மிக்க உத்திகளைத் தொல்காப்பியர் கையாண்டு நூலை யாத்துள்ளார்.

### இலக்கிய நயங்கள்

எளிமை : சிக்கல் எதுவும் இல்லாமல் எளிமையாகச் சொல்கிடந்தவாறே பொருள் கொள்ளுமாறு நூற்பா அமைத்தலும், எளிய சொற்களையே பயன்படுத்துதலும் தொல்காப்பியர் வழக்கம்.

*“எழுத்தெனப் படுவ,*
*அகர முதல னகர இறுவாய்*
*முப்பஃ தென்ப”*

*“மழவும் குழவும் இளமைப் பொருள”*

*“ஓதல் பகையே தூதிவை பிரிவே”*

*“வண்ணந் தானே நாலைந் தென்ப”*

### ஓரியல் யாப்புரவு

‘ஒன்றைக் கூறுங்கால் அதன் வகைகளுக்கெல்லாம் ஒரே யாப்புரவை மேற்கொள்ளல்’ என்பது தொல்காப்பியர் வழக்கம்.

*“வல்லெழுத் தென்ப கசட தபற”*

*“மெல்லெழுத் தென்ப ஙஞண நமன”*

*“இடையெழுத் தென்ப யரல வழள”*

### சொன்மீட்சியால் இன்பமும் எளிமையும் ஆக்கல்

ஓரிலக்கணம் கூறுங்கால் சிக்கல் இல்லாமல் பொருள் காண்பதற்காக வேண்டும் சொல்லைச் சுருக்காமல் மீளவும் அவ்விடத்தே சொல்லிச் செல்லுதல் தொல்காப்பியர் வழக்கம்.

*“அவற்றுள்,*
*நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு*
*குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்*
*பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்*
*பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்*
*தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்*
*தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்*
*மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென*
*ஆங்கநா் நான்கே மொழிபுணர் இயல்பே”*

என்னும் நூற்பாவைக் காண்க. இவ்வியல்பில் அமைந்த நூற்பாக்கள் மிகப் பல என்பதைக் கண்டு கொள்க.

### நூற்பா மீட்சியால் இயைபுறுத்தல்

ஓரிடத்துச் சொல்லப்பட்ட இலக்கணம் அம்முறையிலேயே சொல்லப்படத் தக்கதாயின் புதிதாக நூற்பா இயற்றாமல், முந்தமைந்த நூற்பாவையே மீளக்காட்டி அவ்வவ் விலக்கணங்களை அவ்வவ்விடங்

களில் கொள்ளவைத்தல் தொல்காப்பிய ஆட்சி. இது தம் மொழியைத் தாமே எடுத்தாளலாம்.

*"அளபெடைப் பெயரே அளபெடை இயல"*

*"தொழிற்பெய ரெல்லாம் தொழிற்பெய ரியல"*

என்பவற்றைக் காண்க.

**எதுகை மோனை நயங்கள்**

எடுத்துக் கொண்டது இலக்கணமே எனினும் சுவைமிகு இலக்கிய மெனக் கற்குமாறு எதுகை நயம்பட நூற்பா யாத்தலில் வல்லார் தொல் காப்பியர்.

*"வஞ்சி தானே முல்லையது புறனே*
*எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்*
*அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே".*

*"ஏரோர் களவழி அன்றிக் களவழித்*
*தேரோர் தோற்றிய வென்றியும்".*

இவை தொடை எதுகைகள். இவ்வாறே ஐந்தாறு அடிகளுக்கு மேலும் தொடையாகப் பயில வருதல் தொல்காப்பியத்துக் கண்டு கொள்க.

*"மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்*
*கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்".*

இவை அடி எதுகைகள்.

*"விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே"*

*"நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை".*

முன்னதில் முழுவதும் எதுகைகளும், பின்னதில் முழுவதும் மோனைகளும் தொடைபடக் கிடந்து நடையழகு காட்டல் அறிக.

முன்னது முற்றெதுகை; பின்னது முற்றுமோனை.

*"வயவலி யாகும்"*

*"வாள்ஒளி யாகும்"*

*"உயாவே உயங்கல்"*

*"உசாவே சூழ்ச்சி"*

இவை மோனைச் சிறப்பால் அடுத்த தொடரைக் கொண்டு வந்து நிறுத்துகின்றன. இதனை **எடுத்து வருமோனை** எனலாம்.

**அடைமொழி நடை**

மரம்பயில் கூகை, செவ்வாய்க் கிளி, வெவ்வாய் வெருகு, இருள்நிறப் பன்றி, மூவரி அணில், கோடுவாழ் குரங்கு, கடல்வாழ் சுறவு, வார்கோட்டி யானை என அடைமொழிகளால் சுவைப்படுத்துதல் தொல்காப்பியர் உத்திகளுள் ஒன்று.

*"இழுமென் மொழியால் விழுமியது பயிலல்"*

*"எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்"*

இவ்வாறு ஒலி நயத்தால் கவர்ந்து பொருளை அறிந்துகொள்ளச் செய்வதும் தொல்காப்பியர் உத்திகளுள் ஒன்று.

*"மாத்திரை முதலா அடிநிலை காறும்*
*நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"*

*"ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்"*

என எடுத்த இலக்கணத்தை அச்சொல்லாட்சியாலேயே விளக்கிக் காட்டுவதும் தொல்காப்பிய நெறி. 'மாற்றருஞ் சிறப்பின் மரபியல்' என இயலின் பெயர் குறிக்கும் மாற்றானே இலக்கணமும் யாத்துக் காட்டியமை நூற்பாவுள் தனி நூற்பாவாகிய பெற்றிமையாம்.

### வரம்பு

இளமைப் பெயர், ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர் என்பவற்றை முறையே கூறி விளக்கிய ஆசிரியர் "பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே" என நிறைவித்தல் நூல் வரம்புச் சான்றாம். செய்யுளியல் தொடக்கத்தில் செய்யுள் உறுப்புகள் மாத்திரை முதலாக முப்பத்து நான்கனை உரைத்து அவற்றை முறையே விளக்குதலும் பிறவும் திட்டமிட்ட நூற்கொள்கைச் சிறப்பாக அமைவனவாம்.

*"வகரக் கிளவி நான்மொழி ஈற்றது"*

*"அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே"*

இன்னவாறு வருவனவும் வரம்பே.

### விளங்க வைத்தல்

விளங்கவைத்தல் என்பதொரு நூலழகாகும். அதனைத் தொல் காப்பியனார் போல விளங்க வைத்தவர் அரியர்.

*"தாமென் கிளவி பன்மைக் குரித்தே"*

*"தானென் கிளவி ஒருமைக் குரித்தே"*

*"ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி*
*இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை"*

இவ்வளவு விளங்கச் சொன்னதையும் எத்தனை எழுத்தாளர்கள் இந்நாளில் புரிந்துகொண்டுளர்?

### நயத்தகு நாகரிகம்

சில எழுத்துகளின் பெயரைத்தானும் சொல்லாமல் உச்சகாரம் (சு), உப்பகாரம் (பு), ஈகார பகரம் (பீ) இடக்கர்ப் பெயர் என்பவற்றை எடுத்துச் சொல்லும் நாகரிகம் எத்தகு உயர்வு உடையது! இஃது உயர்வெனக் கருதும்

உணர்வு ஒருவர்க்கு உண்டாகுமானால் அவர் தம் மனம்போன போக்கில் எண்ணிக்கை போன போக்கில் கிறுக்கிக் கதையெனவோ பாட்டெனவோ நஞ்சை இறக்கி 'இளையர்' உளத்தைக் கெடுத்து எழுத்தால் பொருளீட்டும் சிறுமை உடையராவரா?

தொல்காப்பிய நூனயம் தனியே ஆய்ந்து வெளிப்படுத்தற்குரிய அளவினது.

**தொல்காப்பியக் கொடை**

முந்து நூல் வளங்கள் அனைத்தும் ஒருங்கே பெறத்தக்க அரிய நூலாகத் தொல்காப்பியம் விளங்குவதுடன், அவர்கால வழக்குகளையும் அறிந்துகொள்ளும் வண்ணம் தொல்காப்பியர் தம் நூலை இயற்றியுள்ளார். அன்றியும் பின்வந்த இலக்கியப் படைப்பாளிகளுக்கும் இலக்கணப் படைப்பாளிகளுக்கும் அவர் வழங்கியுள்ள கொடைக்கு அளவே இல்லை. தொட்டனைத் தூறும் மணற்கேணியென அது சுரந்துகொண்டே உள்ளமை ஆய்வாளர் அறிந்ததே.

பொருளதிகார முதல் நூற்பா 'கைக்கிளை முதலா' எனத் தொடங்குகின்றது. அக் கைக்கிளைப் பொருளில் எழுந்த சிற்றிலக்கியம் உண்டு. முத்தொள்ளாயிரப் பாடல்களாகப் புறத்திரட்டு வழி அறியப் பெறுவன அனைத்தும் கைக்கிளைப் பாடல்களே.

"ஏறிய மடல் திறம்" என்னும் துறைப்பெயர் பெரிய மடல், சிறியமடல் எனத் தனித்தனி நூலாதல் நாலாயிரப் பனுவலில் காணலாம்.

'மறம்' எனப்படும் துறையும் 'கண்ணப்பர் திருமறம்' முதலாகிய நூல் வடிவுற்றது. கலம்பக உறுப்பும் ஆயது.

'உண்டாட்டு' என்னும் புறத்துறை, கம்பரின் உண்டாட்டுப் படலத்திற்கு மூலவூற்று.

'தேரோர் களவழி' களவழி நாற்பது கிளர்வதற்குத் தூண்டல். 'ஏரோர் களவழி' என்பது பள்ளுப்பாடலாகவும், 'குழவி மருங்கினும்' என்பது பிள்ளைத் தமிழாகவும் வளர்ந்தவையே.

*"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்*
*சீர்த்த மரபின் பெரும்படை வாழ்த்தலென்*
*றிருமூன்று மரபின்கல்"*

என்னும் புறத்திணை இயல் நூற்பா தானே, சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திற்கு வைப்பகம்.

பாடாண் திணைத் துறைகள் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு வழங்கியுள்ள கொடை தனிச்சிறப்பினவாம்.

"அறம் முதலாகிய மும்முதற் பொருட்கும்" என நூற்பாச் செய்து முப்பாலுக்கு மூலவராகத் தொல்காப்பியனார் திகழ்வதைச் சுட்டுவதே அவர்தம் கொடைப் பெருமை நாட்டுவதாகலாம்.

இவை இலக்கியக் கொடை. இலக்கணக் கொடை எத்துணைக் கொடை? இலக்கண நூல்கள் அனைத்துக்கும் நற்றாயாயும், செவிலித் தாயாயும், நல்லாசானாயும் இருந்து வளர்த்து வந்த - வளர்த்து வருகின்ற சீர்மை தொல்காப்பியத்திற்கு உண்டு. இந்நாளில் வளர்ந்துவரும் 'ஒலியன்' ஆய்வுக்கும் தொல்காப்பியர் வித்திட்டவர் எனின், அவர் வழி வழியே நூல் யாத்தவர்க்கு அவர் பட்டுள்ள பயன்பாட்டுக்கு அளவேது? "தொல்காப்பியன் ஆணை" என்பதைத் தலைமேற் கொண்ட இலக்கணர், பின்னைப் பெயர்ச்சியும் முறை திறம்பலுமே மொழிச்சிதைவுக்கும் திரிபுகளுக்கும் இடமாயின என்பதை நுணுகி நோக்குவார் அறிந்து கொள்ளக்கூடும்.

## இலக்கணப் பகுப்பு விரிவு

இனித் தொல்காப்பியம் பிற்கால இலக்கணப் பகுப்புகளுக்கும் இடந்தருவதாக அமைந்தமையும் எண்ணத் தக்கதே. தமிழ் இலக்கணம் ஐந்திலக்கணமாக அண்மைக் காலம் வரை இயன்றது. அறுவகை இலக்கணமென ஓரிலக்கணமாகவும் இது கால் விரிந்தது. இவ் விரிவுக்குத் தொல்காப்பியம் நாற்றங்காலாக இருப்பது அறிதற்குரியதே.

எழுத்து சொல் பொருள் என முப்பகுப்பால் இயல்வது தொல் காப்பியம் ஆகலின் தமிழிலக்கணம் அவர் காலத்தில் முக் கூறுபட இயங்கியமை வெளி.

அவர் கூறிய பொருளிலக்கணத்தைத் தனித்தனியே வாங்கிக் கொண்டு அகப்பொருள், புறப்பொருள் என இலக்கணங்கூறும் நூல்கள் கிளைத்தன. அது பொருளிலக்கணத்தைப் பகுத்துக் கொண்டதே.

அவர் கூறிய செய்யுளியலை வாங்கிக் கொண்டு, 'யாப்பருங்கலம்' முதலிய யாப்பு இலக்கண நூல்கள் தோன்றித் தமிழ் இலக்கணத்தை நாற்கூறுபடச் செய்தன.

அவர் கூறிய உவமையியலையும் செய்யுளியலில் சில பகுதிகளையும் தழுவிக்கொண்டு வடமொழி இலக்கணத் துணையொடு அணியிலக்கணம் என ஒரு பகுதியுண்டாகித் தமிழ் இலக்கணம் ஐங்கூறுடையதாயிற்று.

இவ்வைந்துடன் ஆறாவது இலக்கணமாகச் சொல்லப்படுவது 'புலமை இலக்கணம்' என்பது. அது தமிழின் மாட்சி தமிழ்ப் புலவர் மாட்சி முதலியவற்றை விரிப்பது.

*"தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில் உளதென*
*வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே"*

என்பது அவ்விலக்கணத்தில் ஒரு பாட்டு.

ஆக மூன்றிலக்கணத்துள் ஆறிலக்கணக் கூறுகளையும் மேலும் உண்டாம் விரிவாக்கங்களையும் கொண்டிருக்கின்ற மொழிக் களஞ்சியம் தொல்காப்பியம் என்க.

தொல்காப்பியரின் சிறப்பாகப் பாயிரம் சொல்வனவற்றுள் ஒன்று, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பது. ஐந்திரம் இந்திரனால் செய்யப்பட்டது என்றும், பாணினியத்திற்குக் காலத்தால் முற்பட்டது என்றும், வடமொழியில் அமைந்தது என்றும் பாணினியத்தின் காலம் கி.மு. 450 ஆதலால் அதற்கு முற்பட்ட ஐந்திரக் காலம் அதனின் முற்பட்ட தென்றும், அந் நூற்றேர்ச்சி தொல்காப்பியர் பெற்றிருந்தார் என்றும், அந்நூற் பொருளைத் தம் நூலுக்குப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் ஆய்வாளர் பலப்பல வகையால் விரிவுறக் கூறினர்.

சிலப்பதிகாரத்தில் வரும் 'விண்ணவர் கோமான்' விழுநூல், 'கப்பத் திந்திரன் காட்டிய நூல்' என்பவற்றையும் 'இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என்னும் ஒரு நூற்பாவையும் காட்டி அவ்வைந்திர நூலைச் சுட்டுவர். விண்ணவர் கோமான் இந்திரன் வடமொழியில் நூல் செய்தான் எனின், தேவருலக மொழி வடமொழி என்றும், விண்ணுலக மொழியே மண்ணில் வடமொழியாய் வழங்குகின்றது என்றும் மண்ணவர் மொழி யுடையாரை நம்பவைப்பதற்கு இட்டுக் கட்டப்பட்ட எளிய புனைவேயாம். அப்புனைவுப் பேச்சுக் கேட்டதால்தான் இளங்கோ தம் நூலுள்ளும் புனைந்தார். அவர் கூறும் "புண்ணிய சரவணத்தில் மூழ்கி எழுந்தால் விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவர்" என்பதே நடைமுறைக் கொவ்வாப் புனைவு என்பதை வெளிப்படுத்தும். அகத்திய நூற்பாக்களென உலவ விட்டவர்களுக்கு, இந்திரன் எட்டாம் வேற்றுமை சொன்னதாக உலவவிட முடியாதா?

இவ்வாறு கூறப்பட்டனவே தொன்மங்களுக்குக் கைம்முதல். இதனைத் தெளிவாகத் தெரிந்தே தொல்காப்பியனார்,

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

என்றார். தொன்மை என்பது வழிவழியாக உரைக்கப்பட்டு வந்த பழஞ் செய்தி பற்றியதாம் என்பது இந்நூற்பாவின் பொருள். இவ்வாறு தொல் காப்பியர் கேட்ட தொன்மச் செய்திகளைப் பனம்பாரனார் கேட்டிரார் என்ன இயலாதே.

"இந்திரனாற் செய்யப்பட்டதொரு நூல் உண்டு காண்; அது வடமொழியில் அமைந்தது காண்; அதன் வழிப்பட்டனவே வடமொழி இலக்கண நூல்கள் காண்" என்று கூறப்பட்ட செய்தியைப் பனம்பாரர்

அறிந்தார். 'அறிந்தார் என்பது இட்டுக் கட்டுவதோ' எனின் அன்று என்பதை அவர் வாக்கே மெய்ப்பிப்பதை மேலே காண்க.

திருவள்ளுவர் காலத்திலும், "தாமரைக் கண்ணானின் உலக இன்பத்திலும் உயரின்பம் ஒன்று இல்லை" என்று பேசப்பட்டது. இவ்வாறு பிறர் பிறர் காலத்தும் பிறபிற செய்திகள் பேசப்பட்டன என்பவற்றை விரிப்பின் பெருகுமென்பதால் வள்ளுவர் அளவில் அமைவாம்.

திருவள்ளுவர் கேட்ட செய்தி, அவரை உந்தியது. அதனால் "தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல், தாமரைக் கண்ணான் உலகு?" என்றோர் வினாவை எழுப்பி இவ்வுலகத்தெய்தும் இன்பங்களுள் தலையாய காதலின்பத்தைச் சுட்டினார். அடியளந்தான் கதையை மறுத்து, மடியில்லாத மன்னவன் தன் முயற்சியால் எய்துதல் கூடும் முயல்க; முயன்றால் தெய்வமும் மடிதற்று உன்முன் முந்து நிற்கும் என்று முயற்சிப் பெருமையுரைத்தார். இன்னதோர் வாய்பாட்டால் பனம்பாரனார் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியரைச் சுட்டினார்.

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று வாளா கூறினார் அல்லர் பனம்பாரனார். "மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்றார். அவர் கேள்வியுற்றது 'விண்ணுலக ஐந்திரம்!' அவ்விண்ணுலக ஐந்திரத்தினும் இம்மண்ணுலகத்துத் தொல்காப்பியமே சிறந்த ஐந்திரம் என்னும் எண்ணத்தை யூட்டிற்றுப் போலும்! "ஆகாயப்பூ நாறிற்று என்றுழிச் சூடக்கருதுவாருடன்றி மயங்கக் கூறினான் என்னும் குற்றத்தின் பாற்படும்" என்பதை அறியாதவர் அல்லரே பனம்பாரர். அதனால் நீர்நிறைந்த கடல் சூழ்ந்த நிலவுலகின்கண் விளங்கும் ஐந்திரம் எனத்தக்க தொல்காப்பியத்தை முழுதுற நிரம்பத் தோற்றுவித்ததால் தன் பெயரைத் தொல்காப்பியன் எனத் தோன்றச் செய்தவன் என்று பாராட்டுகிறார்.

இனி 'ஐந்திரம்' என்பது சமண சமயத்து ஐந்தொழுக்கக் கோட்பாடு. அவற்றை நிறைந்தவர் தொல்காப்பியர் என்றும் கூறுவர். ஒழுக்கக் கோட்பாடு 'படிமையோன்' என்பதனுள் அடங்குதலால் மீட்டுக் கூற வேண்டுவதில்லையாம். அன்றியும் கட்டமை நோற்பு ஒழுக்கம் அவ்வாத னுக்கு உதவுதலன்றி, அவனியற்றும் இலக்கணச் சிறப்புக்குரிய தாகாது என்பதுமாம் ஆயினும், தொல்காப்பியர் சமண சமயச் சார்பினர் அல்லர் என்பது மெய்ம்மையால், அவ்வாய்வுக்கே இவண் இடமில்லையாம்.

இனி 'ஐந்திறம்' என்றாக்கி ஐங்கூறுபட்ட இலக்கணம் நிறைந்தவர் என்பர். அவர் தமிழ் இலக்கணக் கூறுபாடு அறியார். தமிழ் இலக்கணம் முக்கூறுபட்டது என்பதைத் தொல்காப்பியமே தெளிவித்தும் பின்னே வளர்ந்த ஐந்திலக்கணக் கொள்கையை முன்னே வாழ்ந்த ஆசிரியர் தலையில் சுமத்துவது அடாது எனத் தள்ளுக.

'ஐந்திரம்' எனச் சொன்னடை கொண்டு பொருளிலாப் புதுநூல் புனைவு ஒன்று இந்நாளில் புகுந்து மயக்க முனைந்து மயங்கிப்போன நிலையைக் கண்ணுறுவார் ஏட்டுக் காலத்தில் எழுதியவர் ஏட்டைக் கெடுத்ததும் படித்தவர் பாட்டைக் கெடுத்ததும் ஆகிய செய்திகளைத் தெளிய அறிவார். எழுதி ஏட்டைக் காத்த - படித்துப் பாட்டைக் காத்த ஏந்தல்களுக்கு எவ்வளவு தலை வணங்குகிறோமோ, அவ்வளவு தலை நாணிப் பிணங்கவேண்டிய செயன்மையரை என் சொல்வது?

தொல்காப்பிய நூற்பாக்கள் இடமாறிக் கிடத்தல் விளங்குகின்றது. தெய்வச்சிலையார் அத்தகையதொரு நூற்பாவைச் சுட்டுதலை அவர் பகுதியில் கண்டு கொள்க. மரபியலில் "தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன" என்னும் நூற்பாவை அடுத்துப் "பறழ்எனப் படினும் உறழாண் டில்லை" என்னும் நூற்பா அமைந்திருத்தல் வேண்டும். அவ்வாறு அமைந்தால் எடுத்துக்காட்டு இல்லை என்பனவற்றுக்கு இலக்கியம் கிடைத்தல் இயல்பாக அமைகின்றது. "இக்காலத்து இறந்தன" என்னும் இடர்ப்பாடும் நீங்குகின்றது. இடப் பெயர்ச்சிக்கு இஃதொரு சான்று.

இடையியலில் "கொல்லே ஐயம்" என்பதை அடுத்த நூற்பா "எல்லே இலக்கம்" என்பது. இவ்வாறே இருசீர் நடை நூற்பா நூற்கும் இடத்தெல்லாம் அடுத்தும் இருசீர் நடை நூற்பா நூற்றுச் செல்லலும் பெரிதும் எதுகை மோனைத் தொடர்பு இயைத்தலும் தொல்காப்பியர் வழக்காதலைக் கண்டு கொள்க. இத்தகு இருசீர் நடை நூற்பாக்கள் இரண்டனை இயைத்து ஒரு நூற்பாவாக்கலும் தொல்காப்பிய மரபே.

"உருவுட் காகும்; புரைஉயர் வாகும்"

"மல்லல் வளனே; ஏபெற் றாகும்"

"உகப்பே உயர்தல்; உவப்பே உவகை"

என்பவற்றைக் காண்க. இவ்விருவகை மரபும் இன்றி

"நன்று பெரிதாகும்"

என்னும் நூற்பா ஒன்றும் தனித்து நிற்றல் விடுபாட்டுச் சான்றாகும்.

அகத்திணையியல் இரண்டாம் நூற்பா, 'அவற்றுள்' என்று சுட்டுதற்குத் தக்க சுட்டு முதற்கண் இன்மை காட்டி ஆங்கு விடுபாடுண்மை குறிப்பர். (தொல். அகத். உரைவளம். மு. அருணாசலம் பிள்ளை)

இனி இடைச் செருகல் உண்டென்பதற்குத் தக்க சான்றுகளும் உள. அவற்றுள் மிகவாகக் கிடப்பது மரபியலிலேயேயாம்.

தொல்காப்பியரின் மரபியல் கட்டொழுங்கு மரபியலிலேயே கட்டமைதி இழந்து கிடத்தல் திட்டமிட்ட திணிப்பு என்பதை உறுதிப் படுத்துகின்றது.

'மாற்றருஞ் சிறப்பின் மரபியல்' என்று மரபிலக்கணம் கூறி மரபியலைத் தொடுக்கும் அவர் இளமைப் பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் ஆகியவற்றைக் குறிக்கிறார். அக்குறிப்பொழுங்குப் படியே இளமைப் பெயர்கள் இவை இவை இவ்விவற்றுக்குரிய என்பதை விளக்கி முடித்து,

*"சொல்லிய மரபின் இளமை தானே*
*சொல்லுங் காலை அவையல திலவே"*

என நிறைவிக்கிறார். அடுத்து ஓரறிவு உயிரி முதல் ஆறறிவுடைய மாந்தர் ஈறாக ஆண்பால் பெண்பால் பெயர்களை விளக்க வரும் அவர் ஓரறிவு தொடங்கி வளர்நிலையில் கூறி எடுத்துக்காட்டும் சொல்லி ஆண்பாற் பெயர்களையும் பெண்பாற் பெயர்களையும் இவை இவை இவற்றுக்குரிய என்பதை விளக்கி நிறைவிக்கிறார்.

ஆண்பால் தொகுதி நிறைவுக்கும் பெண்பால் தொகுதித் தொடக்கத்திற்கும் இடையே

*"ஆண்பா லெல்லாம் ஆணெனற் குரிய*
*பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய*
*காண்ப அவையவை அப்பா லான"*

என்கிறார். பின்னர்ப் பெண்பாற் பெயர்களைத் தொடுத்து முடித்து,

*"பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே"*

என்று இயல் தொடக்கத்தில் கூறிய பொருளெல்லாம் நிறைந்த நிறைவைச் சுட்டுகிறார். ஆனால் இயல் நிறைவுறாமல் தொடர்நிலையைக் காண்கி றோம். எப்படி?

*"நூலே கரகம் முக்கோல் மணையே*
*ஆயுங் காலை அந்தணர்க் குரிய"*

என்பது முதலாக வருணப் பாகுபாடுகளும் அவ்வவர்க் குரியவையும் 15 நூற்பாக்களில் தொடர்கின்றன. கூறப்போவது இவையென்று பகுத்த பகுப்பில் இல்லாத பொருள், கூற வேண்டுவ கூறி முடித்தபின் தொடரும் பொருள், 'மரபியல்' செய்தியொடு தொடர்பிலாப் பொருள் என்பன திகைக்க வைக்கின்றன.

நூலும் கரகமும் முக்கோலும் மணையும் படையும் கொடியும் குடையும் பிறவும் மாற்றருஞ்சிறப்பின் மரபினவோ? எனின் இல்லை என்பதே மறுமொழியாம்.

*"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"*

என்னும் நூற்பா நடை தொல்காப்பியர் வழிப்பட்டதென அவர் நூற்பா வியலில் தோய்ந்தார் கூறார்.

*"வாணிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"*

என நூற்கத் தெரியாரோ அவர்? இளமை, ஆண்மை, பெண்மை என்பன மாறா இயலவை. பிறவியொடு வழி வழி வருபவை. நூல், கரகம் முதலியன பிறவியொடு பட்டவை அல்ல. வேண்டுமாயின் கொள்ளவும் வேண் டாக்கால் தள்ளவும் உரியவை. முன்னை மரபுகள் தற்கிழமைப் பொருள; பிரிக்க முடியாதவை. பின்னைக் கூறப்பட்டவை பிறிதின் கிழமைப் பொருளவை. கையாம் தற்கிழமைப் பொருளும் கையில் உள்ளதாம் பிறிதின் கிழமைப் பொருளும் 'கிழமை' என்னும் வகையால் ஒருமை யுடையவை ஆயினும் இரண்டும் ஒருமையுடையவை என உணர்வுடை யோர் கொள்ளார்.

இவ்வொட்டு நூற்பாக்கள் வெளிப்படாதிருக்க ஒட்டியிருந்த 'புறக்காழ்' 'அகக்காழ்' 'இலை முறி' 'காய்பழம்' இன்னவை பற்றிய ஐந்து நூற்பாக்களைப் பின்னே பிரித்துத் தள்ளி ஒட்டாஒட்டாய் ஒட்டி வைத்தனர். இதனை மேலோட்டமாகக் காண்பாரும் அறிவர்.

*"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்"*

என்னும் நூற்பாவே மரபியல் முடிநிலை நூற்பாவாக இருத்தல் வேண்டும்.

பின்னுள்ள 'நூலின் மரபு' பொதுப் பாயிரம் எனத்தக்கது. அது சிறப்புப் பாயிரத்தைத் தொடுத்தோ, நூன் முடிவில் தனிப்பட்டோ இருந்திருக்க வேண்டும். அதுவும் நூலாசிரியர் காலத்திற்குப் பிற்பட்டுச் சேர்த்ததாக இருத்தல் வேண்டும். அதிலும் சிதைவுகளும் செறிப்புகளும் பல உள. "அவற்றுள், சூத்திரந்தானே" என வரும் செய்யுளியல் நூற்பாவை யும் (1425) "சூத்திரத்தியல்பென யாத்தனர் புலவர்" என வரும் மரபியல் நூற்பாவையும் (1600) ஒப்பிட்டுக் காண்பார் ஒரு நூலில் ஒருவர் யாத்த தெனக் கொள்ளார். மரபியல் ஆய்வு தனியாய்வு எனக் கூறி அமைதல் சாலும். இவ்வியல் நூற்பாக்கள் அனைத்திற்கும் இளம்பூரணர் உரையும் பேராசிரியர் உரையும் கிடைத்திருத்தலால் அவர்கள் காலத்திற்கு முன்னரே இம்மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவான செய்தி.

மேலும் சில குறிப்புகளும் செய்திகளும் '**வாழ்வியல் விளக்க**'த்தில் காணலாம்.

# எழுத்ததிகார இயலமைதி

தமிழ் முத்தலைவேல் போல முக்கூறுபட்டது. அது, இயல் இசை கூத்து (நாடகம்) என வழங்கப்பட்டது. ஆகலின், முத்தமிழ் எனப்படுவ தாயிற்று.

தமிழின் முதற்பிரிவாம் இயலும் முக்கூறுபட்டு வழங்கியது. அம் முக்கூறும் எழுத்து சொல் பொருள் எனப்பட்டன.

பின்னாளில் இலக்கணம் ஐந்தாகவும் ஆறாகவும் எண்ணப் பட்டவை இம் மூன்றன் விரிவாக்கமேயாகும். இன்னும் விரிவாக்கம் பெறவும் இடம்கொண்டவை இம்முப்பிரிவுகளும்.

ஆசிரியர் தொல்காப்பியர்க்கு முன்னரே எண்ணிலாத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் விளங்கின. பல்கியும், பலவாகவும் கிடந்த அவற்றைத் தொகுத்து முறைப்படுத்தித் தந்தவர் தொல்காப்பியரே. அச் செயலைக் குறிக்கும் வகையாலேயே **தொன்மையான தமிழ் மரபுகளை யெல்லாம் காக்கும் நூல் என்னும் பெயரில் தம் நூலை யாத்து, அதனை யாத்தமையால் தாமும் அப்பெயர் கொண்டும் விளங்கினார். தொல் + காப்பு + இயம் = பழமையான மொழிமரபு காக்கும் நூல் தொல்காப்பியம் ஆயிற்று.**

உலகத் தோற்றத்தில் உயிர்களின் வாழ்விடமாக அமைந்தது மண். மண்வெளிப்பட்டு வாழும் வகைக்குத் தக அமைந்தபின் உயிர்கள் தோன்றின; ஆறாம் அறிவுடைய மாந்தனும் தோற்றமுற்றான். அவன் கூடிவாழும் இயல்புடையவனாக இருந்தமையால் தன் கருத்தைப் பிறர்க்கு அறிவிக்க முயன்றான். அம்முயற்சி முகம் கை வாய் கண் குறிகளாக அமைந்தன. அக்குறிகளின் அளவு போதாமையால் வாய்ச்செய்கை ஒலிகளை மேற்கொண்டு பெருக்கினான். அதுவும் போதாமையால் எழுத்துக் குறிகளை உருவாக்கிப் பெருக்கினான். இவ்வகையால் பொருள், பொருளைக் குறிக்கும் சொல், சொல்லின் உறுப்பாகிய எழுத்து என்பவை முறைமுறையே தோன்றின. அவ்வகையில் பொருள், சொல், எழுத்து எனப் படிமுறையில் அமைந்தாலும் எழுத்து, சொல், பொருள் என்றே அமைந்தன - வழக்குற்றன.

கருத்தை வெளிப்படுத்துதலில் முகத்தோற்றம் அசைவு முதலிய மெய்ப்பாடுகளே முதன்மை பெற்றன. பின்னர் இசை வழியாகவும் அதன் பின்னர் உரையாடல் வழியாகவும் அமைந்தன. எனினும் **இயல் இசை கூத்து** என்றே அமைந்தன.

மண் தோன்றிய பின்னர் மக்கள் தோன்றி மக்கள் தோன்றியபின் மொழி தோன்றினாலும் அம்மொழியின் பெயரே, அதனைப் பேசிய மக்களுக்கும், அம்மக்கள் வாழ்ந்த மண்ணுக்கும் பெயராயின. அதனால் **தமிழ், தமிழர், தமிழகம்** என்னும் பெயர்டுகள் எழுந்தன.

இனி மக்கள் வாழ்வியல் அடிப்படையில் துய்ப்பாகிய இன்பமும், இன்பத்திற்குத் தேவையாம் பொருளும், பொருளின் பயனாம் அறமும் என்னும் இன்பம், பொருள், அறம் என்பனவும் **அறம் பொருள் இன்பம்** எனவே வழக்குற்றன. இவையெல்லாம் அடிப்படையும் நிலைபேறும் பயனும் கருதிய அமைப்புகளாம்.

தொல்காப்பிய முதற்பகுதி எழுத்ததிகாரம் எனப்பட்டது. எழுத்து இலக்கணத்தைப் பகுத்தும் விரித்தும் கூறும் பகுதி ஆதலின் எழுத்து அதிகாரம் ஆயிற்று.

அதிகாரம் என்பதற்கு விரிவு, ஆட்சி, ஆணைமொழி எனப் பொருள்கள் உள. இவ்வெல்லாப் பொருள்களும் அமைய அமைந்தது இவ்வதிகாரம்.

அதிகாரத்தின் உட்பிரிவு இயல் எனப்பட்டது. எழுத்திலக்கணப் பகுதி ஒன்றன் இயல்பைக் கூறுவது ஆகலின் இயல் எனப்பட்டது. இயல் கூறுவது எதற்காக? செயற்பாட்டுக்காகவே இயல் கூறல் வழக்கம். ஆதலால் **'இயல் செயல்'** என இணைமொழி வழக்கில் உண்டாயிற்று. ஆதலால், ஒவ்வோர் இயலும் 'இயல் செயல்' என்பவற்றை இணைத்தே கூறுகின்றன.

ஒவ்வோர் அதிகாரமும் ஓர் ஒழுங்குபெற ஒன்பது ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவ்வகையால் எழுத்ததிகாரம், **நூன்மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல்** என ஒன்பது இயல்களைக் கொண்டுளது. இவை திட்டமிட்டுக் கோக்கப்பட்ட கோவை போல் சங்கிலித் தொடர்போல் அமைந்தவை.

எழுத்து என்பதன் முதனிலை எழு என்பது. எழு என்பது தோற்றம், எழுச்சி, உயர்ச்சி, அழகு, மிகுதி, உறுதி முதலிய பலபொருள் தரும் அடிச்சொல்லாகும்.

ஒலி எழுதலும், வரி எழுதலும் ஆகிய வகையாலும் எழுத்து ஒலி எழுத்து (ஒலி வடிவம்) வரி எழுத்து (வரி வடிவம்) என இருவகைக்கும்

பொருந்தியது. அன்றியும் எழுத்தின் அளபு மிகுதற்கு அடையாளமாக வரும் அளபெடை என்பதையும் 'எழூஉ'தல் என்பதற்கும் மூலமாயிற்று.

எழுதுதல் பயன்பாடு எழுதலும் எழும்புதலும் எழுப்புதலும் ஆம் என்பதை விளக்கும் மூலமும் ஆயிற்று.

இவ்வெழுத்து ஆராயப்பட்ட வகையை உரையாசிரியர் இளம்பூரணர் அருமையாக விளக்குவது இவண் அறியத்தக்கது. அதனை நூன்மரபு முதல் நூற்பாவின் தொடக்கத்தில் அவர் வரையும் உரையால் அறிக.

# எழுத்ததிகார
# வாழ்வியல் விளக்கம்

பழந்தமிழர் மொழியியலை மட்டுமன்றி, நாகரிகம், பண்பாடு, கலை, வாழ்வியல் மரபுகளையும் தொகுத்து வைக்கப்பட்டுள்ள '**வைப்புப் பெட்டகம்**' தொல்காப்பியமாகும்.

எழுவாய் முதல் இறுவாய் வரை 'வாழ்வியல் வார்ப்'பாகவே அமைந்து, நம் முந்தையர் வாழ்வைக் காட்டுவதுடன், பிந்தை மாந்தர்க்கு வேண்டும் வாழ்வியல் கூறுகளையும் வகுத்துக் காட்டி உயிரோட்டமாகத் திகழ்வதும் தொல்காப்பியமாகும்.

தொல்காப்பியர் தம் நிலையைப் படம் பிடித்துக் காட்டுவது போல்,

*"மறுவில் செய்தி மூவகைக் காலமும்*
*நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்"*

என்கிறார் (1021).

செய்வன வெல்லாம் மாசுமறுவில்லாச் செயல்களாக இருத்தல் வேண்டும்.

இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூவகைக் காலமும் நுணுகி நோக்கிச் செய்வதாக இருக்க வேண்டும்.

அச்செயலையும் செய்யத் தக்க நெறிமுறை தவறாது செய்தல் வேண்டும்.

- இவற்றைத் தன்னகத்துக் கொண்டது எதுவோ அது, அறிவர் (சித்தர்) நிலை என்பது என்னும் பொருளது இந்நூற்பா.

மேலும்,

*"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"*

என்னும் நூற்பாவிற்கு (594) எடுத்துக்காட்டாக விளங்குவதும் தொல் காப்பியமாகும்.

"பிறரால் செய்தற்கு அரிய செயல்களைச் செய்தல் வேண்டும். அச்செயல்களை, 'யாம் செய்தேம்' என்னும் எண்ணம்தானும் தோன்றா

தவராக இருத்தல் வேண்டும். அத்தகு மெய்யுணர்வு மிக்கோரால் செய்யப் பட்டது எதுவோ, அதுவே முதல்நூல் எனப்படும்'' என்கிறார்.

**முதல்**

முதல் என்பது பிற நூல்களுக்கு மூலமானது என்னும் பொருளது.

மூலமாவது வித்து. ஒரு வித்து பல்வேறு வித்துகளுக்கு மூலமாவது போல் பல நூல்களுக்கு மூலமாக அமைந்த அருமையது அது.

தொல்காப்பியம் தமிழ்ப்பரப்பில் முதல் நூல் அல்லது மூலநூல் அன்று. அதற்குரிய சான்று நூற்றுக்கணக்கில் அந்நூலிலேயே உண்டு. ஆனால், அந்நூல் **வித்து நூல்** எனப்படும் முதல் அல்லது மூலநூல் என்பதற்குரிய சான்றுகளோ அதனினும் மிகப்பலவாக உண்டு.

என்ப, என்மனார் புலவர், என்மரும் உளரே என வருவன, தொல்காப்பியம் தனக்கு 'முற்படு நூல்களைத் தொகுத்துக் காட்டும் பிற்படு நூல்' என்பதற்குச் சான்றாம். ஆனால், தொல்காப்பிய வழியிலே தோற்ற முற்ற நூல்களைத் தொல்காப்பியமாகிய அளவுகோல் கொண்டு அளந்து பார்க்கும் போதுதான், அதன் 'அளப்பரும் வளம் பெருங்காட்சி' வெளிப்படும்.

**முந்து நூல்**

தொல்காப்பியர்க்கு முந்துநூல்கள் மிகவுண்டு. இலக்கியம் இலக்கணம் துறைநூல் கலைநூல் என வகைவகையாய் உண்டு என்பதற்குச் சான்று தொல்காப்பியத்திலேயே உண்டு என்றோம்.

ஆனால், 'அவற்றின் பெயர் என்ன?' எனின் -'தெரியாது' என்பதே மறுமொழி. தொல்காப்பியம் அகத்தியத்தின் வழியது என்கின்றனரே;

அஃது உண்மையா?

உண்மை என்பதற்குச் சான்று தொல்காப்பியத்தில் இல்லை.

ஆளும் வேந்தரைப் "போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையர்'' (1006) என்று சுட்டும் தொல்காப்பியர், தம் நூலுக்கு அகத்திய மென ஒரு முன்னூல் இருந்திருப்பின் அதனைச் சுட்டத் தவறியிரார்.

தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பாடிய **பனம்பாரனாரும்** குறிக்கத் தவறியிரார். ஏனெனில், அகத்தியர் மாணவருள் ஒருவர் பனம்பாரர் என்றும், தொல்காப்பியரின் ஒரு சாலை மாணவர் (உடன் பயின்றவர்) அவர் என்றும் சுட்டப்படுகிறார். ஆதலால், அவரேனும் பாயிரத்தில் சுட்டி யிருப்பார்.

அரங்கேற்றிய அவையம் '**நிலந்தரு திருவிற் பாண்டியன் அவை யம்**' என்றும், அதற்குத் தலைமை தாங்கியவர் '**அதங்கோட் டாசிரியர்**'

என்றும் கூறும் அவர், அகத்தியர் பெயரைச் சுட்டிக் காட்டாமல் விட்டிரார்.

இனி, அகத்தியர் என்னும் பெயர் தொகை நூல் எதிலும் காணப் படாத ஒரு பெயர். அகத்தியர் என்னும் பெயர் மணிமேகலையில் ஒரு விண்மீன் பெயராக வருவதே முதல் வரவு. தொல்காப்பியர்க்கு ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுக்குப் பிற்பட்டவர் சாத்தனார்.

**அகத்தியர்**

புறப்பொருள் வெண்பாமாலை, நம்பி அகப்பொருள், பன்னிரு பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்கள், அகத்தியர் பெயரான் அமைந்த கணிய மருத்துவ நூல்கள், கம்பர் பரஞ்சோதியார் முதலோர் பாடல்கள் எல்லாம் பிற்பட இருந்த அகத்தியர் என்னும் பெயரினர் பற்றியும் அவர் தோற்றம், செயல்பற்றியும் புனைவு வகையால் கூறுவனவேயாம்.

'**பேரகத்தியத் திரட்டு**' என்பதொரு நூல், முத்துவீரியம் என்னும் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கண நூலுக்குப் பிற்பட அகத்தியர் பெயரில் கட்டி விடப்பட்ட நூல் என்பது வெளிப்படை. ஏனெனில் முத்து வீரியத்தில் காணப்படாத அளவு வடசொற்பெருக்கம் உடையது அது.

ஆதலால், தொல்காப்பியம், அகத்தியம் என்னும் நூலின் வழி நூல் அன்று.

தமிழ் முந்து நூற்பரப்பெல்லாம் ஒரு சேரத் திரட்டிச் செய்நேர்த்தி, செம்மை, மரபுக் காப்பு, புத்தாக்கம் என்பவற்றை முன்வைத்துத் தொகை யாக்கப்பட்டதும் நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் எல்லாம் முந்து நூலாக இருப்பதும் தொல்காப்பியமே ஆகும்.

**பாயிரம்**

*"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்*
*பாயிரம் இல்லது பனுவல் அன்றே"*

என்னும் பாயிர இலக்கணச் சிறப்புக்கு, முழு முதல் மூலச் சான்றாக அமைந்தது தொல்காப்பியப் பாயிரமேயாம்.

அப்பாயிரம், நூலுள் நூலாக ஆய்வுசெய்யப்பட்டது உண்டு.

நூலின் வேறாக நூலொடு சார்த்திச் சிவஞான முனிவராலும், அரசஞ் சண்முகனாராலும் 'பாயிர விருத்தி' எனச் சிறப்பொடு நுணுகி ஆயப்பெற்று நூலாயதும் உண்டு.

அப்பாயிரம் ஒன்று மட்டுமேனும் தமிழ் மண்ணின் ஆள்வோர்க்கும் அறிவர்க்கும் ஊன்றியிருந்திருப்பின், **பின் வந்துள்ள இழப்புகள் பற்பலவற்றை நேராமல் காத்திருக்க முடியும்.**

**நிலவரம்பு**

*"வடவேங்கடம் தென்குமரி*
*ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்"*

*என்று அது கூறும் நிலவரம்பு, இன்று தமிழர்க்கு உண்டா? தமிழரால் அதனைக் காக்க முடிந்ததா? தோல் இருக்கச் சுளை விழுங்கிய சான்று அல்லவா அது!*

*வடவேங்கடம் மலைதானே. தென்குமரியும் மலையாகத்தானே இருக்க வேண்டும். இப்பொழுதுள்ள தென்குமரி எல்லை இல்லையே அது.*

*"பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்*
*குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"*

*என்று சிலப்பதிகாரத்தால் அறியப்படும் குமரிக்கோடு அல்லவோ அத் தென்குமரி.*

*வடவேங்கடம் மொழித் திரிபால் நம்மை விட்டுப் போயது என்றால், கடல் கோளால் போயது அல்லவோ குமரிக்கோடு! (கோடு-மலை).*

***எப்பொழுது ஒரு மண் தன்மொழியை இழக்கின்றதோ அப்பொழுதே தன் மண்ணையும் இழந்து போகின்றது****. அதனால்தான்* ***பரிபாடல்*** *என்னும் தொகை நூல்,*

*"தண்தமிழ் வேலித் தமிழ் நாட்டகம்" என்றது. அதனையே முற்படக் கூறியது தொல்காப்பியப் பாயிரம். "****தமிழ் கூறு நல்லுலகம்****" என்பது அது.*

*தமிழ் கூறுதல் இல்லாத மண் எப்படித் தமிழ் மண்ணாக இருக்கும்? தமிழ் கூறும் மண்ணாக இருந்ததன் தடமும் தெரியாமல் அழிக்க அண்டை மாநிலங்களாகிய ஆந்திரம் கருநாடகம் கேரளம் ஆய மூன்றும் முன்னரே திட்டமிட்டுச் செய்த மண்பறிப்பு, மேலும் தொடர்வதை அன்றி மீட்கப் பெற்றது உண்டா?*

*அண்டை அயலார்,*

*"எடுத்தவை எல்லாம் போகக்*
*கிடைத்தவை எம்பேறு"*

*என்று கொள்ளப்பட்டதுதானே இத்* ***தமிழ்நாடு****?*

**மொழியின் உயிர்ப்பு**

*ஒரு மொழியின் வளர்ச்சியும் வாழ்வும் அதன் நூல்களிலே மட்டுமோ உள்ளது? அதன்* ***உயிர்ப்பும் உரனும் பொதுமக்கள் வாயில் அல்லவோ உள்ளது****. அதனைக் கருத்தில் கொள்ளாத மண், அம்மொழி*

யின் மண்ணாக இராமல் நூலின் அகத்தும், நூலகத்தும் ஒடுங்கிப் போய் விடும் அல்லவோ!

எத்தனை ஊர்ப் பெயர்களைத் தெலுங்காக மாற்றினர்! எத்தனை எத்தனை தமிழ் அலுவலர்களைச் சென்னை இராச்சியமாக இருந்த போதே திட்டமிட்டுத் தெலுங்கு அலுவலராக மாற்றினர்! எத்தனை தமிழ்ப் பள்ளிக் கூடங்களை ஒழித்துத் தெலுங்குப் பள்ளிகளை உண்டாக்கினர்! அப்பொழுது ஆட்சியில் இருந்தவர்கள்,

"செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்னும் இருவகைக் கேட்டுக்கும் சான்றாகத் தாமே இருந்தார்கள்! இன்று வரை அத்தடம் மாறாமல் தானே ஆட்சிக் கட்டில் ஏறியவர்கள் நடை முறைகள் உள்ளன! ஆயினும், ஆட்சிக் கட்டில் ஏறப் பொதுமக்கள் வாக்குகள் கிட்டுகின்றனவே ஏன்? **பொதுமக்கள் வாழ்வுப் பொருளாக மொழி ஆக்கப்பட்டிலது. அதன் விளைவே இது என்பதை உணர்ந்து கடமை புரியாமல், வெறும் முழக்கத்தால் ஏதாவது பயன் உண்டா?**

## ஆய்வு முறை

தொல்காப்பியம், வழக்கு செய்யுள் என்னும் இரண்டு அடிப்படை களிலும் ஆய்ந்து செய்யப்பட்ட நூல் என்னும் பாயிரச் செய்தி, ஆயிரமுறை ஓதி உணர்ந்து செயற்படுத்த வேண்டிய செய்தி அல்லவா!

தொல்காப்பியர் ஆய்ந்த முறையை,

"வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி"

என்கிறது பாயிரம்.

எழுத்தும் சொல்லும் சொற்றொடர் ஆக்கமும் தாம் இலக்கணமா?

எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருள் குறித்தது அல்லவோ!

"பொருள் இல்லாக்கால் எழுத்தும்
சொல்லும் ஆராய்வது எதற்கோ?"

என்னும் இறையனார் களவியல் செய்தி பொருளின் மாண்பு காட்டும்.

**பொருளிலக்கணமாவது வாழ்வியல் இலக்கணம்;** தமிழ் மொழியில் மட்டுமே அமைந்த இலக்கணம்!

## பாயிரம்

தொல்காப்பியர் எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்ந்தார். அவர் ஆய்ந்த வகை,

1. செந்தமிழ்நாட்டு மக்கள் வழக்கொடு ஆராய்ந்தார்.

2. *அவர்க்கு முன்னே ஆராய்ந்து நூலாக்கம் செய்த பெருமக்களின் நூல்களை ஆராய்ந்தார்.*
3. *முறைமுறையே அவை ஒவ்வொன்றற்கும் முரணாவகையில் ஆராய்ந்தார்.*
4. *புலமைத் திறத்தோடு ஆய்ந்து கொண்ட கருத்துகளை அடைவு செய்தார்.*
5. *எவரும் குறை கூறா வகையில் யாத்தார்.*

*இவற்றைப் பனம்பாரனார் பாயிரம்,*

> *"எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்*
> *செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு*
> *முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்*
> *புலம்தொகுத் தோனே போக்கறு பனுவல்"*

*என்கிறது.*

### செந்தமிழ் வழக்கு

*இதனால்,* **செந்தமிழ் வழக்கே வழக்காகக் கொண்டு அச் செந்தமிழ் வழக்கைக் காக்குமாறே தொல்காப்பியம் செய்யப்பட்டது என்றும், அஃது அயல்வழக்குக் கொண்டு அமைக்கப்பட்டது அன்று என்றும், உரை காண்பாரும், உளங்கொண்டு வாழ்வாரும் அச் செந்தமிழ் வழக்குக் கொண்டே உரை காணவும் வாழ்வியல் நடை கொள்ளவும் வேண்டும் என்றும் தெளிவித்தாராம். ஆதலால், தொல்காப்பிய இலக்கணத்தையோ, வாழ்வியலையோ அயன்மைப் படுத்துவார், 'தமிழியல் கெடுத்துத் தாழச் செய்வார்' என்றும், அவர்வழி நிற்பாரும் அவர் போல் கேடு செய்வாரே என்றும் கொள்ள வேண்டும் என்றும் தெளிவு ஏற்படுத்தினாராம்.**

### அரங்கேற்றம்

*ஒரு நாடு அயலாராலும் அயன்மையாலும் கெடாமல் இருக்க ஒருவழி, நூல் ஆக்கி வெளிப்படுத்துவாரைக் கண்ணும் கருத்துமாக நோக்கி யிருக்க வேண்டும். கற்பவன் ஒருவன் செய்யும் தவற்றினும், கற்பிப்பவன் செய்யும் தவறு பன்னூறு மடங்கு கேடாம்; அவன் செய்யும் கேட்டினும்,* **நூலாசிரியன் ஒருவன் செய்யும் கேடு பல்லாயிர மடங்கு கேடாம். அக்கேடு நாட்டுக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் எனின், நூலாய்த லில் வல்ல தக்கோர் அவையத்தில் அந்நூல் அரங்கேற்றப்பட்டு, அவ்வவையோர் ஏற்புப் பெற்று, அரசின் இசைவுடன் வெளியிடப்பட வேண்டும்** *என்னும் கட்டாயத்திட்டத்தை வைத்தாக வேண்டும்! இல்லாக்கால், 'காப்பார் இல்லாக் கழனி' என நாடு கேடுறும் என்று கூறி வழிகாட்டுகிறது அப் பாயிரம்.*

அதுவுமன்றி அரங்கத் தலைவன், ஒருவனையோ ஒருவகைக் கருத்தையோ சாராமல் நடுவு நிலைபோற்றும் நயன் மிக்கோனாகத் திகழவும் வேண்டும் என்றும் கூறுகிறது.

அதனை,

"அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பில் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

என்கிறது.

ஒரு புலவரோ, சில புலவர்களோ கூடியமைத்த அமைப்பு அன்று; ஓரூர் அல்லது ஒரு வட்டார அமைப்பு மன்று; அது நாடளாவிய அமைப்பு என்பாராய், "நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து" என்கிறார்.

'**நூல் தணிக்கைக் குழு**', என ஓர் அமைப்பு இக் குடியரசு நாளில் தானும் உண்டா?

எல்லாரும் இந்நாட்டு மன்னர்; ஒத்த உரிமையர்; பிறப்பால் வேறுபாடு அற்றவர் என்னும் குடியரசு நாளில், **பிறப்புவழி வேறுபாடு காட்டும் 'வருணாசிரம'-'மநுநெறி' நூல்கள் நாட்டில் நடமாட விடலாமா?**

அந்நூல்களை நடையிட விட்டுவிட்டு, அத்தகு குலப்பிரிவு நூல்களை மறுத்து எழுதிய நூல்கள் "நாட்டுக்குக் கேட்டு நூல்கள்" என்று தடை செய்யப்படலாமா?

**தணிக்கை**

திரைப்படத் தணிக்கை என ஒரு துறை இருந்தும், குப்பை வாரிக் கொட்டியும் கோடரி கொண்டு வெட்டியும் அழிவு செய்யும் பண்பாட்டுக் கேட்டுப் படங்களையும் பளிச்சிட விடும் தணிக்கைத் துறைபோல் இல்லாமல், மெய்யான "நூல் தணிக்கைத் துறை" ஒன்று வேண்டும் என்பதைத் தொல்காப்பிய முகப்பே காட்டுவது தானே பனம்பாரர் பாயிரம்!

இவையெல்லாம் தொல்காப்பியம் வாழ்வியல் நூல் என்பதன் முத்திரைகள் அல்லவா!

தீய நூல்களையும் வன்முறை நூல்களையும் வெறிநூல்களையும் உலாவவிட்டு விட்டு 'ஐயோ! உலகம் கெட்டுவிட்டது; மக்கள் கெட்டு விட்டனர்' என்னும் போலி ஒப்பாரி செய்தலால் என்ன பயன்?

**பண்படுத்தம் செய்ய விரும்புவார் சிந்திக்க வேண்டும் செய்தி இஃதாம்.**

**எழுத்து**

*தமிழ்மொழியில் எழுத்துகள் எவ்வளவு? உயிர்-12, மெய்-18; உயிர்மெய்-216; ஆய்தம்-1 என்று 247 காட்டுவாரும்; அதற்கு மேலும் நடையிடுவாரும் உளரே! தொல்காப்பியர் என்ன சொல்கிறார்?*

*“எழுத்தெனப் படுவ,*
*அகர முதல னகர இறுவாய்*
*முப்பஃ தென்ப*
*சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே ”*

*என எழுத்து 33 என்று தானே சொல்கிறார். இவ்வெழுத்து எண்ணிக்கை மிகையா?*

*ஆங்கிலத்தைக் கொண்டு தானே தமிழ் எழுத்தின் எண்ணிக்கை ‘கூடுதல்’ எனப்படுகிறது.*

*தமிழில் உள்ள குறில் நெடில் என்னும் இருவகையுள் ஒருவகை போதுமென ஆங்கிலம் போல் கொண்டால், ஆங்கிலம் போல் உயிரும் மெய்யும் தனித்தனியே எழுதினால் ஆங்கில எழுத்தினும் தமிழ் எழுத்து எண்ணிக்கை குறைந்து தானே இருக்கும்.*

*அன்றியும் ஆங்கிலம் 26 எழுத்துத்தானா?*

*பெரிய எழுத்து, சின்ன எழுத்து , கையெழுத்து பெரியது சின்னது என எண்ணினால்! எண்ண வேண்டும் தானே!*

*குறில் நெடில் என்னும் பகுப்போ, உயிர்மெய் என்னும் இணைப்போ இல்லாமையால், மூன்றெழுத்து நான்கெழுத்து என முடிவனவும் ஆறெழுத்து ஏழெழுத்து ஆகும் அல்லவோ!*

*தமிழ்* - Tamil, Thamil, Thamizh

*முருகன்* = MURUGAN

*நெட்டெழுத்தெல்லாம் ‘சொற்கள்’ அல்லவா தமிழில்!*

*ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ.*

*கா, கீ, கூ, கே, கை,கோ.*

*இவை பொருளமைந்த சொற்கள் அல்லவா!*

a, I *என்னும் இரண்டையன்றி எழுத்துகள் சொல்லாதல் ஆங்கிலத்தில் உண்டா?*

*எழுத்தைச் சொன்னால் சொல் வந்து நிற்குமே தமிழில்! எதனால்?*

ஓரெழுத்துக்கு ஓரொலியே உண்டு. எழுத்தொலிக் கூட்டே சொல்!

அ-ம்-மா - அம்மா

இந்நிலை ஆங்கிலத்தில் இல்லையே. எழுத்து வேறு; ஒலி வேறு; சொல் வேறு அல்லவா!

F, X, Z இவற்றுக்கு, ஒலியெழுத்து இரண்டும் மூன்றும் நான்கும் அல்லவா!

**மெய்யியல்**

தமிழில் உள்ள எழுத்துகளின் பெயரே மெய்யியல் மேம்பாடு காட்டுவன! உயிர், மெய், உயிர்மெய், தனிநிலை, சுட்டு, வினா, குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் - இவை எழுத்தின் பெயர்கள் மட்டுமா? மெய்யியல் பிழிவு தானே!

இவற்றைக் குறிக்கும் பகுதிதானே நூன்மரபு என்னும் முதலியல்.

தமிழ், முத்தமிழ் எனப்படுமே. இசைப்பா வகைக்கு, இங்குச் சொல்லப்பட்ட இயல் இலக்கணம் மட்டும் போதுமா? " இசை நூல் மரபு கொண்டே அதனை இசைக்க வேண்டும்; அதனை இந்நூலில் கூறவில்லை. அதனை இசைநூலில் காண்க " என்கிறார் தொல்காப்பியர் நூன்மரபு நிறைவில். ஏன்? அந்நாளிலேயே இசைநூல்கள் இருந்தன; இசைக் கருவிகள் இருந்தன; இசை நூல்கள் 'நரம்பின் மறை' எனப்பட்டன. அவற்றைக் காண்க என்பாராய்,

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்றார் (33).

மொழி மரபில் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் எனப்படும் சார்பு எழுத்துகள் நிற்கும் வகை, ஒலி நிலை என்பவற்றைக் கூறுகிறார். சொல்லுக்கு முதலாம் எழுத்து இறுதி எழுத்து என்பவற்றையும் கூறுகிறார்.

க்+அ=க. 'க்' என்பதை 'இ' சேராமல் சொல்ல முடியுமா? 'க' என்பதை 'இ' சேராமல் சொல்ல ஏன் முடிகின்றது?

'க' என்பதில் 'அ' என்னும் உயிரொலி சேர்ந்திருத்தலால் முன்னே ஓர் உயிர்ஒலி இல்லாமல் - சேராமல் - ஒலிக்க முடிகிறது.

மெய்-உடல் - தனியே இயங்குமா?

"செத்தாரைச் சாவார் சுமப்பார் "

என்பது வழங்குமொழி ஆயிற்றே.

உயிர் நீங்கிய உடம்புக்குப் 'பிணம்' என்பது பெயராயிற்றே. "பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு" என்பது நம் மந்திரம் அல்லவோ!

உயிர், கூத்தன்; உடலை இயக்கும் கூத்தன்; அக் கூத்தன் போகிய உடல் இயக்கமிலா உடல். இம் **மெய்யியல் விளக்கம் எழுத்தியக்கத்திலேயே காட்டுவது தொல்காப்பியம்.**

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"

என்பது அது (46). சிவணும் - பொருந்தும். மொழி மரபில் வரும் இயக்க இலக்கணம் இது.

எழுத்துகளின் இயக்கம், இரண்டு புள்ளிகள் வருமிடம், ஒலி கூடுதல் குறைதல் என்பவற்றை மொழிமரபில் சுட்டிக் காட்டி எழுத்துகள் பிறக்கும் வகையைப் பிறப்பியலில் கூறுகிறார்.

**நனிநாகரிகம்**

சகர உகரம் (சு) உசு, முசு என்னும் இரண்டிடங்களில் மட்டுமே சொல்லின் இறுதியாகவரும்.

பகர உகரம் (பு) தபு என்னும் ஓரிடத்து மட்டுமே சொல்லிறுதியாக வரும்; ஆனால் தன்வினை பிறவினை என்னும் இருவினைக்கும் சொல் முறையால் இடம் தரும். தபு - சாவு (தன்வினை) அழுத்திச்சொன்னால் ,

**தபு** - சாவச் செய் (பிறவினை) என்கிறார்.

சு, பு என்னும் எழுத்துகளை **உச்சகாரம், உப்பகாரம்** என்று குறிப்பிடுவது **நாகரிகம்** அல்லவோ!

பீ என்பதையும் ஈகார பகரம் என்பது இதனினும் நனிநாகரிகம் அல்லவோ! (234)

'பசு' என்பது தமிழ்ச் சொல் அன்று என்றுணர, இடவரையறை செய்கிறாரே!

மொழியியலாம் அசையழுத்தத்தைத் தபு என்பதன் வழியே காட்டுகிறாரே! எத்தகு **நுண் செவியரும் நாகரிகருமாக நூல் செய்வார் விளங்கவேண்டும்** என்பது குறிப்பாகும் அல்லவோ! (75,76; 79,80)

உயிர்மெய் அல்லாத தனி மெய் எதுவும் எச்சொல்லின் முதலாகவும் வாராது என்பதை ஆணையிட்டுக் கூறுகிறார் தொல்காப்பியர்;

ப்ரம்மரம்

க்ரௌஞ்சம்

- இச்சொற்கள் வேற்று மொழிச் சொற்கள். இவை தமிழியற்படி

பிரமரம்

*கிரௌஞ்சம்*

*என்றே அமைதல் வேண்டும்.*

*'ப்ரான்சு'*

*'ஷ்யாம்'*

*இன்னவாறு எழுதுவது* **மொழிக் கேடர் செயல்** *என மொழிக் காவல் கட்டளையர் ஆகிறார் தொல்காப்பியர்.*

*"பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்"*

*"உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா"*

*என்பவை அவர் ஆணை (59.60).*

*புள்ளி எழுத்துகள் எல்லாமும் சொல்லில் இறுதியாக வருமா? வாரா!*

*ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொன்றுமே வரும் (78).*

*க், ச், ட், த், ப், ற், ங் என்னும் ஏழும் சொல்லின் இறுதியில் வாரா! ஏன்?*

*சொல்லிப்பார்த்தால் மூச்சுத் தொல்லை தானே தெரியும். ஆதலால்,* **நெடுவாழ்வுக்குத் தமிழியல் உதவும்** *என்று ஒலியாய்வாளர் குறித்தனர்.* '**மூச்சுச் சிக்கன மொழி தமிழ்**' *என்பதை மெய்ப்பித்தவர் பா.வே.மாணிக்கர். தொல்காப்பியக் காதலர் மட்டுமல்லர் காவலரும் அவர்.*

*பாக் - பாக்கு*

*பேச் - பேச்சு*

*வேறுபாடு இல்லையா.*

*நெல், எள் என்பனவற்றையே நெல்லு, எள்ளு என எளிமையாய் ஒலிக்கும் மண், வல்லின ஒற்றில் சொல்லை முடிக்குமா?*

*மூல ஒலி தோன்றுமிடம் உந்தி. ஆங்கிருந்து கிளர்ந்த காற்று தலை, கழுத்து,நெஞ்சு ஆகிய இடங்களில் நின்று, பல், இதழ், நா, மூக்கு, மேல்வாய் என்னும் உறுப்புகளின் செயற்பாட்டால் வெவ்வேறு எழுத் தொலியாக வரும் என்று பிறப்பியலைத் தொடங்கியவர் (83) வெளிப்படும் இவ்வொலியை யன்றி அகத்துள் அமையும் ஒலியும் உண்டு; அஃது அந்தணர் மறையின்கண் கூறப்படுவது. அதனைக் கூறினேம் அல்லேம் எனத்* **தமிழ்த்துறவர் ஓக நூன் முறை***யைக் கூறி அவண் கற்குமாறு ஏவுகிறார் (102).*

*சொல்லின் முதலும் இறுதியும் இரண்டே என்பாராய்,*

*"எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்*
*மெய்யே உயிரென்று ஆ யீர் இயல"*

என்கிறார் (103).

அ, ஆ; க, கா என்பவற்றை அகரம் ஆகாரம், ககரம், ககர ஆகாரம் எனச் சாரியை (சார்ந்து இயைவது) இட்டு வழங்குவதும், அஃகான், ஐகான் எனக் கான்சேர்த்து வழங்குவதும் மரபு என்கிறார் (134,135).

மணி + அடித்தான் = மணியடித்தான்

அற + ஆழி = அறவாழி

- இவற்றில் ய், வ் என்னும் இரண்டு மெய்களும் ஏன் வந்தன?

நிற்கும் சொல்லின் இறுதியும் வரும் சொல்லின் முதலும் உயிர் எழுத்துகள் அல்லவா! இரண்டு உயிர்கள் இணைதல் வேண்டுமானால் இணைக்க இடையே ஒரு மெய் வருதல் வேண்டும். அம்மெய் உடம்பட- உடம்படுத்த- வருமெய் ஆதலால் உடம்படுமெய் என்றனர். **மெய்யியற் சீர்மை, மொழிச் சீர்மை** ஆகின்றதே!

*"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே*
*உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்"*

என்கிறார் (140).

### பொருள்தெரி புணர்ச்சி

*"மாடஞ் சிறக்கவே"*

என்பதொரு வாழ்த்து. இது "மாடம் சிறக்கவே" என்பது. இதனை,

*"மாடு அஞ்சு இறக்கவே"*

என்று பிரித்து உரைத்தால் 'சாவிப்பு' ஆகவில்லையா! இதனைக் கருத்தில் கொண்டு மறுதலைப் பொருள் வராவகையில் சொல்ல வேண்டும் என்பதற்காக,

*"எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி*
*இசையில் திரிதல் நிலைஇய பண்பே"*

என்கிறார் (141). எழுத்து ஒரு தன்மையதுதான்; ஆனால், சொல்லும் முறையால் வேறு பொருள் தருகின்றமையைக் குறிப்பிட்டுத் தெளிவிக்கிறார்.

"பரிசாகப் பெற்றேன்; பரிசாகப் பெற்றேன்" என்றான் ஒருவன். அவன், பரிசாகப் பெற்ற பரி, சாகப் பெற்றதில் சொல் மாற்றம் இல்லையே; பொருள் மாற்றம் பெருமாற்றம் இல்லையா?

அது, 'நீர் விழும் இடம்' என்றால் குறிப்பார் குறிப்புப் போல் இருபொருள் தரும் அல்லவோ! இதனையும் குறிக்கிறார் வாழ்வியல் வளம் கண்ட தொல்காப்பியர் (142).

**எழுத்து வரிசை**

*"கண்ணன் கண்டான்"*

*"தென்னங் கன்று"*

*கண்ணன் என்பதில் 'ண்' என்பதை அடுத்து அதே எழுத்து (ண) வந்தது.*

*கண்டான் என்பதில் 'ண்' என்பதை அடுத்து அதன் இன எழுத்து (ட) வந்தது.*

*தென்னம் என்பதில் 'ன்' என்பதை அடுத்து அதே எழுத்து (ன) வந்தது.*

*கன்று என்பதில் 'ன்' என்பதை அடுத்து அதன் இன எழுத்து (று) வந்தது.*

*இவ்வாறே க,ங; ச,ஞ; ட,ண; த,ந; ப,ம; ற,ன ஒற்று வரும் இடங்களைக் காணுங்கள். அவ்வொற்று வரும்; அல்லது அதன் இன ஒற்று வரும். இத்தகு சொல்லமைதியைப் பொதுமக்கள் வாயில் இருந்து புலமக்கள் கண்டுதானே தமிழ் நெடுங்கணக்கும் குறுங்கணக்கும் வகுத்துள்ளர். ஒரு வல்லினம், ஒரு மெல்லினம் என அடுத்தடுத்து வைத்தது ஏன்?* **வல்லினமாகவே மெல்லினமாகவே இடையினம் போல அடுக்கி வைக்காமை வாழ்வியல் வளம்தானே!**

*கங, சஞ என அடங்கல் முறையில் வல்லினத்தின்பின் மெல்லினம் வரினும்,சொல் வகையில் மெல்லினத்தின் பின் வல்லினம் வருதல் மக்கள் வழக்குக் கண்ட மாட்சியின் அல்லது ஆட்சியின் விளைவே ஆகும்.*

***ங்க, ஞ்ச (தங்கம், மஞ்சள்)*** *என வருதலை யன்றி,* ***க்ங, ச்ஞ*** *எனவரும்* ***ஒரு சொல்தானும் இல்லையே! இன்றுவரை ஏற்பட வில்லையே! எழுத்து முறையை ஙக ஞச ணட என மாற்றிச் சொல்ல எவ்வளவு இடர்? இது பழக்கமில்லாமை மட்டுமா? இல்லை! இயற்கை யல்லாமையும் ஆம். தமிழின் இயற்கை வளம் ஈது!*** *(143)*

**அளவை**

*தொல்காப்பியர் நாளில் 'பனை' என ஓர் அளவைப் பெயரும் 'கா' என ஒரு நிறைப் பெயரும் வழக்கில் இருந்தன. அன்றியும் க ச த ப ந ம வ அ உ என்னும் எழுத்துகளை முதலாகக் கொண்ட சொற்களால் அளவைப் பெயரும் நிறைப் பெயரும் வழக்கில் இருந்தன. (169,170) அவை:*

*கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டில் அகல் உழக்கு எனவும்,*

*கழஞ்சி சீரகம் தொடி பலம் நிறை மா வரை அந்தை எனவும் வழங்கின.*

இவையன்றி உரையாசிரியர்களின் காலத்தும் அதன் பின்னரும் வேறுவேறு அளவைகள் வழங்கியுள்ளன. இவையெல்லாம் நம்முந்தையர் வாழ்வியல் சீர்மைகள்!

அளவுக்குப் பயன்பட்டது கோல். அக் கோல் அளவுகோல் எனப்பட்டது. அக் கோல் மாறாமல் செங்கோல், நிறைகோல், சமன்கோல், ஞமன்கோல், நீட்டல்கோல், முகக்கோல், எழுதுகோல், தார்க்கோல் என வழக்கூன்றின.

அண்மைக் காலம்வரை கலம், மரக்கால், நாழி, உரிஉழக்கு, தினையளவு, எள்ளளவு, செறு, வேலி முதலாகப் பலவகை அளவை வழக்குகள் இருந்தன. பொதி, சுமை, கல், வண்டி, துலாம், தூக்கு என்பனவும் வழங்கின. இவையெல்லாம் நம்மவர் பல்துறை வளர்வாழ்வு காட்டுவன வாம் (170).

**யாவர்**

'யாவர்' என்பது 'யார்' எனவும்படும்.

'யாது' என்பது 'யாவது' எனவும்படும்.

இன்னவை வழக்கில் உள்ளவை கொண்டு ஏற்றுக்கொள்ளத் தக்கவை என மக்கள் வழக்கை மதித்து மொழிவளர்க்கச் செய்கிறார் (172).

**உரு**

உரு என்பது என்ன? வடிவு; உருபு என்பது வடிவின் அடையாளம். அதன் விளக்கமாவது உருபியல். அதிலே, அழன் புழன் என்னும் சொற்கள் சாரியை பெறுதல் பற்றிக் கூறுகின்றது ஒரு நூற்பா (193).

**அழன், புழன்**

அழலூட்டப்படுவதும் புதைக்கப்படுவதுமாகிய பிணம் முறையே அழன், புழன் எனப்படுகின்றன. "இடுக ஒன்றோ, சுடுக ஒன்றோ" என்பது புறநானூறு. புறங்காடு எனப் பொதுப்பெயர் உண்டாயினும், இடுகாடு, சுடுகாடு என்னும் பெயர்கள் இன்றுவரை நடைமுறையில் உள்ளனவேயாம். இடுகாடு, புதைகாடு எனவும் சுடுகாடு, சுடலை எனவும் வழங்குதலும் உண்டு. அழன் புழன் என்பவற்றைச் சுட்டுகிறார் தொல்காப்பியர் (193).

தொல்காப்பியர் உதி, ஒடு, சே என்னும் மரங்களைக் குறிக்கிறார். ஒன்றனைக் கூறி அதுபோல, அதுபோல எனத் தொடர்கிறார் (243, 262, 278).

"உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே"

"ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே"

"சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே"

*என்பவை அவை. உதிங்கிளை, ஒடுங்கிளை, சேங்கிளை எனவருதலைக் குறிக்கிறார். ஏன் இப்படித் தொடரவேண்டும்? உதி (இ), ஒடு (உ), சே (ஏ) என, சொல் ஈறு வேறுவேறு இல்லையா? ஆதலால் அவ்வவ் விடத்து வைத்துச் சொல்கிறார். அவர் கையாண்ட அரிய நூன்முறை இது.* ***வைத்த இடத்தை மாற்றாமை வைப்புமுறை என நம் வீட்டிற்கும் அலுவலகத் திற்கும் உரிய பொருள்களையும் கோப்புகளையும் ஒழுங்குற வைக்க வழிகாட்டும் வழிகாட்டுதல் எனக் கொள்ளலாம் அல்லவா!***

*உதிமரம் ஒதியாக வழங்குகிறது. ஒதி பருத்து உத்திரத்திற்கு ஆகுமா என்பது பழமொழி. ஒதியனேன் என வள்ளலார் தம்மைத் தாமே சுட்டிக் கொண்டார்! அவர்க்கா அது?*

*ஒடு என்பது உடை என்னும் மரம்; முள்மரம். ஒட்டரங்காடு, ஒடங்காடு என்பது பாஞ்சாலங்குறிச்சிப் பாட்டு.*

*சேங்கொட்டை செந்நிறத்தது. தேற்றாங் கொட்டை என்பதும் அது.* ***தொல்காப்பியர் மரநூல் வல்லார் என்பது மரபியலில் பெருவிளக்கமாம்.***

*பனம்பாளையைச் சீவி வடித்த நீரைக் காய்ச்சிப் பாகாக்கிப் பனை வட்டு (வட்டமாக்கிய திரளை) எடுத்தனர். அதனை பனை + அட்டு = பனாட்டு என்றனர். அப்பனாட்டு இது கால் பனை வட்டு என வழங்கப் படுதல் எவரும் அறிந்தது. அட்டு, வட்டு என்ற அளவில் நிற்கவில்லை. கட்டி எனவும் வழக்கூன்றியது. கருப்புக் கட்டி (கரும்பில் இருந்து எடுத்தது) சில்லுக் கருப்புக் கட்டி என்றும் ஆயிற்று. பனங்கட்டி,தென்னங்கட்டி இரண்டும் வெல்லக்கட்டி, சருக்கரைக் கட்டி என்றும் ஆயின. பனைக் கொடி சேரர் கொடி இல்லையா!*

*ஏழ்பனை நாட்டையும் ஏழ்தெங்க நாட்டையும் இவை நினை வூட்ட வில்லையா!* ***ஏழேழு நாடு என்பதன் எச்சமே ஈழ நாடு என்றும் ஏழ்பனை நாட்டின் சான்றே யாழ்ப்பாண நாடு என்றும் நம் வரலாற்றுப் பெருமக்களைத் தூண்டித் துலங்கச் செய்ததை நாம் அறியலாமே.***

*கல்லாதவரும் புளிமரம் என்னார். புளியமரம் என்றே கூறுவார். புளியங்கொம்பு, புளியங்காய் என்றே வழங்குவார்.*

*புளிங்கறி, புளிங்குழம்பு, புளிஞ்சாறு என மெல்லெழுத்துவரக் கூறுவதும் வழக்கு.*

*அன்றியும் புளிக்கறி, புளிக்குழம்பு, புளிச்சாறு என்பதும் வழக்கே. இவையெல்லாம் தொல்காப்பியர் காலம் தொட்டே வழங்கப்படுதல் வியப்பில்லையா? (244 - 246).*

குற்றியலுகர ஈற்று மரப்பெயர்ச் சொல்லுக்கு அம் என்பதே சாரியை என்று கூறும் ஆசிரியர் (கமுகங்காய், தெங்கங்காய்) மெல்லெழுத்து வல்லெழுத்தாகாத மரப்பெயரும் உண்டு என்கிறார் (416).

**வேப்பு**

வேம்பு கடம்பு என்பவை, 'வேப்பு கடப்பு' என்று வழக்கில் உண்மையை நாம் காண்கிறோம் (வேப்பங்காய், கடப்பங்கிளை). அதனால், உரையாசிரியர்கள், வலியா மரப் பெயரும் உள என்பதால், வலிக்கும் மரப் பெயரும் உண்டு என்று கொள்க என்கின்றனர். **உரை கண்டார், நூல் கண்டார் நிலையை அடையும் இடங்கள் இத்தகையவை.**

பூங்கொடி எனலாமா? பூக்கொடி எனலாமா? இரண்டும் சொல்லலாம் என்பது தொல்காப்பியம் (296).

**ஊனம்**

உடல் இருவகையாகக் கூறப்படும். ஊன் உடல்; ஒளி உடல் என்பவை அவை. ஊன் உடலில் ஏற்படும் குறை 'ஊனக் குறை' எனப் பட்டது. இன்றும் 'ஊனம்' உடற்குறைப் பொருளில் வழங்குவதனை நாம் அறிய முடிகின்றதே (270). ஊனம் பற்றித் தொல்காப்பியர் கூறுவதால், அது தமிழ்ச் சொல் என்பதற்கு ஐயமில்லையே!

**கோயில்**

கோயில் என்று சிலர் வழங்குகின்றனர்.

கோவில் என்றும் வழங்குகின்றனர்.

இவற்றுள் எது சரியானது? இரண்டும் சரியானவைதாமா?

"இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்"

என நூற்பா அமைத்துள்ளார் தொல்காப்பியர் (293).

கோ என்பதன் முன் இல் என்னும் சொல் வந்தால் இயல்பாக அமையும் என்கிறார். முதல் உரையாசிரியர் இளம்பூரணர் 'கோயில்' என்கிறார். நச்சினார்க்கினியர் 'கோவில்' என்கிறார். அவ்வாறானால் இரண்டும் சரியா?

நன்னூலார் உடம்படுமெய் வருவது பற்றிய நூற்பாவை,

"இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்"

என்று அமைத்துள்ளார். இதன்படி ஏனை உயிர்வழி வவ்வும் என்பது கொண்டு 'கோவில்' என்றனர்.

*ய, வ இரண்டும் வருமென்றால் 'ஏ' என்பதற்குக் கூறியது போல் ஏ, ஓ முன் இருமையும் என்று நன்னூலார் சொல்லியிருக்க வேண்டுமே!*

*முடிவு செய்தற்கு வழக்குகளை நோக்குதல் வேண்டும்.* ***இருபதாம் நூற்றாண்டு உரைநடையில் கோவில் இடம் பெறுவதை அன்றி, அதற்கு முன்னை நூற்பெயர், செய்யுள் வழக்கு என்பவற்றில் ஓரிடத்துத் தானும் கோவில் இடம் பெறவில்லை.*** *ஆதலால் ஆசிரியர் தொல்காப்பியர் ஆணைப்படி 'கோஇல்' என இயற்கையாகவே எழுத வேண்டும். இல்லையேல் வழிவழி வந்தவாறு கோயில் என்றே எழுத வேண்டும்.*

*"வாயில் வந்து கோயில் காட்ட"*

*"கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி"* (சிலப்பதிகாரம்)

*"கோயில் நான்மணிமாலை"* (நூற்பெயர்)

*இன்னவை கொண்டு தெளிக.* ***யகர உடம்படுமெய் இயல்பாக வருதலும், வகர உடம்படுமெய் சற்றே முயன்று வருதலும் நோக்கின் விளக்கம் ஏற்படும்.***

**காயம்**

*'காயம்' என்பது தொல்காப்பியத்தில் 'விண்'ணைக் குறித்தது. "விண் என வரூஉம் காயப் பெயர்" என்றார் அவர் (305). இப்பொழுது* ***ஆகாயம்*** *என வழங்குகின்றது.*

**அகம்**

*அகம் என்னும் சொல்லின்முன் 'கை' சேர்ந்தால் அகம் + கை = அங்கை ஆகும் என்கிறார். அவ்விதிப்படி அகம் + செவி = அஞ்செவி என்றும் அகம்+கண் = அங்கண் என்றும் வழங்குகின்றன (310).*

*அங்கை என்பது பொதுமக்கள் வழக்கில் 'உள்ளங்கை' என்றுள்ளது. 'உள்ளங்கால்' எனவும் 'உள்ளகம்' எனவும் வழங்குகின்றன.*

**முறைப்பெயர்**

*இன்னார் மகன் இன்னார் என்னும் வழக்கம் என்றும் உண்டு. கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்று வெளிப்படுத்தியும் சேந்தங் கூத்தனார் என்று (சேந்தனுக்கு மகனாராகிய கூத்தனார்) தொகுத்தும் கூறுதல் வழக்கம். இன்னொரு வழக்கமும் தொல்காப்பியர் காலத்தில் பெருக வழங்கியது. அதற்கு விரிவாக இலக்கணம் கூறுகிறார் (347 - 350).*

*பெரியவர்கள் பெயரைச் சொல்லுதல் ஆகாது என்பவர், 'இன்னார் தந்தை' என மகன் அல்லது மகள் பெயரைச் சுட்டி அவர்க்குத் தந்தை அல்லது தாய் என முறை கூறல் இக்கால வழக்கம்.*

*மணி அப்பா, மணி அம்மா (மணிக்கு அப்பா, மணிக்கு அம்மா) என வழங்கும் வழக்கம் தொல்காப்பியர் நாள் பழமையது.*

*ஆதன் தந்தை (ஆந்தை)*

*பூதன் தந்தை (பூந்தை)*

*என்பன போல வழங்கப்பட்டவை. ஆதன் பூதன் என்பவை அந்நாள் பெருந்தக்க பெயர்கள். பிசிராந்தையார், பூதனார், பூதத்தார், நல்லாதனார், நப்பூதனார் என்றெல்லாம் புகழ் வாய்ந்தோர் பலர் ஆவர்.*

**வல்**

*இந்நாள் பரிசுச் சீட்டுக்கு முன்னோடியான சூதாட்டத்தின் ‘அகவை’ மிகப் பெரியது. தொல்காப்பியர் நாளிலேயே சூதாட்டக் காய், ஆடும் அரங்கமைந்த பலகை என்பன இருந்தமையால் அவற்றின் இலக்கணத்தையும் கூறுகிறார் (374 - 375).*

*ஆடு, புலி, குதிரை வைத்து ஆடும் ஆட்டங்களைப் போல் ‘நாய்’ வைத்து ஆடியுளர் என்பது நாயும் பலகையும் (கட்டமிட்ட அரங்கப் பலகை) என்பதால் தெரிகின்றது. சூதின் தன்மையை வள்ளுவம் “ஒன்று எய்தி நூறு இழக்கும் சூது” என்பதால் வெளிப்படுத்தும். அதன் கொடுமையை வெளிப்பட உணருமாறு ‘வல்’ என்று பெயரிட்டிருந்த ஆழ்ந்த சிந்தனையர், எண்ணத்தக்கார் (374).*

**தமிழ்**

*கதவு, தாழ் என்பவை வீடு தோன்றிய பாதுகாப்பு உணர்வு ஏற்பட்ட நாள் முதலே உண்டாகி யிருக்கும். “வழியடைக்கும் கல்” என்பது பாதுகாப்புத் தானே.*

*தாழ் கதவொடு கூடியது. பூட்டு என்பது தாழ்க் கதவொடு இணைந் திருப்பதனை அன்றித் தனியே எடுத்து மாட்டுவதாகவும் அமைந்துளது. பாதுகாப்பில் எத்தனையோ புதுமைகள் ஏற்பட்டுள்ளன. எனினும் தாழ்க் கோல், திறவுகோல், திறப்பான் குச்சி, திறவு என்னும் பழம் பெயராட்சிகள் வழக்கில் மறையாமல் வாழ்ந்துகொண்டுள்ளன.*

*தாழைத் திறக்கும் கோல் தாழக் கோல் எனவும் தாழ்க் கோல் எனவும் வழங்கும் என்று கூறிய தொல்காப்பியர் தமிழ் என்பதை விட்டுவிடாமல், “தமிழென் கிளவியும் அதனோர் அற்றே” என்கிறார். தமிழ்த் தெரு, தமிழத் தெரு; தமிழ்க் கலை, தமிழக் கலை என வழங்கும் வகையை இதனால் காட்டுகிறார்.* **திராவிடத்தில் இருந்து தமிழ் வந்தது என்பாரை இத் தொல்காப்பிய விளக்கம் தண்ணீர் தெளித்துக் கண் விழிக்கச் செய்ய வல்லதாம்.**

**எழுத்து**

*எழுது, எழும்பு, எழுப்பு, எழூஉ, எழுச்சி என்பனவெல்லாம் எழு என்பதன் வழியாக வந்தவை. எழுத்து என்பதும் அவ்வாறு வந்ததே. எழூஉம் சீப்பும் உடைய அரணத்தைக் கொண்டிருந்தவர் தமிழர். அவர்* **எழுத் தழிவுக்கும் எழுத்துச் சிதைவுக்கும் இடந்தருதல் இன்றி மொழி காத்தல் கடமையாகும்.**

*மேலும்,* **எழுத்தும் எண்ணும் இணைந்த மொழி தமிழ். எழுத்தே எண்ணாக இருந்தும் அவ்வெண்ணை ஏறத்தாழ மறந்தே போன மக்கள் தமிழ் மக்கள். தமிழெண் மீட்டெடுப்புச் செய்தலைத் தாமே உணரார் எனினும் அண்டை மாநிலங்களை எண்ணினாலும் தமிழர் புரிந்து கொள்ள முடியும்.**

*க, உ, ங, ச,ரு, சா, எ, அ, கூ, க0 என்பவை பழந்தமிழெண்கள். இத் தமிழெண்களின் வழிப்பட்டவையே 1,2,3 என வழங்கப் பெறும் எண்கள். பழந்தமிழர் உலக வணிகத்திற்குப் பயன்படுத்திய பொது எண்கள் இவை.*

**எண்**

*எண்கள் எழுத்துகள் என்பவை வேறு வேறாக இல்லாமல், எண்களே எழுத்தாக இருந்தமையால் "எண்ணும் எழுத்தும்" இணைந்தே வழங்கின.*

*"எழுத்தறியத் தீரும் இழிதகைமை"*

*என்றும்,*

*"எழுத்தறி வித்தவன் இறைவன்"*

*என்றும் வழக்கூன்றின.*

*இவ்வெண்களைச் சொல்லிப் பாருங்கள்; நூறுவரை சொல்லுங்கள்; எல்லாமும் உகரங்களாக - குற்றியலுகரங்களாக - முடிவதைப்பாருங்கள். ('ஏழு' என்பது முற்றியலுகரம்).*

*ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, நூறு. இவற்றுள் ஒரே ஓர் எண் (ஒன்பது) தப்பி வந்தது போல் தோற்றம் தரவில்லையா?*

*ஒன்பது என்னும் இடத்திலே '***தொண்டு***' என்பதே இருந்தது. அது வழக்கு வீழ்ந்தும் வீழாமலும் இருந்த காலம் தொல்காப்பியர் காலம். அதனால் அவர் ஒன்பது என்பதுடன் தொண்டு என்பதையும் வழங்கி யுள்ளார் (445, 1358). அவ்வாறே பரிபாடலிலும் ஒன்பதும் தொண்டும் வழங்கப்பட்டுள.*

*தொண்டு வழக்கிழந்து ஒன்பது வந்தமையால் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவையும் கீழே இறங்கிவிட்டன. தொண்பது என்னும்*

இடத்தில் தொண்ணூறும், தொண்ணூறு என்னும் இடத்தில் தொள்ளாயிரமும் வந்துவிட்டன. இந் நாளிலும் "தொன்னாயிரம் முறை சொன்னேன்" என்னும் பேச்சுமொழி உண்மை, பழமரபை உணர்த்துகின்றது.

நூறுவரை உள்ள எண்கள் உகரத்தில் முடிதல் ஒலி எளிமை, ஒழுங்குறுத்தம் என்பவை கொண்டமையை உணரின் அவ்வமைப் பாளியரின் ஆழம் புலப்படும்.

ஆயிரம், இலக்கம், கோடி என்பவை வழங்கப்படவில்லையோ எனின் ஆயிரம் வழங்கப்பட்டது. அதனின் மேற்பட்டவை ஐ, அம், பல் என்னும் முடிபு கொண்ட சொற்களாக வழங்கப்பட்டன.

தாமரை, வெள்ளம், ஆம்பல் முதலியவை அவை.

ஆயிரம் அடுக்கிய ஆயிரம் என்பவை தாமரை எனவும் வெள்ளம் எனவும் ஆம்பல் எனவும் வழங்கப்பட்டன. திருவள்ளுவர், சங்கத்தார் ஆயோர் நாளிலேயே கோடி, அடுக்கிய கோடி என்பவை இடம் பெறலாயின.

கோடி என்பது கடைசி என்னும் பொருளில் இன்றும் வழங்கப் படுவதே. கடைசி எண் கோடி எனினும், கோடி, கோடியை அடுக்கிய கோடி என்பதும் வழக்கில் இருந்துளது. கோடா கோடி, கோடானு கோடி என்பன அவை.

ஊரறிய ஒளியுடைய செல்வர்கள் இருப்பின், அவர்கள் பெருமையாகப் பேசப்பட்டனர். ஒளிக் கற்றையால் விளங்கும் கதிரவன் போலக் கருதப்பட்டனர். அதனால் அவர்கள் 'இலக்கர்' களாகினர். "எல்லே இலக்கம்" என்பது தொல்காப்பியம் (754). விளங்கிய செல்வம் இலக்கம் ஆயது; எண்ணும் ஆயது.

**மக்கட்கை**

மக்கள் என்பதனுடன் கை சேர்ந்தால்,

'மக்கள் கை' என்னும் இடமும் உண்டு;

'மக்கட் கை' என்னும் இடமும் உண்டு.

உயிருடையவர் கை எனின் மக்கள் கை.

உயிரற்றவர் கை எனின் மக்கட் கை.

இதனைத் தொல்காப்பியர்,

"மக்கள் என்னும் பெயர்ச்சொல் இறுதி
தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்தே"

என்று கூறுகிறார் (405).

*மக்கள் என்பார் உயிருள்ளவர். அவர்தம் கை உயிரற்றால் - செயலற்றால் - தனித்துக் கிடந்தால் - 'மக்கட் கை' என மாற்றம் பெறும் என்பது இப் பரபரப்பான - அமைந்து எண்ண முடியாத - உலகியலில் வியப் பூட்டுவதில்லையா?*

**பெண்டு**

*மக்கள் என்னும் பொதுப்பெயர் பெண், ஆண் எனப் பால் பிரிவுடைமை எவரும் அறிந்ததே. பெண் என்பது பெண்டு என்றும் வழங்கப்பட்டது (420, 421). பெண்டிர் என்பதில் அது விளங்கி நிற்கிறது. பெண்டு என்பதைப் பொண்டு ஆக்கி ஆட்டி சேர்த்துப் 'பொண்டாட்டி' ஆக்கி மொழிக் கேட்டுடன் பண்பாட்டுக் கேடும் ஆக்கிவருதல் குறுந்திரை பெருந்திரைக் கொள்கையாகி விட்ட நிலையில்,* **'பெண்டு' என்னும் பண்பாட்டுப் பெயர் தலை வணங்க வைக்கிறது.**

*பெண்டன் கை, பெண்டின் கை என வழங்கப்படுதலை,*

*"வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்"*

*என்றும்,*

*"பெண்டென் கிளவிக்கு அன்னும் வரையார்"*

*என்றும் கூறுகிறார் (420, 421).*

**திசை**

*"தெற்கு வடக்குத் தெரியாதவன்" என்பது பழமொழி. தென்கிழக்கு, வடகிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு எனக் கோணத் திசைகளை வழங்கு கிறோமே! முழுத்திசையில் சுருங்காத முன் திசையைக் கோணத் திசைக்குக் குறுக்குவது நம் வழக்கா? நம் முந்தைத் தொல்காப்பியர் காட்டும் வழக்கே யாம். அவர்க்கு முன்னரே அவ்வழக்கு இருந்ததை என்மனார் புலவர் என்பதால் தெளிவிக்கிறார் (432).*

**பன்னிரண்டு**

*பத்துடன் மூன்று பதின்மூன்று*

*பத்துடன் ஐந்து பதினைந்து*

*இவ்வாறுதானே வரும். பத்துடன் இரண்டைப் 'பன்னிரண்டு' என்கிறோமே! எதனால்?*

*"பத்தன் ஒற்றுக்கெட னகரம் இரட்டல்*
*ஒத்த தென்ப இரண்டுவரு காலை"* (434)

*என்கிறார். மேலும்,*

*"ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது"* (435)

*என்பதால் பன்னீராயிரம் என்பதற்கு இலக்கணம் காட்டுகிறார். "பன்னீரி யாண்டு வற்கடம் சென்றது" என்பது களவியல் உரை. 'முந்நீர்ப் பழந் தீவு பன்னீராயிரம்' என்பது கல்வெட்டு.*

### மொழிக்காவல்

*தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் வழியாக அறியப் பெறும் வாழ்வியல் வளங்களுள் சில இவை. இவ்வதிகாரத்தைச் சொல்லி முடிக்கும் ஆசிரியர் சொல்லிய அல்லாத திரிபுகள் செய்யுள் வழக்கிலோ மக்கள் வழக்கிலோ காணக் கிடப்பின் அவற்றையும் உரிய வகையால் அமைத்துப் போற்றிக் கொள்க என்கிறார்.* **தமிழ்மொழி வழக்கழிந்து படாமல் என்றும் உயிருடைய மொழியாகத் திகழவேண்டும் என்னும் மொழிக் காவல் உள்ளத்தின் வெளிப்பாடே இஃதாம்** *(483).* **இவ்வாறு இயல்களி லும் அதிகாரங்களிலும் கூறுவன மொழியின் விரிவாக்கத்திற்கு உடன்பட்டு வழிவகுப்பதாகும்.**

*(குறிப்பு : தொல்காப்பிய நூற்பா எண்களாகக் குறிக்கப்பட்டவை எல்லாமும் சைசி. கழகத் தொல்காப்பிய மூலப்பதிப்பு எண்களாகும்.)*

# பாயிரம் – தெளிவுரை

*வடக்கே வேங்கட மலை முதல் தெற்கே குமரிமலை முடிய இடைப்பட்ட நிலம் தமிழ் வழங்கு நிலமாகும். இந்நிலத்தில் வழங்கும் மக்கள் வழக்கு செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்குகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுத்து, சொல், பொருள் என்பவற்றை ஆராய்ந்து செய்யப்பட்டது இத் தொல்காப்பிய நூல்.*

*இது, இச் செந்தமிழ் நாட்டின் இயல்பொடு பொருந்தச் செய்யப் பட்டது. இந்நாட்டில் பழங்காலம் தொட்டு வழங்கிவரும் நூல்களைக் கற்றும் அவற்றை முறையுற ஆராய்ந்தும் வாழ்வியலுக்கு இன்றியமையாத அறிவுச் செல்வங்கள் எல்லாமும் ஒருங்குறத் தொகுக்கப்பட்டது குற்றமற்ற இந்நூல். இது,* **நிலந்தரு திருவிற் பாண்டியன்** *என்னும் வேந்தன் அவையில் அரங்கேற்றப்பட்டது. அறம் உரைக்கும் நாவினையுடையவ னும் நான்மறை வல்லானும் ஆகிய* **அதங்கோட்டு ஆசான்** *என்பான் தலைமை கொண்டிருந்தான்.*

*ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் கூடிய அவ்வவை யில் அவர்கள் குறைவற அறியவும் மயக்கமற உணரவும் நூன்முறை வழுவாமல் காட்டியவன் யாவனோ எனின், அவன் நீர் நிரம்பிய கடல் சூழ்ந்த உலகின்கண் விளங்கும் ஐந்திரம் எனத்தக்க தொல்காப்பியத்தை முழுதுறத் தோற்றுவித்த ஆற்றலாளன் எனப் பாராட்டப்பட்டவனும், தன்பெயரைத் தான் இயற்றிய நூல் வழியால்* **தொல்காப்பியன்** *என நிலைநிறுத்தியவனும், பல்வகைப் புகழுக்கும் இருப்பாகியவனும் சீரிய தவத்தவனும் ஆகிய பெரியோன்.*

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்

நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

# சொல்லதிகார இயலமைதி

சொல்லதிகாரம் கிளவியாக்கம் (சொல்லாக்கம்) முதலாக எச்சவியல் இறுதியாக ஒன்பது இயல்களை உடையது. அவ்வியல்கள் முறையே கிளவியாக்கம், வேற்றுமைஇயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பன. இவை ஒன்றற் கொன்று தொடரிபோல் - சங்கிலிபோல் - தொடர்புடையன.

## சொல்

சொல் என்பது பொருளுணர்த்தும் கருவி; மாந்தர் **தம் நெஞ்ச ஊர்தி; உலகத்தை நெருக்கி வைக்க வல்ல இயக்கி.**

சொல் என்பது மாந்தர்தம் குறிப்பு உணர்த்துவதற்கும் தேவை நிறைவேற்றத்திற்கும் தம் பட்டறிவால் இயற்கையின் துணை கொண்டு படைக்கப்பட்ட செய்நேர்த்தியுடையது.

சொல்லின் ஆற்றல் பெரிது. "ஆவதும் சொல்லால்; அழிவதும் சொல்லால்" என்பது பழமொழி.

சொல் ஆக்கத்திற்கே அன்றி அழிவுக்கும் ஆதலுண்டு என்பதே அதற்குக் '**கூற்று**' என்றொரு பெயரைத் தந்தது கூறுபடுத்துவது அழிப்பது கூற்றெனப்படுதல் அறியத்தக்கது.

சொல் எதுவும் பொருளற்றதில்லை என்பது தொல்காப்பியர் தெளிவு. அதனால்,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

என்றார் (640).

அப்பொருள் பார்த்த அளவில் புலப்படல் உண்டு. ஆழ்ந்து பார்த்து அதன்பின் கண்டு கொள்ளத்தக்கனவும் உண்டு என்பதால்,

"மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்றா"

என்றார் (877).

## நெல்

மணி இல்லாத நெல்லை 'நெல்' என்பது வழக்கில்லை. பதர், பதடி என்பனவே வழக்கு.

நெல் மணி பிடித்தலைப் 'பலன்' பிடித்தல் என்பர்;ஆடு மாடு கருக் கொள்ளுதல் 'பலப்படுதல்' எனப்படும்.

மக்கள் வாழ்வில் கொள்ளும் **பயன்**மற்றை உயிரிகளின் வாழ்வில் **பலன்** எனப்படுகின்றது.

பலன் இல்லா நெல்லும்
பயன் இல்லாச் சொல்லும்

ஒத்தவை என்பதால் 'சொல்' என்பதற்கு நெல் என ஒரு பொருள் உண்டாயிற்று. சொல் தரும் உணவு சோறு என்றும் சொன்றி என்றும் வழக்கில் ஆயது.

"பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்னும் வள்ளுவ உவமை எண்ணின், உண்மை விளக்கமாம்.

சொல்லதிகார முதலியலின் பெயர் 'கிளவியாக்கம்'. ஆக்கம் என்பது என்ன?

ஆக்குவது ஆக்கம். 'ஆக்குப் புரை' என்பது சமையல் அறை.

சொல்லை ஆக்குதல், நெல்லைச் சோறாக்கும் செயல்போல்வது என்பதை, உரையாசிரியர் சேனாவரையர், "வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான் இவ்வோத்துக் கிளவியாக்க மாயிற்று. ஆக்கம், அமைத்துக் கோடல், **நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசியமைத் தாரை அரிசியாக்கினார் என்ப ஆகலின்**" என்றது எண்ணத்தக்கது.

கிளவி சொல்லாதல், இரட்டைக் கிளவி என்பதால் வெளிப்பட விளங்கும். கிளத்தல் வழியாவது கிளவி. கிளத்தல் சொல்லுதல்.

இனி, உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணை; ஆண், பெண், பலர், ஒன்று, பலஎன்னும் ஐம்பால், வினா விடை; இயல்பு வழக்கு தகுதி வழக்கு, தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிடம்; ஒருமை பன்மையாகிய எண்; இவற்றுள் வரும் வழு - வழா நிலை என்பனவெல்லாம் கிளவியாக்கத்தில் இடம் பெறுகின்றன.

### வேற்றுமை

அடுத்துள்ள வேற்றுமையியலில் வேற்றுமை வகை, வேற்றுமை உருபு, பொருள் நிலை என்பவை கூறப்பட்டுள்ளன.

வேற்றுமை உருபுகள் மயங்குதல் வேற்றுமை மயங்கியலாக விரிகின்றது.

**விளி**

*நான்காவது இயல் விளி மரபு என்பது. விளி என்பதன் இலக்கணம், உயர்திணைப் பெயர் விளியேற்கும் முறை, முறைப் பெயர் விரவுப் பெயர், அஃறிணைப் பெயர் ஆயவை விளியேற்கும் முறை பற்றியது அது.*

**பெயர்**

*அடுத்த இயல் பெயரியல், சொற்களின் இயல்பு, பெயர்ச் சொல்லின் இலக்கணம், உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள், விரவுப் பெயர்கள் என்பவை பற்றிய விதிகள் விளக்கங்கள் பற்றியது அது.*

**வினை**

*ஆறாம் இயல் வினை இயல். வினைச் சொல் என்பதன் இலக்கணம் கூறி, உயர்திணை வினை ஆஃறிணைவினை, விரவுவினை, வியங்கோள், வினை, எச்சம் பற்றியது அது.*

**இடை**

*ஏழாம் இயல் இடை இயல். இடைச் சொல் என்பதன் பொது இலக்கணம் சிறப்பிலக்கணம் பற்றிக் கூறியது அது. எண்ணிடைச் சொல் விளக்கமும் உடையது.*

**உரி**

*உரியியல் என்பது எட்டாவது இயல். இடைச் சொல் போலவே உரிச்சொல்லும் பொது இலக்கணம் சிறப்பிலக்கணம் என்பவற்றைக் கொண்டுளது. உரிச் சொல்லுக்குப் பொருள் காண் முறையும் கூறுகிறது.* ***அகராதி எனவும் நிகண்டு எனவும் பின்னே எழுந்த வரவுகளுக்கு இவ்விடையியலும் உரியியலும் மூலவைப்பகம் ஆகும்.***

**எச்சம்**

*ஒன்பதாவது எச்சவியல். நால்வகைச் சொற்கள், பொருள்கோள் வகை, தொகைகள் வினைமுற்று வகை, சில மரபுக் குறிப்புகள் ஆகிய வற்றைக் கூறி நிறைகின்றது அது.*

*இச் சொல்லதிகாரம் உரைவல்லார் பலரைத் தன்பால் ஈர்த்துளது என்பது இதற்குக் கிடைத்துள்ள* ***உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், தெய்வச்சிலையார்*** *ஆகியோர் உரைகளால் புலப்படும்.*

# சொல்லதிகார வாழ்வியல் விளக்கம்

## திணை

திணை பால் எண் இடம் காலம் ஆகிய பொதுவகுப்பு உலகப் பொதுமையது. எனினும் தமிழர் கண்ட திணை பால் வகுப்பு அருமையும் பெருமையும் மிக்கவை. சொல்லதிகார முதலியலாகிய கிளவியாக்க முதல் நூற்பாவே,

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"

என்கிறது.

'திணை' என்பது திண்மை என்னும் பண்பு வழியில் அமைந்த சொல். திண்மை உடலுக்கும் உளத்திற்கும் உண்டேனும், இவண் உளத்திண்மை குறித்ததேயாம்.

உளத்திண்மையாவது உறுதியான கட்டொழுங்கு. அதனை ஆசிரியர் மேலே விளக்கியுரைப்பார்.

பெண்மைக்குத் திண்மை வேண்டும் என்னும் வள்ளுவம் ஆண்மைக்கு நிறையும் துறவர்க்கு நோன்பும் வேண்டும் என்பதையும் வலியுறுத்தும்.

உயர்ந்த ஒழுக்கம் உடையவர் எவரோ அவர் உயர்திணையர்; அவ்வுயர் ஒழுக்கம் இல்லாரும் மற்றை உயிரிகளும் உயிரில்லாதனவும் அல்திணையாம் (அஃறிணையாம்) என்கிறார் தொல்காப்பியர்.

மக்களெல்லாரும் உயர்திணையர் என்னாமல் உயர் ஒழுக்கம் உடையாரே உயர்திணையர் என்றார், "அவ்வுயர் ஒழுக்கம் இல்லார் மாந்தரே எனினும் அவர்கள் மக்கள் அல்லர்; மாக்கள் எனப்படுவர். விலங்கொடும் இணைத்துச் சொல்லப்படுவர்" என்பதை,

"மாவும் மாக்களும் ஐயறி வினவே"

என்பார் மேலே.

திணை இரண்டும் ஐம்பாலாகப் பகுக்கப்படுதலை அடுத்து உரைக்கிறார் (485, 486).

**பால்**

*பால் என்பது தூய்மை; வால் என்பதும் அதுவே. பட்டொளி வீசும் பகல் 'பால்' ஆகும். இரவு பகல் எனப் பகுத்தலால் பால் என்பது பகுதி, பக்கம் என்னும் பொருள்களைக் கொண்டது. எ-டு: மேல்பால், கீழ்பால். பக்கங்களை இணைப்பது 'பாலம்' எனப்பட்டது. இவ்வாறும் மேலும் விரிபொருள் கொண்டது பால். **ஓர் உயிரின் தோற்றம், வளர்வு, வீவு என்பனவும் உலகத்தியற்கை எனப்பட்டது. அதனால் உகலத்தியற்கையாம் ஊழுக்குப் 'பால்' என்பதொரு பெயரும் உண்டாயிற்று.***

*திணையை இரண்டாகக் கண்ட நம் முன்னோர் பால் என்பதை ஐந்து எனக் கண்டனர். அவை ஆண், பெண், பலர், ஒன்று, பல என்பன. உயர் திணைப்பால் மூன்றாகவும், அஃறிணைப்பால் இரண்டாகவும் கொண்டனர்.*

***திணை பால் என்பவற்றைச் சொல்லமைதி கொண்டு வகுக்காமல் சொல் சுட்டும் பொருள் அமைதியைப் பண்பாட்டு வகையால் வகுத்த அருமை நினைந்து மகிழத் தக்கதாம்.***

*ஆண்பால் சொல் அடையாளம் என்ன?*

*பெண்பால் சொல் அடையாளம் என்ன?*

*"னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்"*

*"ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்"*

*என்கிறார் தொல்காப்பியர் (488, 489) இவ்வாறே பிறவும் தொடர்கிறார்.*

*நெடிய தொலைவில் இருந்து உருண்டுவரும் கல், தேய்வுறும்; தேய்ந்து தேய்ந்து சுருங்கி நிற்கும். அதுபோல் **நெட்ட நெடுங்காலத்தின் முன் தோன்றிப் பெருக வழங்கும் சொற்கள் தேய்தல் இயற்கை.***

*அவன், அவள்,அவர், அது, அவை என்பனவற்றின் இறுதி எழுத்து ஒன்றுமே நின்று அச்சொல்லமைதியைக் குறித்த வகை இது.*

*வந்த+அவன் = வந்தவன்;*

*எனத் தேய்தல் இல்லையா?*

*மக்கள் வழக்கில் எப்படி வழங்கப்படுகிறதோ, அதனைத் தக்க வகையில் புலமையாளர் போற்றிக் கொண்ட முறை இன்னதாம்.*

**பால் திரிபு**

*'அரவானி' என்பார் உளர். அரவான் இறப்போடு தம்மைப் புனைந்து தாலியறுக்கும் சடங்காக நடத்தி வருகின்றனர். அது வரவரப் பெருக்கமும் ஆகின்றது.*

முழுதுறு ஆண்மையோ, முழுதுறு பெண்மையோ அமையாதவர் அவர். ஓர் எருமையின் கொம்பைப், "பேடிப் பெண் கொண்டு ஆடுகை கடுப்ப" என உவமை காட்டுகின்றது கலித்தொகை. போர்க்களம் புக விலக்கப்பட்டவராக இருந்தனர் அவர். ஆனால் களியாட்டத்தில் பங்கு கொண்டனர். பதினோராடல்களுள் ஒன்று பேடு.

ஆண்மை இயல்பு மாறியவரையும் பெண்மை இயல்பு மாறியவரையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

*"ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி"*

என்கிறார்.

ஆண் தன்மை மாறிப் பெண் தன்மை மிக்கார் பேடியர் என்றும், பெண் தன்மை மாறி ஆண் தன்மை மிக்கார் அலியர் என்றும் கூறப்படுகின்றனர்.

இலக்கணம் கூறவந்த ஆசிரியர் பால்திரி தன்மையரை எப்பால் வகுப்பில் சேர்த்தல் வேண்டும் என்னும் ஐயம் பயில்வார்க்கு எழாவாறு, "இப்பால் படுத்திக் கூறுக" என இலக்கணம் வகுத்தார் என்க.

**செப்பும் வினாவும்**

"செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்" என்பதொரு கிளவியாக்க நூற்பா (496).

'**வினா விடை**' மலிந்த காலம் இது. வினாவுதலும் விடை தருதலும் வழக்கு. ஆனால், ஆசிரியர் தொல்காப்பியர் பார்வை ஆழமானது. வினாவுதற்கு உரிய பொருள் ஒன்று இல்லாமல் வினாவுதல் என்பது இல்லையே என எண்ணியவராய் விடை என்பதனைக் குறிக்கும் 'செப்பு' என்னும் சொல்லை முன்வைத்துச் "செப்பும் வினாவும்" என்றார்.

செப்பல் ஓசையமைந்த வெண்பா, வினாவுக்கும் விடைக்கும் பொருந்தி வரக் கண்ட புலமையர், அதனைப் போற்றி வளர்த்த இலக்கியப் பரப்பு பேரளவினதாம். வினா விடை வெண்பா, **சேதுவேந்தர்** அவையில் சிறக்க வளர்ந்தது. **இரட்டையர்**, **காளமேகர்** முதலியோர் பாடியவை தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றன.

**வினாவேவிடை**

"படிப்பாயா" என வினாவுகிறார் ஒருவர். வினாவப் பட்டவர், "படியேனோ? (படிக்க மாட்டேனோ?)" என அவரும் வினாத் தொடுக்கிறார். இவ்வினாவும் விடையே என்பதை மக்கள் வாழ்வியல் வழக்குக் கண்டு உரைத்துள்ளார் தொல்காப்பியர் அது,

*"வினாவும் செப்பே வினாஎதிர் வரினே"*

என்பது (497).

### தகுதி

*சட்ட மன்றத்திலோ, நாடாளுமன்றிலோ பயன்படுத்தக்கூடாத சொல் என்று அவைக் குறிப்பில் இருந்து விலக்கக் கூறுதல் **மக்களாட்சி நடைமுறை**. இம்முறை பெரியவர் முன்பிலும், பெரு மக்கள் அவை முன்பிலும் பண்டே பயன்படுத்தப்பட்ட செம்முறை ஆகும்.*

*மாண்டார், இறந்தார், துஞ்சினார், செத்தார் என்பனவெல்லாம் ஒரு பொருள் தருவனவே எனினும், 'செத்தார்' என்பது மதிப்புக் குறைவாகக் கருதப்படுகின்றது.*

*விடுக்கப்படுவது, 'ஓலை' என்றாலும் அது 'திருமுகம்' எனப் பட்டது.*

*'விளக்கை அணை' என்னாமல், 'விளக்கை அமர்த்து', 'குளிரவை' என்பவை மின் காலத்திலும் பின்பற்றல் உண்டு.*

*இவற்றை **அவையல்கிளவி**, (இடக்கரடக்கு) என்றும், **மங்கல வழக்கு** என்றும் கூறப்பட்டன. "இதனை இவ்வாறு கூறுதலே தகுதி" எனச் சான்றோரால் வகுக்கப்பட்டது '**தகுதி வழக்கு**' என்பதாம் இதனைத்,*

*"தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்*
*பகுதிக் கிளவி வரைநிலை இலவே"*

*என்கிறார் (500).*

### இனச் சுட்டு

*ஞாயிறு என்பதற்கும் செஞ்ஞாயிறு என்பதற்கும்வேறுபாடு உண்டா? உண்டு. ஞாயிறு என்பதைப் பொது வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் கொள்ளலாம். ஆனால், செஞ்ஞாயிறு என்பது பொது வழக்குச் சொல் அன்று; அது, செய்யுள் வழக்குச் சொல். ஏனெனில், இனச்சுட்டு இல்லாச் சொல் செஞ்ஞாயிறு என்பது கரு ஞாயிறு என ஒன்று இல்லையே; அதனால்*

*'செந்தாமரை' என்பது பொது வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் உண்டே எனின், அது இனச் சுட்டுடைய பண்பினது. வெண்டாமரை உள்ளதே!*

*"இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை*
*வழக்கா றல்ல செய்யு ளாறே"*

*என்பது நூற்பா (501).*

### இயற்கை செயற்கை

*இயற்கைப் பொருளை இவ்வாறு கூறவேண்டும் செயற்கைப் பொருளை இவ்வாறு கூறவேண்டும் என்னும் நெறிமுறைகள் உண்டு.*

'மண்திணிந்த நிலம்' என அதன்செறிவு கூறப்படும். மக்கள் வழக்கிலும் நிலம் வலிது; நீர் தண்ணிது எனப்படும். ஆனால் செயற்கைப் பொருளுக்குக் கூறும் முறை வேறானது.

'பயிர் செழுமை**யானது**' எனஆக்கச் சொல் தந்து கூறுதல் வேண்டும். ஆக்கச் சொல்லொடு காரணம் கூறலும் வழக்கு. "நீர் விட்டு களைவெட்டி உரமிட்டு வளர்த்ததால் பயிர் செழுமையானது" என ஆக்கம் காரணம் பெற்று வருதல் உண்டு. ஆக்கம் காரணம் அறிவிக்காமல் அறியத்தக்கது எனின், காரணம் இல்லாமலும் ஆக்கம் வரும். உழவர் முதலோர் வழக்குகளில் ஊன்றிய ஊன்றுதலே இவ்விலக்கண ஆட்சி முறையாம் (502 - 505).

### ஒருவர்

அவர், பலர்பால் சொல், ஆனால் ஒருவரை அவர் எனச் சிறப்பு வகையால் கூறல் உண்டு. அம்முறை இலக்கண முறை ஆகாது; மக்கள் வழக்கு முறையாகும்.

வேந்தனே எனினும் அவனைப் பாடிய புலவரை அவன் என்னாது அவர் எனல் உரையாசிரியர் மரபு. அதனால் 'அவனை அவர் பாடியது' என்றே நெறியாக வழங்கினர்.

"கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது" என்று சிறப்பு வகையாலே பாடல் தொகுத்தவர்கள் போற்றி உரைத்தனர். ஆர் இறுதி வரும் பெயரோடு சாதிப் பெயர் ஒட்டுதல் இல்லை என்பதை உணர்வார் அதனைப் போற்றத் தவறார்.

ஆனால் செய்யுளில் ஒரு புலவரை ஒரு புலவர் "பரணன் பாடினன்", "கபிலன் பாடிய மையணி நெடுவரை" என ஒருமைப் பெயராகவே குறித்தனர். இவை எண்ணிப் போற்றத்தக்கவையாம்.

தாய்ப்பசு வரும் என்பதை, "இன்னே வருகுவர் தாயர்" என்கிறது முல்லைப் பாட்டு. இஃது அஃறிணையை உயர்திணை ஆக்கிக் கூறியது ஆகும். இவ் விலக்கணத்தைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார் (510).

### யாது எவன்

யாது என்றோ எவன் என்றோ வினாவின் வினாவப் பட்ட பொருள் முன்னர் அறியப்படாத பொருளாக இருத்தல் வேண்டும் என்பது மரபு.

### வரையறை

இடக்கண் வலிக்கிறது; வலக்கண் வலிக்கிறது எனத் தனித் தனியே கூறல் உண்டு. ஒரு கண் வலிக்கிறது எனலும் வழக்கே. இரண்டு கண்களும் வலித்தால், இரண்டு கண்கள் வலிக்கின்றன எனல் மரபு ஆகாது. **இரண்டு கண்களும்** வலிக்கின்றன" என்பதே மரபு. ஏனெனின், கண்கள் இரண்டே

ஆதலால் உம்மை இட்டுச் சொல்லல் வேண்டும். இவ்வளவே என வரம்புடையவற்றை உம்மையிட்டுக் கூறாமை பிழையாகும்.

'முத்தமிழ் வல்லார்' என்னாமல் 'முத்தமிழும் வல்லார்' எனலே முறை. ஏனெனின் தமிழ் மூன்றே ஆகலின்.

இதனை,

"இனைத்தென அறிந்த சினைமுதல் கிளவிக்கு
வினைப்படு தொகையின் உம்மைவேண்டும்"

என்கிறார் (516). எங்குமே இல்லாத பொருளைச் சொன்னாலும் அவ்வாறு உம்மை தந்தே சொல்ல வேண்டும் (517).

எ-டு: "எந்த முயலுக்கும் கொம்பு இல்லை"

### அல்லது இல்லது

துவரம் பயறு உள்ளதா என்று ஒரு வணிகரிடம் வினாவினால் உள்ளது எனின் உள்ளது என்பார். இல்லை எனின் இல்லை என்று கூறார். ஆனால், துவரம் பயறு போன்ற ஒரு பயறு வகையைச் சுட்டிக் கூறுவார். பாசிப்பயறு உள்ளது; மொச்சைப் பயறு உள்ளது என்பார்.

'இல்லை' என்று சொல்லுதல் தம் வணிக மரபுக்கு ஆகாது என அவர் கொண்டுரைக்கும் உரை வழக்கு இன்றும் நடைமுறையில் காண்பதேயாம். இதனை,

"எப்பொருள் ஆயினும் அல்லது இல்எனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்"

என்கிறார் தொல்காப்பியர் (618).

இன்னும், 'இருந்ததுதான்;' 'நாளை வரும்' என்பதும் இவ்வழிப்பட்டதே. இல்லை என்பது இல்லை என்னும் மக்கள் வழக்கைச் சுட்டுவது இது.

### பெயர்; சுட்டு

ஔவையார் வந்தார்; அவர், அரண்மனையை அடைந்தார். இதில் ஔவையார் என்பது இயற் பெயர். அவர், சுட்டுப்பெயர்.

இயற்பெயரைச் சொல்லிய பின்னரே சுட்டுப் பெயரைச் சொல்லுதல் வழக்கம். ஆனால், செய்யுளில் சுட்டுப் பெயரை முதற்கண் சொல்லிப் பிற்பட இயற்பெயர் கூறலும் உண்டு.

பெயர்களுள் சிறப்புப் பெயர், இயற்பெயர் என இரண்டும் வருவதாயின் சிறப்புப் பெயரை முற்படக் கூறி, இயற்பெயரைப் பிற்படக் கூறவேண்டும் என்பதும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையாகும்.

எ-டு: 'தெய்வப் புலவர் திருவள்ளுவர்'

**சிறப்புப் பெயரைப் பின்னே வைத்து, இயற்பெயரை முற்பட வைத்தல் ஆகாது** என்பதை வலியுறுத்தவே இதனைக் கூறினாராம் (524).

### ஒரு சொல் பலபொருள்

கால் என்பது பல பொருள் ஒரு சொல். உறுப்பு, சக்கரம், காற்று, கால்பங்கு, கால்வாய் முதலாய பலபொருள்களை யுடையது. இவ்வொரு சொல், இப் பல பொருளுக்கு இடமாகி வருதலை அறிய வகை என்ன?

கால், கை, தலை என்னும் இடத்து **உறுப்பு** என்றும், 'கால் பார் கோத்து' என்னும் இடத்துச் **சக்கரம்** என்றும், புனல் அனல் கால் என எண்ணுமிடத்துக் **காற்று** என்றும், ஒன்றே கால் என்றும் இடத்துக் **கால் பங்கு** என்றும், கண்வாய் கால்வாய் என்னும் போது **நீர் வருகால்** என்றும் அறிய முடிகின்றது. இவ்வாறு அறியும் முறையை ஆசிரியர் கிளவியாக்கத்தில் சுட்டுகிறார். பொருள் மயக்கம் உண்டாகா வகையில் பொருள் காண வழிகாட்டுகிறார்.

*"அவற்றுள்,*
*வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்*
*வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்*
*நேரத் தோன்றும் பொருள்தெரி நிலையே"*

என்பது அது (535).

### வேற்றுமை

தொல்காப்பியர்க்கு முன்னர் வேற்றுமை ஏழாக எண்ணப் பட்டுள்ளது. முதல் வேற்றுமையாகிய எழுவாய் வேற்றுமை விளியாகும் நிலையையும் முதல் வேற்றுமையின் திரிபாகவே கொண்டு அதனைத் தனித்து எண்ணாமல் இருந்துளர். ஆனால் தொல்காப்பியர்,

*"வேற்றுமை தாமே ஏழென மொழிப"*

என்று கூறி,

*"விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே"*

எனத் தனித்து எண்ணியுள்ளார் என்பது அவர்தம் நூற்பாக்களின் அமைதியால் விளக்கம் ஆகின்றது. வேற்றுமை எட்டு என எண்ணப்பட்ட வகை அது.

### பெயர், விளி

வேற்றுமையை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என எண்ணாமல்,

*"அவைதாம்,*
*பெயர் ஐ ஒடு கு*
*இல் அது கண் விளி என்னும் ஈற்ற"*

என எண்ணியுள்ளார்.

ஐ என்றால் இரண்டாம் வேற்றுமை என்றும்...

கு என்றால் நான்காம் வேற்றுமைஎன்றும்...

கண் என்றால் ஏழாம் வேற்றுமை என்றும்...

அறியச் செய்துள்ளார்.

ஒன்று இரண்டு என எண்ணிக்கையால் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உண்டு எனினும் பெயர், ஐ, ஒடு என உருபுகளைக் கொண்டு எண்ணும் வகையால் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஏனெனில் பொருள் வேறுபடுத்தும் சொல்லே பெயராகி விடுகின்றதே. ஆதலால் இந்நெறி மேற்கொண்டனர் நம்முன்னோர்.

ஐ என்னும் உருபு வெளிப்பட்டோ மறைந்தோ வரக் கண்டதும் அதன் பொருள் புலப்பட்டு விடும். ஆதலால் உருபையும் அவ்வுருபு வழியாக ஏற்படும் பொருளையும் தெளிவாக அறிந்துகொள்ள வேற்றுமை உருபு-பொருள்களைப் படைத்துளர்.

முருகன் என்னும் பெயர் எழுவாய் நிலையில் நின்று உருபுகளை ஒட்டும்போது முருகனை, முருகனால், முருகனுக்கு, முருகனின், முருகனது, முருகன்கண், முருகா என வேறுபடுகின்றது. உருபு மாற மாறப் பொருளும் மாறுபடுதலால் வேற்றுமை என்றனர்.

“முருகன் வாழ்த்தினான்”

“முருகனை வாழ்த்தினான்”

என்பவற்றில் வாழ்த்தியவனும் வாழ்த்துப் பெற்றவனும் வேற்றுமையாகிவிட வில்லையா! இவ் வேறுபாட்டை உருபு ஆக்குதலால் வேற்றுமை உருபு எனப்பட்டது.

உருபு என்பது வடிவம் அடையாளம். அரசுத்தாள் என்பதன் அடையாளம் உருபா.

**வினை, பண்பு, உவமை, உம்மை இன்னவற்றின் அடையாளச் சொற்களையும் உருபு என்றது இதனால்தான்.**

மரம் நட்டினான்; மரத்தை நட்டினான்

மரம் வெட்டினான் ; மரத்தை வெட்டினான்

ஊரை அடைந்தான். ஊரை நீங்கினான் ‘காளையைப் போன்றான்’ இப்படியெல்லாம் வருவனகொண்டு இன்ன உருபு இன்ன பொருளில் வரும் எனக் கண்டு அம்மரபு போற்றுமாறு காத்தனர். ஆயினும் சில உருபு மயக்கங்களும் உண்டாயின. சிலவற்றை ஏற்கவும் சிலவற்றை மறுக்கவும் ஆயின.

என் வீடு என்பது, எனதுவீடு என ஆறாம் வேற்றுமையாகும்.

என் மகள் என்று வரும்போது எனது மகள் எனக் கூடாது. ஏன்? வீடு உடைமைப் பொருள். மகள் உடைமைப் பொருள் அன்று. உறவுப் பெயர்; உரிமைப்பெயர். எனக்கு மகள் என உறவுரிமை தருதலே முறையாகும் (578). **இந்நாளில் அடிக்கப்படும் திருமண அழைப்பிதழ் களில் பல இவ்வேறுபாடு அறியாமல் அடிக்கப்படுவதைக் காணலாம்.**

எவ்வளவோ நுண்ணிய அறிவால் கண்டு வைத்த கட்டுக் கோப்பான நம் மொழி அக்கறை இல்லாத மக்களால் அழிக்கப்படு வதற்கு இஃதொரு சான்றாம்.

**உருவாக்கிக் காத்த உயர்ந்த அறிவாளர் வைத்துள்ள மொழிச் சுரங்கம் இலக்கணம் என்னும் உணர்வு மக்களுக்கு ஏற்பட்டால் இத்தகு குறைகள் ஏற்படா.**

**வேற்றுமை வரிசை**

சொற்கள் பெயர் வினை இடை உரி என நான்காக எண்ணப்படினும் பெயர், வினை என்னும் இரண்டனுள் அடங்கும். அப்பெயரே முதல் வேற்றுமை; **அப்பெயராகிய எழுவாய் வினைபுரிதல் விளக்கமே வாழ்வியலாகும்**. அவற்றை முறையே வைப்பு முறையால் வைத்த அருமையது இரண்டாம் வேற்றுமை முதலியனவாம். இவ்வருமையை முதற்கண் கண்டுரைத்தவர் உரையாசிரியர் **தெய்வச்சிலையார்**. அவர் கூறுமாறு:

“யாதானும் ஒருதொழிலும், செய்வான் உள்வழி யல்லது நிகழா மையின் அது செய்து முடிக்கும் கருத்தா முன் வைக்கப்பட்டான்.

அவன் ஒரு பொருளைச் செய்து முடிக்குங்கால் செய்யத் தகுவது இதுவெனக் குறிக்க வேண்டுதலின் செயப்படு பொருள் இரண்டாவது ஆயிற்று.

அவ்வாறு அப்பொருளைச் செய்து முடிக்குங்கால் அதற்கு ஆம் கருவி தேடுதலின் அக்கருவி மூன்றாவதாயிற்று.

அவ்வாறு செய்து முடித்த பொருளைத்தான் பயன்கோடலே அன்றிப் பிறர்க்கும் கொடுக்கும்ஆதலின் அதனை ஏற்றுநிற்பது நான்காவது ஆயிற்று.

அவ்வாறு கொடுப்புழி அவன் கையினின்றும் அப்பொருள் நீங்கி நிற்பது ஐந்தாவதுஆயிற்று.

அவ்வாறு நீங்கிய பொருளைத் தனது என்று கிழமை செய்தலின் அக்கிழமை ஆறாவது ஆயிற்று.

ஈண்டுக் கூறப்பட்ட எல்லாவற்றிற்கும் இடமும் காலமும் பொதுவாகி நிற்றலின் அவை ஏழாவது ஆயின."

**மணிமாலை போல வேற்றுமையமைவு விளக்கம் சிறத்தல் எண்ணி மகிழத் தக்கதாம். நூலாசிரியர் கண் கொண்டு உரையாசிரியர் நோக்கி யுரைக்கும் இன்னவை நூற்பெருமையை மேலும் பெருமை செய்வதாம்.**

**ஒடு**

*"ஊராட்சித்தலைவரொடு உறுப்பினர்கள் கூடினர்"* இது செய்தித் தாளில் வரும் செய்தி. உறுப்பினர்கள் பலர்; தலைவரோ ஒருவர். ஆயினும் தலைவரோடு என அவர்க்கு முதன்மை கொடுப்பது ஏன்?

*"ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே"*

என்பது தொல்காப்பிய நாள் தொட்ட நடைமுறை வழக்கம் (575).

**விளி மரபு**

அம்மை அன்னை தந்தை தங்கை அக்கை தம்பி முதலான முறைப்பெயர்கள் விளிக்கப்படும் பெயர்களாக வழக்கில் மாறாமல் உள்ளன. விளித்தல் அழைத்தல், கூப்பிடுதல். அம்மா, அம்மே, அம்மோ என்றெல்லாம் வழங்குதல் பழமையும், 'அம்ம' என்று அண்மை விளியாம் பழமையும் இவ்வியலால் நன்கு அறியப்படும். "அண்மைச் சொல்லே இயற்கையாகும்" என்றும் விளியேலாமை குறிப்பார் (612).

இம் மரபு தமக்கு முற்றொட்டே வரும் வகையை உணர்த்துமாறே 'விளிமரபு' என்று பெயரிட்டு வழங்கினார் என்பதும் அறியத்தக்கது.

கோமான், பெருமாள் என்பன ஈற்றயல் நெடிலாகியவை. இவை விளியாம்போது இயற்கையாய் அமையும் என்கிறார். பெருமானே, பெருமாளே, கோமானே எனவருதல் இருவகை வழக்கிலும் உண்டு.

*"உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்*
*அளபிறந் தனவே விளிக்கும் காலைச்*
*சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான"*

என விளியை விரிவாக்கிப் போற்றுகிறார் (637).

குழந்தை தொட்டுப் பெருமுதுமை வரை மக்கள் வாழ்வில் மட்டுமா? இறையடியாரும்

*"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே*
*அன்பினில் விளைந்த ஆரமுதே"*

என்று விளிக்கும் விளிமரபு மாறாமரபு அல்லவா!

### சொல்லும் பொருளும்.

பெயர் வினை இடை உரி என முறையே சொற்களை எண்ணும் ஆசிரியர் அவற்றின் இலக்கண அடிமூலம் கூறுவாராய்,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்கிறார்.

தமிழ்ச் சொற்களில் இடுகுறி என்பதொரு சொல் இல்லை என்பதைச் சொல்லி எல்லாச் சொற்களும் பொருள்புணர்ந்தனவே என உறுதி மொழிகிறார் (640).

### பெயர், வினை

சொற்கள் இரண்டே என்பாராய்,

"சொல்எனப் படுப பெயரே வினைஎன்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே"

என்பது (643) **குடிக்கணக்கு எடுப்பார் தலைக் கட்டு எண்ணுவது போன்ற தாம்**. தலைக்கட்டு வரி ஊர்ப்பொதுப் பணிக்கு ஊரவர் மதிப்பிட்டுப் பெறும் தொகையாகும். ஆள் எண்ணிக்கையில் இருந்து வரிதண்டலுக்கு விலக்கப்பட்ட முறை போல்வது அது.

பொருளை உணர்த்துவது பெயர். பொருளின் பெயர்ச்சி (புடை பெயர்தல்) வினை. என இரண்டன் பொருந்துதலும் நோக்கத் தக்கது.

இடைச் சொல்லும் உரிச் சொல்லும் சொல்லென ஆகாவோ எனின்,

"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப"

என்பார் (644).

### பெண்மகன்

ஆண், பெண், பிள்ளை எனவும்; ஆண்பிள்ளை, பெண்பிள்ளை எனவும்; வழங்கல் உண்டு. ஆண்மகன்; பெண்மகள் என்பனவும் வழங்கு வனவே.

பெருமகள் பெருமாள் ஆகும்; பெருமகன் பெருமான் ஆவது போல. 'பெண் பெருமாள்' என்பார் வரலாற்றில் இடம் பெற்றுளார். தொல்காப்பியர்,

"பெண்மை அடுத்த மகன் என் கிளவி"

என்பதைக் குறிக்கிறார். அதனால்,

'பெண்மகன்' என வழங்கப் பெற்றமை அறியவரும்.

உரையாசிரியர் சேனாவரையர், "புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் மகளை மாறோக்கத்தார் இக்காலத்துப் பெண்மகன் என்று வழங்குப" என்கிறார்.

**கல்வி அறிவாற்றலால் தக்கோர் அவையில் முந்தியிருக்கச் செய்யும் கடமை யமைந்த பெற்றோரை நோக்க, மகற் காற்றல் என்பது இருபாலையும் தழுவியபேறும் உண்டெனக் கொள்ளத் தகும்.**

இனி இந்நாளிலும் பெண்மகவை 'வாடா' 'போடா' என்பதும், ஆண்பெயராக்கி அழைப்பதுடன் ஆணுடையுடுத்து மகிழ்தலும் காணக் கூடியனவேயாம். குறிப்பாகப் பெண்பிள்ளை இல்லார் அவ்வாறு செல்வமாகப் போற்றி மகிழ்தல் அறியலாம். **தொல்காப்பியர் நாளை எச்சமாக அதனை எண்ணலாம்.**

## பெயர்வகை

உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் என விரிவாகப் பட்டிய லிட்டுக் காட்டும் ஆசிரியர் நூற்பாக்களொடு சங்கத்தார் பெயர்களை ஒப்பிட்டு ஆய்ந்தால் மொழித் தூய்மை பேணும்வழி தானே புலப்படும்.

நிலப் பெயர், குடிப் பெயர், குழுவின்பெயர், வினைப் பெயர், உடைப்பெயர், பண்பு கொள் பெயர், முறைநிலைப் பெயர், சினை நிலைப் பெயர், திணை நிலைப் பெயர், ஆடியற்பெயர், எண்ணியற் பெயர் என்னும் இவை **இடைக்கால பிற்கால வேந்தர் முதலோரால் கொண்டு போற்றப்படாமையால் இந்நாளில் முறை நிலைப் பெயர் (அம்மா, அப்பா, அண்ணா, அக்கை) தாமும் ஒழிந்துபடும் நிலைமை எண்ணத் தகும். சிறு நுண் நச்சுயிரியினால் பேருயிரியாம் மாந்தர் அழிந்துபடுதல் ஆகாது என அறிவியலாளரும் அரசியலாளரும் எடுக்கும் நலத்துறை அக்கறையில் ஒரு சிறிதளவு தானும் மொழித்துறை, பண்பாட்டுத் துறையில் கருத்துச் செலுத்தவில்லையே என்னும் ஏக்கம் உண்டாக்கு வது தொல்காப்பியர் சுட்டிக் காட்டும் பெயர் வகைகள் ஆகும் (647-650).**

## அவர்கள்

அவன் அவள் அவர் அது அவை என்பன ஐம்பாற் பெயர்கள். இந்நாளில் 'அவர்கள்' எனப் பலர்பால் வழங்கப்படுகிறது. 'ஆசிரியர் அவர்கள்' எனச் சிறப்பொருமைப் பெயராகவும் வழங்கப்படுகிறது.

'கள்' என்பது அஃறிணைப் பன்மைப் பெயர் ஈறு.

அது மக்கட் பெயரொடு ஆண்கள் பெண்கள் அவர்கள் என வருதல் ஆகாது.

ஆடுகள் மாடுகள் மலைகள் எனவரும் என்பது பழைய மரபு.

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பல அறி சொற்கே"

என்பது தொல்காப்பியம் (654).

பலவின் பாலுக்குரிய 'கள்' பலர்பாலுக்கும் வருதல் சங்கத்தார் காலத்திலேயே தோற்றமுற்று வரவரப் பெருக்கமாகிவிட்டது. அவர்கள் எனக் கள்ளீறு இல்லாமல் ஒருவரைச் சொன்னால் அவர் பார்வையே வேறாகிப் 'பண்போடு பேசத் தெரியவில்லை' எனப் பழிப்புக்கும் ஆளாகிவிடுதல் இந்நாளில் கண்கூடு.

**தாம், தான்**

தாம் என்பது பன்மைக்குரிய சொல் (669).

எ-டு: அவர்தாம் கூறினார்; அவர் தம்முடைய பணிக்குச் சென்றார்.

தான் என்பது ஒருமைக்குரிய சொல் (670).

எ-டு: அவன்தான் கூறினான்; அவன் தன்னுடைய பணிக்குச் சென்றான்.

எல்லாம் என்பது பன்மைச் சொல் (671).

எ-டு: அவர் எல்லாம்; அவை எல்லாம்.

இப்படித் தெளிவாகத் தொல்காப்பியம் கூறியும் இந்நாளை இதழாசிரியர் நூலாசிரியர் தாமும் கண்டு கொள்வதில்லை.

அவர் தன்னுடைய வேலையுண்டு தானுண்டு என்றிருப்பார் - என அச்சிட்ட செய்தி படிப்பார் அப்பிழையைக் கற்றுக்கொண்டு பரப்பாளரும் ஆகிவிடுகிறாரே!

**வினை**

வினை என்பதன் இலக்கணம் 'காலத்தொடு தோன்றும்' என்பது. அது 'வேற்றுமை கொள்ளாது' என்பதும் அதன் இலக்கணமே. இதனைச் சொல்லியே வினையியலைத் தொடங்குகிறார்.

மெய்யியல் வல்லாராகிய அவர், செயல் வழியாம் வினையைச் சொல்வதை அன்றித் 'தலைவிதி' என்னும் பொருளில் ஆளவில்லை. 49 நூற்பாக்கள் அதற்கென வகுத்தும் அவ்வாறு ஆளாமை தாம் கூற எடுத்துக் கொண்ட பொருளமைதியை விடுத்து வேறு வகையில் செல்லார் என்பது நாட்டும்.

'செய்வினை' செய்தல்; அதனை நீக்க 'வினைக் கழிவு' செய்தல் அறிவியல் பெருகிவருவது போலப் பெருகி வருதலை நினைக்க ஏதோ மூளைச் சலவைக்கு ஆட்பட்ட மக்கள் போலத் தோன்றுதல்தானே உண்மை.

**விரைவு**

வாரான் ஒருவனும் வருவான் ஒருவனும் விரைவுக் குறிப்பில் வந்தேன் வந்தேன் எனல் உண்டே!

*உண்ணப் போவான் ஒருவன் உண்டேன் எனலும் உண்டே!*

*இது குற்ற மல்லவோ எனின்,*

*"வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்*
*ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி*
*இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்*
*விரைந்த பொருள என்பனார் புலவர்"*

*என அமைதி காட்டுகிறார் ஆசிரியர் (726).*

**நிகழ் காலம்**

*மலை நிற்கும் எனவும், கதிர் இயங்கும் எனவும் வழங்குகிறோம்.*

*மலை நின்றதும், நிற்கின்றதும், நிற்பதும் ஆகிய முக்காலத்திற்கும் உரியதாக இருந்தும் நிகழும் காலத்துச் சொல்லுதல் வழு இல்லையா?*

*கதிர் இயங்கியது; இயங்குகிறது; இயங்கும்; இவ்வாறு இருந்தும், நிகழ்காலத்தில் சொல்லுதல் வழுத்தானே!*

*ஆசிரியர் தெளிவிக்கிறார்:*

*"முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை*
*எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து*
*மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்"*

*என்பது அவர்காட்டும் அமைதி (725).*

*முக்காலத்திற்கும் ஒத்தியலும் அவற்றைச் 'செய்யும்' என்னும் வாய்பாட்டால் சொல்ல வேண்டும் என வழிகாட்டுகிறார்.*

**தெளிவு**

*இச் சுழலுள் போவான் செத்தான் எனின் வழுவாகும் அல்லவோ! அப்படிச் சொல்லுதல் வழக்கில் உண்டே எனின், நிகழப் போவதை உறுதி யாகக் கொண்டு நிகழ்ந்ததாகக் கூறியது அது என்கிறார்.*

*"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி*
*இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்*
*இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை"*

*என்பது நூற்பா (730).*

**இடைச் சொல்**

*'நான்' என்பது தன்மைப் பெயர்.*

*'நீ' என்பது முன்னிலைப் பெயர்.*

*'நான் நீ' என்று நின்றால் பொருள் விளக்கம் பெறுவது இல்லை. "நானும் நீயும்" என்னும் போது பொருள் விளக்கம் பெற வாய்க்கின்றது; 'செல்வோம்' எனச் சேர்த்தால் பொருள் முடிபு கிட்டுகின்றது.*

சொற்கள் பெயர், வினை எனப் பகுக்கப் பட்டாலும், இத்தகு (உம்) இணைப்புகளும் வேண்டியுள. இவ்விணைப்புச் சொற்களே இடைச் சொற்கள் எனப்படுகின்றன.

இடைச் சொல் என்பதால் சொல்லுக்கு இடையே மட்டும் வரும் சொல் என்பதாகாது. சொல்லுக்கு முன்னும் பின்னும் இடையும் வேண்டும் இடத்தால் வருவது இடைச் சொல் எனப்பட்டது என்க.

"இடைச் சொல் தான் சார்ந்த பெயரின் பொருளையும் வினையின் பொருளையும் தழுவி நிற்றல் அன்றித் தனித்து நடக்கும் தன்மையது அன்று" என்று ஆசிரியர் கூறுகிறார் (734).

எலும்புகளை இணைக்கவும் இயங்க வைக்கவும் இணைப்பு மூட்டுகள் உடலில் இடம் பெற்றிருப்பன போலச் சொற்பொருள் விளக்கத் திற்கு இடைச்சொற்கள் உதவுகின்றன எனல் தகும்.

"யான் அரசன்; யான் கள்வன்" இடைச் சொல் பெறா நிலையில் இத் தொடர்கள் தரும் பொருளுக்கும், "யானோ அரசன்; யானே கள்வன்" என இடைச் சொல் இணைதலால் வரும் தொடர்கள் தரும் பொருளுக்கும் உள்ள வேறுபாடு பளிச்சிட்டுத் தோன்றவில்லையா? இடைச் சொற்கள் சொல்லுறுப்புகளே எனினும் சொல்லுக்கும் பொருளுக்கும்; தொடர்புப் பாலமாக இருப்பவை அவையே.

இனி, இடைச் சொல் தானும் பொருளின்றி வாரா என்பதன் விளக்கமே,

*"கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று*
*அம்மூன் றென்ப **மன்**னைச் சொல்லே"*

என வருவது முதலான நூற்பாக்கள்.

**உரிச்சொல்**

இயற்றப்படும் செய்யுள் சுவையும் தெளிவும் உறுதியும் அழகும் கொண்டு விளங்குமாறு இதற்கு இதுவே உரிய சொல் எனத் தேர்ந்து வைக்கப்படும் சொல் உரிச் சொல்லாகும்.

பெயர் வினை இடை என்னும் முச் சொற்களைக் கொண்டே எடுத்த பொருளைக் கூறிவிட முடியும். ஆனால் உரிச் சொல் தரும் சுவை முதலிய நலங்கள் ஏற்பட்டு ஆழ்ந்து எண்ணவும் மீள மீளக் கற்கவும் வாய்க்காமல் அமையும்.

அவையறிந்து பேசுவார் தம்மைச், சொல்லின் தொகையறிந்த தூய்மை யவர், சொல்லின் நடையறிந்த நன்மையவர், சொல்லின் வகை யறிவார் (711 - 713) என்று வள்ளுவர் தொகுத்துக் கூறும் இலக்கணம் அமைந்த சொல் உரிச் சொல் ஆகும்.

***உரிச் சொல் உணர்வில் நின்று சுவை யாக்குதல், உரிப்பொருள் ஒப்பது எனப் பெயரீடு கொண்டு உணரலாம்.***

**நிகண்டு**

*படைப்பாளி கொண்ட பொருள் நயம் படிப்பாளியும் கொள்ளல் வேண்டும் எனின் புரிதல் வேண்டும். காட்சிப் பொருள் போலக் குருத்துப் பொருளை அறிதலின் அருமை நோக்கியே உரிச்சொல் விளக்கமாக நிகண்டு நூல்கள் தோற்றமுற்றன. அந்நிகண்டு நூல்களில் ஒன்றன் பெயர் உரிச்சொல் நிகண்டு என்பது. வழக்காற்றில் நிகழ்கின்றவற்றைக் கொண்டு திரட்டி வைக்கப்பட்ட சொல்லடைவே நிகண்டு என்னும் பொருட் (காரணப்) பெயராகும்.*

**உரிச்சொல் இயல்**

*இத்தகு செய்யுட் சொல்லைப் பொருள் உணர்ந்து ஓதிச் சுவைக்கும் வகையில் வழிகாட்டியவர் தொல்காப்பியர். அவர் வகுத்த உரிச் சொல் இயல் அதன் விளக்கமாகும்.*

*வேண்டும் வேண்டும் சொல்களை உருவாக்கிக் கொள்ள அடிச் சொல்லாகத் திகழும் அருமை உரிச் சொல்லுக்கு உண்டு.*

*தொல்காப்பியர், 'உறு தவ நனி' என்னும் உரிச் சொற்களைக் கூறி, மூன்று என்னும் எண் தந்து, மிகுதி என்னும் பொருள் தருவன அவை என்கிறார்.*

*"சால உறு தவ நனி கூர் கழிமிகல்"* (நன். 455)

*என ஆறு எண்ணுகிறார் நன்னூலார்.*

*உரிச் சொற்கள் எல்லாவற்றையும் எடுத்து ஓத வேண்டுவது இல்லை; அவற்றுள் பொருள் வெளிப்பாடு உடைய சொல் பொருள் வெளிப் பாடு அரிய சொல் என்பவற்றுள் பின்னதையே கூறினேம் என்கிறார்.*

*அவ்வாறானால் வெளிப்பட வாராச் சொல்லென அவர் எண்ணுவன வற்றையே கூறுகிறார் என்பது தெளிவாகும்.*

**மிகுதி**

*மிகுதிப் பொருள் தரும் உறு என்னும் உரிச்சொல் 'உறுபசி' என வள்ளுவத்தில் ஆளப்படுகிறது; 'உறுதுயர்' என்பதும் அது.*

*உறு என்பது உறுதல், உறுதி, உற்றார், உறவு, உறக்கம், உறிஞ்சுதல் உறுவலி முதலிய சொல்லாக்க அடிச் சொல்லாக அமைந்திருத்தலும் நெருக்கம் கட்டொழுங்கு மிகுதி என்னும் பொருள்களைச் சார்ந்தே நடையிடுதலும் அறியத் தக்கதாம்.*

*மிகுதிப் பொருள் தரும் 'தவ' என்பது, தவப்பிஞ்சு தவச் சிறிது என மக்கள் வழக்கிலும் இடம் பெற்றுள்ளது.*

*இது, தவம், தவசம், தவசி, தவசு எனச் சொல்லாக்கம் பெற்று வழங்குதலும் காணலாம்.*

*நல், நன், நன்று, நனவு, நனி, நனை என்பன வாழ்வியல் வளச் சொற்களேயாம்.*

**மழ, குழ**

*மழலை, மதலை, குழந்தை, குதலை என்னும் சொற்களை எண்ணிய அளவில் இளமை மின்னலிடல் எவர்க்கும் இயற்கை. தொல்காப்பியர், "மழவும் குழவும் இளமைப் பொருள" என்கிறார். உள்ளங்கள் ஒன்றிப் போகிய வகையால் உண்டாகிய பொருள் அல்லவோ இது.*

**அலமரல்**

*அலமரல் என்பது தொல்காப்பியர் நாளில் வெளிப்படப் பொருள் வாராச் சொல்லாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்நாளில் 'அல மருதல்' மக்கள் வழக்குச் சொல்லாகி விட்டது. அலமருதல் சுழற்சிப் பொருளிலேயே வழங்குகின்றது. தெருமரல் என்பதும் அப்பொருளதே.*

**சீர்த்தி**

*சீர் சீர்மை சீர்த்தி சீரை என்பன வெல்லாம் இலக்கிய வழக்கில் உள்ளவை. முன்னிரண்டு சொற்களும் மக்கள் வழக்கிலும் உள்ளவை. சீர்த்தி என்ன ஆயது? 'கீர்த்தி' ஆகிவிட்டது. வேற்றுச் சொல் எனவும் கொள்ளப் பட்டது. சீரை 'சீலை'யாகிவிட்டது. சீரை என்னும் துலைக் கோல் பொருள் இலக்கிய அளவில் நின்று விட்டது.*

**குரு**

*'குரு' என்பது ஒளி என்னும் பொருள் தரும் உரிச்சொல். உள்ளொளி பெருக்குவான் 'குரு'. குருந்து, குருந்தம், குருமணி, குருதி என்பன ஒளிப்பொருள் - நிறப் பொருள் - தருவன. குருத்து என்பது மக்கள் வழக்குச் சொல். ஒளியுடன் வெளிப்படுவது அது. குருத்தோலையும் குருத்திலையும் மிக வெளிறித் தோன்றுதல் 'குரு' வின் பொருள் காட்டுவன. குருந்தத்துக் குருமணி நினைவில் எழலாமே!*

**அதிர்வு**

*"அதிர்வும் விதிர்வும் நடுக்கம் செய்யும்" என்பது அப்படியே நடையில் வழங்கும் உரிச்சொற்களாக உள்ளனவே.*

*"அதிர்ந்து போனார்"*

*"விதிர் விதிர்த்துப் போனேன்"*

*வழக்கிலும், செய்தித் தாள்களிலும் இடம் பெறும் சொற்கள் தாமே இவை. தொல்காப்பியர் நாளில் அருஞ் சொற்களாக இருந்ததால்தானே விளக்கம் தந்தார்.*

### கம்பலை

*கண்ணீரும் கம்பலையும் என்பதோர் இணைமொழி. கண்ணீர் விட்டு அழுவதே அது. அழுகையால் உண்டாகும் ஒலி கம்பலை.*

*"கம்பலை சும்மை கலியே அழுங்கல்*
*என்றிவை நான்கும் அரவப் பொருள"*

*என்கிறார் தொல்காப்பியர்.*

*அரவம் - ஒலி; நீ இருக்கும் அரவமே இல்லையே என்பது வழக்கில் உள்ளது. பாம்புக்கு அரவம் எனப் பெயர் வந்தமை இதனால் அறியலாம்.*

*'கமலை' கம்பலை என்பதன் தொகுப்பே. அழுங்கல் அழுகையால் அறியலாம். கலித்தல் துள்ளல்; அலை ஒலியால் கலித்தல் விளங்கும். 'சும்' என்பது மூச்சின் ஒலிக்குறிப்பு.*

### புலம்பு

*ஆற்றுவார் இல்லாமல் புலம்புதல் உண்டு. தானே பேசுதலை 'ஏன் புலம்புகிறாய்?' என்பதும் வழக்கே. "புலம்பே தனிமை" என்பது தொல் காப்பியம். புலம்பல் உரிப்பொருளுக்கு உரிய நெய்தல் நிலப் பெயர் 'புலம்பு' எனப்படும். அதன் தலைவன் புலம்பன்!*

### வெம்மை

*கோடைக் காலத்தில் தமிழகத்து வாழும் வளமைமிக்கார் கோடைக் கானலை நாடி உறைவர். கோடைமலை சங்கச் சொன்றோர் பாடு புகழ் பெற்றது. கோடைக்கு அதனை நாடும் இக் காலநிலைபோல், தொல் காப்பியர் காலத்தே வெப்பத்தைத் தேடி உறையும் குளுமை மிக்க நிலையும் இருந்திருக்கும் போலும் அதனால்,*

*"வெம்மை வேண்டல்"*

*என ஓர் உரிச் சொல்லையும் பொருளையும் சுட்டுகிறார். நாம் நம் அன்பர்களைக் குளுமையாக வரவேற்க; குளிர்நாட்டார் 'வெம்மையாக வரவேற்றல்' காண்கிறோமே!*

### பேம், நாம்

*குழந்தைகள் அழுமானால் அச்சம் காட்டி அடக்குதல் இன்றும் சிற்றூர் வழக்கம். அவ்வச்சக் குறிப்பு 'பே பே' என ஒலி எழுப்புதலும் தொண்டையைத் தட்டுதலும் ஆகும்.*

*'பே' (பேம்) என்னும் குறிப்பு அச்சப் பொருள் தருதல் தொல் காப்பியர் நாளிலேயும் இருந்தது. 'பேய்' என்பதன் மூலம் இப் பேம் ஆகும். 'ஓர் ஆளும் கருப்புடையும் பேய்' என்பார் பாவேந்தர்.*

'நா' (நாம்) என்பதும் அச்சப் பொருள் தருதல் 'நாமநீர்' என்னும் கடலலைப்பால் புலப்படும். நாயும் அச்சப் பொருளாதல் அறிந்தது.

**உரும்**

உரும் அச்சமாதல் விலங்குகள் உருமுதலால் விளங்கும். உரும் இடியும் ஆகும். உரும் வழியே உண்டாகிய 'உருமி'க் கொட்டு, கேட்ட அளவால் அசைப்பது தெளிவு. இவற்றைத் தொகுத்து

"பேம் நாம் உரும் என வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள"

என்றார். 'உரு' என்பதை மட்டும் தனியே எடுத்து "உரு உட்கு (அச்சம்) ஆகும்" என்றும் கூறினார். கண்டறியாத் தோற்றங்களும் விலங்குகளும் பாம்பு முதலியனவும் அஞ்சச் செய்தலை எண்ணி 'உரு' எனத் தனித்துக் கூறினார். அவர்தம் விழிப்புணர்வு வெளிப்பாடு இன்னவையாம்.

**ஆய்தல்**

'ஆய்தம்' என்னும் எழுத்து முப்பாற்புள்ளி வடிவினது; ஆய்தப் புள்ளி என்பதும் அது; அஃகேனம் என்பதும் அதற்கொரு பெயர்; என்பவற்றைக் கூறும் ஆசிரியர், ஆய்தம் என்பதன் பொருள் ' நுணுக்கம்' என்கிறார்.

"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"

என்பது அது.

'ஆய்வுப் பட்டறை' எனப் பெயரிட்டு ஆய்வாளர் பலர் கூடித் திட்ட மிட்டுச் செய்து வரும் தொடர் நிகழ்வாகிய அதன் பெயர் தானும் பிழையாயது என்பது அறியாமலே ஆய்வுகள் நிகழ்கின்றன.

'பட்டடை' என்னும் சொல் தொழிலகப் பெயர். 'பட்டடை' என்பது

"சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு"

என வள்ளுவரால் ஆளப்பட்ட சொல் (821) ஆய்தல் என்பது நாட்டுப்புறப் பெருவழக்குச் சொல். கீரை ஆய்தல், கொத்தவரை ஆய்தல் என்று கூறுதல் இந்நாள் வரை மாறியதில்லை.

முற்றல் அழுகல் பூச்சி முதலியவை போக்கித் தக்கவற்றைத் தேர்ந்து கொள்ளுதலே ஆய்தல் பொருளாக அமைகின்றது. ஆய்தலினும் நுணுக்க ஆய்வு 'ஆராய்தல்' (ஆர் ஆய்தல்). ஆய்வும், ஆராய்வும் கொள்ளுவ கொண்டு தள்ளுவ தள்ளும் நுண்ணிய நோக்குடைய சொற்கள்.

ஒன்றின் ஒன்று நுணுகியவையாக, ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் என்பவற்றைச் சுட்டும் இவ்வுரிச் சொல் விளக்கம் அரிய வாழ்வியல் விளக்கமாம்.

ஓயா உழைப்பாளி, ஓயாப் போராளி, ஓயாச் சிந்தனையாளர், ஓயாப் பொருளீட்டாளர் ஓய்வு கொள்ளும் நிலை என்பது யாது?

தம் ஓயாப் பாட்டின் பயன்பாட்டை மீள் பார்வை பார்க்க வேண்டும் அல்லவா!

அவ்வாய்வு தானே ஓய்வின்பயன்!

ஓய்வு என்பது சிந்தித்தலும் அற்றுப் போன நிலை அன்றே! அச் சும்மா இருக்கும் நிலை கோடியர்க்கு ஒருவர் இருவர் அல்லரோ தேடிக் கண்டு கொள்வது! அச் '**சும்மா**' அரும் பொருளுள் அரும் பொருள். ஓய்வு கொள்வார்க் கெல்லாம் பொதுப் பொருளாகக் கைவர வல்லது ஆய்தலேயாம். ஆதலால் ஓய்தலில் நுண்ணியது ஆய்தல்.

ஆய்ந்து கண்ட பொருளை அடக்கிவைத்துக் கொள்வதால் ஆய்ந்து கண்ட பயன் தான் என்ன? அதனால் ஆய்ந்து கண்ட பயன் கருத்துகளைப் பலருக்கும் பல விடத்தும் சென்று கூறுதல் நிழத்தல் ஆகும். குடை நிழற்றல் என்பது நாடு தழுவுதல் போல் இந்நிழத்தல் ஆய்தலினும் நுண்மை யுடையதாம்.

இருந்தும் நடந்தும் நுவலும் நிலையும் இயலாமையாயின் அந்நிலை யிலும் தாம் கண்ட அரும்பயன் பொருள் - நுவன்று நுவன்று வந்த பொருள் - பின் வருவோர்க்குக் கிட்டும் வகையால் நுவன்றதை நூலாக்கி (நுவல் > நூல்) வைத்தல் வேண்டும். அக்கொடை உயர்கொடை என்பதை ஔவையார் "தாதா கோடிக்கு ஒருவர்" என்று பாராட்டுகிறார்.

ஓய்தல் முதல் சாய்த்தல் (வடித்தல்) வரைப்பட்டவை ஒன்றில் ஒன்று நுண்ணியவை ஆதலின் "உள்ளதன் நுணுக்கம்" என்றார்.

எவ்வொரு கடப்பாட்டில் ஊன்றியவரும் தம் ஊன்றுதல் கடனாக உயர்கொடை புரியலாம் என்னும் அரிய வழிகாட்டுதல், உரிச்சொல் வழியாகத் தரப்பெற்றதாம்.

**வை**

வையே கூர்மை என்பதோர் உரிச்சொல் விளக்கம் (870).

வை என்பதற்குக் கூர்மைப் பொருள் எப்படி வாய்த்தது? 'வை' என்னும் நெல்லைப் பார்த்தால் - நெல் நுனியாம் மூக்கைப் பார்த்தால் கூர்மை நன்கு புலப்படும். மழிதகடு போலும் கூர்மையுடையது நெல் மூக்காகும்.

**வெகுளி**

*"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள"* (855)

*என்பது வண்ணத்தை விலக்கி எண்ணத்தை வெளிப்படுத்தும் உரிச் சொல் விளக்கம்.*

*சினங் கொண்டார் கண்நிறம் என்ன? அவர் முகத்தின் நிறம் என்ன? - இவற்றை நோக்கின் வெகுண்டாரின் முகமும் கண்ணும் காட்டிவிடும்.*

*"முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்*
*காயினும் தான்முந் துறும்"*

*என்பது குறள்.*

*கறுப்பும் சிவப்பும் நிறம் குறித்து வாராவோ எனின்,*

*"நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப"*

*என்று கூறுவார் (856).*

**எறுழ்**

*காளையை அடக்க விரும்புவார் அதன் கொம்பை வளைத்துத் திமிலைப் பற்றித் தாவி ஏறி அடக்குதல் வழக்கம். திமிலுக்கு 'எறுழ்' என்பது பெயர். எறுழ் என்பதன் பொருள் வலிமை என்பதாம். எறுழ் என்னும் உரியொடு எறும்பு, எறும்பி (யானை) என்பவற்றை எண்ணினால் வலிமை விளக்கமாம்.*

*"எறுழ் வலியாகும்"*

*என்பது நூற்பா (871).*

**கலியாணர்**

*உண்ணாட்டு வாணிகரன்றி அயல் நாட்டு வாணிகராகப் பெரும் பொருள் ஈண்டியவர் கலியாணர் எனப்பட்டனர். கலி=மிகுதி; யாணர் = வருவாயினர்.*

*யாணர் என்பதன் பொருள் புதிதுபடல் (புதிய வளம் பெறுதல்) என்பார் தொல்காப்பியர் (862) யாணர் என்பதை யன்றி 'யாண்' என்னும் உரிச் சொல்லைக் காட்டி,*

*"யாணுக் கவினாம்"*

*என்றும் கூறுவார் (864).*

*புதுவருவாயும் கவினும் பெருக்குவதாய திருமணம் 'கலியாணம்' எனவும் வழங்கப்படுதல் விளக்கமாக வில்லையா? வேற்றுச் சொல்லென மயங்காதீர் என்கிறது உரிச் சொற் பொருள்.*

**உணர்தல்**

உள்ளது உள்ளவாறு உணரும் உணர்ச்சி எவர்க்கு உண்டு என்று வினாவின்,

*"உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே"*

என்கிறார் (876).

சொல்லும் பொருளும் சொல்வோன் குறிப்பும் வெளிப்படப் புலப்பட்டு விடுமா? என வினாவின், உணர்வோர்க்கும் உடனே வெளிப் படப் புலப்படுதல் அரிது. ஆனால் அவரே ஆழ்ந்து நோக்கின் பொருள் புலப்படுதல் இல்லாமல் போகாது என்பதை,

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்றா" என்பதனால் தெளிவுபடுத்துகிறார் (877). இது முன்னரும் சுட்டப்பட்டது.

**எச்சம்**

ஒரு தொகையை ஒருவரிடம் தந்து செலவு கணக்குக் கேட்பார் எச்சம் எவ்வளவு என வினாவுவார். எச்சமாவது எஞ்சியிருப்பது. ஒருவர் தம் வாழ்வின்பின் வைப்பாக வைத்துச் செல்லுவன வெல்லாம் எச்சம் என்பதால்,

*"தக்கார் தகவிலர் என்ப தவரவர்*
*எச்சத்தால் காணப் படும்"*

என்றார் பொய்யாமொழியார். எச்சம் என்பதற்கு மக்கள் எனச் சொல்லை மாற்றினாரும் பொருள் கண்டாரும் உண்டு. ஆனால் தொல்காப்பிய எச்ச இயல் எஞ்சியது என்னும் தெளிபொருள் தந்து விளக்குகிறது.

இவ்வதிகாரத்தில் சொல்லியவைபோகச் சொல்ல வேண்டி நிற்கும் எச்சத்தைச் சொல்வதால் எச்சவியல் எனப்பட்டது. எச்சம் மக்கள் வாழ்வில் மாறாது வழங்கும் விளக்க மிக்க சொல்லாம்.

**நால்வகைச் சொற்கள்**

தமிழ்கூறும் நல்லுலகச் செய்யுள் வழக்கிலே பயிலும் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என நான்காக எண்ணி இயலைத் தொடங்குகிறார்.

தமிழுலகத்து வழங்கும் வழுவிலாச் சொல் இயற்சொல் என்றும், ஒரு பொருள் குறித்த பல சொல்லும் பலபொருள் குறித்த ஒரு சொல்லுமாகிய தமிழ்ச் சொல் திரிசொல் என்றும், தமிழ் வழங்கும் நிலப் பரப்பின் அப்பாலாய் வழங்கிய சொல் திசைச் சொல் என்றும், வடக்கிருந்து வந்து வழங்கிய வேற்றுச் சொல் வடசொல் என்றும் இலக்கணம் கூறினார்.

தொல்காப்பியர் காலத்திற்கு முற்படவே தமிழர் கடல் வணிகம் செய்தமையும் அயல் வணிகர் இவண் வந்து சென்றமையும் உண்டாகிச் சொற்கலப்பு நேர வாய்ப்பிருந்தும் அச் சொற்களைச் செய்யுட் சொல்லாக ஏற்றார் அல்லர்.

வட சொல்லையும் தமிழியல்புக்கு ஏற்ப அமைத்துக் கொண்டு தமிழ்நெறிச் சொல்லாக வருவதையே வற்புறுத்தி ஏற்றுக் கொண்டார்.

திசைச் சொல்லும் திரிசொல்லும் தமிழியற் சொல் போலவே தமிழ் எழுத்து வடிவு கொண்டிருந்தமையால் அவ்வெழுத்தை விலக்கிச் சொல்லாட்சி செய்யுமாறு சொல்ல அவர்க்கு நேரவில்லை.

ஆதலால் வடசொல் ஒன்று மட்டுமே தமிழுக்கு வேற்றுச் சொல்லாகவும் வேற்றெழுத்துச் சொல்லாகவும் தொல்காப்பியர் நாளில் இருந்தமை விளங்கும். அச்சொல்லை அப்படியே கொள்ளாமல் தமிழ் மரபுக்குத் தகுமாறு கொள்ளவேண்டும் என்னும் உறுதியால்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (884)

என நெறிகாட்டினார். இவ்வாணை எந்த அயல் மொழிக்கும் உரிய பொது ஆணையெனப் போற்றுதல் மொழிக்காப்பாளர் கட்டாயக் கடமையாம்.

ஓர் அயற்சொல்லைக் கொள்ள வேண்டும் நிலை எப்படி உண்டாகும்?

ஓர் அயற் சொல்லுக்கு ஒத்த அல்லது ஏற்ற சொல், அதனைக் கொள்ள விரும்புவார் மொழியில் இல்லாமல் இருக்க வேண்டும்.

சொல் இல்லை எனினும், ஏற்ற சொல்லை ஆக்கிக் கொள்ள முடியாத அரிய சொல்லாக அஃது இருத்தல் வேண்டும்.

அச்சொல்லை எடுத்துக் கொள்ளவில்லை என்றால், அப்பொருளை விளக்கிக் கூற முடியாத இடர் எடுத்துக் கொள்வார் மொழியில் இருத்தல் வேண்டும்.

இத்தகு நிலைகளிலேயே அயற் செல்லைத் தம் மொழியியற் கேற்பக் கொள்ள வேண்டும் என்பனவே இந் நூற்பாவின் கருத்துகளாம்.

வளமான செல்வமும் வாய்ப்பான வாழ்வும் உடையான் கடன் கொண்டு வாழ விரும்பான். கடன் கொள்ளல் இழிவெனவும் கொள்வான். அந் நிலையில், கடனாளன் என்னும் பெயர் கொள்வதற்காகக் கடன் கொள்ளுதலை அருவறுப்பாகவும் கொள்வான். அப் பொருட்கடன் போன்றதே வேண்டாச் சொற்கடனுமாம்.

பொருட்கடன் வேண்டாது பெற்றுக் கொண்டே போனால், உள்ளவை உரியவை அனைத்தும் அக் கடனாலேயே இழந்து எல்லாமும் இல்லாமல் ஒழிந்து போவான். இந்நிலையை எண்ணுவார் வேண்டாச் சொற்கடனைக் கொள்ளார்.

ஒரு சொல்லைக் கட்டாயம் எடுத்தாகவேண்டும் நிலை இருந் தாலும், **மகப்பேறு வாயாதவர் ஒரு குழந்தையை மகவாகக் கொள்ளும் போது தம் குடும்பத்துக் குழந்தை என்பதை முற்றிலும் காக்கும் வகையால், அக் குழந்தையின் முன்னைத் தொடர்பை விலக்கித் தம் குடும்பத்திற்குத் தகுபெயர் சூட்டித் தம் குடிமை உறுப்பாகவே வளர்த்து வருதல் போல் அயற் சொல்லைத் தம்மொழிக்குத்தகக்** கொண்டு ஆளவேண்டும் இதனைக் கூறுவதே, "எழுத்து ஒரீஇ, எழுத் தொடு புணர்ந்த சொல்லாகும்மே" என்னும் ஆணையாம்.

இவ்வாணையை **மொழிக் காவலர் காலம் காலமாகப் போற்றி னர்.** ஆனால் **நாட்டுக் காவலர் போற்றத் தவறினர்.** அயன்மொழியார் வழியில் சாய்ந்தனர்.

மொழிக் காவலும் நாட்டுக் காவலும் ஒப்பப் போற்றிய மன்னர் காலத்தில் அயலெழுத்துப் புகவில்லை. அவர்கள் நம்பிக்கைக்கு இடமான வட மொழியார், படிப்படியே ஊர்கள் பெயர்கள் முதலியவற்றை மாற்றி வழங்க இடந்தந்தனர். மெய்க் கீர்த்தியில் மிக இடந் தந்தனர். அயன் மொழி வழிபாடு சடங்கு என்பவற்றை ஏற்றனர். அதனால் பொது மக்கள் வாழ்விலும் இந் நிலை புகுந்தது. கட்டிக் காத்த மொழிக் காவலர்களும், அயற் சொற்களேயன்றி அயலெழுத்துகளும் கொள்ளத் தலைப்பட்டனர். பின்னே வந்த அயன் மொழியாகிய ஆங்கிலம் பிரெஞ்சு போர்த்துக் கேசியம் உருது இந்தி ஆகிய மொழிச் சொற்களும் புகுந்து மொழியழிப்புப் பணியை முழு வீச்சாக செய்தன. தமிழால் வாழ்வாரும் இதற்குப் பங்காளர் ஆயினர். "**தொல்காப்பிய ஆணை மீறிய இக்குற்றம் காட்டுத்தீயாகப் பரவி இந்நாளில் மொழியை அழிக்கின்றது**" என்பதை இன்று உணர்ந்தாலும் பயனுண்டு. இல்லையேல் அயலார் கணக்குப்படி தமிழும் விரைவில் '**இருந்த மொழி**' என்னும் நிலையை அடைதல் ஆகவும் கூடும்.

"தொல்காப்பியப் புலவோர் தோன்ற விரித்துரைத்தார்" எனச் சான்றோர் ஒருவர் பெருமிதம் கொண்டார்! **தோன்ற விரித்துரைத்தாலும் போற்றிக் கொள்வார் இல்லாக்கால் என்ன பயனாம்?**

உரைநடைக்கு இல்லாத சில இடர்கள் செய்யுள் நடைக்கு உண்டு. அதற்கென அமையும் கட்டொழுங்குகள் சில; சுவை, நயம், ஒலி, பொருள் என்பவை கருதி வழங்கு சொற்கள் சற்றே மாற்றமாய் அமைத்துப்

போற்றுதற்கு இடனாகும். அதனால் சில சொற்களில் மெல்லெழுத்து வல்லெழுத்தாகவும், வல்லெழுத்து மெல்லெழுத்தாகவும், சில எழுத்து களை விரிக்கவும், சில எழுத்துகளைத் தொகுக்கவும், சில எழுத்துகளை நீட்டவும், சில எழுத்துகளைக் குறுக்கவும் ஆகும். ஆனால் இம்மாற்றங் களால் சொல்லின் பொருள் மாற்றமாவது இல்லை என்றும் செய்யுள் நயம் மிகும் என்றும் அறிய வேண்டும் என்று இலக்கியக் கல்விக்கு நெறிகாட்டு கிறார் (886).

பாடலுக்குப் பொருள்கண்டு சுவைக்கத் தக்க வகையைப் ‘பொருள்கோள்’ எனக் கூறி அவ் விளக்கமும் தருகிறார் (887).

இவை **பயில்வார்க்குப் பயின்று சிறந்தார் காட்டும் வழியாகத் திகழ்கின்றன.**

ஆக்கிவைத்த உணவை உண்ண அறிந்தான் ஆக்கும் வகையையும் அறிந்துகொள்ளல் இரட்டை நலமாதல் போல் நலம் செய்வன இத்தகு துய்ப்பு நெறி காட்டலாகும்.

**ஈ, தா, கொடு**

‘ஈ’ என்றோ ‘தா’ என்றோ ‘கொடு’ என்றோ கூறுவதில் பொதுவாக நோக்குவார்க்கு வேறுபாடு இல்லை. ஆனால் நுணுகி நோக்கின் வேறுபாடு உண்டு. இதனை விளக்குகிறார் தொல்காப்பியர்.

கொடுப்பவனினும் அவனிடம் ஒன்றைப் பெற வருவோன் தாழ்வுடையன் எனின், ‘ஈ’ என்று கூறுவான்.

இருவரும் ஒப்புடையவர் எனின் பெறுவோன் ‘தா’ என்று கூறுவான்.

கொடுப்போனினும் பெறுவோன் உயர்ந்தவன் எனின் ‘கொடு’ என்று கூறுவான் என்று அக்கால மக்கள் வழக்கினை உரைக்கிறார்.

இரப்பவர் அனைவரும் இழிந்தாரும் அல்லர் கொடுப்பவர் அனைவரும் உயர்ந்தாரும் அல்லர். இரு நிலைகளிலும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் உண்டு. உயர்வு தாழ்வு என்பவை வயது அறிவு பண்பு உதவி நன்றிக் கடன் தொண்டு ஆளுரிமை என்பவற்றால் ஆவனவேயாம். **பிறவிக் குல வேற்றுமை இல்லாததும் கருதப்படாததுமாம் காலநிலை தொல் காப்பியர் கால நிலையாம்.**

**வாராதனவும் பேசாதனவும்**

இந்தச் சாலை சென்னையில் இருந்து வருகிறது. கன்னி வரை செல்கிறது. என்று கூறுதல் உண்டு. இச் சாலை எங்கே போகிறது என வினாவுதலும் உண்டு.

எறும்பு அணில் மலை முதலியவை பேசுவதாகக் கதைகள் உண்டு. இம்முறை உலகளாவியதாகவும் பெருவரவினதாகவும் உள. குழந்தையர் கல்விக்கு ஏற்றது இம் முறை எனப் போற்றவும் படுகிறது இதனைத் தொல்காப்பியர்,

"வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னா மரபின எனக்கூ றுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன என்னும் குறிப்புரை யாகும்" (905)

என்கிறார் (என்னா = என்று சொல்லாத).

## அடுக்கு

அடுக்கு என்றாலே ஒன்றற்கு மேற்பட்டது என்பது பொருள். அடுக்குச் சட்டி, அடுக்குப் பானை என்பவை அன்றி அடுக்கு மல்லி அடுக்குப் பாறை என இயற்கை அடுக்கும் உண்டு.

பாடலில் இசை கருதி அடுக்கு வரும் எனின், நான்கு முறை அடுக்கலாம் என்றும், விரைவு கருதிய அடுக்கு மும்முறை வரலாம் என்றும் ஓர் எல்லை வகுத்துக் காட்டுகிறார் (906, 907). எந்த ஒன்றிலும் அளவீடு இருத்தல் வேண்டும் என்னும் ஆசிரியர் மொழிக் காவல் நெறி இஃதாம்.

## ஒரு பொருள் இருசொல்

உயர்தலும் ஓங்குதலும் ஒன்று தானே! மீயும் மிசையும் ஒன்று தானே! ஒருபொருள் தரும் இரு சொற்களை இணைத்தல் ஆகுமா எனின் ஆகுமென மக்கள் வழக்குக் கொண்டு தொல்காப்பியர் சொல்கிறார். அது,

"ஒரு பொருள் இரு சொல் பிரிவில வரையார்" என்பது. வரையார் = நீக்கார், விலக்கார்.

## புதுவரவு

பழைய சொற்கள் காலவெள்ளத்தில் அழிந்துபடுவது போலப் புதுப்புதுச் சொற்கள் தோற்றமும் ஆகின்றனவே எனின் வாழும் மொழி என்பதன் அடையாளம் அதுவே என்பர் மொழியறிஞர். இதனைக் "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" (935) என்கிறார். கடிசொல் லாவது விலக்கும் சொல் நாட்காட்டி, எழுதுகோல், செய்தித்தாள் என்பன வெல்லாம் காலம் தந்த புதுவரவுகள் அல்லவா! மொழிவளம் செய்யும் சொற்களின் பெருக்கமும் தொடர் வரவுமே மொழிவளம் ஆதலால், அவற்றைப் போற்றிக் காக்க ஏவினார்.

# பொருளதிகார இயலமைதி

எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்பவற்றைப் போலவே பொரு ளதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டிருத்தல் உயரிய கட்டுமுறை யாகும்.

எழுத்து, சொல் ஆகியவற்றைக் கருவியாகக் கொண்டது பொருள்.

உலகத்துக் காணப்படும் பொருள்களைக் காட்சிப் பொருள் கருத்துப் பொருள் என இருவகைப் படுத்துவர். அவற்றை வாழ்வியல் முறைக்குத் தக முதல், கரு, உரி என மூவகைப்படுத்திக் காண்பது பொருளியல் கண்ட தமிழ் மேலோர் முறையாகும்.

அவற்றை முறையே கூறி, அகவொழுக்க நெறிமுறைகள் ஏழனையும் அதன் சார்புகளையும் **அகத்திணை இயல்** என்னும் முதல் இயலில் கூறுகிறார். கைக்கிளை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்பன அத்திணைகள். அகத்திணை ஏழானாற் போல அமைந்த புறத்திணை ஏழனையும் **புறத்திணை இயல்** என்னும் அடுத்த இயலில் கூறுகிறார். அவ்வேழு திணைகளும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பனவாம்.

மூன்றாம் இயலாகக் **களவியல்** வைக்கிறார். அது அகத்திணைக் கைகோள் இரண்டனுள் முற்பட்டதாம். களவுக் காதல் விளக்கம் கள வொழுக்கம், இயற்கைப் புணர்ச்சி, களவொழுக்கத்தில் தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலோர் நிலை, இடந்தலைப்பாடு, வரைவு (திருமணம்) என்பவை கூறப்படுகின்றன.

நான்காவதாம் இயல், **கற்பியல்.** அதில், மணவாழ்வு, மணமக்கள் கூற்று, பிறர் கூற்று, அலர், பிரிவு, அறநிலை என்பவை முறையே கூறப்பட்டுள.

கைகோள் ஆகிய களவு, கற்பு என்னும் இரண்டன் தொடர்பாகவும் பிறவாகவும் சொல்ல வேண்டுவனவற்றைச் சொல்லும் **பொருளியல்** ஐந்தாவதாக இடம்பெறுகிறது. அறத்தொடு நிலை, வரைவுகடாதல், புலனெறி வழக்குகள், தலைவி தோழி முதலோர் பற்றிய சில குறிப்புகள் இதில் உரைக்கப்பட்டுள்ளன.

ஆறாவதாக அமைந்தது **மெய்ப்பாட்டியல்**. மெய்ப்பாடு என்பதன் பொருள், மெய்ப்பாடுகளின் வகை, அவை தோன்றும் நிலைக்களங்கள், அன்பின் ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள், கைக்கிளை பெருந்திணை மெய்ப்பாடுகள், வாழ்நலத்திற்கு ஆகாக் குறிப்புகள், மெய்ப்பாட்டு நுட்பம் என்பவை முறையே இதில் கூறப்பட்டுள.

பொருள் விளக்கச் சிறப்பமைந்த **உவமை இயல்** ஏழாவதாக இடம் பெறுகிறது.

உவமையின் வகை, உவம உருபு, உவமையை உணருமுறை, உள்ளுறை உவமம், உவமை பற்றிய புறனடை என்பவை இவ்வியலில் பேசப்படுகின்றன.

எட்டாம் இயல் தொல்காப்பியத்துவரும் இயல்கள் இருபத்து ஏழிலும் விரிவுடையதாகிய **செய்யுள் இயல்.** ஈதொன்று மட்டுமே 240 நூற்பாக்களைக் கொண்டது. நூலில் ஏறத்தாழ ஏழில் ஒரு பங்காக அமைந்தது. இதனை அடுத்ததாக 112 நூற்பாக்களை யுடையது இதனை அடுத்த மரபியல் ஆகும்.

இச் செய்யுளியல், “மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ” எனத் தொடங்கி முப்பத்து நான்கு வகையில் செய்யுள் உறுப்புகள் அமைதலை முதல் நூற்பாவிலேயே தொகுத்துக் கூறி, அவற்றை முறையே கூறி முடிக்கிறார். எல்லா இயல்களிலும் வைப்பு முறைச் சிறப்புண்டு எனினும் இவ்வியல் கொண்ட வைப்புமுறை நனிபெரும் சிறப்புடையதாம்.

### பொருள் வைப்புமுறை

மாத்திரை, எழுத்தியல், அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவு, திணை, கைகோள், கூற்று, கேட்போர், களம், காலவகை, பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பவை அவை.

தொல்காப்பிய நிறைவில் வருவது மரபியல். தொல்காப்பியர் முறை திறம்பா வைப்புமுறை, முறை மாற்றி வைக்கப்பட்டதில் தலைமை கொண்டது இவ்வியலாயிற்று.

மாற்றரும் சிறப்பின் மரபு என மரபுமாண்பு கிளப்பதுடன் தொடங்குவது இது (1500).

இளமைப் பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் இவை இவை எனச் சுட்டி முறைமுறையே கூறி,

“சொல்லிய மரபின் இளமை தானே
சொல்லுங் காலை அவையல திலவே”

என்று நிறைவு செய்கிறார் (1525).

*பின்னர் உயிர்களை ஓரறிவுமுதல் ஆறறிவு ஈறாகப் பகுத்துரைத்து, ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் என்பவற்றைக் கூறி,*

*“பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே”*

*என முடிபும் கூறுகிறார் (1568).*

*இது காறும் நூற்பா இடமாற்றச் சிக்கல் ஏற்பட்டமையன்றி, இடைச் செருகல் ஏற்படவில்லை.*

*‘இது கூறுவேம்’ என்று தொடங்கி,*

*‘இது கூறினேம்’ என முடித்தபின்,*

*அந்தணர், அரசர், வைசியன், வேளாண் மாந்தர் என்பார் இயல்புகள் பற்றி (1570 - 1584) பதினைந்து நூற்பாக்கள் வந்து, ஓரறிவுயிரிகளின் சில சிறப்பியல்களைக் (1585 - 1588) கூறி,*

*“இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்*
*திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்”*

*என இயல் நிறைவாகக் காட்டிய பின்னரும் நூல்வகை, சூத்திரம், உரை, நூற்சிதைவுகள், நூல் உத்திகள் என்பவை (1590 - 1610) இடம் பெற்று நூல் நிறைகின்றது.*

*ஓரறிவு உயிரிபற்றிக் கூறிய இடத்தொடு (1526) தொடர்புடைய அகக் காழ், புறக்காழ், தோடு மடல் இலை முறி காய்பழம் என்பவை நெட்டிடை தள்ளப்பட்டுக் (1585) கூறப்படுதலும், இடையே “நூலே கரகம்” முதலாக மரபொடு பொருந்தாப் பொருள் இடம்பெறலும் சேர்ப்பு என்பதை விளக்க வேண்டுவது இல்லை.*

*மரபு இயற்கை தழுவியது; இளமை, ஆண்மை பெண்மை எனக் கூறப்பட்டது. நூலும் கரகமும் குடையும் கொடியும் ஏரும் பிறவும் பிறப்பொடு தொடர்புடையவையா? இயற்கைத் தொடர்பு உடையவையா? ‘கவச குண்டலத் தொடு பிறத்தல் கதைக்க உதவும்’ நடைக்கு ஆகுமா?*

*மரபியலில் உரையாசிரியர்கள் காலத்திற்கு முன்னரே, பல்வேறு திணிப்புகளும் மாற்றங்களும் செய்யப்பட்டுள என்பதை அறிந்து கொள்ளல் இப்பகுதிக்குச் சாலும்.*

# பொருளதிகார வாழ்வியல் விளக்கம்

தமிழினம் பெற்ற பேறுகளுள் தலையாய பேறு தொல்காப்பியத்தைப் பெற்றபேறு ஆகும். ஏனெனில், தொல்காப்பியர்க்கு முன்னரே இலக்கிய இலக்கணக் கலைவள மெய்யியல் நூல்கள் பலப்பல இருந்தன எனினும் அவற்றைக் காணற்கியலாக் காலநிலையில் அவற்றின் முழுமை யான எச்சமாக நமக்குக் கிடைத்தது தொல்காப்பியமே ஆதலால்! இப் பேற்றினுள்ளும் தனிப்பெரும் பேறு, தொல்காப்பியப் பொருளதிகாரம் பெற்ற பேறு. மூவதிகாரங்களையுடைய தொல்காப்பியம் எழுத்து சொல் அளவில் பயிலப்பட்டு, பொருள் மறைக்கப்பட்டிருந்த காலமும் உண்டு.

### பொருளின் சிறப்பு

அக் காலத்தையே, "எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப் பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்' என்று வந்தார்; வர, அரசனும் புடைபடக் கவன்று 'என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமே எனின் இவை பெற்றும் பெற்றிலேம்' என்று சொல்லா நிற்ப" என்னும் இறையனார் களவியல். அவ்வுரையால் பொருளதிகாரப் பயிற்சி நாட்டில் குன்றியமையும் அதில் வல்லார் இல்லாமையும், பொருளதிகாரம் மறைவுண்டமையும் விளக்கமாம்.

### வெளிப்பாடு

இந் நிலையிலிருந்த தொல்காப்பியம், தமிழே வாழ்வாகிய புலமைச் செல்வர்கள் சிலர் தண்ணருளால் ஏட்டுப் படியாகக் காக்கப்பட்டன; அக் காவலுக்கு அரண்போல உரை வல்ல பெருமக்கள் சிலர் உரைகண்டு உயிரூட்டினர்; அதனை அரிதின் முயன்று தேடிப் பெருமக்களில் சிலர் அச்சிட்டு நடமாட விட்டனர். இவ்வாறு வழிவழியாகப் பெற்ற பேறே, நம் வாழ்வியல் களஞ்சியமாம் தொல்காப்பியத்தை நாம் பெற வாய்ப்பாகிய தாம்.

### பொருள் வளம்

இலக்கணம் என்பது எழுத்து சொல் அளவில் அமைவதே, இந் நாள்வரை உலகம் கண்டது. ஆனால், தொல் பழ நாளிலேயே வாழ்வியல்

இலக்கணமாம் பொருள் இலக்கணமும், மொழி இலக்கணத்துடன் இணைத்துத் தமிழில் கூறப்பட்டமை பெருமிதமும் விந்தையும் உடையதாம்.

தொல்காப்பியக் கொடைவளத்திற்குப் பாரிய சான்றாக விளங்குவன திருக்குறள், பாட்டு, தொகை என்னும் பழமை சான்றவை.

தொல்காப்பியர் வகுத்தருளிய அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் விளக்கமாகத் திகழ்வது திருக்குறள். பாட்டு தொகைகளில் அமைந்த பாடல்கள் அனைத்தும் தொல்காப்பிய அகம், புறம் ஆகிய பொருள் விளக்கமாய்த் திணை, துறை கொண்டு அமைந்தவை. பின்வர வாகிய நூல்களும், தொல்காப்பியப் பெருமணி மாலையில் ஒன்றும் பலவுமாய் எடுத்துக் கொண்டு கோக்கப் பெற்றவையே.

இனித் தொல்காப்பியம் போல விரிவிலக்கணமோ முழுதுறு இலக்கணமோ கொள்ளாத நூல்களும், தொல்காப்பியச் சார்பாய், சார்பின் சார்பாய் வெளிப்பட்டவையே.

தமிழ் நெறிக்கு அயலாகவும் மாறாகவும் தோன்றியன தாமும், தொல்காப்பியத்தை வேண்டுமாற்றால் பயன்படுத்திக் கொண்டு புற்றீச லாய்ப் புறப்பட்டவையேயாம்.

ஆகையால், தமிழர் வாழ்வியல் அளவுகோல் என அமைந்த தொல்காப்பியப் பொருளியல் வாழ்வு விரிவு மிக்கதாம்.

பொருளதிகாரத் தொடக்கம் அகவாழ்வில் கிளர்கின்றது. 'அகத் திணை இயல்' என்பது அது. அக வொழுக்கம் பற்றிக் கூறுவது என்பதே அதன் பொருளாம்.

**அகம்**

அக வாழ்வு என்பது, இல்வாழ்வு, இல்லற வாழ்வு, உள்ளத்தால் வாழும் உணர்வு வாழ்வு!

புற வாழ்வு என்பது, அக வாழ்வில் இருந்து கிளர்ந்து விரிவாக்க முற்று உலக வாழ்வாகத் திகழ்வது. அக வாழ்வு என ஒன்று இல்லாக்கால் புற வாழ்வு என ஒன்று அரும்பியிருக்கவே இயலாது! அகம், புறம் என்பது ஆட்சியே அன்றிப் புறம், அகம் என ஆட்சி இல்லையாம்.

**அறம்**

அறம் என்பதன் தோற்றமே, அகவாழ்வின் தோற்றமாம்!

தக்காள் ஒருத்தி தக்கான் ஒருவன் உள்ளத்திலோ, தக்கான் ஒருவன் தக்காள் ஒருத்தி உள்ளத்திலோ பதிவாகும் நிலைக்கு 'அறம்' எனப் பெயர் சூட்டியவர் தமிழ் மூதறிவாளர். அதனைப் போற்றி உரைத்தவர் தொல்

காப்பியர் (1152). தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல் முதலாகச் சொல்லப்படுவன அவை. அதனாலேயே வள்ளுவம் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என இல்வாழ்வில் முழங்கியது.

அக வொழுக்கம் பற்றிக் கூறப்புகும் ஆசிரியர் நல்ல சூழலை முதற்கண் உருவாக்கிக் கொள்கிறார்.

தமிழர் கண்ட அகவொழுக்கம் '**கைகோள்**' எனப்பட்டது. **கை** என்பதன் பொருள், ஒழுக்கம். கோள், கொள்ளுதல்; அக் கைகோள் களவு, கற்பு என இரண்டாம். களவில் தொடங்கிக் கற்பில் நிறைவுறல் அன்றி வழுவுதல் ஆகாது என்னும் வரையறை உடையது அக் கைகோள்.

கைகோள் தோன்றுமிடம் அல்லது தொடங்குநிலை, '**கைக்கிளை**' எனப்பட்டது. ஒழுக்கம் கிளைக்கும் நிலையே கைக்கிளை என்க.

(கணவனை இழந்த தாபத நிலை, பின்னாளில் 'கைம்மை' என வழங்கியமை கட்டமை ஒழுக்கப் பொருளிலேயே என்பது எண்ணத் தக்கது.)

**ஏழு திணை**

கைக்கிளையில் தொடங்கும் காதல் வாழ்வு, மேலே ஐந்திணை (குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை) பெருந்திணை என ஏழு திணைகளாக வகுத்துக் கூறப்படுவதை முதல் இயல் முதல் நூற்பாவில் சுட்டுகிறார். அது,

*"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை என்ப"* (947)

என்பது. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் என்றமையால், 'நடுவண் ஐந்திணை' உண்மையைக் குறிக்கிறார் (948).

**நிலம்**

தமிழ் நிலம் 'நானிலம்' என்னும் பகுப்புடையது. அந் நானிலம் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்பன.

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் எனப்படும் நிலைத்திணை (தாவரம்) வளமாக வளரும் இடத்தை அந் நிலைத்திணையின் பெயராலேயே வழங்கினர்! நிலைத்திணைகளில் பொலிவுமிக்கதும் உள்ளம் கவர்வதும் பூ. ஆதலால் நிலைத்திணைப் பூப் பெயரே அகம், புறம் இரண்டற்கும் அடையாளம் ஆயின.

நடுவண் ஐந்திணையுள் நடுவண் திணையாகப் பாலையைக் கொள்கிறார் தொல்காப்பியர். அதனால், அத்திணை ஒழிந்த திணைகள் நான்கற்கும் நானிலங்களை வழங்குகிறார். **பாலை** என்பது பால்மரம். அது

மழையற்று வறண்ட நிலத்தும் வளர்வது. அதனால், அப் பெயரால் பாலை நிலம் வழங்கப் பட்டது. மலையும் காடும் வளமற்று வறண்ட நிலையில் அதனைப் பாலையாகக் கொள்வது தமிழக வழக்காயிற்று. இதனையே,

> "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
> நல்லியப்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்துப்
> பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

என்றார் இளங்கோவடிகள். ஆனால், குமரிக்கண்டத்திருந்த ஏழ்முன் பாலை, ஏழ்பின்பாலை என்னும் நாடுகள் நம் கருத்தில் தோன்றி, ஐந்திணை நிலமும் இயல்பாக இருந்ததை விளக்கும்.

நானிலத்து ஒழுக்கங்களும் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் எனப்பட்டவை போலவே, பாலை நில ஒழுக்கமும் பாலை எனப்பட்டது. முறையே இவ்வைந்திணை ஒழுக்கங்களும் புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் எனப்பட்டன.

பல்வேறு வகையாகக் கூறப்படுவது பொருள். அதனை அகத்திணை அமைவு கருதி, முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என மூவகைப் படுத்திக் கூறினர் (950).

முதற்பொருள் என்பது, நிலமும் பொழுதும். கருப்பொருள் என்பது, முதற்பொருள் வழியாகக் கருக்கொண்ட பொருள்.

உரிப்பொருள் என்பது, உயரிய மாந்தப் பிறப்பின் உரிமையாய் அமைந்த ஒழுக்கப் பொருள்.

இம் முப் பொருள்களுள் மூன்றாவதாகிய ஒழுக்கப் பொருளே - உரிப்பொருளே - ஆசிரியர் கூறுதற்கு எடுத்துக்கொண்ட பொருளாகும். முதற் பொருளாகிய நிலமும் பொழுதும், உரிப்பொருள் நிகழ்தற்கு அமைந்த இடமும் காலமும் பற்றியவை. உரிப்பொருள் விளக்கத்திற்கு அமைந்தது கருப்பொருள். ஆதலால், அவற்றைக் கூறும் ஆசிரியர் முதற்பொருளினும் கருப்பொருளும் கருப்பொருளினும் உரிப்பொருளும் ஒன்றில் ஒன் று சிறந்தது என்கிறார். ஏனெனில், இடம் காலம் சூழல் எனப் பேசுவன எல்லாம் வாழ்வுக்காகவே ஆதலால். இம் முறை வகுப்புத் தாமே கண்டு படைத்து வைத்தது இல்லை என்பதை உறுதியுடன் கூறுகிறார். அது,

> "பாடலுள் பயின்றவை நாடுங் காலை"

என்பது (949).

நிலத்தைக் கூறும் போது நிலத்தின் பெயரை வாளா கூறாமல், அவ்வந் நிலத்தவர் வழிபட்டு வந்த தெய்வப் பெயரையும் சேர்த்தே சுட்டுகிறார். கருப்பொருள் கூறத் தொடங்கும்போதும், தெய்வம் என்பது

மக்கள் உள்ளத்தே கருக்கொண்டு விளங்கிய பொருள் என்பதைச் சொல்லியே பிற கருப்பொருள்களைக் கூறுகிறார் (964).

**மேல், கீழ்**

கடல் கொண்ட குமரிக் கண்டமும் சரி, எஞ்சியுள்ள தமிழகமும் சரி, இவை மேல் மலைதொட்டுக் கீழ் கடல் எனப் படிப்படியே அமைந்த வையே.

மலை நிலம் உயர்ந்தது ஆதலால், மேல், மேற்கு என உயரப் பொருளால் அத் திசை குறிக்கப்பட்டது.

கடல் நிலம் தாழ்வுடையது ஆதலால், கீழ், கிழக்கு எனத் தணிவுப் பொருளால் அத்திசை குறிக்கப்பட்டது.

**முல்லை முதல்**

இந் நிலையில், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என அமையும் நில அமைப்பின் படியே திணை வைப்புச் செய்யாமல், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என முறைப்படுத்திக் கூறுகிறார். அம் முறையே பலரும் சொல்லிய முறை எனவும் உறுதி மொழிகிறார். அது,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
***சொல்லிய முறையாற்*** சொல்லவும் படுமே"

என்பது (951).

இனிக் காலம் சொல்லும் போதும்,

"காரும் மாலையும் ***முல்லை; குறிஞ்சி***
கூதிர் யாமம் என்மனார் புலவர்" (952)

"பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப" (953)

"வைகறை விடியல் மருதம்; எற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்" (954)

"***நடுவுநிலைத் திணையே*** நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" (955)

"பின்பனி தானும் உரித்தென மொழிப" (956)

என்றே வரிசைப் படுத்துகிறார்.

**இருத்தல்**

"உணவின் சுவை நாவிலே இல்லை; வயிற்றிலே இருக்கிறது" என்றால், மறுதலையாகத் தோன்றும் அல்லவா. ஆனால், உண்மை அது தானே!

*பசித்துக் கிடந்து உண்ணக் காத்திருப்பவன் விரும்பி உண்ணும் உணர்வுக்கும், பசியின்றி 'உண்ண வேண்டுமே' என்பதற்காக உண்பவன் உணர்வுக்கும் எவ்வளவு இடைவெளி!*

*அக இன்பம், கூடுதலில் இல்லை; கூடுவதை எதிர்பார்த்து இருத்தலிலேயே இருக்கிறது! இத் தெளிவின் தீர்ப்பாகவே முல்லை, குறிஞ்சி என முறை வைத்தனர். நில அமைப்புப் பற்றிக் கூறல் தொல்காப்பியர் நோக்கு இல்லை. ஒழுக்க அமைதிபற்றிக் கூறுதலே அவர் நோக்கு. தொல் காப்பிய உரிப்பொருள் விளக்கமாகவே காமத்துப்பால் இயற்றியவர் திருவள்ளுவர். அவர் இறுதிக் குறளாக,*

> *"ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்*
> *கூடி முயங்கப் பெறின்"*

*என்றமை விளக்கமாக்கும். இதன் மேல்விளக்கமாக,*

> *"உணலினும் உண்டது அறல் இனிது; காமம்*
> *புணர்தலின் ஊடல் இனிது"*

*என்பதும் (1326) எண்ணி மகிழத்தக்கது.*

**நிலம், பொழுது**

*வாழும் இடம், காலம், சூழல் ஆகியவைக்கும் வாழ்வார்க்கும் தொடர்பு உண்டா? உண்டு என்பது வெளிப்படை.*

*மலைவாணர் ஊணும் உடையும் உறைவும் தொழிலும், கடல் வாணர் ஊணும் உடையும் உறைவும் தொழிலும் ஓர் ஒப்பானவையா?*

*முல்லை ஆயர் தொழிலும் குடிநலம் பேணலும், மருத உழவர் தொழிலும் குடிநலம் பேணலும், ஓர் ஒப்புமை அமைந்தவையா?*

*பனிநாள் மழைநாள் இளவேனில் நாள் மாறுதல், மக்கள் ஊண் உடை உறை நிலை மாற்றங்களை ஆக்க வில்லையா?*

*இனிய விடியற் பொழுதும், கொடிய நண்பகல் வேளையும், மஞ்சள் மாலையும், காரிருள் கப்பிய யாமமும் என்னென்ன மாற்றங்களை யெல்லாம் ஏற்படுத்திவிடுகின்றன!*

*குளிர் தூங்கும் அருவிச் சூழலும், கொதிக்கும் பாலைச் சூழலும் தனித்தனிப் பதிவுகளை உருவாக்கி விட வில்லையா?*

*இவற்றை எண்ணுவார், வாழ்வுக்கு நிலமும் பொழுதும் சூழலும் உடனாகி நிற்றலை உணரத் தவறார்.*

*நாடக உயிர்ப்பு, உரையாட்டு நடிப்பு தோற்றம் என்பவற்றில் இருந்தாலும், மேடையும் திரையும் ஒளியும் பிறவும் அவற்றை மேம்படுத்துதல் நாம் அறியாதது இல்லையே!*

**கருப்பொருள்**

'கரு' என்பது 'கர்' என்னும் வேர்வழிச் சொல். கருமம் கருவி கருத்தன் என்பவற்றின் மூலமும் கர் என்பதே. கர் என்பது கார், கால், காள், காழ் என்றாகியும் விரிவாக்கம் பெறும்.

கருமை, கருமுகில் வழிப்பட்ட வான் சிறப்பாய், வையகச் சிறப்பு ஆக்குவதாம். அம் மழை இன்றிப் புல்லும் கருக் கொள்ளா என்னின், பிறவற்றைச் சொல்ல என்ன உண்டு?

*"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை"*

என்பது குறிப்பு.

*"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு"*

என்பது வள்ளுவ வான்சிறப்பின் நிறைவு.

வான் ஒழுக்கே (மழையே), வையக ஒழுக்கு (ஒழுக்கம்) மூலம் என்பதை உரைத்தது அது.

ஆறு ஒழுக்கு நெறி வழி என்பன வெல்லாம் ஆற்று நடைக்கும் ஆள் நடைக்கும் உரியவையாக இருத்தலைக் கருதுக. அன்றியும் நீரின் தன்மையே நீர்மை என்பதையும் நீர்மையாவது பண்புடைமை என்பதை யும் உணர்தல் இனிதாம். இனித் தொல்காப்பியர்,

*"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப"*

எனக் கருப்பொருள் வகைகளைக் கூறுகிறார் (மா = விலங்கு; புள் = பறவை; செய்தி = தொழில்). இவ்வாறு கொள்ளப்படுவன பிறவும் உள; அவற்றையும் கொள்க என்கிறார்.

'பிறவும்' என்றதனால், தலைமகன் பெயர், தலைமகள் பெயர், நீர், ஊர், பூ, மக்கள் என்பனவற்றை இணைத்துக் கொள்கிறார் களவியல் உரைகாரர்.

வாழ்வியல் ஆசான் ஒருவன் ஞால நூல், கால நூல், திணை நூல் வல்லானாகவும் திகழ்தல் வேண்டும் என்பதைக் கூறாமல் கூறுவது இப்பகுதி என்க.

தெய்வத்தை நினைந்து உயிர்க்கமுதாம் உணவு உண்ணுதல் வழக்கத்தை வெளிப்படுத்துதல் போலத் "தெய்வம் உணாவே" என்றார் என்பதும் எண்ணத்தக்கது. இஃது உலகந் தழுவிய நெறியாதல் அறிக. இதனைச் சுட்டுவார் பேரா. சி. இலக்குவனார்.

**உரிப்பொருள்**

முல்லை நிலமும், முல்லைக்குரிய கார் காலமும் முன்வைத்த ஆசிரியர், உரிப்பொருள் சொல்லும் போது குறிஞ்சியை முதற்கண் வைத்துள்ளார். அது

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"

என்பது (960).

முல்லைக்குத் தந்த நில கால முதன்மையை, உரிப் பொருளுக்கும் தருதல் ஆகாது என்பது ஆராய்வார் எவர்க்கும் புலப்படும். ஏனெனில், முல்லை என்பது புணர்தலின் பின்னாக ஏற்படும், எதிப்பார்த்திருக்கும் 'இருத்தல்' ஒழுக்கம்; அது கூடுதல் இல்லாமல் நிகழாது; ஆதலால், குறிஞ்சி முல்லை என முறை வைத்தல் மேற் கொள்ளப்பட்டது என்பதற்காகவே, "தேருங் காலை" என்றார். தேருங் காலையாவது ஆராயும் பொழுது.

கண்டாராகிய ஆடவரும் பெண்டிரும் காட்சியால் ஒருப்பட்டுக் கருத்தாலும் ஒருப்பட்டு 'ஒருவரை இன்றி ஒருவர் இல்லை' என்னும் அறவுணர்வு ஓங்கிய நிலையிலேயே ஒருவரை ஒருவர் மீளவும் காண எதிர்பார்த்திருத்தல் இயற்கை. ஆதலின், நடைமுறை வாழ்வறிந்த நன்முறை மாற்றமே குறிஞ்சி (புணர்தல்) முல்லை (இருத்தல்) என்னும் வைப்பு முறையாம்.

**பிரிதல்**

கூடினார் இருவர் எதிர்பார்த்து இருப்பார் என்னின், நிகழ்ந்தது என்ன என எண்ணின் தெளிவு கிட்டும். அது 'பிரிதல்' என்பது. ஆதலால், குறிஞ்சி முல்லை என்னும் இரண்டன் இடையே பாலையை (பிரிவை) வைத்தல் முறைமையாயிற்றாம்.

பிரிவு என்பது வேளைப் பிரிவும், நாளைப் பிரிவும், திங்கள் முதலாம் பிரிவும் எனப் பலவகைத்தாம். இவற்றுள் வேளைப் பிரிவே முல்லைப் பிரிவு ஆகும்.

கூடு துறந்து செல்லும் பறவை போலவும் தொழுவம் பிரிந்து செல்லும் கால்நடை போலவும் வீடு துறந்து சென்று, வேலை முடித்து மாலையில் மீளும் வேளைப் பிரிவே இம் முல்லைப் பிரிவு. "கணவன் பிரிந்து சென்றால் அவன் மீள வரும் வரை மனைவிக்குக் கதவே காது" என்னும் பாவேந்தர் படைப்பு முல்லைப் பிரிவாகும்.

இந் நாளில் வேலை நிமித்தமாக வெளியே சென்று மாலையில் திரும்பி வரும் மனைவியைக் கணவன் நோக்கியிருத்தலும் இருவரும்

காலையில் பிரிந்து மாலையில் திரும்பும் கடமையுடையராய் 'ஒருவரை ஒருவர் நினைந்திருத்தலும் இருத்தல்' எனத் தகும்.

"ஓதல் பகையே தூது இவை பிரிவே"

என்னும் பிரிவுகள், நெடிய பிரிவுகள் ஆகலின் அவை இல்லத்தின் எல்லை கடந்து, கடற் பரப்பு வரை நீண்டு 'நெய்தல்' எனப்பட்டது. நெய்தல் ஒழுக்கம் இரங்கல்.

வெப்பத்தால் வெண்ணெய் உருகும் உருக்கம் போல உருகும் நிலை அது. கடலும் அலையும் கானலும் காற்றும் அமைந்த சூழல் பிரிந்தார்க்குத் துயரைப் பெருக்குதலின் இரங்கல் நெய்தல் ஆயது.

கொஞ்சம் என்பது சிறிது என்னும் பொருளது. சிறிதளவும் சிறிது நேரமும் கொஞ்சம் எனப்படுதல் வழக்கம். கொஞ்சுதல் என்பது மகிழ்வுப் பொருளும் தரும். "கெஞ்சும் கொஞ்சும்" என்பது திருப்புகழ். **கொஞ்சுதலாம் மகிழ்தல், அளவால் குறைந்திருத்தலே நெஞ்ச நிறைவாழ்வு** என்பதை வெளிப்படுத்தும். இச் சொல் வழக்கு ஆழமிக்க அகப் பொருள் இலக்கண வழிப்பட்டதாகும்.

**கூடியிருத்தலுக்குக் குளிர்கால யாமப் பொழுதை மட்டுமே குறித்து, எஞ்சிய காலமும் பொழுது மெல்லாம் பிரிதலும், பிரிதல் நிமித்தமுமாக அமைத்துக் கொண்ட நலவாழ்வு முறை நானிலம் போற்றத்தக்கதும், கொண்டு ஒழுகத் தக்கதுமாம்.**

**ஊடல்**

இனி ஊடல் என்னும் மருதத்தின் பொருள் தான் என்ன?

உடலுக்கு ஒரு பெயர் 'கூடு' என்பது. "கூடு விட்டு இங்கு ஆவிதான் போன பின்பு" என்பதில் வரும் கூடு உடல் இல்லையா? குடம்பை தனித் தொழியப் புள் பறந்தற்றே என்பதில் வரும் குடம்பையும் கூடு தானே!

**கூடும் கூடும்** (உடலும் உடலும்) **ஒன்றுதல் கூடல். கூடும் கூடும் கூடாமல் ஓர் எண்ணம் ஊடு தடுத்திருத்தல் ஊடல்.**

ஆதலால் உடனிருந்தும் பிரிதல் ஊடல் ஆகின்றது. ஆகவே அகவாழ்வில் நம் முந்தையர் கொண்டிருந்த தெளிந்த கருத்தும் அறிவுறுத்தமும் பாராட்டுக்கு உரியவையாம்.

இவ் வகையால், உரிப் பொருள் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என முறைப்படுத்தப்பட்டன.

## நிமித்தம்

புணர்தல் எனின் வருதல், காணல், உரையாடல், பிரிதல் என்பனவும் நிகழ்வன தாமே. இவை, புணர்தல் நிமித்தம் எனப்பட்டன. இவ்வாறே

*பிரிதல் முதலியனவும் நிமித்தம் உடையவையாய்ப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்பவை முதலாகப் பெயரீடு பெற்றன. நிமித்தம் என்பது சார்பாவது.*

**பெயர்**

*இனி உரிப் பொருளுக்கு உரியார் எவர்? அவர் பெயர் என்ன?*

***தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்***

***பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்***

***சோழன் கரிகால் பெருவளத்தான்***

***கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன்***

***வல்வில் ஓரி***

***வையாவிக் கோப் பெரும் பேகன்***

***பெருங்கோப் பெண்டு***

***கண்ணகி***

*-இவ்வாறெல்லாம் வருவன பாடுபுகழ் பெற்ற பெயர்கள். இன்னாரை இன்னார் பாடியது என்னும் குறிப்பும் திணையும் துறையும் உடையவை. தொண்டைமானுழைத் தூது சென்ற ஔவையார் பாட்டு, சேரமான் கணைக்கால் இரும் பொறை உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு என்னும் இன்ன வரலாறும் உடையவை. இப்படிப் பெயர்களோ ஊர்க் குறிப்போ இல்லாத பாடல்கள் அகப் பாடல்கள்.*

***பாடும் பொருளோ, உள்ளத்தே கொண்டொழுகும் உணர்வுப் பொருள். அதனை உடையார் இவரெனக் கூறின் என்னாம்; புறப்பொருள் ஆகிவிடுமே!***

*ஆதலால்,*

*"மக்கள் நுதலிய அகனைந் திணையும்*
*சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்"*

*என்பது ஆணை மொழியாயிற்று (1000). அவர் பெயரை எங்கே கூறலாம்? எனின்,*

*"புறத்திணை மருங்கின் பொருந்துதல் அல்லது*
*அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே"*

*என்பது வரையறையான விடையாயிற்று (1001).*

*இவ்வாறு பெயர் கூறல் ஆகாது என்பது மட்டுமில்லை. மறைமுக மாகவோ குறிப்பாகவோ கூட இன்னார் என அறிதற்குரியவை அகப் பாடலில் இடம்பெறல் ஆகாது. அப்படி ஒரு பாட்டுடைத் தலைவன்*

இன்னார் என அறியப்படுவன் ஆயின், அவனைப் பற்றிய அப் பாடலை, அகப்பாடல் வகையில் இருந்து நீக்கிப் புறப்பாடல் வகையில் சேர்ப்பதைத் தொகுப்பாளர் கொண்டனர் என்பதை அறியும் போது, அந் நெறி வழிவழியாகப் போற்றப்பட்டமை விளங்கும்.

இனி, அகப் பொருளில் இடம் பெறுவார்க்கு என்ன பெயர்தான் வைப்பது எனின், **தலைவன் தலைவி, கிழவன் கிழத்தி, ஒருவன் ஒருத்தி, தோழன் தோழி, செவிலி நற்றாய் இன்னவான உரிமைப் பெயர்களே வரும். அன்றியும் ஆயர், வேட்டுவர், கோவலர், எயினர், உழவர், கிழார், நுளையர், பரதவர்** என்னும் வினைநிலைப் பெயர்களும் வரும்

*"பெயரும் வினையுமென்று ஆயிரு வகைய*
*திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே"*

எனச் சுட்டுகிறார் (966).

அகனைந்திணைக்கும் உரிமைப் பட்டவரே கிழவன், கிழத்தி என்றும், தலைவன் தலைவி என்றும் வழங்கப்பட்டனர். இக் கிழமை பின்னே நிலவுரிமைக்கும் குடிமைத் தலைமைக்கும் பெயராயிற்று. கோவூர் கிழார், முதிரத்துக் கிழவன், நிலக் கிழார், பெருநிலக் கிழார் என்னும் பெயர்கள் ஏட்டிலும் நாட்டிலும் காண்பவையும் கேட்பவையும்.

*"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து*
*இல்லாளின் ஊடி விடும்"*

என்பது **மனைக் கிழமை, நிலக் கிழமை என்பவற்றின் இணைப்பாகும்.**

**ஆகார் சிலர்**

அகனைந்திணைக்குத் தக்கவர் அல்லர் எனச் சிலர் அந் நாளில் ஒதுக்கப்பட்டும் இருந்தனர். தம் முரிமைப்பட்டு வாழ முடியாதவராய்ப் பிறர்க்கு அடிமைப்பட்டுக் கிடந்தவர் அவருள் ஒருவர். **அடிமைப்பட்டுக் கிடப்பானுக்கு உரிமை இன்பவாழ்வு கொள்ள வாயாது; வாய்ப்பினும் தன்னோடு தன்னையடுத்தவரையும் அடிமையில் கிடக்கவே வைப்பன்.** ஆதலால் அவரைப் பாடுதற் பொருளாகப் புலமையர் கொண்டிலர்.

ஒருத்தி ஒருவனை விரும்புகிறாள், அவனிடம் தன் விருப்பையும் கூறுகிறாள். அவனோ, நீங்கள் உங்கள் வாழ்வைத் தீர்மானிக்கலாம். ஆனால் நானோ எனக்குச் சம்பளம் தருபவர் சொற்படியே என் வாழ்வை அமைக்க முடியும் என்கிறான். அவன் வாமுரிமையனா?

ஏவுவார் ஏவுவதை அன்றித் தாமே எண்ணிச் செய்யாதவரும் உண்டு. அவர் செயல்புரிதலில் வல்லவராக இருப்பினும், எண்ணிச் செய்யும் திறம் இல்லாதராதலின் அவரும் உரிமை இன்ப வாழ்வுக்கு உரியவர் ஆகார்

ஆயினர். இனி, ஏவுவதைச் செய்தலும் இல்லாராய்ப் பிறரைத் தாம் ஏவித் தம் கடனைத் தட்டிக் கழிப்பாரும் உளர். அத்தகையரும் அன்பின் ஐந்திணையைப் பேணிக் கொள்வார் அல்லர். ஆதலால், இத்தகையர் அகத்திணைத் தலைமைக்கு உரியவர் அல்லர். தள்ளத் தக்கவர் ஆவர் எனப்பட்டனர்.

ஏனெனில் பாடு பொருட் சிறப்புப் போலவே, பாடப்படுவார் சிறப்பும் கருதியதே அகப்பாட்டு.

அகத்திணைக்குத் தக்காராகக் கருதப்படாத இவர் அன்பின் ஐந்திணைகளுக்கு முன்னாம் கைக்கிளைக்கும் பின்னாம் பெருந்திணைக் கும் உரியர் என்று கூறுவதும் உரைமரபாக உள்ளது. **இத்தகையர் இன்ப வாழ்வைப் புறத்திணைக்கண் சார்த்திக் காண்பதை அன்றி, அகத் திணைக்கண் சார்த்திக் காணக் கூடாது எனல் பொருந்துமோ என எண்ண வேண்டியுளது.**

*"அடியோர் பாங்கிலும் வினைவலர் பாங்கிலும்*
*கடிவரை இலபுறத்து என்மனார் புலவர்"*

என்பது நூற்பா (969). கடிவரை இல - நீக்குதல் இல்லை.

இதனை,

*"புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது*
*அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே"*

என்பதனொடு இணைத்து நோக்கலாம் (1001).

**பிரிவார் தகவு**

இன்பத்தை மேம்படுத்துவதாகிய பிரிவு எவ்வெவ் வகையால் ஏற்படும், அப் பிரிவிற் குரியவர் தகுதி என்ன என்பதை அடுத்தே குறிப்பிடு கிறார் ஆசிரியர். கற்பியலில் மேல்விளக்கமும் தருகிறார் (1133 - 1137).

பாடு புகழ் பெறுவோர் தக்கோர் ஆதலின், அவர்தம் அறக்கடமை நாட்டுக்கடமை பொருட்கடமை புலப்படும் வகையால், அவர்கள் பிரிவு வகைகள் இவையெனக் கூறுகிறார்.

*"ஓதல் பகையே தூதிவை பிரிவே"*

என்றும் (971)

*"பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே"*

என்றும் (979) வருவன அவை.

ஓதல் பிரிவு என்பது, இளமைக் கல்வி பெறுவாரை அன்று; கற்றுத் துறை வல்லாராய் மேனிலைக் கல்வி பெறச் செல்வாரைக் குறித்தது.

*பகைப் பிரிவாவது, நாட்டுக்குப் பகைவரால் உண்டாகிய கேட்டை ஒழிக்கக் களஞ் செல்லும் பிரிவு.*

*தூதாவது, வழிமொழிதல்; ஆள்வோரால் சொல்லப்பட்டது எதுவோ அதனை மறவாது மாறாது சொல்லும் வகையால் சொல்லி நலம் செய்தலாகும்.*

*பொருள் வயின் பிரிதல், குடிமை நலம் காக்கவும், அறப்பணி புரியவும் வேண்டும் ஆக்கம் தேடற்குப் பிரிதலாகும்.*

*மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னைத் தமிழர் கொண்ட இப் பிரிவு வகைகளை அறிவியல் வளர்ந்த இந் நாளின் பிரிவுகளொடு எண்ணிப் பார்ப்பின் புதுமை ஏதேனும் உண்டோ?*

***அயல் மாநிலம் செல்வாரும், அயல் நாடு செல்வாரும் எண்ணிப் பார்க்கலாமே!***

### தெரிவு

*இந் நாளில் அயலகம் செல்வதற்குத் தக்கார் எனத் தெரிவு செய்யப்படுவார் இலரா? இவ்வாறே* **இப்பிரிவுகளுக்குத் தக்காராகத் தெரிவு செய்தமை அறிய வாய்க்கின்றது**.

*பகைதணி வினைக்குச் செல்வார் அரசின் ஆணை வழிதானே செல்வர்!*

*தூது என்பதும் அரசின் ஆணை வழி நிகழ்வதுதானே!*

*அவ்வாறே ஓதல் என்பதும் அரசின் ஆணை வழிப்பட்டது; ஆகலின், உடன் எண்ணினார். இம் மூவருள், ஓதற்குச் செல்வாரையும் தூதிற்குச் செல்வாரையும் தனித்து நோக்கி விடுத்தலை ஆள்வோர் கடமையாகக் கொண்டனர்.*

*"மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்" ஆதலாலும், "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" ஆதலாலும், ஆள்வோன் அத் துறைகளில் மேம்பட்டு நிற்பாரைக் கண்டு அத்தொழிற்கு ஏவுவான். அவ்வாறு காண்பனோ எனின்,*

> *"வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்*
> *ஊறெய்தி உள்ளப் படும்"* (665)

*என்பது வள்ளுவம்.*

*ஆதலால் தக்கோனைத் தெரிந்து ஏவுதல் அவற்கு இயல்பாகும்.*

*மற்றும், "ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும் தெற்றென்க மன்னவன் கண்" என்பதால் ஒற்றறிதல் வகையாலும் காண்பானாம் (581).*

ஓதற் சிறப்பாலும் தூதுத்திற மாண்பாலும் உயர்ந்து விளங்குவார் எவரோ அவரே அதற்குரியராக விடுக்கப்படுவர். இதனால் தொல்காப்பியர்,

*"அவற்றுள்,*
*ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன"* (972)

என்றார்.

இனிப் பகைதணிவினையாம் படைக்குத் தெரிவும் பயிற்சியும் முதன்மையாகக் கருதிப் பேணப்பட்டமையாலும், அவர் அணி அணியாகச் செல்வார் ஆதலாலும், அவரை இவரோடு எண்ணினார் அல்லர்.

அன்றியும் அவர் செல்லுதலும், தான் தேர்ந்த தலைவரொடு அவர் செல்லுதலும் தான் செல்வதாகவே ஆகும் ஆதலால் அவரைத் தனித்துக் கூறினார் அல்லர் (978).

இனிப் பொருட் பிரிவுக்குரியர் இருவகையார். அவர் அரசின் சார்பில் பொருட் பொறுப்பினராய் வரிதண்டுவாரும் அறங்காப்பாருமாக இருப்பார் ஒருவகையர். மற்றொரு வகையர் குடிமை நலம் காத்தற்குப் பொருட் பிரிவு மேற்கொள்வார் வரைவு இடைவைத்துப் பொருள்வயின் பிரிதலும் குடிமை நலம் காக்கும் பொருட் பிரிவேயாம்.

இவருள் முன்னவர் முல்லை குறிஞ்சி முதலாகிய நானிலத் தலைவரும் ஆவர். ஆதலால்,

*"மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே"* (975)

என்றார். அவர் மன்னர் கடமை என்னவோ அதனை அவர் சார்பாக இருந்து செய்கின்ற செயல் வீறு உடையவராம். அதனால் அவர்,

*"மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப"*

எனச் சொல்லப்பட்டார் (976).

*"ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தாடைங்காப்*
*பேதையிற் பேதையார் இல்"*

எனப்படுபவர் போன்றாராக இல்லாமல் ஓதி உணர்ந்து ஓதவல்லாராகத் திகழ்ந்த உயர்ந்தவர் வழியிலே நெறிமுறைகள் வகுத்துப் பரப்பப்பட்டன. அதனால்

*"உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான" (977)*

என்றார் தொல்காப்பியர்.

*"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட் டாக லான"* (1592)

என்று மரபியலில் கூறுவது இவண் நோக்கத்தக்கதாகும்.

### கடற்பிரிவு

இவண் குறிக்கப்பட்டோர் கடல் கடந்து அயல் நாட்டுக்குப் பிரிதலும் உண்டு. அவர் பிரிந்து செல்லுங்கால் தம்மொடு மகளிரை அழைத்துச் சென்றனரோ எனின் இல்லை என்பதை,

*"முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை"* (980)

என்று உரைத்தார். முந்நீர்வழக்கம் = கடற்செலவு.

**ஆடவர் மகளிரோடு கடல் கடந்து சென்றால், சென்ற நாட்டி லேயே தங்கிவிடக் கூடும் என்றும், மகளிர் இவண் இருப்பின் அவரை நாடி ஆடவர் மீள்வர் என்றும், மண்ணை மறவா நிலையைப் போற்றும் வகையால் இம் முறையை வகுத்தனர் என்றும் கொள்ளலாம்.**

### மடலேறுதல்

உயிராகக் காதலித்த ஒருத்தியை மணக்க, அவள் பெற்றோர் தடையாக இருத்தலும் ஏற்பட்டுளது. தலைவியால் விரும்பப்படாத ஒருவனின் உற்றார் உறவினர் மணம்பேச வருதலும் நேர்ந்துளது. அந் நிலையில், காதலித்தவன் தன் காதலை ஊரறியச் செய்தேனும் ஊரவர் வழியாக மணமுடிக்க எண்ணுதலும் வழக்கம். அவ் வெண்ண முதிர்வே '**மடலேறுதல்**' என்னும் முறையாயிற்று.

பனங்கருக்கினை எடுத்துக் குதிரைபோல் செய்து அதில் ஏறி அமர்ந்து, உண்ணாதும் பருகாதும் பாடுகிடந்து, காதலித்த தலைவியை அடையும் முயற்சியே இஃதாகும்.

அரம்பம் போன்ற பனங்கருக்கால் உடலைக் கிழித்துக் குருதி சொட்ட உயிரையும் பொருட்டாக எண்ணாமல் மணக்க விரும்புவானைக் கண்டு, தலைவியின் பெற்றோர் உற்றோர் இரக்கம் கொள்ளலும், சான்றோர் எடுத்துரைத்தலும் மணம் கூடலும் நேரும்.

இவ்வாறு ஆடவர் மடலேறல் உண்டு எனினும், மகளிர் மடலேறும் வழக்கம் இல்லை. இதனை,

*"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்*
*பொற்புடை நெறிமை இன்மை யான"*

என்கிறார் (981). எத்திணை மருங்கினும் என்பது எந் நிலத்தும். "கடலன்ன காம முழந்தும் மடலேறாப் பெண்ணிற் பெருந்தக்க தில்" என்பதை இவண் எண்ணலாம் (குறள். 1137).

ஆடவரினும் மகளிர் அடக்கமும் அறிவும் அமைவுமிக்காராக இருத்தலால், அவர் மடலேறுதல் அளவும் செல்லார் என்பதை,

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான"

என்று ஆசிரியர் கூறுவதால் அறியலாம் (1155).

எண்ணிப் பார்ப்பின், கால இட தொழில் நிலைகள் மாறுபட்ட இக் கால நிலையிலும், இவ்வுளவியல் மாறிற்றில்லை என்பதை உணர முடியும். ஆடவர் வலிந்து மணங் கோடலை அன்றி, மகளிர் வலிந்து மணங்கோடல் செய்தி நடைமுறையில் இல்லாமை எவரும் அறிந்ததே.

**கூற்று**

அகவாழ்வில் இடம்பெறுவார் பேசும் இடம், பேச்சு என்பவற்றை முறையாகக் கூறும் ஆசிரியர், நற்றாய், செவிலித்தாய், தோழி, கண்டோர், தலைவன், பிறர் என வகுத்துக் கொள்கிறார். அவர்கள் பேசுவது கூற்று எனப்படும். கூற்று = கூறுவது.

கூற்று நிகழும் சூழல் ஒன்று வேண்டுமே. அச் சூழல், 'கொண்டு தலைக்கழிதல்', 'உடன் போக்கு' எனப்படுகிறது. அது இந் நாளில், 'கூட்டிக் கொண்டு போதல்' எனப்படுகிறது. 'ஓடிப்போதல்' எனப் பழிக்கவும் படுகிறது.

முன்னாள் வாழ்வொடு எண்ணின், பழித்தற்கு இடமில்லை என்பதொடு, அந் நாள் மாந்தர் இதனை ஏற்றுப் போற்றிய சிறப்பும் படிப்பினையாக நமக்கு அமையும்.

ஒரு தலைவனும் தலைவியும் உடன்போக்குக் கொண்ட நிலையில், தலைவியைப் பெற்றவளாகிய நற்றாய் தனித்து வருந்துதலும் பேசுதலும் முதன்மை இடம் பெறுகின்றன.

**தாய்**

தலைவனும் தலைவியும் உடன்போக்குக் கொள்ளும் போது, நற்றாய், தன்னையும் தலைவனையும் தன் மகளையும் எண்ணிப் புலம்பு வாள், குறிபார்த்தல் தெய்வம் வேண்டல் என்பன புரிவாள், நன்மையாவதும், தீமையாவதும் அஞ்சத்தக்கதும் ஆகியவற்றைக் கூறிவருந்துவாள். தோழி யிடத்திலும் கண்டோர் இடத்திலும் வினாவுவாள் (982).

**செவிலி**

தாய் ஊரின் எல்லை வரை சென்று தேடுவாள். செவிலித் தாய் ஊரைத் தாண்டியும், வழிநடந்தும் தேடுவாள் (983).

ஊரைவிட்டுத் தலைவன் தலைவியர் போகிவிடாமல் ஊரின் அயலிடத்தே இருப்பினும், அதுவும் பிரிவாகவே கொள்ளப்படும். இதனையும் இவ்விடத்தே குறிப்பிடுகிறார் (984) ஆசிரியர்.

**தோழி**

*தான் வேறு தலைவி வேறு என்றில்லாமல் ஒன்றியவள் தோழி. தலைவியைத் தலைவன் உடன் கொண்டு போதலே நலம் என்பதைத் தான் உணர்தலால் தலைவனிடம் எடுத்துரைப்பாள்; உடன்போக்கு ஏற்ற போது தலைவிக்கு நல்லுரை சொல்லுவாள்; உறவைப் பிரிதலால் உண்டாகும் தன் வருத்தமும் உரைப்பாள்; உடன் போக்கினரை மீட்டு அழைக்கச் செல்லும் தன் தாயைத் தடுத்து மீளுமாறு சொல்வாள்; மகளின் பிரிவை அறிந்து வருந்தும் பெற்ற தாய்க்குத், தலைவி மாறா அன்பால் பிரிந்தமை உரைத்துத் தேற்றுவாள் (985). இவை அவள் கூற்று நிகழும் இடங்கள்.*

**கண்டோர்**

*வழிச் செல்வாரைக் 'கண்டோர்', வாளா பார்த்துக் கொண்டு செல்லாமல் உரையாடும் வகையையும் எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.*

*பொழுது போனமை, வழியின் தொலைவு, இடையே உண்டாம் அச்சம் என்பவற்றைக் கண்டோர், உடன் போக்கினர்க்கு உரைப்பர்; செல்லும் ஊர்த் தொலைவும் தம் ஊர் நெருக்கமும் கூறித் தம் ஊர்க்கு அழைப்பர்; உடன் போவோர் நிலைக்காக வருந்தியுரைத்து அவரூர்க்குத் திரும்பிச் செல்லுமாறும் சொல்லுவர்; அவரைத் தேடிவரும் செவிலியைக் கண்டு தேற்றித் திரும்புமாறு வேண்டுவர்; இவ்வாறு கண்டோர் உரை அமையும் (986).*

*தலைவன் கூற்றுகளை மேலும் விரிவாகச் சொல்கிறார் (987).*

**உள்பொருள்**

*நிகழ்ச்சி; அந் நிகழ்ச்சி உறுப்பினர்; உறுப்பினர் உரைக்கும் உரை - இவற்றை இவ்வகத்திணையியலில் மட்டுமன்றிப் பின்னே வரும் களவியல், கற்பியல் ஆகியவற்றிலும் விரிவாகக் கூறுகிறார்.*

*இவை நாடகக் காட்சிகள் போன்றவை அல்லவா!*

*நாடகம் என்பது நாட்டில் நிகழாததா?*

*நிகழாத ஒன்று அல்லது இட்டுக் கட்டிய ஒன்று ஏற்றுக் கொள்ளவும் படாது; பயன் படவும் படாது.*

***ஓரிடத்து ஒருகாலத்து ஒருசிலரிடத்து நிகழப் பெறுவனவே ஏற்ற புனைவுவகையால் நாடகமாகவும் காப்பியமாகவும் அமை கின்றனவாம். எங்கும் என்றும் எவரிடத்தும் காணலாகாப் பொருள் பற்றிப் பேசின், இல்பொருளாக ஏற்பாரின்றி ஒழியும்.***

*தொல்காப்பியர்க்கு முற்பட விளங்கிய இலக்கிய இலக்கண நூல் வழக்குகளும், அவர் கண்ட உலகியல் வழக்குகளும், ஒருங்கே தொகுக்கப் பட்டுத் தொகையாக்கியதே அவர் வழங்கிய வாழ்வியல் இலக்கணமாகும்.*

**சான்றுகள்**

*உடன்போக்கு, அறமே என நினைந்த ஒரு தாயுள்ளம் கூறுகின்றது.*

*"மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும்*
*உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்*
*சுரநனி இனிய ஆகுக தில்ல;*
*அறநெறி இதுவெனத் தெளிந்தஎன்,*
*பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே"* (ஐங். 371)

"மழைபொழிந்து வழிகுளிரட்டும்; அறம் இதுவெனத் தெளிந்த என்மகள் சென்ற இடம்" என்னும் இது, பெற்றவள் உள்ளம் பேசுவது *இல்லையா?*

*தலைவியைத் தலைவனொடு விடுக்கும் தோழி,*

*"இவளே நின்னலது இலளே; யாயும்*
*குவளை உண்கண் இவளலது இலளே;*
*யானும் ஆயிடை யேனே;*
*மாமலை நாட மறவா தீமே!"*

*என்பது, குறிய தொடர்களில், எத்துணைப் பெரிய நேய உரை!*

*"இதுநும் ஊரே; யாவரும் கேளிர்;*
*பொதுவறு சிறப்பின் வதுவையும் காண்டும்;*
*ஈன்றோர் எய்தாச் செய்தவம்*
*யாம் பெற் றனமால்; மீண்டனை சென்மே"*

*கண்டோர், தலைவன் தலைவியர்க்கு உரைக்கும் இவ்வுரை, எத்தகு கனிவும் பெருமிதமும் தாங்குதலும் உடையதாகத் திகழ்கின்றது!*

"இது உங்கள் ஊர்; இருப்பவர் எல்லாம் உம் உறவினர்; சிறப்புற மணம் நிகழ்த்துவேம்; உங்கள் பெற்றவர் பெறாப் பேறு எங்களுக்கு வாய்த்தது; வருக" என்னும் **இவ்வுரை தாய்மையுள்ளம் தெய்வவுள்ள மாகிச் சுரந்த சுரப்பு அல்லவோ!**

*உடன்போக்குக்கு ஓர் உள்ளம் உடன்வந்து வழிகாட்டுகின்றதே:*

*"எங்களூர் இவ்வூர்; இதுவொழிந்தால் வில்வேடர்*
*தங்களூர்; வேறில்லை தாமுமூர் - திங்களூர்*
*நானும் ஒருதுணையா நாளைப்போ தும்மிந்த*
*மானும் நடைமெலிந்தாள் வந்து"* (கிளவித்தெளிவு)

தொல்காப்பியர் வழங்கிய கூற்றுவகை வெள்ளப் பெருக்கே, *சங்கத்தார் அகப்பாடல்களும், பிற்காலக் கோவை முதலிய பாடல் களுமாம்.*

அகவலும் வெண்பாவும் கட்டளைக் கலியும் பாவினமும் இக் கூற்றுவகையை விளக்குவனவாகப் பிற்காலத்தில் விளங்கினும், தொல் காப்பியர் நாளில் கலிப்பாவும் பரிபாவும் பெருவரவாகக் கொண்டிருந்தன. இவற்றை யெல்லாம் வடித்தெடுத்த பாகாக,

*"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
*பாடல் சான்ற புலனெறி வழக்கம்*
*கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்*
*உரிய தாகும் என்மனார் புலவர்"*

என நூற்பா கிளர்ந்ததாம் (999).

**நினைத்தல்**

பிரிவு, பிரிவு வகைக் கூற்று என்பவற்றை உரைத்த ஆசிரியர் அது தொடர்பான வேறு சில குறிப்புகளையும் வழங்குகிறார்.

நினைத்தலும் செய்தலொடு ஒக்கும் என்பது ஓர் உயர்ந்த உளவியல் ஒழுக்கம். அவ் வொழுக்கம் விளங்கும் வகையால்,

*"நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்"*

என்று கூறி,

*"நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே"*

என்கிறார்.

"பிரிவுக்காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள், தலைவன் தலைவியால் நினைத்தற்கு உரியவையும் ஆகும்" என்பதுடன், "நிகழ்ந்த அது நெஞ்சில் நிலைபெற்றிருத்தலும் அப் பிரிவாகிய பாலைத் திணையே ஆகும்" என்பதும் இவற்றின் பொருள்.

இவ்வகத்திணையில் இணைக்கத் தக்கவை எவையும் இல்லையோ எனின், **மரபு நிலை நீங்கா மாட்சியொடு இணைக்கும் பொருளை இணைத்தலும் ஏற்கக் கூடியதே** என்கிறார் (991).

**உள்ளுறை**

சிந்திக்க வைக்கும் செய்தி எதுவோ அது செயலூக்கியாகத் திகழுதல் உறுதி. அதனால், அகத்திணை உரையாடல்களில் ஓர் அரிய உத்தியை வகுத்து, நூன் மரபாகப் போற்றினர். அஃது **உள்ளுறை உவமை** என்பது.

இயல்பாக வழங்கும் உவமையொடு, இவ்வுள்ளுறை உவமையும் வரச் செய்யுள் இயற்றல் சிறக்கும் அகப்பொருளுக்கு என்று கூறும் அவர், அதன் இலக்கணத்தை,

*"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள்முடிகென*
*உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமை"*

என்கிறார் (994).

"அலை கொழித்துத் திரட்டிய மணல் மேட்டை அசையும் துகிலைப் போலக் காற்றுத் தூற்றும் கடற்கரைத் தலைவனே" என்று குறிப்பிடுவதன் வாயிலாகத் தலைவன் தலைவியர் சந்திப்பு **ஊரவர் அறிந்து தூற்றப்படு பொருளாகியமை**யைத் தோழி உணர்த்துகிறாள் தலைவனுக்கு. இதன் உட்கருத்து **'காலம் நீட்டாது உடனே மணந்து கொள்'** என்று ஏவுதலாகும். இதனை,

*"முழங்குதிரை கொழீஇய மூரி எக்கர்*
*நுணங்குதுகில் நுடக்கம் போலக் கணங்கொள*
*ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப"*

என்கிறாள் (நற்.15).

**உள்ளகத்துப் பொருளாகிய அகம், உவமை வழியால்கூட வெளிப்படல் சிறப்பன்று என்று கொண்ட உயர்நெறியே இவ் வுள்ளுறை எனல் சாலும்.** இதன்மேல் இறைச்சி என்பதொன்றும் உண்டு. அதனை உவமையியல் முதலியவற்றில் விரியக் கூறுகிறார் ஆசிரியர்.

கருப்பொருளை அடியாகக் கொண்டு உள்ளுறை தோன்றும் என்னும் ஆசிரியர் **'தெய்வம்'** என்னும் கருப்பொருள் உள்ளுறையில் இடம் பெறக் கூடாது என்று வரம்பு காட்டுகிறார்.

**புலப்பாடு இல்லாத ஒன்றைக் காட்சியளவால் விளக்கிப் புலப்படுத்தலே முறை. அவ்வாறு காட்சி வகையால் காட்ட முடியாத ஒன்றால், புலப்படுத்த எண்ணல் புலப்பாடாக்காது என்பதால் விலக்கினார் எனத் தெளியலாம்.**

### எழுதிணை

ஏழுதிணைகளாகக் கூற எடுத்துக் கொண்டவற்றுள் முந்து நிற்கும் கைக்கிளை இலக்கணமும், பிந்து நிற்கும் பெருந்திணை இலக்கணமும் இயல் நிறைவில் கூறி அமைகிறார்.

**மக்கள் எழுவர் என்றால், மூத்தாரும் இளையாரும் ஒப்ப 'மக்கள்' எனவே படுவர். அது போல், அகத்திணை ஏழு எனின், முன்னும் பின்னுமாகிய இவையும் அகத்திணைகளேயாம். புறத் திணையொடு பொருந்துவன ஆகா. அகம் புறம் எனல் இரண்டே யன்றி அகப்புறம் புறப்புறம் என்பன பொருந்தாப் பிற் பிரிவாயவை.**

**இளையராய் இருப்பார் விளையாட்டுக் காதலும், வேட்கை மிக அமைந்தார் அளவொடும் அமையாராய்க் கொள்ளும் பெருவிருப்பும், முறையே இக் கைக்கிளை, பெருந்திணை எனலாம்.**

**கைக்கிளை**

*"காமம் சாலா இளமை யோள்வயின்*
*ஏமம் சாலா இடும்பை எய்தி*
*நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்*
*தன்னொடும் அவனொடும் தருக்கிய புணர்த்துச்*
*சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்*
*புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"*

என்பது முன்னதன் இலக்கணம் (996).

"பருவம் அடையாத ஒருத்தி; அவள் பருவம் அடைந்தவளா அடையாதவளா என்பதை அறிந்து கொள்ளாத இளையவன் ஒருவன்; ஆனால், அவளால் தாங்காத் துயர் தான் கொள்வதாகக் கூறுகிறான். தன்னைப் புரிந்து கொண்டு நடத்தலால் தனக்கும் அவளுக்கும் ஏற்படும் இன்பத்தையும் இல்லாக்கால் இருவர்க்கும் ஏற்படும் துன்பத்தையும் தானே பெருமிதமாகக் கூறுகிறான்; அவளிடமிருந்து மறுமொழி என எதுவும் அவன் பெற்றான் அல்லன்; எனினும், தானே சொல்லி அதனால் இன்பப் பட்டுக் கொள்கிறான்; இதுவே கைக்கிளை எனப்படுவது" என்பது இதன்பொருள்.

இந் நிலை, பால் பிரிவு இல்லாமல் பயிலும் இளம் பள்ளிகளிலும், இளையோர் பணிபுரியும் தொழிலகங்களிலும், நெருங்கி உறையும் குடியிருப்புகளிலும் பெருக நிகழ்தலும் **சொல்லுறவாகத் தொடங்கி நல்லுறவாகப் பின்னே திகழ்தலும் காண்பார் கைக்கிளையாவது காதல் தொடக்கம் எனவே உளவியற்படி கொள்வர். உரிய வழிகாட்டலால் உயரிய வாழ்வுக்கு அடித்தளம் ஆக்குவர்.**

**பெருந்திணை**

இனிப் பெருந்திணை என்பதை எண்ணுவோம். ஆசிரியர் பெருந்திணையை,

*"ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்*
*தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்*
*மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்*
*செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"*

என்கிறார்.

மடலேறுதல், இளமை நீங்கியபின் விரும்புதல், தெளிவற்ற காமமிகை, மிக்க காமத்தால் செய்யும் துணிவுச் செயல் ஆகிய நான்கும் பெருந்திணை எனப்படுபவை என்பது இதன் பொருளாம்.

இத் திணையை அகத்தொடு முரணா வகையில் ஆய்ந்த அறிஞர் வ. சுப. மாணிக்கனார்,

"ஐந்திணையாவது அளவுக் காதல்; **பெருந் திணையாவது மிகுதிக்காதல். பெரும் என்ற அடை அளவினும் மிகுதிப்பாட்டை மிகையைக் குறிக்கின்றது.** பெருமூச்சு, பெருங்காற்று, பெருமழை, பெருமிதம், பெரும்பேச்சு, பெருங்காஞ்சி, பெருவஞ்சி என்ற தொடர்களை உடன் நோக்குக" என்பது இவண் கொள்ளத் தக்கது.

"களவை நாணின்றி வெளிப்படுத்திக் கற்பு ஆக்கினமையின் (ஏறியமடல் திறம்) ஐந்திணைப் படாது பெருந்திணைப்பட்டது" என்றும், "இல்வாழ்க்கையில் காதல் நுகர்ச்சிக்கு ஒத்த மதிப்புக் கொடாது, இளமையை வேண்டுமளவு நுகராது, பொருள் முதலாயவற்றில் நாட்டம் கொண்டு ஒழுகுவது மிகையாதலின் இளமைதீர்திறம் பெருந்திணை யாயிற்று" என்றும், "கற்பு போய்வரும் பொருளில்லை. நாணோ ஒழுக் கத்தை விடாது அரிதில் போய்வரும் தன்மையது. நாண்விட்டமையால், காமத்து மிகுதிறத்தால் பெருந்திணையாயிற்று" என்றும், "களவுத் தலைவி மன்னரின் விழாவிற்கும் மகளிரின் துணங்கைக்கும் இல்லங் கடந்து புறப்பட்டே போய் விட்டாள். எண்ணம் சொல் அளவில் அமையாது இயங்கிய இச் செய்கை மிக்க காமத்து மிடல்" எனப்படும் என்றும் இவற்றின் முடிபையும் கூறுவார் மாணிக்கர். (தமிழ்க் காதல் - 234 - 257).

அகத்திணையை அடுத்து ஆசிரியர் புறத்திணை இயல் கூறினார். "முற்படக் கிளந்த எழுதிணை" (947) என்றவர், அவ்வெழுதிணைகளுக்கும் அமைந்த புறத்திணைகள் ஏழனையும் கூறுதலை நூன் முறையாகக் கொண்டார்.

நாம் எடுத்துக் கூறிய அகத்திணை தொடர்பான களவு, கற்பு எனக் கைகோள் இரண்டனையும், அவற்றின் தொடர்பான எஞ்சுதல் பொருள் கூறிய 'பொருளிய'லையும் கண்டு, புறத்திணை இயலைக் காணலாம். **பொருள் தொடர்ச்சி நோக்கியது இவ்வமைப்பாகும்.**

**களவு**

ஒருவர்க்கு உரிமையாம் பொருளை ஒருவர் கவர்ந்து கொள்ளுதல், உலகியலில் சொல்லப்படும் களவாகும். அக் களவைக் கடிந்து 'கள்ளாமை' (களவு செய்யக் கருதாமை) கூறும் வள்ளுவர்,

*"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்*
*கள்ளத்தால் கள்வேம் எனல்"*

என்பார். "உள்ளத்தால் உள்ளலும் (நினைத்தலும்) செய்தலோடு ஒக்கு" மென, உளமொன்றிய உரைவகுத்து ஆசிரியர் உளப் பாங்கை வெளிப்படுத்து

வார் உரையாசிரியர் பரிமேலழகர். அத்தகைய பழிக் களவல்லாமல் 'உயிர் தளிர்க்கச் செய்யும்' உள்ளங் கவர் களவு ஈதாகும். ஆதலால், வாழ்வியல் நெறிவகுத்த சான்றோர், ஒருவரை ஒருவர் உள்ளத்தால் கவர்ந்து ஒன்றுபடும் இயற்கை இயைபை, இயற்கைப் புணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி, கடவுட் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, ஒன்றிய பாலது ஆணை, காமக் கூட்டம், ஊழால் கூடும் கூட்டம் என்றெல்லாம் பெயரீடு செய்து பாராட்டினர். அன்றியும் களவு பிறர் அறியாவகையில் நிகழும் நிகழ்வு ஆதலால் '**மறை**' எனவும், '**மறைநெறி**' எனவும், '**மறையோர் ஆறு**' எனவும் குறியீடு செய்து நம் முந்தையர் வழங்கினர். இக் களவின் முதல் நிலையாம் காட்சியை,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையில்
**ஒத்த** கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே"

என்கிறார் தொல்காப்பியர் (1039).

"உலகியலில் ஒருவரோடு ஒருவரை இணைக்கின்ற சூழல் என ஒன்று உண்டு. அன்றி அவரை அவ்வாறு இணையச் செய்யாத சூழல் என்பதொன்றும் உண்டு. இவ் விரண்டனுள் இணையச் செய்யும் உயர்ந்த சூழல் வலிமையால், ஒத்த ஒருவனும் ஒருத்தியும் ஒருவரை ஒருவர் காணுதற்கு வாய்க்கும். அக் காட்சியால் ஏற்படும் உள்ளப் பதிவே, 'பால்' ஒன்றுதலாகிச் சிறக்கும். ஒத்த என்னும் நிலையில், சற்றே மிக்கோன் கிழவன் எனினும் நீக்குதற் குரியது இல்லை; ஏற்கத் தக்கதேயாம்" என்கிறார் (1039).

ஒத்த கிழவனும் கிழத்தியும் என்பதன் ஒப்பு எவை எனின்,

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த **ஒப்பினது வகையே**"

என்னும் பத்துவகை ஒப்புமாம் (1219).

இவ் வொப்புகளின் அருமை போற்றின் இல்லற வாழ்வு இனிதின் அமையும். **உள்ளப் பொருத்தம் இருவருக்கும் உண்டா என்பதை முதற்கண் காண வேண்டியிருக்க, இறுதிவரைகூடக் காண்பதும் கேட்பதும் இல்லை! ஆனால், பெயர் என்றும் நாள் கோள் என்றும் பார்க்க வேண்டாதன பொருத்தமெனப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, பெற்றோர் அறியாமல் தாமே மணந்து கொள்ளலும், வேற்றிடம் சென்று விடலும், தம்மைத் தாமே முடித்துக் கொள்ளலும் பெருக்கமாகி வருதல் கண்கூடு.**

*மணப்பெண் பார்க்க வருவார்; வீடு பார்க்கின்றனர்; வளம் பார்க்கின்றனர்; பெற்றோர் தமக்குள் பெண் ஆண் பிடித்தம் பற்றிப் பேசிக் கொள்கின்றனர்; உற்றார் உறவினர் பிடித்தமும் கருதுகின்றனர்.* **தப்பித் தவறி ஆணின் விருப்பைக் கேட்பாரும் பெண்ணின் விருப்பைக் கேட்டு நடத்தல் அருமையே! இந் நிலையில், இருமனம் ஒன்றி விட்டாரையும், சாதி சமய செல்வ நிலைகாட்டி ஒன்றிவிடாது தடுக்க முந்துவாரே பலராகின்றனர்.**

**போராடிப் பெற முடியாராய் அவர் 'முடிந்த பின்னர்' இவர் முட்டி என்ன? மோதி என்ன? சாதி சமயம் செல்வம் கணியம் கண்மூடி வெறி இவை இறந்தவரை மீட்டுத் தருமா?**

*தொல்காப்பியர் கூறிய பத்துப் பொருத்தம் பற்றி எண்ணிப் பாராமல், சோதிடன் சொல்லும் பத்துப் பொருத்தமும் பார்த்துப் பொருத்தமென முடித்து, மனப்பொருத்தம் இல்லாதார் வாழ்வு,* **வீட்டிலேயே விரும்பி உண்டாக்கி வைக்கப்பட்ட நிரய (நரக) வாழ்வு என எண்ணுவார் பெருகினால் அல்லாமல், இதற்குத் தீர்வு வாயாதாம்.**

*களவியலைக் கூறத் தொடங்கும் ஆசிரியர்,*

*"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்*
*காமக் கூட்டம் காணும் காலை*
*மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்*
*துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"*

*என்கிறார் (1038)*

*இதற்கு, "உயிர்களுக் கெல்லாம் பொதுவாகிய இன்பமும், அவ்வின்பத் துய்ப்பிற்குத் தேவையாம் பொருளும், அப் பொருள் தேடுதற்காம் அறமும் என்பவற்றை ஒருங்கே கொள்ளும் வகையில் அன்பொடு கூடும் கூட்டத்தின் தொடக்கமாகியது களவு எனப்படும் காமக் கூட்டம். அக் கூட்டத்தை ஆராயும் போது அது, மறையோர் மணமாகச் சொல்லப்படும் மணம் எட்டனுள் இசைத் துறை வல்லோராம் யாழோர் (கந்தவர்) மணத்தினை ஒப்பதாம்" எனல் பொருளாம்.*

*களவு என்பதை விளக்க உவமை கூறுவார்,* **அயல் நெறியாளர் மணவகையுள் ஒன்றனைச் சுட்டினார் என்பதும், அச் சுட்டுதலும் கண்முன் காணற்கியலாக் கற்பனைப் படைப்பராம் கந்தருவரைக் காட்டினார் என்பதும் உரிய பொருள் விளக்கத்திற்கோ, உரிய தமிழ் நெறிக்கோ உதவாததாம்.**

*தமிழ் கூறு நல்லுலக வழக்கும் செய்யுளும் நோக்கிக் கூறும் குறிக்கோள் உடையவர், விண்ணுலாவுவாராக அயலார் இட்டுக் கட்டிக்*

கூறுவாரை, உவமை காட்டுதல் ஏற்புடையதன்றாம். "உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" என்னும் **தம் உவமை இலக்கணத்திற்கு மாறாம்.**

மேலும் கண்டறியா ஒன்றைக் காட்டுதற்குக் கண்டறிந்த ஒன்றை ஒப்புக் காட்டுதலை யன்றிக் **கண்டறிந்த ஒன்றை விளக்கக் காணா ஒன்றைக் காட்டுதல்**, "ஆகாயப் பூ நாறிற்று என்புழிச் சூடக் கருதுவாரும் இன்றி மயங்கக் கூறினான் என்னும் குற்றத்தின் பாற்படும்" என்னும் உரைக்கே அது எடுத்துக்காட்டாகிவிடும்.

அயல்நெறி ஒன்றனை விளக்குவார், தமிழ் நெறியுள் இன்னது போல்வது என்பதே நூன்முறையாம். இந்நூற்பாவின் நான்காம் அடியாகிய,

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்"

என்னும் ஓரடியை விலக்கிக் காணின், எப்பொருள் குறைதலும் இன்றிக் **கண்ணேர் சான்றும் வாய்த்துச் சிறத்தல் கண் கூடு**. ஆதலால், இவ் வோரடி உரைகண்டார் காலத்திற்கு முற்படவே **மூலத்தின் இடையே சேர்க்கப்பட்ட பொருந்தாச் சேர்ப்பு** என்பது புலப்படும்.

இப்படிச் சேர்ப்பு உண்டோ எனின், இடைச் சேர்ப்பு, இடமாற்றம், நூற்பாச் செறிப்பு, நூற்பா விடுப்பு என்பனவும் தொல்காப்பியத்துள் உளவாதல் ஆய்வார் இயல்பாகக் காணக் கூடியவையாம்.

'வைசியன்' என்னும் ஒரு சொல் பழந்தமிழ் நூல்கள் எவற்றிலும் இடம் பெறாதது. பின்னூலார் தாமும் அயற் சொல்லென வெளிப்பட அறிந்தது. அச் சொல் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளமை (1578) மேற்போக்காக நோக்குவார்க்கும் சேர்மானத்தைக் காட்டிவிடத் தவறாது.

இவ்வாறாயின் இவ்வடி நீக்கிய நூற்பாவின் பொருள் என்ன? பொருந்தும் வகை என்ன? என்பவை தெளிவு பெறல் வேண்டும்.

"காமக் கூட்டம் என்பது, **பாடுதுறைவல்லாரும் யாழ்த்திற வோருமாகிய பாணர்தம் இணைப்பை ஒப்பது. அது பிரிவு என்பது அறியா வாழ்வினது என்பதாம்.**

பாணர் கூட்டம் என்றும் பிரிவறியாப் பெருமையது என்பது, பாணன் பாடினி அவர்தம் சுற்றம் என்பவை **மண் குடிசையில் இருப்பினும் காடுகரைகளில் திரியினும் மன்னர் மாளிகைக்குச் செல்லினும் ஒன்றாகவே இருந்ததைச் சங்கச் சான்றோர் பாடல்கள் தவறாமல் சொல்கின்றன. எந்தப் புலவரும் அப்படித் துணையொடும் சுற்றத்தொடும் சென்றமை அறியுமாறு இல்லை. தள்ளமுடியாச் சான்றைத் தள்ளி, இல்லாத அயற்சான்றைத் தேடி அலைதல் தேவை**

**அற்றதாம். தலைவன் தலைவியை 'யாழ' என்று விளிக்கும் வழக்கு பண்டு முதலே இன்று வரை தொடர்தல்** *(யாழ, ஏழ, ஏழா என வழங்கப் படுதல்)* **இதனொடும் எண்ணத் தக்கது.**

இனி இவ் வடியை விடுதலால் ஏதேனும் நூற்பாவிற்குப் பொருள் இடரோ விடுபாடோ ஏற்படுமோ எனின் அவையும் இல்லையாம். அன்றியும் **இரண்டு நூற்பாக்களுக்குப் பொருந்தவுரைத்த உரைகள் திருந்தும் வகையும் உண்டாகின்றதாம்**. அதனை மேலே காணலாம்.

இனி இன்பமும் பொருளும் அறமும் என்னும் இம்முறை முறையோ; அன்றிச் செய்யுளியலில் "அறம் முதலாகிய மும்முதற் பொருள்" என்பது முறையோ எனின், இரண்டும் முறையே ஆகலின் ஆசிரியர் கூறினார் என்க.

மேலும்,

*"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்*
*நடுவணது எய்த இருதலையும் எய்தும்*
*நடுவணது எய்தாதான் வாழ்க்கை உலைப்பெய்து*
*அடுவது போலும் துயர்"*

என வருதலால், **பொருள்** முன்வைப்பு அறியலாம். இம் மூவகையும் ஆசிரியன் ஆணை வழியவே என்பது "**மும்முதல்**" என்ற குறியீட்டால் விளங்கும்.

சொல்லும் இடம் குறித்து எதுவும் முதற் பொருளாகக் கொண்டுரைக்கும் உரிமையினது என்பதால் தான் 'மும் முதல்' என மூன்றற்கும் முதன்மை கூறப்பட்டதாம்.

**காட்சி**

தலைவன் தலைவியருள் எவர்முற்காண்பரோ எனின், அவ் வினாவுதலுக்கு இடம் வைக்காமல், "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" என **இருவரும் ஒத்துப் பார்க்கும் ஒருமிப்புப் பார்வையே அது** என்றார்.

'தகவிலார் மாட்டு எம் பார்வை பதிந்திராது' ஆகலின், 'இவர் தக்காரே' என இருவரும் எண்ணுதல் ஐயம் ஆகும்; தெளிவும் ஆகும் (1040).

இருவர் கண்ணும் கருத்தும் ஒன்றுபட்டமையால், அது நெஞ்சக் கலப்பாகிச் சிறக்கும் (1042).

இவை **இயற்கையாக நிகழ்ந்தவை ஆதலால் 'இயற்கைப் புணர்ச்சி' எனப்படுவதாயிற்று**. இயல்பாக நடைபெற்றது இயற்கை.

இத் தலைவனும் தலைவியும் முன்னரே அறிந்தவராகவும் இருக்க லாம். ஆனால், **அறிந்த அந் நாள் ஏற்படாமல் ஓரிடத்து ஒருவேளையில்**

**ஒரு சூழலில் ஒருவரும் எண்ணாமல் நிகழ்வதே இஃதெனத் தெளிய லாம்.**

பிரிவு

நெஞ்சங்கலந்த அவர்கள் பிரிந்த பின் ஏற்படும் உளப்பாடுகளை ஒன்பதாக எண்ணுகிறார் தொல்காப்பியர்: இடையீடு படாது விரும்புதல், அவ்வாறே இடையீடு இல்லாமல் எண்ணுதல், இவற்றால் உடல் மெலிவடைதல், எண்ணம் நிறைவேறுதற்கு என்ன செய்யலாம் எனக் கூறுதல், அடங்கிக்கிடந்த நாணம் எல்லை கடத்தல், நினைப்பவை - காண்பவை - எல்லாமும் தம் எண்ண வெளிப்பாடாகவே தோன்றல், தம்மை மறத்தல், மயக்கம் கொள்ளல், வாழ்வை வெறுத்துக் கூறல் என்பவை தலைவன் தலைவியர் இருவர் பாலும் நிகழ்வன (1046).

**இடம் தலைப்படல்**

அழைத்துப் பேசாதவற்றை அழைத்துப் பேசுதல், பேசாதன பேசுவனவாகக் கொள்ளுதல், அவற்றின் நலம் உரைத்துப் பாராட்டல், தலைவன் தான் மகிழ்வுறாமை காட்டித் தலைவி இருக்கும் நிலை அறிதல், தலைவன் தனக்குப் பிரிவால் உண்டாகும் மெலிவினை விளக்குதல், தம் இருவர்க்கும் உண்டாகிய தொடர்புநிலை உரைத்தல், தன்னைப் பற்றிய தெளிவு தலைவிக்கு உண்டாகுமாறு தலைவன் கூறுதல் என்பவை இயற்கைப் புணர்ச்சியின் பின்னர்த் தோன்றுவன (1047).

தலைவன், தன் குடிவரவால் அமைந்த பெருமையும் தன் அறிவாற்ற லும் பெருகி நிற்றலாலும், தலைவி, தன் குடிவரவாய பெருமையுடன் இயல்பான அச்சம் நாணம் உறுதிப்பாடு ஆயவை கொண்டு இருத்தலாலும் இருவர் தகுதியும் பேணிக் காக்கும் வகையில் உள்ளுறுதி காத்து நிற்பார் (1044, 1045). தாம் முந்துறக் கண்ட இடத்துக் காணற்கும் முந்துவர். கண்ட அவ் விடத்தில் மீளக் காணுதல் '**இடந்தலைப்பாடு**' எனப்படும். தலைப்பாடாவது கூடுதல்.

ஏதாவது ஒன்றை முன்னிட்டுத் தலைவியின் உடலைத் தொடுதல், புனைந்துரை வகையால் பாராட்டுதல், தக்க இடம் பார்த்து நெருங்குதல், தலைவி நழுவிச் செல்லுதல் கண்டு வருந்துதல், அதுபற்றி நெடிது நினைத்து நைதல், நெருங்குதல், தொடுதலுறப் பெறுதல், பெற்றபின் 'உன்னை எவ் வகையாலும் மறவேன்' என உறுதி கூறுதல் என்பவை இடந்தலைப் பாட்டில் நிகழ்வன.

"மெய்தொட்டுப் பயிறல்; பொய்பா ராட்டல்;
இடம் பெற்றுத் தழாஅல்; இடையூறு கிளத்தல்;
நீடு நினைந் திரங்கல்; கூடுதல் உறுதல்;
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்

*தீராத் தேற்றம்; உளப்படத் தொகைஇப்*
*பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்"*

*என்பது இதன் தொல்காப்பிய நடை (1048).*

## மெய் தொடல்

*இதில், மெய் தொட்டுப் பயிறல் முதலியவை வறிதே கூறுவனவா? வாழ்வில் நடைபெறுவனவா? காதல் உரிமையர் சந்திக்கும் படம் - கதை - காட்சி இன்னவற்றை மின்வெட்டென நொடிப் பொழுது இதுகால் நாம் பார்ப்பினும், இவற்றுள் ஒன்று புலப்படுதல் தவறாதே!*

*மெய் தொட்டுப் பயிறல், கூடுதல், நுகர்ச்சி, புணர்ச்சி என்பன வெல்லாம், பழிப்புக்குரியவையாகவோ உடல் கலக்கும் கூட்டமாகவோ கொள்ளக் கூடியவை அல்ல.*

*தலைவி கூந்தலில் பூ இருக்க, அப்பூவை அடுத்துவரும் வண்டை ஓட்டுதல் வழியாகத் தொடுதல்* '**வண்டோச்சி மருங்கணைதல்**' *என்னும் மெய்தொட்டுப் பயிறல். இந் நாளில் இக் காட்சி அருமை அல்லது புனைவு எனத் தோன்றின், ஆலையில் வேலை பார்த்துவரும் ஒருத்தி தலையில்,* ***பஞ்சுத் துகளோ நூலோ இருப்பதாக மெய் தொட்டுப் பயிறல் கண்கூடு.***

## புணர்ச்சி

*ஈராறுகள் கூடுதல் கூடுதுறை; கடலொடு ஆறு கூடுதல் கொண்டு புணரி; இரண்டு சொற்கள் கூடல் புணர்ச்சி; பூவை மணத்தல் என்பது முகர்தல்; நுகர்தல். இன்னவகையில், மெய்தொட்டுப் பயிறல் முதலிய வற்றைக் கொள்ளவே பண்டை அகப்பொருள் புலனெறி வழக்காகும். காதலித்தான் ஒருவன் ஊரறிய மனங்கொண்டு வாழாக்கால் சென்ற ஊரே முன்னின்று அறங்காட்டிய நெறி, அந்நெறி. பெற்றோரால் கரணம் முடித்தோ கரணம் பிறரால் முடிக்கப்பட்டோ* **ஓரிற்படுத்தல்** *என்னும் நிகழ்வு நேரிட்ட பின்னன்றிக் கூடுதலை ஒப்பாதது புலனெறி வழக்கம். அத்தகு மெய்யுறு கூட்டம் முன்னுற நிகழ்தலும் மகப்பேறு பெறுதலும் என்பவை, சங்கப் பாடல்களில் சான்றுக்கும் இல்லாதவை. அகப் பொருளும் சரி, புறப் பொருளும் சரி* ***கறையிலாத் தூயதாகக் கொள்ளப்பட்டதன் விளக்கமே பொருளதிகாரச் சுருக்கச் செய்தியாம்.***

## உதவலும் தடையும்

*தலைவியைக் கண்டு மகிழ்ந்தவன், பிரிந்த போது கவலைப்படுதலுடன் அமையான். தலைவியை மீளவும் கண்டு அவளைத் துணையாகக் கொண்டு மனையறம் நடத்தும் வேட்கையனாக இருப்பான். தலைவியைக் காணற்கு வாயிலாக, அவள் உயிர்த் தோழியின் உதவியைப் பலவகையாலும்*

நாடுவான். தன் உயிர்த் தோழனாக இருப்பான் துணையையும் கொள்வான். தலைவன் தலைவியர் உறுதிப் பாட்டைப் பெருக்கும் வகையால் தலைவன் தலைவியர் இருவரும் காணத் தடையாகியும், காண வாய்ப்பு உண்டாக்கித் தந்தும் பங்களிப்புச் செய்வர். இரவில் சந்தித்தல், பகலில் சந்தித்தல், சந்திப்புக்கு இடையூறு என்பனவும் நிகழும்.

தோழி, தலைமகள் இளமைப் பருவம் உரைப்பாள்; அவள் அறியாள் என்பாள்; அரியன் என்பாள்; தலைவனை நெருங்கா வகையில் அகற்றுவாள்; அவன், தோழியிடம் மன்றாடிக் கேட்கவும் ஆவன்; அவள் இசைவைப் பெறுதலுமாவன்; பெற வாயா நிலையில் மடலேறுதல் கூறவும் ஆவன்.

**பாங்கன் நிமித்தம்**

தோழனால் உண்டாகும் கூட்டத்தைப்,

*"பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப"*

என்பார் தொல்காப்பியர் (1050).

***அவை:*** காட்சி, ஐயம், துணிவு, வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல், நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்பன.

இவற்றுள் முதல் மூன்றும் கைக்கிளை; அடுத்த ஐந்தும் அன்பின் ஐந்திணை; இறுதி நான்கும் பெருந்திணை.

இவற்றை,

*"முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே*
*பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே"* (1051)

என்றும்,

*"முதலொடு புணர்ந்த யாழோர் மேன*
*தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே"* (1052)

என்றும் கூறுவனவற்றால் தெளிவிப்பார்.

*"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்"*

என்னும் **நெறியைப் பழைய உரையாசிரியர்கள் கொண்டமையால், முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே என்பதற்கு, அசுரம் பைசாசம் இராக்கதம் என்னும் மூன்று மணங்களையும், 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே' என்பதற்கு, பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்னும் நான்கு மணங்களையும் பொருளாகக் கொண்டனர் (இளம். நச்.). "பாங்கன் நிமித்தம் பன்னிரண்டென்ப" என்னும் முன்னை நூற்பாவை (1050) அடுத்து வருதலை விட்டுப் (1051-2) பொருந்தா மணத்தைப் பொருத்திக் காட்டினர்** (1038).

**மறையோர் மணவகை**

*இவண், மறையோர் தேஎத்து மன்றல் எட்டும் பற்றிய குறிப்பை அறிதலும் வேண்டுவதாம்.* **தள்ளத் தக்கதா கொள்ளத் தக்கதா என்பதற்கு உரிய பொருள் வேண்டுமே.**

***பிரமம்:*** *நாற்பத்தெட்டு ஆண்டு பிரமசரியம் காத்தவனுக்குப் பன்னீராண்டுக் கன்னியை அணிகலம் அணிந்து கொடுப்பது.*

***பிரசாபத்தியம்:*** *மைத்துன முறையான் மகள் வேண்டிச் செல்ல மறுக்காமல் கொடுத்தல்.*

***ஆரிடம்:*** *தக்கான் ஒருவனுக்குப் பொன்னாற் பசுவும் காளையும் செய்து அவற்றினிடையே பெண்ணை நிறுத்தி அணிகலம் பூட்டி 'இவற்றைப் போல் நீங்கள் பொலிவுடன் வாழ்க' என வாழ்த்திக் கொடுப்பது.*

***தெய்வம்:*** *வேள்வி ஆசிரியனுக்கு வேள்வித் தீயின் முன் கன்னியைத் தட்சிணையாகக் கொடுப்பது.*

***கந்தருவம்:*** *கந்தருவ குமரனும் கன்னியரும் தன்முன் தான்கண்டு கூடினாற் போல, ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் கூடி மணப்பது.*

***அசுரம்:*** *'கொல்லேற்றினை அடக்கியவன் இவளை மணத்தற் குரியன்;' 'வில்லேற்றினான் இவளை மணத்தற்குரியன்' எனக் கூறி வைத்து, அதன்படி செய்தாற்குக் கொடுப்பது.*

***இராக்கதம்:*** *தான் விரும்பிய பெண்ணை அவள் விருப்பத்திற்கும் சுற்றத்தார் விருப்பத்திற்கும் மாறாக வலிந்து கவர்ந்து செல்வது.*

***பைசாசம்:*** *மூப்புடையாள், உறங்குவாள், மதுமயக்கம் உடையாள் ஆயோரைக் கூடுதல்.*

*- இவை தமிழர் மணமல்ல என்பது, '**மறையோர் தேஎத்து மன்றல்**' என்பதால் புலப்படும்.*

*மக்கட்சட்டம், அரசியல் சட்டம் என்பவற்றால் குற்றமாகக் கொள்ளப்படுவனவும் - பட வேண்டுவனவும் எவையோ, அவையே இப் பட்டியலாக அமைகின்றதாம்.*

***'பெண்ணடிமை' என்று பேசுவார் கண்ணுக்கு இவையெல்லாம் தட்டுப்படா போலும்!***

*'காதல்' அறம்! என்னும் ஔவையுரைக்கு இவ்வெண்வகை மணங்களுள் ஒன்றற் கேனும் இடமுண்டோ?*

*கந்தருவம் இடம் பெறாதோ எனின், '**கண்டதும் கூடுதல்**' என்பது கந்தருவம். அவரை மணத்தல் வேண்டுவதுமன்று; ஏற்றதுமன்று; ஆதலால், களவு கற்பாதல் உயிரான தமிழ் மணத்தொடு எதுவும் ஒவ்வாததாம்.*

**தலைவன் கூற்று**

*பகலில் சந்திக்கும் இடம் இரவில் சந்திக்கும் இடம் என்னும் ஈரிடங்களிலும் சந்திக்கத் தவறிவிட்ட போதும், பார்க்க முடியாத வகையில் நெடும் பொழுது கடந்த போதும், காணவேண்டி நின்று காணா நிலையில் வேட்கை மிகுந்து மயங்கிய போதும், தான் புகுதற்குக் கூடாத காலத்துப் புகுதலால் விருந்தினனாகிய போதும், தலைவியே விரும்பி ஏற்கும் விருந்தின் போதும், முயற்சியை முன்னிட்டுப் பிரிய நேரும் போதும், நாணத்தால் தலைவி விலக்கி நிற்கும் போதும், வரைந்து (மணந்து) கொள்ளுமாறு தோழி சொல்லும் உயர்ந்த சொல்லைக் கேட்கும் போதும், வரைதலை உடம்பட்டு ஏற்கும் போதும், வரைதலை அவர்கள் மறுக்கும் போதும், தலைவன் கூற்று உண்டாகும். இந்நூற்பாவைத் தலைவி கூற்று வகையாகக் கொண்டார் நச்சினார்க்கினியர். இளம்பூரணர்,* ***தலைவன் கூற்று*** *வகையாகக், கொண்டார். தலைவியைப் பற்றிய சில குறிப்புகளை அடுத்துக் கூறி, அவள் கூற்றுகள் எவை என அடைவு மேலே செய்தலால், இது தலைவன் கூற்றெனலே தகுதியாம் (1055).*

**தலைவி இயல்பு**

*இன்ப ஒழுக்கில் நிலை பெற்றுவரும் நாணம் மடம் என்னும் உயரிய பண்புகள் தலைவிக்கு உரியவை; ஆதலால், குறிப்பினால் கருத்தை வெளிப் படுத்துவாள்; தக்க இடத்தில் மட்டுமே சொல்லால் வெளிப்படுத்துவாள்; அல்லாமல் அவள் விருப்பை வெளிப்பட உணர்த்தமாட்டாள் (1054).*

*விருப்பத்தை வெளியிடாத கண் இல்லாமையால், அதுவே கருத்தை வெளிப்படுத்திவிடும் (1055).*

*தலைவன் விருப்பினை ஏற்றுக் கொள்ளும் தலைவியே எனினும், (உடம்பாட்டினள் எனினும்) உடம்பாடில்லாள் போலக் கூறுதலும் உண்டு (1056).*

*- என்பவை, ஆசிரியர் தலைவியின் நாணம் மடம் குறித்த இயற்கைச் செய்தி அறிந்து கூறும் தெளிவினவையாம். இந்நாளிலும், அன்பின் ஐந்திணைப் படும் வாழ்வினர் இத்தகையராகவே இருத்தல் வெளிப்படை.*

**நாணம்**

*மகளிர் நாணுதல் நயம் 'திருநுதல் நாணு' என்னும் இயற்கையான நாணமாகும். கற்பித்துவருவது அன்று;* '**நாணுதல் ஆகாது**' *எனத் தம்* **முனைப்புக் கொண்டாரும், நாணாமல் இருக்க முடியாத இயற்கை நாணுதல்** *அஃதாதலின்,*

*"கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்*
*நல்லவர் நாணுப் பிற"*

*என்பது வள்ளுவம்.*

### மடம்

*மடம் என்பது இளமையொடு கூடிய உயரிய ஓர் இயற்கை. கற்றவை கேட்டவை என்பவற்றுள் தக்கவற்றை விடாப்பிடியாகக் கொள்ளும் கொள்கை வீறு ஆகும் அது. துறவர் நிலைப் பயிற்றிடம் 'மடம்' எனப் பெயர் கொள்ளப்பட்டது இக் கொள்கைக் கடைப்பிடி கருதியேயாம். அங்கே இப்* **பண்பியல் அருகியமையே, இப் பொருளை மறுக்கவும், '*சமையல் கூடம் - சாப்பாடு*' என்பவை தழுவிய 'மடைப்பள்ளி' நிலையத்து வாழ்வினர் என்னும் பொருளுக்கு அவர்களை இடமாக்கியதாம்**. *எம்துயர் தாங்குவதுடன் பிறர் துயரும் யாம் தாங்குவேம் என்னும் கொள்கைத் தவவீறு காவி ஆகும். காவுதல் - தாங்குதல். காவு தடி காவடி. "காவினேம் கலமே" புறம். இக்காவி உடையளவில் நிற்கும் இடமும் உண்டுதானே! அதுபோல்.*

### கூற்று

*தலைவனை மறைத்து நின்று காணுதல் முதலாகத் தலைவி கூற்று நிகழும் இடங்களையும் புதுவதோர் மணம், புதுவதோர் பொலிவு முதலாயவை கண்டு தோழி கூற்று நிகழுமிடங்களையும், களவு ஊரவர் அறிய வெளிப்படு நிலை முதலாகச் செவிலி கூற்று நிகழுமிடங்களையும் நாடக உத்தியில் நயமுற உரைக்கிறார் தொல்காப்பியர் (1057, 1060, 1061).*

*இடையிடையே களவொழுக்கம் குறித்த நுணுக்கச் செய்திகள் சிலவற்றையும் குறிப்பிடுகிறார்.*

### தலைவி கூற்று

*தலைவி தானாகக் கூறும் இடங்களும் உண்டு என்பதைக் கூறுகின்றார். ஆதலால், வினாவிய வழியே தலைவி பிற இடங்களில் கூறுவாள் என்பதைப் புலப்படுத்துகிறார்.*

*திருமணம் செய்யும் காலத்தைத் தள்ளிவைத்துத் தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிரியும் போதும், திருமணம் செய்யாமல் தேடிவந்து நீங்கும் தலைவனைக் கண்டபோதும், அயலார் மணம் வேண்டி நிற்றலைத் தலைவனுக்கு உரையெனத் தோழிக்கு உரைக்கும் போதும் தலைவி தானே கூறுதல் உண்டு (1058).*

*"உயிரைப் பார்க்கிலும் உயர்ந்தது நாணம்; அந் நாணத்தினும் குற்றமற்ற அறிவான் அமைந்த கற்பு உயர்ந்தது"; என்று முன்னோர் சொல்லிய சொல்லை ஏற்றுக் கொண்ட மனத்துடன், தலைவன் இருக்குமிடம் தேடிச் செல்லுதலும், தன் துயர் வெளிப்படுத்தாத நல்ல சொற்களைச் சொல்லுதலும் ஆகிய நிலையிலும் தலைவி கூற்று நிகழ்தல் உண்டு (1059).*

**குறிப்புகள் சில**

*அகவாழ்வியல் அறியார் போலத் தான் கொண்ட வேட்கையைத் தலைவன் முன் கூறுதல் பெரிதும் தலைவிக்கு உண்டாதல் இல்லை; புதிய மண்கலத்தில் ஊற்றப்பட்ட நீர் புறத்தே பொசிவது போல அவள் மெய்ப்பாட்டால் புலப்பட்டுவிடும் (1064).*

*இயற்கைப் புணர்ச்சி, தாமே கொண்டது ஆதலால் தோழன், தோழி என்பார் தூதர்களாக இருத்தல் அன்றித், தமக்குத் தாமே தூதாதலும் தலைவன் தலைவியர்க்கு உண்டு (1065).*

*தலைவி தலைவனைச் சந்திக்கக் கூடும் இடத்தை அவளே கூறுவாள். அவள் வருதற்குத் தக்க இடமாக அமைய வேண்டும் ஆதலால் (1066).*

*தலைவியை அன்றித் தான் வேறாக இல்லாத தோழி குறிக்கும் இடமும் உண்டு (1067).*

*தலைவியைக் காணவரும் தலைவனுக்குத் தோழன் மூன்றுநாள் அளவே உடனாவன் (1068).*

*தலைவனைப் பற்றித் தெளிந்த கருத்து வேண்டுதலால் அவன் தோழனைச் சுட்டிக் கேட்கும் முறையைத் தலைவி கொள்வாள். அவள் கேட்டல் '**துணைச் சுட்டுக் கிளவி**' எனப்படும் (1069).*

*தலைவி அறிந்துகொள்ள வேண்டிய நற்பொருள் பலவற்றையும் அறியச் செய்பவள் தாய் ஆவாள். தாய் எனப்படுவாள் செவிலி ஆவள் (1070).*

*தலைவிக்குத் தோழியாக இருப்பவள் அச் செவிலியின் மகளே ஆவள். அத் தலைவியின் தாய்க்குத் தோழியாயவள், தோழியின் தாயாகிய தன் செவிலித்தாயே என்பதால் அவள் வழிவழி உரிமை புலப்படும் (1071).*

*தலைவிக்கு வழிகாட்டும் அறிவுத் துணையாகத் தோழி இருத்தலால், அவள் தலைவியை நன்கு ஆராய்தலும் சிறப்பேயாம் (1072).*

*தலைவியை அடைவதற்குத் தலைவன் தன்னிடம் வேண்டி நிற்றலாலும், தலைவியின் குறிப்புணர்ந்து கொள்ளலாலும், இருவரும் ஓரிடத்து இருத்தலை அறிதலாலும் அவர்கள் இருவருக்கும் உள்ள அன்புணர்வைத் தோழி உணர்ந்து கொள்வாள். இதற்கு, '**மதியுடம் படுதல்**' என்பது பெயர் (1073).*

*தோழி மதியுடம் பட்டு உணர்ந்தால் அல்லாமல், அதன்பின் நிகழ்தற்குரிய கடமைகள் நடைபெற மாட்டா என்பர் (1074).*

*தலைவன் தலைவியர் கூடுதல் முயற்சிக்கும் வரைதல் நிகழ்வுக்கும் அவளே பொறுப்பாளியாக இருத்தலால், அவர்களைப் பற்றி அறிந்திருத்தல் கட்டாயமாம் (1075).*

*தலைவன் தலைவியர் சந்திக்கும் இடம் '**குறி**' எனப்படும். அது இரவுக் குறி, பகற்குறி என இரண்டாம் (1076).*

'**இரவுக் குறி**' *மனைக்கண் உள்ளார் 'பேசும் ஒலி கேட்கும்' அளவுள்ள மலை சார்ந்த இடமாகும். ஆனால், அது மனைக்குள்ளிடம் ஆகாது (1077).*

*மனைக்கு அப்பாலானதாகவும் தலைவி அறிந்த இடமாகவும் இருப்பதே '**பகற்குறி**' இடமாகும் (1078).*

*தலைவன் தான் குறியிடம் வந்ததைக் குறியால் அறிவிக்க, அக் குறியிடம் இல்லாத வேறு இடத்திற்குத் தலைவி சென்று அவனைத் தேடிக் காணாமல் வருதற்கும் நேரும் (1079).*

*மிக அமைந்த சிறப்பான இடம் வாய்க்குமெனில் ஆங்காங்குச் சென்று சந்தித்தலும் உண்டு (1080).*

*களவொழுக்கத்தின் போது நேரமும் நாளும் தவறிய நிலை தலைவனுக்கு இல்லை (1081).*

*வரும் வழியின் அருமை, நேரும் கேடு, அச்சம், இடையூறு என்ப வற்றைப் பற்றியவற்றால் நேரமும் நாளும் தவறுவதும் தலைவனுக்கு இல்லை (1082).*

*தலைவி காதலறம் கொள்ளுதலை அவள் தந்தை முதலியோர் அவள் குறிப்பாலேயே அறிவர் (1083).*

*தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலி அறிந்து கொண்டவாறு நற்றாயும் அறிவாள் (1084).*

*களவொழுக்கம் அரும்பிய நிலையில் இருந்து விரிந்து ஊரறியும் செய்தியாவது தலைவனாலேயே ஆம் (**அம்பல்** - அகத்து ஒடுங்கியிருந்த நிலை; **அலர்** = மலர்ந்து மணம் பரவுதல் போன்ற நிலை) (1085).*

*களவு வெளிப்பட்டபின் மணம் கொள்ளல், களவு வெளிப்படுமுன் மணம் கொள்ளல் என மணங்கொள்ளும் (வரைவு) வகை இரண்டாகும் (1086).*

*வெளிப்பட்டபின் மணங் கொள்ளல் கற்புமணம் போன்றது. எனினும், முன்னே கூறிய* **'ஓதல் தூது பகை' வகைப் பிரிவுகளை மணம் கொள்ளுமுன் கொள்ளல் தலைவனுக்கு இல்லை. ஆனால், திருமணத்தை இடையே வைத்துப் பொருள் தேடுதற்காகப் பிரியும் பிரிவு ஒன்று மட்டும் அவனுக்கு உண்டு. இவையெல்லாம் களவியல் ஒழுக்கச் செய்திகள்.**

**சிறு விளக்கம்**

*'கண்டதும் காதல்' என்பது அவ்வளவில் ஒழியாமல் இருப்பதற்காக இத்தனை வகைக் கட்டொழுங்குகளை நம் முந்தையர் விதித்திருந்தனர் என்பது, எண்ணி எண்ணிப் பாராட்டத்தக்க ஒழுகலாறாகும். "கண்டதும் காதல், கலைந்ததும் மறத்தல்" என்பதற்கு இடமில்லா நெறிமுறைகள் இவையாம்.*

*தலைவியும் தலைவனும் தாமே கண்டு ஒருமித்தனர். ஆனால், தலைவன் தோழனோ, தலைவி தோழியோ அறியாமல் அடுத்த நாள் அவர்கள் தாமே கண்டிலர்.*

*தோழன் ஆய்வு - இடிப்பு - கண்டிப்பு - தடை என்பவற்றுக்கு ஈடு தந்தே தலைவன் தலைவியைக் காண முடிந்தது.*

*தோழியின் ஆய்வு - மறைப்பு - மறுப்பு - புறக்கணிப்பு என்பவற்றுக்கு ஈடுதந்தே தலைவி தலைவனைக் காணமுடிந்தது.*

*தலைவற்குத் தோழன் '***இடிக்கும் கேளி***'ராகவே இருந்தான்.*

*தலைவிக்குத் தோழி இணையில்லா '***அறிவுத் துணை***'யாகவே திகழ்ந்தாள். அவளே, களவுக்கு இசைவு தந்து, கற்பு வாழ்வுக்குப் பொறுப்பேற்றுக் கொண்ட துணிவாட்டி. அந் நிலையை அமைவாய்ச் செய்யமுடியா நிலையில், தாய்க்கு அறிவித்து உடன் போக்குக்கு வழிகாட்டி உரிமையறம் நிலை நாட்டுபவளும் அவள்.*

*இத் தகு கட்டொழுங்கு இல்லாமல் இருவராகவே காதலித்திருப்பின் அக்காதல் நீள்வதற்கும் நிலைப்பதற்கும் பொறுப்பாவார் எவர்?*

*நிழல்போல் தொடர்ந்து நீங்கா நெறிகாட்டும் நேயப் பிறவியர் இவர்கள். தோழன், தோழியர் என்னும் இவருள்ளும்,* ***தோழியின் பங்களிப்போ கற்பு வாழ்விலும் அருவியாய் ஆறாய்த் திகழும் நீர்மையது.***

**தோழி**

*தோழன் என்னும் சொல் பழந்தமிழ் நூல்களில் நான்கே நான்கு இடங்களில் மட்டுமே இடம் பெறுகிறது. ஆனால் தோழி என்னும் சொல்லோ 550 இடங்களில் வருகிறது.* **தோழி என்னும் சொல்லின் ஆட்சிப் பெருக்கம், அக வாழ்வில் அவள் ஆட்சிப் பெருக்கம் உணர்த்துவதேயாம்.**

*அகத்திணை இலக்கியமே பெண்ணிலக்கியம் என்பர். "ஆங்குவரும் மாந்தர்களுள் பலர் பெண்பாலாரே; பாங்கன் ஒரு துறையளவில் வந்து போய் விடுகிறான்; பாணன் சிலபொழுது வருகிறான்,, தேர்ப்பாகன் கூற்றுக்குப் பெரிய இடமில்லை. தலைவனது தந்தை உடன்பிறந்தார் பற்றி*

ஒன்றும் சொல்வதாகாது; தலைவியது தந்தையும் அண்ணன்மாரும் கூற்றுக்கு உரியவர் அல்லர். கற்பினில் வரும் மழலைமகன் இளந்தூதுவனே அன்றி உரையாடான்; தோழியும் செவிலியும் அன்னையும் பரத்தையும் அக இலக்கியத்தில் கொள்ளும் வாய்ப்பு மிகப் பெரிது" என்கிறது தமிழ்க் காதல். மேலும் சங்க இலக்கியத்தில் 882 களவுப் பாடல்கள் உள. இவற்றுள் 842 பாடல்கள் தோழியிற் கூட்டம் என்னும் ஒரு துறைக்கே வருவன. இதனால் அக இலக்கியத்திற்குத் தோழி என்னும் ஆள், இன்றியமையாதவள் என்பதும் தோழியிற் புணர்ச்சிக்குரிய துறைகளே புலவர்களின் நெஞ்சைக் கவர்ந்தன என்பதும் பெறலாம்" என விளக்குகின்றது.

தோழி சொல்லாடும் இடங்கள் களவுப்பகுதியில் நாற்பத்து ஏழு; கற்புப்பகுதியில் இருபத்தொன்று; ஆக அறுபத்தெட்டு எனக் குறிப்பிடு கிறார் ஆசிரியர் தொல்காப்பியர். அவள் உரையாடும் இடங்களையும் திறங்களையும் நோக்கும் போது, **பெண்ணியல்பு என்று சொல்லப்படும் பெருமைக் குணங்கள் எல்லாமும் ஓருருக் கொண்டு விளங்கும் உயரிய படைப்பே அவள் என்பது விளக்கமாகும்.**

தலைவிக்கும் தோழிக்கும் உரிய உரிமை, உயிர் உரிமை. அதனால் பிறருக்கெல்லாம் தலைவியாக இருப்பவள் தோழிக்குத் தோழியாகவே விளங்குகிறாள். அவள், இவளைத் தோழி என்கிறாள். இவள், அவளைத் தோழி என்கிறாள். இத்தகைய ஒத்த உரிமையே தோழமையின் நிலைக் களம்.

இன்னும் ஒருபடி மேலே செல்கிறது அவர்கள் தோழமை. தோழி தலைவியை 'அன்னை' என்பாள். தலைவி தோழியை 'அன்னை' என்று உரிமையாய் அழைப்பாள். நம் தாய், நம் தலைவர், நம் வாழ்வு, நம் உயிர் என்று இருவரும் ஒப்பிதமாகக் கூறுவர். தங்கள் உயிர்கலந்து ஒன்றிய தோழமையை, ஒரு தோழி சொல்கிறாள்: "தாயோ, தன் கண்ணைவிட மேலாக இவளை விரும்புகிறாள். தந்தையோ, இவள் கால் நிலத்தில் படுவதையும் பொறுக்காதவனாய் 'உன் சிற்றடி சிவக்க எங்கே செல்கிறாய்' என்று தடுப்பான். நானும் இவளுமோ, பிரிவு இல்லாமல் அமைந்த நட்பால் **இரண்டு தலைகளையுடைய ஓருயிர்ப் பறவை போல உள்ளோம்!**" என்கிறாள். எத்தகைய அரிய உவமை!

தலைவன் தன் தலைவிக்கு வாய்த்த தோழியைப் பற்றிச் சொல்கிறான்:

"தோழி எதைச் செய்கிறாளோ, அதையே செய்கிறாள் தலைவி. மிதப்பின் தலைப்பக்கத்தைத் தோழி பிடித்தால், தலைவியும் அத் தலைப்பக்கத்தையே பிடிக்கிறாள். மிதப்பின் அடிப்பக்கத்தைத் தோழி பிடித்தால், அவ் வடிப்பக்கத்தையே தலைவியும் பிடிக்கிறாள். மிதப்பை

*விட்டு விட்டுத் தோழி வெள்ளத்திலே போனால், தலைவியும் போவாள் போலும்'' என்பது அவன் நெஞ்சார்ந்த உரை.*

*இன்ன சிறப்பால் தான் தோழியைக் கூறும் தொல்காப்பியர்,* ''**தாங்கரும் சிறப்பின் தோழி**'' *என்றார் போலும் (1060) !*

**கற்புமணம்**

*கற்பு மணம் என்பது என்ன? எனின்,*

*''கற்பெனப் படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே''*

*என்பது (1088).*

*கரணமாவது சடங்கு; மணச் சடங்கு. கிழவற்குக் கொடுத்தற்குரிய முறைமையர் கொடுக்க, கிழத்தியைக் கொள்வதற்குரிய முறைமையர் கொள்வதே திருமணக் கொடையாகும்.* **கிழவன் கிழத்தியரின் பெற்றோரைப் பெற்றவர்கள், இக் கொடையைச் செய்வராதலால் 'தாதா' எனப்பட்டனர்**. *தாதா = கொடையாளர். அப் பெயர் ஆண்பால் அளவில் சுருங்கி, முறைப் பெயராக இன்று வழங்குகிறது. 'தாத்தா' என்பது அது.*

**முழுத்தம்**

*திருமணச் சடங்கு முழுமதி நாளில் இரவுப்பொழுதில் நடந்தமையால் அதனை 'முழுத்தம்' என வழங்கினர். அதன் அடையாளமே முழுத்தம் பார்த்தல், முழுத்தக்கால் நடுதல் என்பனவும், வளர்பிறை நாளில் மணவிழா நடத்திவருவதுமாம்.*

**திருமணக்கரணம்**

*மணமக்களை நீராட்டி, புத்துடை உடுத்தச் செய்து, மக்களைப் பெற்ற மங்கையர் நால்வர் மங்கலவிழா நிகழ்த்தி, ''கற்பினில் வழாஅ நற்பல உதவிப் பெற்றோன் பெட்கும் பிணையை ஆகு'' என்று வாழ்த்தியமை அகநானூற்றில் 86ஆம் பாடலாகத் திகழ்கின்றது. அதன் 136ஆம் பாட்டும் அதனைச் சுட்டுகிறது. இம்* **முழுத்தமே 'முகூர்த்தம்' எனப்பட்டு, 24 மணித் துளி அளவு குறிக்கும் குறுங்காலமாகியும், அயன் மொழி வழியில் ஆகாச் சடங்கு நெறியாகியும் இந் நாள் நிகழ்வதாயிற்று.**

*திருமணப் போது இரவாக இருந்ததால் முழு நிலவு ஒளி இருப்பினும் விளக்கேற்றினர். 'ஓமத்தீ' வளர்த்திலர்; வந்தவர்க்கு உணவு வழங்கினரே அன்றி, வாளா எரியில் படைத்திலர். அம்மி மிதிக்கும் இழிமை ஏற்படவில்லை.*

*மணமகள் கற்போடு இருந்தால், அருந்ததி விண்மீன் போல் விளங்குவாள். இல்லையானால், அகலியை கல்லானால் போலக் கெட்டு மிதிபடுவாள் என்னும் அடையாளமாம் 'அரை கல்'லை (அம்மியை) மிதித்தல் அறிவுப் பிறப்பினர் ஏற்கத் தக்கதா?*

*மணமேடைக்கு வந்து சடங்குகள் பலவும் முடித்தபின், மணமகன், 'மணமகளை மணக்க மாட்டேன்' எனக்* **காசிச் செலவு** *மேற்கொள்ள லும், பெண்ணைப் பெற்றவன் அவன் பின்னே போய் அவனை வணங்கி, நன்மொழியுரைத்து மணமேடைக்கு அழைத்து வந்து மணம் செய்வித்த லும், சிந்தனை சிறிதேனும் உள்ளவர் ஒப்பும் செயலாகுமா? காசிக்குப் போகின்றவன் மேடைக்கு வந்து ஊடே எழுந்து போவது விழாவுக்கு வந்தோர் அனைவரையும், 'மூக்கறுத்துப் புள்ளி குத்துவது' அல்லவா!*

*'உலகம் தட்டை என்பதே இறைமொழி' என்ற உறுதிப் போக்கின ரும் அஃது உருண்டை என ஒப்புக் கொள்ளும் அளவில், அறிவியல் வளர்ந்துள்ள போதிலும் கண்மூடித்தனத்தில் உருண்டு புரளல்தான் 'கனமதிப்பு' என எண்ணுவாரும், எண்ணுவார் வழியில் நிற்பாரும் என்றுதான் சிந்திப்பாரோ?*

*தமிழன் தன்மானங் கெட்டுப் போன முதல் நாள், வடமொழி வழிச் சடங்கை ஏற்றுக் கொண்ட நாளேயாம்! அதன் விளைவு என்ன? தொல்காப்பியத் தூய தமிழ் நெறிகளையும் வடவர் நெறிப் பொருள்காட்ட உரையாசிரியர்களுக்கு இடம் ஆயிற்றாம். அதனைப் பின்னே காண்போம்.*

*'உடன்போக்கு' என்பது, தலைவன் தலைவியரின் பெற்றோர் உற்றார் தொடர்பு இல்லாமல் அகன்று போன அயலிடத்து நிகழ்ச்சி. ஆங்கேயும் மணச் சடங்கு இல்லாமல் மணமக்கள் உடனுறைதல் இல்லை. அதனால்,*

*"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே*
*புணர்ந்துடன் போகிய காலை யான"*

*என்றார் தொல்காப்பியர் (1089).*

*"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்*
*கீழோர்க் காகிய காலமும் உண்டே"*

*என அக் கரணம் இல்லாக் காலமும், அக் கரணம் முன்னர்க் கொண்டாரும் அதன் பின்னர்க் கொண்டவரும் பற்றிய நூற்பா இஃது (1090).*

**மூவர்**

*மூவர் என்பார் முடியுடைய மூவேந்தர் என்பவர். 'போந்தை, வேம்பே, ஆர் என வரூஉம் மாபெருந்தானையர்' என ஆசிரியரால் கூறப் பட்டவர். 'முத்தமிழ்', 'முப்பால்' என்பவை போல, 'மூவர்' என்றால் எவராலும் அறியப்பட்டவர். அவர்கள் மூவர் குடியிலும் திருமணக் கரணம்*

முதற்கண் நிகழ்ந்தது. அக் கரணம் பின்னர் அவர்க்கு உட்பட்ட நானிலத் தலைவர், அரசியல் அலுவலர், ஊர்த் தலைமையர், ஊரவர் என்பார்க்கும் படிப்படியே நிகழலாயிற்று.

மன்னர் குடியில் உண்டாகிய மரபுகளே பிறந்தநாள் விழா, சிறந்த நாள் விழா, பள்ளி எழுச்சி, திருவுலா, திருநீராட்டு, திருவூசல் முதலியன வாகக் கோயில் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் வழங்கின என்பதை அறியின், அடிப்படை விளங்கும். "மன்னன் எப்படி மக்கள் அப்படி" என்பது இதன் சுருக்கக் குறிப்பு.

இம் மூவரை வருணப் பிரிவிற்குத் தொடர்புபடுத்திக் கீழோர் என்பதற்கு 'வேளாண்' குடியினர் எனப் பொருள் காணற்கு இடமில்லை! **பொருள், பதவி, தலைமை எனச் சிக்கல் ஏற்படும் இடங்களிலேதான், சிக்கல் தீர்வுக்கு வழியும் காணப்படும்** என்பது எண்ணத்தக்கது. பல மனைவியருள் முதன் மனைவியே ஆளுரிமை வாய்ந்தவள் 'கோப்பெருந் தேவி' எனப்படுவதும், அவள் மக்களே ஆளுரிமையர் என்பதும் எண்ணின் இது தெளிவாம்.

**ஐயர்**

இனி,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்பது அடுத்த நூற்பா (1091).

ஐயர் யாத்தனர் என்னும் சொல் வந்ததும் இந் நாள் 'ஐயர்' அந் நாளே **யாம் தாம் அறநெறி அமைத்துத் தந்த மூலவர் என்று மேடையில் மட்டுமல்லாமல் நூலிலும் முழக்கமிடுகின்றனர். சாதிமைக் கொடி பிடித்தலை, மேற்கொண்டவர்கள் 'வெறி'யை அன்றி, இந் நூற்பாவில் எள்ளளவும் அப் பொருளுக்கு இடமில்லை.**

சங்கப் புலவர்கள் பாடல்களில் இன்னாரை இன்னார் பாடியது என்னும் குறிப்பு உண்டு. அப் பெயர்களில் ஒன்றில் தானும் 'இன்ன ஐயர்' என ஒரு பெயரைக் காட்ட முடியுமா? ஐயர் என்பது சாதிப் பெயராயின், வேடர் கண்ணப்பரும், பாணர் திருநீலகண்டரும் உழவர் நந்தனாரும் சேக்கிழாரால் 'ஐயர்' எனப்பட்டிருப்பரா? போப்பையர், கால்டுவெல் ஐயர் ஐயர்சாதியினரா? இக் குடி எனப்பார்த்தலில்லா **வீரசைவர்** 'ஐயர்' என்பது சாதியா?

ஐயன் - ஐயர் - ஐயா - ஐயை - ஐயாம்மா - ஐயாப்பா என்னும் முறைப் பெயர்கள் எக் குடியினர்க்காவது தனியுரிமைப் பட்டயம் கொண்டதா? தம்

ஐயன் என்பதுதானே 'தமையன்'. தமையன் என்பாரெல்லாம் 'ஐயன்' சாதிதானா?

*'இளமாஎயிற்றி இவைகாண் நின்ஐயர்'*

என **எயிற்றிக்குச் சுட்டுதல் 'அப்பா'வா, சாதிப் பெயரா?**

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டில் வரும் 'ஆசறு காட்சி ஐயர்' சாதிப் பெயரா?

களவுமணம் ஒப்பாத எண்மணப் பேறுடையார்க்கு,

*"அறத்தொடு நின்றேனைக் கண்டு திறற்பட*
*என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்"*

என்னும் குறிஞ்சிக்கலி பொருந்துவதா? **'இவர் அவர்' எனப் பகுக்கும் சாதிப்பிரிவு அல்லாத சால்புப் பெருமக்கள், எக்குடிப் பிறப்பினும் அவரெல்லாம் கரணம் வகுத்து வழிநடத்திய ஐயரே ஆவர் என்க.**

களவுக் காதல் கற்பு அறமாகாதவகையில், ஓரீர் இடங்களில் உண்டாகிய பொய்யும் வழுவும் கண்ட குடிமைப் பெருமக்கள், அறமன்றச் சான்றோர்கள் ஆயோர் திருமணக் கரணம் செய்வித்து, ஊரறிய ஒப்புக்கொள்ள வைத்த பட்டயப் பதிவே **'கரணம்'** ஆகும்.

"பொய்யாவது, செய்ததனை மறைத்தல். வழுவாவது, செய்ததன்கண் முடிய நில்லாது தப்பி ஒழுகுதல். கரணத்தொடு முடிந்த காலையில் அவையிரண்டும் நிகழாவாம் ஆதலால் கரணம் வேண்டுவதாயிற்று" என்பது இளம்பூரணர் உரை.

நச்சினார்க்கினியரோ வேதமுறை மணமே பொருளாக்கினார். ஆனால், **பொதுச் சடங்கு செய்தே தழும்பேறிப் போகிய செம்முது பெண்டிர் நடத்திய அகநானூற்றுப் பாடலையே எடுத்துக் காட்டினார்** (136).

எடுத்துக் காட்டிய அளவில் மனத்தில் தடை ஒன்று ஏற்பட்டிருக்க வேண்டும் அல்லவா! நாம் எழுதும் உரை என்ன? எடுத்துக்காட்டும் மேற்கோள் என்ன? முழந்தாளுக்கும் மொட்டைத் தலைக்கும் போடும் முடிப்பு எனச் 'சிறிதளவேனும் சிந்திப்பானும் உண்மை அறிவானே' எனத் தோன்றியிராமல் போகியிருக்குமா? அவரே அறிவார்!

"கரணம் என்ப", என்னும் தொடர்க்கு, "ஈண்டு 'என்ப' என்றது **முதனூலாசிரியரையன்று; வடநூலோரைக் கருதியது**" என, **'ஆடுகளம் அமைத்துக் கொண்டு' ஆட்டத்தில் தெளிவாக இறங்குகிறார் நச்சினார்க்கினியர். "ஒருவர் சுட்டாமல் தாமே தோன்றிய கரணம், வேத நூற்கே உளதென்பது பெற்றாம்**" என்று மேற்குறிப்பும் காட்டுகிறார்.

**நெஞ்சுதளை**

*"கரணத்தின் அமைந்து முடிந்த காலை*
*நெஞ்சுதளைஅவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்"*

*என்பது தலைவன் கூற்றுவகையுள் முற்பட நிற்பது (1092).*

*"கட்டிப் போடப்பட்டிருந்த நெஞ்சம் அக் கட்டினை நீங்கியது எதனால்? கரணம் முடிந்த உரிமை நிலையால்!" என்பது இதற்கு வெளிப் படையான பொருள்.*

*திருமணம் முடிந்து விட்டமையால் மனம் திறந்த மகிழ்வுடையன் ஆனான் தலைவன் என்பது தானே குறிப்பு.*

*"இயற்கைப் புணர்ச்சி இடையீடு பட்டுழி வேட்கை தணியாது வரைந்தெய்துங்காறும் இருவர் மாட்டும் கட்டுண்டு நின்ற நெஞ்சம் கட்டுவிடப்படுதல்" என உரை கூறுகிறார்* **இளம்பூரணர்.**

***"ஆதிக் கரணமும் ஐயர் யாத்த கரணமும் என்னும் இருவகைச் சடங்கானும் ஓர் குறைபாடின்றாய் மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைந்த வகையால் பள்ளி செய்து ஒழுகி நான்காம் பகலெல்லை முடிந்த காலத்து,***

*ஆன்றோராவார்,* ***மதியும் கந்தருவரும் அங்கியும்.***

***களவிற் புணர்ச்சி போலும் கற்பினும் மூன்று நாளும் கூட்ட மின்மையானும் நிகழ்ந்த மனக்குறை தீரக் கூடிய கூட்டத்தின் கண்ணும்: அது நாலாம் நாளை இரவின் கண்ணதாம்"*** *என உரை வரைந்து, குறுந்தொகை 101 ஆம் பாடலை எடுத்துக்காட்டி, 'இது நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சி' என்கிறார். கற்பவர்தாம் முடிவு செய்து கொள்ளவேண்டும்!*

*"ஆசிரியன் சொல் எப்படி யிருந்தாலும், இப்படித்தான் உரை எழுதுவேன்" என உறுதி கொண்டமை தானே, இத்தகு இடங்களில் வெளிப்படுகிறது! எத்தகைய பேரறிஞர்! 'அவர் அறியாத் தமிழ்நூற் கடற்பரப்பு ஏதேனும் இருந்திருக்க முடியுமா?' என ஆர்வ நெஞ்சத்தை ஆட்கொள்கிறாரே! 'இவரைப் போல உரை காணற் கெனவே பிறந்தார் எவரே?' என ஏங்க வைக்கும் அவர் ஏன், இப்படி எழுதுகிறார்.* ***இது தான் சார்ந்ததன் வண்ணமாதல் போலும்! அல்லது 'இன்னான் எனப்படும் சொல்' என்பது போலும்!***

**கற்பில் கூற்றுவகை**

*கற்புக் காலத்தில் தலைவன் கூற்றுவகை முப்பத்தொன்றனைக் காட்டுகிறார். அவ்வாறே தலைவி, தோழி முதலியோர் கூற்று வகைகளை யும் கூறுகிறார் (1092 - 1101).*

"ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென"த்

தலைவன் தலைவியைப் பாராட்டலும்,

"அல்கல் முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்"

எனக் குறையுணர்ந்து பணிதலும், குடிவாழ்வுக்கு இன்றியமையாதவை. இவை தலைவன் கூற்றுள் இரண்டு (1092).

"உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்
பெருமையில் திரியா அன்பின் கண்ணும்"

என உரிமை உணர்ந்து தலைவி பெருமை போற்றுதல், உரிமை வேட்கைக் காலத்தும் போற்றத்தக்கது. இது தலைவி கூற்றுள் ஒன்று (1093).

"பிரியும் காலை எதிர்நின்று சாற்றிய
மரபுடை எதிரும்"

என்பது தோழி கூற்றுள் ஒன்று. தோழிக்கு இருந்த உரிமை, உறுதி, காவல் கடன் என்பவற்றைக் காட்டுவது இது (1096).

காமக் கிழத்தி என்பாளுக்கும் அகவாழ்வில் இடமிருந்ததால் அவள் கூற்றும் உண்டு. செவிலி, அறிவர் ஆயோர் கூற்றும் இடம்பெறும்.

**வாயிலோர்**

தலைவன் தலைவியர் ஊடற்கண் அதனை நீக்குவார் வாயிலோர் எனப்படுவர். அவர்கள் பாணர் கூத்தர் என்பவர். அவர்கள், உரிமையுடன் சென்று பழகும் இயல்பினர் ஆதலால் "**அகம்புகல் மரபின் வாயில்**" எனப்படுவர் (1098).

**இனிய ஓரியல்**

இல்வாழ்க்கையில் தலைவி வழியில் தலைவனும், தலைவன் வழியில் தலைவியும் நிற்றல் சிறப்பாதலால்,

"காமக் கடப்பினுள் பணிந்த கிளவி
காணும் காலை கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான"

என்றும் (1100)

"அருள்முந் துறுத்த அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே"

என்றும் (1101) கூறினார்.

**அலர் முதலியன**

*களவுக் காலம் கற்புக் காலம் இரண்டிலும் 'அலர்' உண்டு (1108).*

*அவ் வலரில் தான் அன்புப் பெருக்கம் உருவாகும் (1109).*

*தலைவன் விளையாட்டும் அவ்வாறே பெருக்கும் (1110).*

*தலைவனுக்குச் சொல்லவிரும்புவனவற்றைப் பிறருக்குக் கூறுவது போல வாயில்கள் கூறல் உண்டு. அது '**முன்னிலைப் புறமொழி**' எனப்படும் (1113).*

*வேற்று இடத்திற்குச் சென்று தலைவி நிலையைத் தலைவனுக்கு உரைத்தலும், தலைவியிடம் வந்து வேற்றிடத்தில் இருக்கும் தலைவன் நிலையைக் கூறுதலும் பாணர்க்கு உண்டு (1115)*

*தாய் போல் கண்டித்தலும் தழுவிக் கொள்ளலும் தலைவிக்கு உரிய மனைக் கிழமையாம் (1119).*

*பிறவற்றை எண்ணுதற்கும் கூடாத பாசறைக்குப், பெண்ணொடு செல்லுதல் இல்லை (1121).*

*புறப்பணி புரிவார்க்கு அக் கட்டளை இல்லை (1122).*

*தன்னைப் புகழ்ந்து கூறும் சொற்களைத் தலைவன் முன் தலைவி மேற்கொள்ள மாட்டாள் (1126). ஆனால், அவன் அயன்மனை சார்ந்து பின் இரந்து நிற்றலும் தெளித்தலும் ஆகிய இடங்களில் அவள் தற்புகழ்தலும் கொள்வாள் (987).*

*தலைவன் சொல்லை மறுத்துக் கூறுதல் பாங்கனுக்கு உண்டு (1127).*

*ஆனால் அம் மறுத்துக் கூறல் மிகுதியாக இராது (1129).*

*பிரிவுக்குத் தலைவி வருந்தும் இடத்தெல்லாம் அவளை வற்புறுத்தித் தேற்றிச் செல்வதே தலைவன் வழக்கம் (1130).*

*பிரிந்து செல்லுதற்கு ஏற்படும் இடைத்தடை, செலவைத்தடுத்தல் இல்லை. தேற்றிச் செல்வதற்கே உதவும் (1131).*

*தலைவன் மேற் கொண்ட வினைப்பொழுதில், தலைவி நிலைபற்றி எவரும் உரையார். அவன் வினைமுடித்த போது, தலைவி நிலை அவனுக்குத் தானே தோன்றும் (1132).*

*பூப்புண்டாகிய நாளில் இருந்து பன்னிரண்டு நாள்கள் தலைவன் தலைவியைப் பிரியான். ஏனெனில், அந் நாள் **கருவுறும் நாள்** ஆதலின் (1133).*

*ஓதல் பிரிவு மூன்றாண்டுக்கு மேற்படாது (1134).*

காவல் பிரிவு, தூதுப் பிரிவு பொருள் தேடும் பிரிவு என்பவை எல்லாம் ஓராண்டிற்கு மேல் ஆகாது (1135, 1136)

தலைவன் தலைவியுடன் ஊரைக் கடந்து ஆறு குளம் கா என்பவற்றுக்குச் சென்று மகிழ்தலும் உரியவை என்பர் (1137).

வினை கருதிப் பிரிந்த தலைவன், **அவ்வினை முடித்ததும் இடை வழியில் தங்குதல் இல்லை;** மனம் போல உரிய இடத்து உதவும் குதிரையாகிய பறக்கும் விலங்கைக் கொண்டிருத்தலால் (1140).

இன்ன செய்திகளை அடைவு செய்து கற்பியலை முடிக்கும் ஆசிரியர் தமிழர் அறநெறியை அருமைப்பட மொழிகிறார். அது,

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்பது (1138).

**சிறந்தது பயிற்றல்**

இறந்ததன் பயன் = முதுமையடைந்ததன் பயன். இறத்தல் = கடத்தல். அளவிறந்த, வரை இறந்த என்பவற்றில் வரும் இறந்த என்பதைக் கருதுக.

குடிநலம் சிறக்க வாழ்ந்த முதுமையின் பயன் யாதாக இருக்க வேண்டும் என்பதைத் தெளிவிப்பது இந் நூற்பா. அப்பயன் 'சிறந்தது பயிற்றல்' என்பதாம். 'கமம் நிறைந்து இயலும்' என்பது, 'கமம்' என்னும் சொல்லின் பொருள்.

பிறைமதி எனத் திகழ்வது கமம். பிறைமதி - வளர் மதியாய் - நிறைமதியாய் விளங்குவது போலக் கமம் என்னும் 'காமம்' விளக்கமுறும். இன்பம் என்பது, எல்லா உயிர்க்கும் பொதுமையது என்பது ஆசிரியன் உரை (1169). ஆனால், காமம் மாந்தர்க்கே சிறப்பின் அமைந்த உணர்வு - அதனாலேயே வள்ளுவ மூன்றாம் பால், இன்பத்துப் பால் எனக் குறியீடு பெறாமல் 'காமத்துப்பால்' எனக்குறியீடு பெற்றதும் அச் சொல்லையே 39 இடங்களில் பயன்படுத்தியதுமாம். காமம் வரும் ஈரிடங்களில் மட்டுமே இன்பமும் வந்து, அமைவுற்றமையும் அறிக.

இக் காமம் நிறைவுற்ற முதுமைக் காலம், 'காமம் சான்ற கடைக் கோட்காலை' ஆகும். அக் காலத்தில் அவர்களுக்கும் குடிவழிக்கும் பாதுகாப்பான நன்மக்கள் தோன்றிச் சிறந்து விளங்குவர்; அவர்களை அன்றி இல்லறச் சுற்றமாகவும் உரிமை உறவுச் சுற்றமாகவும் பலர் இருப்பர்; குடும்பத் தலைவர்களால் அறவாழ்வின் அருமை அவர்கள் அறிந்து திகழ்வர்; மக்கள், சுற்றம் ஆகிய இவர்களுக்குத் தம் பிறவிப்பயனாகச்

சிறக்கும் மேல் நெறிகளைக் காட்டி அந் நெறியில் அவர்கள் நிற்குமாறு பயிற்றுதல் கடமையாம் (1138).

சிறந்தது பயிற்றல் என்பது சுட்டும் சிறப்பு - 'செம்பொருள்' என்பதாம். "பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் 'சிறப்பென்னும்' செம்பொருள் காண்ப தறிவு" என்று வாய்மொழி கூறுதல் காண்க. இச் சிறப்பு வளர்நிலையே வாழும்போதே பெறும் வீடுபேறு ஆகிய அவாவறுத்தல்.

*"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை*
*யாண்டும் அஃதொப்ப தில்"*

என்பது வீடுறு வழியும்,

*"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்"*

என்பது வீடுபேறுமாம்.

தமிழ் நெறியில் இல்லறம் துறவறம் என அறம் இரண்டன்று. இல்லறம் ஒன்றே அறம். அவ்வறம் மேற்கொண்டார் அனைவரும் தம் இல்லறக் கடமைகளை இனிது நிறைவேற்றித் தம் மக்களுக்கும் தம் சுற்றத்திற்கும் பயிற்ற வேண்டுவ எல்லாம் பயிற்றி அவர்களும் அவ்வழியில் தொடருமாறு பற்றற்ற வாழ்வு மேற்கொள்வதே அவ்வறத்தின் நிறைவாகும். இதனாலேயே அறத்தை இரண்டு ஆக்காமல் ஒன்றாக்கியது வள்ளுவம் என்பதும், துறவுப் பகுதியில் 'அறம்' என்னும் சொல் ஒன்றுதானும் இல்லாது அமைந்தது என்பதுமாம்.

### மணிவிழா

இனி, 'மணிவிழா' என்பது முதுவர்கள் தம் குடும்பப் பொறுப்பை மக்களிடம் ஒப்படைத்து அவர்கள் பேணலொடும் உதவியொடும் அறப்பணி - அருட்பணி ஆற்றுவதை மேற்கொள்வதற்கென்றே அமைக்கப்பட்டது என அறியின் 'இரண்டாம் திருமணம்' 'அறுபதாம் கலியாணம்' என்னும் பெயர்களைக் கொள்ளாதாம். 'பொலிவுச் சடங்கு போலிச் சடங்காகியமை' **அறிவர் வழிகாட்டத் தவறியமையாலேயே எனக் கருதின் மீட்சி கிட்டுதற்கு வாய்க்கும்!** ஏனெனில், அடங்கு கொள்கை சடங்காகிவிட்டதல்லவா!

### பொருளியல்

இனி, அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல் ஆயவற்றில் சொல்லாதனவும், சொல்ல வேண்டுவன உண்டு என்று ஆசிரியர் கருதுவனவும் பொருளியலில் இடம் பெற்றுள ஆதலால், 'எச்ச இயல்' என ஆசிரியர் ஆளுதல் ஒத்த குறியீடு ஆம்.

**அசைமாறல்**

ஒரு தொடர் மொழியில், ஒலிமாறி ஒலிப்பினும் பொருள் பொருந்தியே வரும்; ஆனால் அசை மாறுபடுதல் கூடாது; அது வழுவாகி விடும்.

*"ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்*
*ஆறென்ப ஆய்ந்தவர் கோள்"*

என்னும் குறள் ஊறொமை உற்றபின் ஒல்காமை என வருதல் வேண்டும். அவ்வாறு வாராக்காலும் பொருள் அவ்வாறே கொள்ளுதல் வேண்டும். ஆனால் **அசையாகிய உறுப்பு மாறின் யாப்பு வழுவாகவே அமைந்து விடும்**. முன்னது பொருள்காண் நெறி; பின்னது இலக்கண நெறி. முன்னதில் பொருள் போற்றுதலும் பின்னதில் யாப்புப் போற்றுதலும் வேண்டும் என்பதாம் (1141).

**தனிமொழி**

நாடக உத்தியில் தனிமொழி என்பதொன்று உண்டு. தானே பேசும் பேச்சு அது. பக்கச் சொல், பாற்கிளவி, தனிமொழி என்பவை அது.

நெஞ்சொடு கிளத்தல் என்னும் வகையால் தன்நெஞ்சுக்குத் தானே கூறுவது, இதில் ஒருவகை. உறுப்பு உடையது போலவும், உணர்வு உடையது போலவும், மறுத்துக் கூறுவது போலவும் கற்பித்துக் கொண்டு கூறுதல் இது. இனிச் சொல்லாடுதல் இல்லாதவற்றைச் சுட்டி அவை செய்யாதனவற்றைச் செய்தனவாகக் கூறுதலும், பிறர் கொண்ட துயரைத் தான் கொண்ட பிணிபோலச் சார்த்திக் கூறுதலும் தலைவன் தலைவியர் ஒருபாற்சொற்களாகும் (1142). நற்றாய் செவிலித்தாய் ஆயோர்க்கும் தனிச்சொல் வழக்குண்டு (1145).

தலைவன் தலைவியர் காணுதற்கு அரிய நிலை உண்டாகிய காலத்து அவர்களுக்குள் கனவுக் காட்சியும் உண்டு. உடன்போக்கு நேரிட்ட காலத்து நற்றாய் செவிலித்தாய், கனவு காணலும் உண்டு (1143, 1144).

வாழ்வின் உயிர் நிலையாம் அன்பு நாணம் மடம் ஆகிய மூன்றும் தலைவன் தலைவி நற்றாய் செவிலி என்னும் நால்வர்க்கும் உரியவை (1147).

தன் தலைவனைப் பிரிந்த தலைவி பசலையடைந்து வருந்தும் போது தன் உறுப்புகளும் தலைவன் பிரிந்ததை அறிந்தன போலக் கூறலும் வழக்கம் (1148).

பிரிவால் மெலிந்த போதும் இவற்றுக்கு என்ன ஆயின என்பாளே அன்றித் தலைவன் இருக்கும் இடத்தைத் தலைவி தேடி அடைவது இல்லை (1149).

*தலைவன் ஒரு பக்கமாக வருங்கால் தன் நெஞ்சுக்குக் கூறுவது போல் தலைவன் கேட்கக் கூறுவதும் உண்டு (1150).*

*தலைவன் உண்மையை மறைக்கும் போதும், தலைவிக்கு விருப்பு மிகுந்த போதும் அல்லாமல் மற்றைப் போதுகளில், கண்டு கொள்ளாதவ ளாகவே தலைவி அமைவாள் (1151).*

*தலைவன் தலைவியர் காதலை உணர்த்தத் தக்க பொழுது இது என அறிந்த பின்னரே, தோழி அறத்தொடு நிற்றலை (காதல் வெளிப்படுத் துதலை) மேற்கொள்வாள் (1152).*

*தலைவனுக்குள்ள எளிமை, பெருமை, விருப்பமிகுதி ஆகியவற்றை உரைத்தல், பிறர் கூறுவது கேட்டு அது பற்றிக் கருத்துரைத்தல், இடையூறு உண்டாகிய போது இடைவந்து தீர்த்தல், தாமே எதிர்ப்பட்டுக் காணல், மெய்யாக நிகழ்ந்தது இதுவெனல் என்னும் ஏழுவகையாலும் தோழி களவொழுக்கத்தை வெளிப்படுத்துவாள் என்று புலமையர் கூறுவர் என்பார் தொல்காப்பியர் (1153).*

*தக்க இடம் வாய்த்தால் அல்லாமல் தோழி சொல்லமாட்டாள் ஆதலால், செவிலி, தலைவி நிலையை உணர்ந்து கொள்ளலும் உண்டு. ஏனெனில், அடக்கம், நிலைப்பாடு, நேர்மை, கூறுவது கூறல், அறிவு, அரியதன்மை என்பவை பெண்டிர்க்கு இயல்பு என்பதால் (1154, 1155).*

*தலைவன் தலைவியர் களவொழுக்கத்திற்கு இசைந்த தோழி, அதனைக் கற்பொழுக்கமாக்கத் திட்டமிட்டே துணிவான சில செயல் களைச் செய்வாள். தலைமகன் வரும்பொழுது, வழி, காவல்மிகுதி ஆகியவற்றைக் கூறி அவற்றால் நேரும் தீமையைச் சுட்டுவாள்; அவற்றை நோக்கித் தான் மனங்கலங்கி வருந்துதலை உரைப்பாள்; சந்திக்கும் இடத்தில் உண்டாகும் இடையூற்றை உரைப்பாள்; இரவில் வருக என்பாள்; பகலில் வருக என்பாள்; இரவிலும் பகலிலும் வருக என்பாள்; இரவிலும் பகலிலும் வாராதே என்றும் கூறுவாள்; நன்மையாகவும் தீமையாகவும் புலப்படப் பிறிதொன்றனைக் கூறுவாள்; இவையெல்லாம் தலைவன் மேல் கொண்ட வெறுப்பாலோ காதலைத் தடுக்க வேண்டும் என்னும் எண்ணத் தாலோ செய்வன அல்ல!* ***காதல் வேட்கையைப் பெருக்கிக் கடிமணத்தை விரைந்து முடிக்குமாறு தூண்டுதல் குறிப்புகளேயாம்*** *(1156).*

*தேர் யானை குதிரை முதலியவற்றில் ஊர்ந்து வந்து தலைவன் தலைவியைக் காணலும் உண்டு (1158).*

*உண்ணுதல் இல்லாத ஒன்று உண்டதாகக் கூறுதலும் அகத் தொழுக்க வழக்கமாகும். அது, பசலை பரவுதலைப்* ***பசலை உண்டது*** *என்பது போல்வது (1159).*

*தலைவி வீட்டை விட்டு வெளியேற முடியாத காவல் மிக்க பொழுதில் (இற்சிறை) தலைவனிடம் தோழி, எங்கள் இல்லத்தார் பெரும்பொருளைப் பரிசமாக வேண்டியுளர் என்பது உண்டு. ஏனெனில், அவன் அவளைத் தேடி வராமல் இருக்கவும், மணமுடித்து மனையறம் காக்க வேண்டும் பொருள் தேடி வருதற்குத் தூண்டுதலாக இருக்கவும் ஆகும் (1160).*

*ஆனால் தலைவன் பொருள் தேடச் செல்லும் வழித்துயர் பற்றிச் சொல்லவும் தவறாள் (1162).*

*வீட்டுக் காவற்பட்ட தலைவி உயிர்நிலையாகிய அன்பு, அன்பு வழிப்பட்ட அறம், அறத்தால் அடையும் இன்பம், பெண்மைக்கு இயல் பாகிய நாணம் என்பவற்றை நீங்கி ஒடுங்கிய நிலை பழிக்கப்படுவதில்லை. ஏனெனில், அவள் செயலும் உணர்வும் ஒடுக்கப்பட்டுள்ள சூழல் அஃதாதலால் அவ்வக் காலத்து வாழும் சான்றோர் தக்கநெறி என ஏற்றுக் கொண்ட(1161)வற்றைத் தழுவிச் செய்யுள் செய்தல் முறையையாம் (1163).*

*உலக வழக்கில் பொருந்தாதது போல் தோன்றும் ஒன்று, அகப் பொருட்கு அமைவுடையதாக இருப்பின் அதனை வழக்காக ஏற்றுக் கொள்ளல் பழியாகாது (1164). ஆனால் அப் பொருள் நாணத்தக்கதாக இல்லாத நற்பொருளாக அமைதல் வேண்டும் (1165).*

*முற்பட்ட இலக்கிய இலக்கணங்களிலும் 'கைம்மை' 'கைம்மைத் துயர்' என்பவை இடம் பெற்றுள. மகளிராகவே விரும்பி ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும் போற்றப்பட்டது. கடுவனாம் ஆண்குரங்கு இறந்ததாக அதனைத் தாங்காத மந்தி, தன் இளங்குட்டியைச் சுற்றத்திடையே விட்டுவந்து பாறையில் மோதி இறக்க அதனைக்* ***"கைம்மை உய்யாக் காமர் மந்தி" என்று புனைவு வகையாற் பாராட்டியதும் உண்டு. ஆனால், இந் நாளில் கைம்மை மணம் வரவேற்புக் குரியதாயிற்று. மனைவியை இழந்தான் கணவனை இழந்தாளை மணமுடித்துக் கொண்டு 'வாழ்வு தருதல்' 'உயரறம்' எனப் பாராட்டப்படுத லாயிற்று. இது காலங்கண்ட அறநெறி. இதனைப் போற்றுதல் - செய்யுள் செய்தல் (புலனெறி வழக்கம் ஆக்குதல்) புலமையாளர் கடன்!***

*இவ் வகையில் பாவேந்தர் படைப்பும், அதன் பின்வரவாம் படைப்புகளும் பெருக்கமிக்கவை அல்லவா! ஆசிரியர் தொல்காப்பியர் வாழ்வியல் காப்புள்ளம் இத்தகைய* **எதிரது போற்றுதலை** *ஆணை யாக்கிச் சிறப்பிக்கின்றது என்க.*

*அன்புப்பெருக்கால் அழைக்கும் சொல் 'எல்லா' என்பது. அச் சொல் ஆண்பால் பெண்பால் ஆகிய இருபாலுக்கும் உரிய பொதுச் சொல்*

ஆகும். இச் சொல்லே ஏலா, ஏலே, ஏழா, ஏடா என வழங்குவதாம். "எல்லே இளங்கிளியே" எனப் பறவைக்கும் ஆயது! 'எல்லா' ஒப்புரிமை இதுகால் பெரிதும் ஆண்பால் தழுவி நிற்கின்றது. 'யாழ' என்னும் சொல் இருபாற் குரியதாக இருந்து 'ஏழா' ஆயது என்பதும் கருதத்தக்கது (1166).

பங்குரிமைச் சொத்தாக வாராதது; கொடை புரிந்தாலும் கொடுத்த வரை விட்டுச் செல்லாதது; செயல் திறனால் தங்கவைக்க முடியாதது; பிறரால் கையகப் படுத்திக் கொள்ளவும் முடியாதது; அத்தகு பொருளை ஒருவர் உரிமைப் பொருளாகக் கொள்வது போன்றது, தலைவியின் உறுப்புகளைத் தோழி தன் உறுப்புகளாகக் கொண்டு உரைப்பது; உரிமையில்லாதது அது எனினும், பொருந்திவருதல் அக நூல்களில் உண்டு. ஆதலால், அதனைப் போற்றிக் கொள்ளல் கடன் என்கிறார் (1167).

"என்தோள் எழுதிய தொய்யில்" என்பது தலைவி தோளைத் தன் தோளாகக் கருதித் தோழி சொல்வதாம் (கலித்.18).

ஓரிடத்துக் கூறும் தலைவி தலைவன் என்னும் சொற்கள், அவ்விடத்துள்ளாரை அன்றி, எவ்விடத்துள்ளார்க்கும் உரியவையாய் வருதலே வழக்கமாகும். இன்னான்தான், இன்னாள்தான் என்று குறித்துக் கூறப்படாமல் உலகத்துள்ள ஒருவன் ஒருத்தி என்பார் எவர்க்கும் உரிமையுடையது எனத் தெளிவித்தார் (1168).

உயிர்க்கெல்லாம் பொதுப் பொருளாய் அமைந்தது இன்பம் என்பதை,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்று ஆகும்"

என்கிறார் (1169). அமர்தல் = தங்குதல்; நெஞ்சத்துத் தங்குதல்; மேவற்று = விருப்பமுடையது.

இதனால் இன்பம் உயிர்ப்பொது என்றார். ஏனை அறம் பொருள் என்பவை மாந்தர்க்குரியவை என்பது குறிப்பாகக் கூறப்பட்டது. மற்றும் காதல் காமம் என்பவையோ எனின் உயிர்ப் பொதுமை விலக்கி ஆடவர் பெண்டிர்க்கே உரிமைப்படுத்தப்பட்டது.

குறிஞ்சி புணர்தல்; முல்லை இருத்தல் என்பன முதலாக ஒழுக்கம் சொல்லப்படும் என்றாலும், அவை அந் நிலத்திற்குச் சிறப்பே யன்றி, மற்றை நிலத்து நிகழாதவை அல்ல. நானிலத்திற்கும் பொதுவாக அமைந்தவையே யாம். ஆதலால், ஊடல் என்னும் உரிப்பொருள் மருதம் ஒன்றனுக்கே அமைந்தது இல்லை; மற்றை நிலத்தவர்க்கும் உண்டு; அவ்வூடல் தீர்ப்பாரும் அவண் உண்டு என்பாராய்,

*"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே*
*நிலத்திரி பின்றஃது என்மனார் புலவர்"*

என்றார். நால்வர் = நானிலத்தவர். 'நால் வருணத்தவர்க்கும்' என்று வழக்கம் போல உரைகண்டனர் பழைய உரையாசிரியர்கள் (1170).

நிலமக்கள், தலைமக்கள், அடியோர், வினைவலர் ஆகிய நால் வகையார்க்கும் எனக் குறிப்பு எழுதுவார் இளவழகனார்.

தலைவிக்கு உடன்போக்குக் கொள்ளவேண்டும் என்றும், திருமணம் நிகழ்தல் வேண்டும் என்றும் ஏற்படும் உந்துதல்களை "ஒருதலை உரிமை வேண்டியும்" என்னும் நூற்பாவில் கூறுகிறார் ஆசிரியர் (1171).

உறுதியாக இல்லற வாழ்வு மேற்கொள்ளல் வேண்டும் என்னும் நிலையிலும், 'வினையே ஆடவர்க்கு உயிர்' ஆதலால், அது குறித்துப் பிரிவு நேரும் என்னும் அச்சம் ஏற்பட்ட நிலையிலும், அம்பல் அலர் என்பவற் றால் களவொழுக்கம் வெளிப்பட்டுப் போகும் என்னும் அஞ்சுதல் உண்டாகிய நிலையிலும், தன்னைத் தலைவன் காண வருங்கால் ஏற்படும் இடையூறு பற்றி எண்ணிய நிலையிலும் தலைவிக்கு உடன்போக்குப் பற்றியும் மணங்கொள்ளல் பற்றியும் உந்துதல் உண்டாகும். சூழலால் உண்டாம் எண்ணங்கள் செயலூக்கியாகத் திகழும் அடிப்படையை விளக்கியது இது.

எவ்வொரு வினைப்பாட்டுக்கும் சூழலும் எண்ணமும் தூண்டலாய் அமைந்து துலங்கச் செய்யும் என்னும் வரையறை நல்ல தெளிவுறுப்புச் செய்தி.

வாழ்வுக்குத் தேவையான இரக்கம் எப்பொழுது உண்டாகும் எனின் **ஒருவர் கொண்ட வருத்தத்தைத் தானும் உணரும் போதேயாம்**. நோவற்க நொந்தது அறியார்க்கு என்பது வள்ளுவம். "துயரத்தை அறிந்து கொள்ளாதவர்க்குத் துயரை உரையாதே" என்பது அது. இரக்கம் உண்டாக்கும் அருள் வாழ்வு துயரம் கண்டபோது ஏற்படுவது ஆகலின்,

*"வருத்த மிகுதி சுட்டும் காலை*
*உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்"*

என்றார் தொல்காப்பியர் (1172). வாழ்வின் வளர்நிலை இன்புரை கேட்ட லினும் துன்புரை கேட்டு அருள்வதிலேயே உள்ளது என்பது அருமை மிக்கது. ஊடற் போதில் தலைவி உயர்வு விளக்கமாம். அதேபொழுதில் தலைவன் பணிவும் விளக்கமாம் (1173). அவ்வூடற் பணிவு இல்லையேல் கூடலின்பம் கொள்ளான்! "மகளிர் ஊடல் தணிக்கவும் பணியேன்" என்பது இல்லறத்திற்கு ஏற்காத செயல்.

கற்பொழுக்கத்தின் போது தலைவன் தலைவியர் இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்வதை விலக்கார்; புகழ்தல் இல்லறம் சிறக்க வாய்ப் பாம் என்றது இது (1174).

முன்னே உரைத்த **உள்ளுறை உவமம்** போல இறைச்சி என்ப தொன்றும் அகப்பொருளில் இடம் பெறும். இறைச்சி என்பது கூறும் பொருளுக்கு அப்பாலாய் அமைவது.

"இறைச்சி தானே பொருட்புறத் ததுவே"

என்பது அதன் இலக்கணம். சொல்ல வேண்டிய கருத்துக்கு வேறாக அடைமொழி அமைவில் நின்று பயன்செய்வது. 'பொருட்புறத்ததுவே' என்பதற்கு 'உரிப்புறத் ததுவே' என்பது இளம்பூரணர் பாடம். பொருட் புறத்ததுவே என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இறைச்சியை ஆராய்ந்து பார்த்தவர்க்கு வெளிப்படக் கூறும் பொருளுக்குப் புறத்ததாகிய பொருள் உள்ளமை புலப்படும் என்பதை,

"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே"

என்பார் (1176).

அன்பு கொள்ளத் தக்க கருத்துகளைக் கருப்பொருள்களின் உரைப் பொருளாகக் காட்டித், தலைவி வருந்தும் போது வற்புறுத்தித் (தோழி) தெளிவு செய்தல் 'வன்புறை' எனப்படும் (1177).

தலைவியைத் தலைவன் பாராட்டின் அவளுக்கு இருவகையில் அச்சம் உண்டாகும். ஒன்று, பொருள் தேடுதற்குப் புறப்படுவனோ என்னும் அச்சம். மற்றொன்று, செயல் மேற்கொண்டு பிரிவனோ என்னும் அச்சம். இரண்டுமே பிரிவச்சமாம் (1178).

தலைவி அயலாள் ஒருத்தியைப் பாராட்டினால் உள்ளே ஊடல் உண்டு என்பதன் வெளிப்பாடு அது என்பர் (1179).

பிறள் ஒருத்தி இத்தகையள் எனத் தலைவி பாராட்டின், அது பற்றித் தலைவன் குறிப்பறிவதற்குரிய வழியுமாகும் (1180).

தலைவன் குறையை அயல் பெண்டிர் உரைக்கும் போதும் தானே உணரும் போதும் உடனே இடித்துரைக்காமல் அவன் அன்பு கெழும நிற்கும் போதும் ஊடி நிற்கும் போதுமே கூறுவள். கூறுவதைக் கூறினாலும் கூறுதற்கு இடமும் காலமும் அறிந்து கூறுதலே கூறுதல் பயன் செய்யும் என்னும் உளநிலை உரைத்தது இது. **இடித்துரை கூறுவாரும் அறிவுரை கூறுவாரும் எண்ணிப் போற்ற வேண்டிய குறிப்பு ஈதாம்** (1181).

*குறித்த காலம் கடக்கு முன்னரே அக்காலம் கடந்து விட்டதாகக் கூறுதல் மடமை, வருத்தம், மயக்கம், மிகுதி என்னும் இந் நான்கனாலும் ஏற்படும். தன்னிடம் மன்றாடி நின்ற தலைவனைத் தோழி அப்பால் படுத்துதல் அன்றி மெய்யுரைத்தல், பொய்யுரைத்தல், நயந்துரைத்தல் எனப் பலவகைப் '**படைத்து மொழி**' களாலும் நலம் பேணிக் காப்பாள் (1183).*

*புகழ்ந்து கூறுதலை மறுத்துக் கூறுதலும், ஐயுற்றுக் கூறுதலும் தலைவனுக்கு உண்டு. (அதனைத் தலைவி கொள்ளாள்) (1184).*

*துன்பம் எதுவும் நேராமல் காத்தல் தன் கடமை ஆதலால் தோழிக்குத் துணிந்துரைக்கும் உரை உண்டு (1185) தலைவன் தலைவியரைப் புகழ்ந்துரைக்கும் நிலையும் உண்டு (1186).*

*ஊடல் தீர்க்கும் வாயிலாக இருப்பவர் தம் சொல்லைக் குற்றமற்றதாய் வெளிப்படக் கூறுவர் (1187).*

*முன்னே கூறிய உள்ளுறை என்பது, உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐவகைப்படும் (1188). இவையன்றி இன்பப் பொருளாகவும் உள்ளுறை வரும் (1189).*

*மங்கலச் சொல், வசைச் சொல், மாறுபாடில்லாத ஆளுமையால் சொல்லிய சொல் என்பனவும் உள்ளுறையுள் அடங்கும் (1190) (இவற்றின் விளக்கம் உவமைப் பகுதியில் காணலாம்)*

*தலைமக்கட்கு ஆகாக் குணங்களாம் சினம் அறியாமை பொறாமை வறுமை என்னும் நான்கும் ஏதேனுமொரு காரணத்தால் அவர்களொடு தொடர்பு படுத்திக் கூறுதல் உண்டு (1191).*

*தோழி தலைவியை 'அன்னை' எனலும், தலைவி தோழியை 'அன்னை' எனலும் இருவரும் தலைவனை 'என்னை' எனலும் பழமை யான மரபினதாம். சொல்லாலும் எழுத்தாலும் வெளிப்படாத உலகியல் முறை என்பர் புலமையர் (1192). ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, ஏர், எழில், சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்வு என்பவை இத்தகையவை என்பது கொண்டு மனத்தால் கொள்ளுவதை அல்லாமல் வேறுவகையால் வெளிப்படக் காட்ட இயலாதவையாகும்.*

*"நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது*
*காட்ட லாகாப் பொருள என்ப"*

*என்பது இதன் முடிநிலை (1193).*

*இமையவர் உலகம், கடலொலிக்கும் உலகம் என எவ்வுலகம் எனினும், ஒப்பு உரு முதலியவை இல்லாத காலம் இல்லாமையால் சொல்லைச் சொல்லிய வகையாலே பொருள் அறிந்து கொள்வர் என்பதாம்.*

மக்கள் மொழி சொற்களாக இவை இருப்பதால் எவரும் தாம் கேட்டுணர்ந்த வகையால் பொருள் கண்டு கொள்வர். வழக்குச் சொல்லாக இருப்பவற்றை விளக்க வேண்டுவதில்லை என்பதால் ஒரு சொல் வழக்கிழந்தால் பொருள் விளக்கமும் இழந்துபோம் என்னும் மொழியியல் முறையால் இப்பொருளியலை நிறைவித்தார் ஆசிரியர். அது,

"இமையோர் தேஎத்தும் எறிகடல் வைப்பினும்
அவையில் காலம் இன்மை யான"

என்பது (1194).

**புறத்திணை**

அகத்திணையை அடுத்து ஆசிரியரால் வைக்கப்பட்ட புறத்திணை பற்றி நாம் கருதலாம். அகம் புறம் என்பவை முரண்பட்டவை அல்ல. வாழ்வின் இருபக்கங்கள் அவை. "அகங்கை ஏழு எனின், புறங்கையும் ஏழு" என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் நற்கிழமை காட்டி உரைத்த விளக்கம் இதனைத் தெளிவாக்கும்.

பிறவிப் பேறு அக வாழ்வால் அமைந்தது; அதனைச் சிறப்பிக்கவே இல்வாழ்வு கொண்டது; அவ் வாழ்வுக்கு, இன்றியமையாத் துணைப் பொருளாக அமைவது புறவாழ்வு.

இன்னும் எண்ணினால், அகவாழ்வு அமைந்து திகழ, அவ்வப்போது மேற் கொள்ளும் முயற்சி வாழ்வே, புறவாழ்வாகும் என்னலாம். அகவாழ்வு சிறக்க வேண்டுவதாம் பொருள் தேடல், அறம்புரிதல், காவல் கடன்புரிதல், சந்து செய்தல், கலைமேம்படுதல், துறவுமேற்கொள்ளல் என்பன வெல்லாம் புறவாழ்வுப் பகுதியேயாம். போரும் கொடையும் புகழும் போற்றலும் எதற்காக, அகவாழ்வு சிறக்கவே. அகச் சிறப்பே பாரகச் சிறப்பின் அடிமூலம் - நிலைக்களம் - எனக் கண்ட நம் முந்தையர் வகுப்பு இது.

அகத்திற்கு, (வெளிப்பட அறியும் வகையில்) நான்கியல்களை (அகத்திணை களவு கற்பு பொருள்) வகுத்த ஆசிரியர், புறத்திணை என ஒன்றனை வகுத்ததை எண்ணல் சாலும். மேலும், மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு என்னும் நான்கியல்களும், அகம், புறம் ஆகிய இரு பொருள்களுக்கும் பொதுமையாயவையே என்பதையும் எண்ணலாம்.

**ஏழுதிணை**

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை பெருந்திணை கைக்கிளை என்னும் அகத்திணை ஏழுக்கும் முறையே, வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் என்னும் ஏழும் புறத்திணைகளாகும்.

குறிஞ்சி முல்லை என்பவை எவ்வாறு மலர்ப் பெயர்களோ, அவ்வாறே வெட்சி முதல் காஞ்சிவரை மலர்ப்பெயர்களே. ‘பாடாண்’ என்னும் ஒன்று மட்டுமே, பாடு புகழ் கருதிய திணைப் பெயராம்.

தமிழர் வாழ்வாகிய அகம் புறம் என்னும் இரண்டும் பூவால் குறியீடு பெற்றமை, இயற்கையொடு தழுவிய சீர்மை வெளிப்படுத்தும். ஒரு பெண் பருவம் உறுதல் ‘பூப்பு’ எனவும், ஓர் ஆண் பருவமுறுதல் ‘அரும்புதல்’ எனவும் வழங்கும் மாறாவழக்குக் கொண்டும் உணரலாம். “மலரினும் மெல்லிது காமம்” என்பதும், “மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து” என்பதும் வள்ளுவங்கள். அகக் காதல் எவ்வாறு அறத்தொடக்கம் உடையதோ அதுபோல், புறவாழ்வும் அறத்தொடக்கம் உடையது என்பது காட்டுவது வெட்சித் திணை. அது வெட்சி என்னும் வெண்ணிறப் பூவை அடையாளமாகக் கொண்டது.

## வெட்சி

பகைவரொடு போரிடத் தொடக்கம் செய்வதே வெட்சித் திணை. அது, பகைவர் ஆக்களைக் கவர்ந்து வருதல் வழியாகப் போர்த் தொடக்கம் செய்வதாகும். அஃது, அறத்து வழி நிகழும் என்பதை, ‘ஆதந்து ஓம்பல்’ என்பார். வெட்சியின் இலக்கணம்,

> *“வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்*
> *ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்”*

என்பது (1003).

வீரர்தாமே வேற்றவர் இடத்திற்குச் சென்று, ஆக்களைக் கவர்ந்து வருவராயின் அது கூடா ஒழுக்கமாகிய களவாகிவிடும். அக் களவன்று என்பாராய், ‘வேந்து விடு முனைஞர்’ என வேந்தன் ஏவல் வழிச் செல்லும் வீரர் என்றார். அவர் செய்யும் செய்கை கொடுமைப்பட்டது அன்று என்பாராய், ‘ஆதந்து ஓம்பல்’ என்றார்.

ஆக்களைக் கவர்ந்து வருங்கால் புல் கண்ட இடத்து மேயவிட்டு, நீர் கண்ட இடத்துக் குடிக்க விட்டு, நிழல் கண்ட இடத்துப் படுக்க விட்டு, ஓட்டி அலைக்காமல் மெல்லென நடத்திவருதல் என்பது விளங்க, ‘ஆதந்து ஓம்பல்’ என்றார். உயிரோம்பல், உடலோம்பல், விருந்தோம்பல் முதலாம் ஓம்பல்களை எண்ணுக.

“ஆவிற்கு நீரூட்டுவதை, அயலாரை ஏவிச் செய்யாமல், தாமே செய்தல்தான் தகவு” என்னும் வள்ளுவம். வீடு கட்டியவர், தம் கண்காணிப்புக்கு மட்டுமன்றி, வளமாகவும் வாழ்வாகவும் காக்கத்தக்க ஆவைக் காக்கவே, பக்கத்தே மாட்டுத் தொழுவம் அமைத்தனர். ‘மாடு’ என்பது, பக்கம் என்னும் பொருளொடு, செல்வம், பொன் என்னும் பொருளும்

கொண்டமை இதனாலேயே ஆம். 'தொழுகை'க்கு உரியதாக இருந்தமையால்தான், ஆன் உறைவிடம் தொழு 'தொழுவம்' என்னும் பெயர்களையும் கொண்டதாம்.

தமிழர் வாழ்வொடு இரண்டறக் கலந்த அப்பண்பாடே 'பொங்கல் விழா'வெனப் பொலிவுற்றுப் போற்றப்படுவதாம் 'மாட்டுப் பொங்கல்' என்பது நாடறி செய்தி. ஆக்கள் உடலை உராய்வதற்காகவே, வழியில் "ஆவுருஞ்சு குற்றி" நட்ட செய்தி நயமிக்கது!

ஆக்களைக் கவர்ந்து வருதல் போர்க்கு அடையாளமாவதொடு, அதனைப் பேணும் அறமுமாம் என்பதனால், போர்க்களத்தில் இருந்து அகற்றப்படுவனவற்றுள் தலையிடம் பெற்றது ஆவேயாம் (புறம்.9).

ஆநிரை கவரச் செல்லும் படைகள் ஆரவாரித்தல், புறப்பட்டவர் ஊர்ப் பக்கத்தே கேட்ட விரிச்சி என்னும் சொல், பகைநாட்டு ஒற்றர் அறியாவாறு புகுதல், அயலார் அறியாவாறு அவர் நாட்டு நிலையைத் தம் ஒற்றரால் அறிதல், பகைவர் ஊரைச் சுற்றி வளைத்துத் தங்குதல், தம்மைத் தடுக்கவந்த பகைவரை அழித்தல், ஆநிரையைக் கவர்தல், அதனைத் தடுத்ததற்கு வந்தாரை விலக்கி மீள்தல், கவர்ந்த ஆக்களைக் கவலையின்றிக் கொண்டு வருதல், தம்மை எதிர்பார்த்திருக்கும் தம்மவர் மகிழத் தோன்றுதல், ஆக்களை ஊர்க்குக் கொண்டு சென்று நிறுத்துதல், அப்பணியில் ஈடுபட்டவர்க்குப் பங்களிப்புச் செய்தல், செயல்முடித்த மகிழ்வில் களிப்புறுதல், கலைவல்லார்க்குப் பரிசு வழங்குதல் என்னும் பதினான்கு துறைகளை உடையது வெட்சித் திணை என்பார் ஆசிரியர் (1004). மேலும் எடுத்த செயலை முடிக்கவல்ல வீரர்தம் குடிச் சிறப்பு, வெற்றித் தெய்வமாகப் போற்றப்படும் கொற்றவை வழிபாடு என்பனவும் வெட்சி சார்ந்தனவே.

வேலன் வேடம் பூண்டு ஆடும் மருளாடி, காந்தள் மாலை சூடி ஆடும் வெறியாடல், இன்னாரைச் சேர்ந்த வீரர் இவர் என அறிதற்குப் பனை, வேம்பு, ஆத்தி என்னும் (சேரர் பாண்டியர் சோழர்) மாலை சூடி ஆடிய கூத்து, வள்ளி என்னும் கூத்து, புகழ்மிக்க வீரக் கழல் அணிதல், எதிரிட்டு நின்று போரிடும் வேந்தனை உன்னமரத்தொடு ஒப்பிட்டுக் கூறும் உன்னநிலை, மன்னனை மாயோனொடு ஒப்பிட்டுச் சொல்லும் பூவை நிலை, போரில் பகைவரை ஓட்டல், பசுக்களை மீட்டித்தருதல், வேந்தன் சிறப்பு உரைத்தல், தன்வீறு தோன்ற வஞ்சினம் கூறல் என்பவை பசுக்களை மீட்டிச் செல்வார் செயல்கள்.

மற்றும், வரும் படையைத் தடுத்தல், வாட்புண்பட்டு வீழ்தல் எனப்படும் பிள்ளை நிலை; வாட் போரிட்டு வென்றவனுக்குப் பறை முழங்கப் பரிசு வழங்கிய பிள்ளையாட்டு, களப்போரில் இறந்துபட்

டார்க்கு நினைவாகக் கல்லெடுத்தல், அதனை நீராட்டுதல், கல் நடுதல், அதனைச் சூழக் கோயில் எடுத்தல், வழிபடுதல் என்று சொல்லப்பட்ட கற்கோள் நிலை என்பனவும் வெட்சியே.

பசுக்களைக் கவர்தல் போன்றதே, மீட்டுக் கவர்ந்து செல்லலும் ஆதலால், இரண்டையும் வெட்சியாகக் கொண்டார் தொல்காப்பியர். ஆனால், பசுக்களை மீட்டுச் செல்லுதலைக் 'கரந்தை' எனத் தனித் திணை ஆக்கி மொழிந்தனர் பின் நூலினர் (பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை). "வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்" எனக் கொண்டனர் அவர். ஆனால், எழுதிணை என்னும் வரம்புகடத்தலும், அகப்புறம், புறப்புறம் எனப் பொருந்தாப் பிரிவுவகை காட்டலும் நேரிட்டனவாம். நிரை கவர்வார்க்கும் மீட்டுவார்க்கும் அடையாளம் வேறு காட்டவே முன்னவர் வெட்சியும், பின்னவர் கரந்தையும் (கருநிறப் பூ) - சூடியதென்க.

காதல் ஒழுக்கம் அனைத்திற்கும் குறிஞ்சி முதலாதல் போலப் புறத்திணைக் கெல்லாம் முதலாவது வெட்சி என்றும், இரண்டு திணைகளும் களவில் நிகழ்வன என்றும், "வெட்சி தானே குறிஞ்சியது புறனே" என்பதற்கு ஒப்புக் காட்டுவார் **நாவலர் பாரதியார்**.

இப் பகுதியில் கூறப்பட்ட வெட்சிப் போரில் இறந்து சிறப்புற்றவர் நடுகல் இந்நாளும் பலவாகக் காணலும், அவற்றில் அவர் பெயரும் பெருமையுமாகிய எழுத்துப் பொறித்திருத்தலும், 'ஆவட்டி' என ஊர்ப் பெயர் இருத்தலும் எண்ணத் தக்கவை. இதில் வரும்

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல்"

என்பனவே காட்சிக் காதை, கால்கோட்காதை, நீர்ப்படைக்காதை, நடுகற்காதை, வாழ்த்துக் காதை, வரந்தரு காதை எனச் சிலப்பதிகார வஞ்சிக் காண்டமாக உருக்கொண்டதாம்.

**வஞ்சி**

முல்லை என்னும் அகத்திணைக்குப் புறமாக அமைந்தது வஞ்சித் திணையாகும். ஆடவர் பிரிதலும், மகளிர் அவரை எதிர் நோக்கி இல்லில் இருத்தலும் இரு திணைக்கும் பொதுவாதலால், முல்லைக்கு வஞ்சி புறனாயிற்றாம் (1007).

மண்ணைக் கவரும் எண்ணமிக்குடைய வேந்தன் ஒருவனை, அவன் அஞ்சுமாறு மற்றொரு வேந்தன் படையெடுத்துச் சென்று வென்றடக்கு வதே வஞ்சித்திணையாகும்.

"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே"

என்பது நூற்பா (1008).

**துறை**

போரிடச் செல்லும் படையின் எழுச்சி, பகைவர் நாட்டைச் சூழ்ந்து தீயிடல், விளங்கிய படையின் பெருமை, வேந்தன் கொடுக்கும் கொடைச் சிறப்பு, பகையை நெருங்கி அழித்த வெற்றி, பெற்ற பரிசு விருது (மாராயம்) பற்றிய பெருமை, தம்மைப் பொருட்டாக எண்ணாமல் போரிட்ட திறம், பெருகிவரும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் கற்சிறைபோல (அணை போல) எதிரிட்டு வரும் படையைத் தனித்து நின்று தடுக்கும் பெருமிதம், படைஞர்க்கு விரும்பும் வகையால் உணவு வழங்கும் பெருஞ்சோற்று நிலை, வெற்றி பெற்றவரிடத்துத் தோன்றும் பொலிவு, தோற்றவர்க்கு உண்டாகிய அழிவு, பகைவர் நாட்டின் அழிவுக்கு வருந்திப்பாடும் சிறந்த வள்ளைப் பாட்டு, அழிக்க வரும் படையைத் தடுத்து நிறுத்திய வீரரைத் தழுவுதல் ஆகிய தழிஞ்சி என்னும் பதின் மூன்று துறைகளையுடையது வஞ்சித் திணை (1009).

**குறிப்பு**

காலம் மாறியது; கருவி மாறியது; கருத்தும் மாறியது; எனினும், இற்றைப் போர்களிலும் இத்துறைகள் சொல்லும் முறைகள் நிகழவே செய்கின்றன.

மாராயம் என்பது வேந்தனால் பெற்ற விருது. அவ்விருதுப் பெயரே பெயராக விளங்கும் குடும்பங்கள் இன்றும் உண்டு. கற்சிறையாவது அணை. கல்லால் தடுத்து நிறுத்துதல் வழக்கமே அணைக்கட்டு; 'கல்லணை' கரிகாலன் வைத்துச் சென்ற புகழ் எச்சம். வள்ளை என்பது உலக்கைப் பாட்டு. வேந்தனைப் பாடும் புகழ்ப்பாட்டு; மகளிர் பாடிக் கொண்டு உலக்கை குற்றும் பாடல்; சிலம்பில் வள்ளைப் பாட்டு உண்டு. தழுஞ்சி என்பது தழுவுதல். நல்லதும் அல்லதும் நேர்ந்தபோதில் உரிமையுடையார் தழுவிக் கொள்ளுதல், ஆடல் களத்தில் வெற்றி பெற்ற வீரர்களைப் பார்வையர், ஓடிவந்து தழுவுதல் என்பன எண்ணலாம்.

**உழிஞை**

உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறனாகும் (1012).

அரணை முற்றுகை இடுதலும் பற்றுதலும் என்பவை உழிஞைத் திணை. ஊடல் கொண்ட இல்லாள் கதவடைத்து ஊடியிருத்தலும், வாயில்கள் வேண்டிநின்று கதவைத் திறக்கச் செய்து உட்புகுதலும்

ஆகியவை உழிஞையொடு ஒப்பதாகலின் உழிஞை மருதத்திற்குப் புறனாயது. உழிஞைத் திணை எட்டுவகை யுடையது.

பகைவர் நாட்டைப் பற்றிக் கொள்ளுமுன்னரே வெற்றியுறுதியால் விரும்பியவர்க்கு விரும்பியதைத் தருதல், சொல்லிய வண்ணமே செய்து முடிக்கும் வேந்தன் திறம், வலிய மதில்மேல் ஏறிப் போரிடல், பகைவர் ஏவும் அம்புகளைத் தடுக்கும் தோற்படை (கேடயம்) மிகுதி, அரணின் உள்ளே உள்ளவன் செல்வச் சிறப்பு, அதனால் தன்னொடு போரிட வந்த புறத்தோனை வருந்தச் செய்தல், தான் ஒருவனாக வெளிப்பட்டு வந்து போர் அடர்த்தல், புறத்தோன் தாக்குதற்குக் கலங்க வேண்டாத மதில் வன்மை என்பவை அவை (1013).

இவ்வெட்டனுள் முன்னவை நான்கும் மதிலை முற்றுவோன் பற்றியவை. பின்னவை நான்கும் மதிலைக் காப்போன் பெற்றியவை.

முற்றுவோனும் காப்போனும் கொள்ளும் போர் நிலை பன்னிரு துறைகளாகக் கூறுவார் ஆசிரியர் (1014).

**தும்பை**

தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனாகும் (1015). இரங்குதல் இருதிணைக்கும் பொதுமையானது. களப் போர் அழிவு அத்தகையது ஆகும்.

வீரத்தை வெளிப்படுத்துதலே நோக்கமாகக் கொண்டு போரிட வந்தவன் திறத்தை அழிக்கும் சிறப்பினது தும்பை (1016).

நிலம் கவர்தலோ, மதில் பற்றுதலோ கருத்தாகக் கொள்ளாமல் வீரத்தை வெளிப்படுத்தும் ஒன்றே நோக்கமெனக் கொண்டு போரிட வந்தவன் ஆதலின் அவனை,

"மைந்து பொருளாக வந்த வேந்தன்"

என்றார் ஆசிரியர் (1016). மகனுக்கு 'மைந்தன்' எனப் பெயரிட்ட நோக்கு நாம் எண்ணத்தக்கது. மைந்து = வீரம்.

நெருங்கிச் செல்ல இயலாத வீரன்மேல் பகைவர் அயலேநின்று ஏவிய கணைகளும் வேல்களும் உடலைச் சூழ்ந்து மொய்த்துக் கிடத்தலும், உயிர் பிரிந்த பின்னரும் அவ்வுடல் நிலத்தில் படாமல் துள்ளி நிற்றலும் என்னும் இரு திறப்பட்ட சிறப்புகளையுடையது தும்பை (1017).

தும்பைத் திணை பன்னிரு துறைகளை உடையது. இவற்றுள், தாக்குவானும் தாக்கப்படுவானுமாகிய தலைவர் இருவரும் களத்தில் ஒருங்கே இறந்து படுதல் என்பது ஒருதுறை. அது, '**இருவர் தபுதி**'. '**எருமை மறம்**' என்பது ஒருதுறை. அது, மறவன் ஒருவன், தன் தலைவன் படை

உடைந்து பின்னிடும் நிலையில் உள்ளே புகுந்து தான் ஒருவனாகத் தடுத்துக் காப்பது. அவன் செயல் அஞ்சாத் தறுகண் அமைந்த எருமையின் இயலை ஒத்திருத்தலால் ‘எருமை மறம்’ எனப்பட்டது. அவன் எருமை மறவன் எனப்பட்டான்.

எருமை விருது பெற்றான் ஒருவன் பெற்ற ஊர் எருமையூர். அது, மகிச ஊர் என அயன்மொழியாளரால் மாற்றி மறைக்கப்பட்டு, இன்று கருநாடக மண்ணில் மைசூராக உள்ளது.

ஒருவனை எருமை எனல் பழநாளில் பெறற்கரிய பெருமை. இன்றோ எள்ளல் பொருள்! ஏன்? வழக் கொழிவே காரணமாம்.

இத்துறையை,

*“ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்*
*கூழை தாங்கிய எருமை”*

என்கிறார். கூழையாவது பின்னணிப்படை.

தும்பையின் இன்னொரு துறை, தொகைநிலை. அது,

*“இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்*
*ஒருவரும் ஒழியாத் தொகைநிலை”*

எனப்படுகிறது.

**“எவரும் வாழாமல் ஒழிவது தான் வாழப் பிறந்ததன் நோக்கமா?” என அசைக்கும் துறை இது! போர் முடிவு சிந்திக்கவே வைக்கிறது; ஆனால், அச் சிந்தனை களத்தில் இருந்து கழிந்த உடனே கழிந்து போவதுதான் மீளமீளப் போராட்டத் தொடர்!**

**வாகை**

வாகை என்னும் புறத்திணை பாலை என்னும் அகத்திணைக்குப் புறனாவது (1019). அகத்திணையில் நிலமிலாப் பாலை பொதுவாக இருத்தல் போலப் புறத்திணையில் எல்லாத் திணைக்கும் பொதுமை யானது வாகையாகும். தாம் கொண்ட குறைவிலா அறிவு ஆற்றல் முதலியவற்றைப் பிறரினும் மிகுத்துக் காட்டிக் கூறுவது வாகைத்திணை என்பர். அது,

*“தாவில் கொள்கை தத்தம் கூற்றைப்*
*பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப”*

என்பது. தாவுஇல் = தாழ்வு - குறைவு இல்லாத. பாகுபட - மிகுதிப்பட.

தமிழ்நெறி கூறவந்தவர் தொல்காப்பியர். அவர் அயல்நெறி கூற நூல் செய்தார் அல்லர் என்னும் அடிப்படையை உணர்ந்தே தொல்காப்பியத் திற்கு உரை, உரை விளக்கம் புரிதல் வேண்டும்.

வாகைத் திணையில் வரும் ஒரு நூற்பா பெரிதும் எண்ணத்தக்கதாக அமைந்துளது. அது,

"அறுவகைப் பட்ட **பார்ப்பனப்** பக்கமும்,
ஐவகை மரபின் **அரசர்** பக்கமும்,
இருமூன்று மரபின் **ஏனோர்** பக்கமும்,
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய **அறிவன்** தேயமும்,
நாலிரு வழக்கின் **தாபதப்** பக்கமும்,
பாலறி மரபின் **பொருநர்** கண்ணும்,
அனைநிலை வகையொடு ஆங்கெழு வகையின்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்"

என்பது (1012).

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் என்பதற்கு ஆறு திறனாகிய அந்தணர் பக்கமும். அவையாவன ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன" என்றார் இளம்பூரணர்.

வேட்டல் வேட்பித்தல் என்னும் இரண்டையன்றி அவரால் சான்று காட்டப் 'பார்ப்பனப் பக்கம்' இடம் தரவில்லை. ஓதலாவது 'கல்வி' என்று கூறி, கல்வி விழுப்பம், கற்றோர் விழுப்பம், கற்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவெல்லாம் மாந்தப் பொதுநிலை அறம் கூறும் பாடல்களையே காட்டினார். எண்பொருளவாகச் செலச்சொல்லல், நுண்பொருள் காண்டல் (குறள். 424) இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல் (குறள். 222) இவை **பார்ப்பனப் பக்கம் என்னின், என்னதான் நாம் சொல்வது?** 'இரவலர் புரவலை நீயும் அல்லை' என்ற புறப்பாட்டைப் 'பார்ப்பன பக்கம்' என்ன இளம்பூரணர்க்கு எப்படித் துணிவு வந்ததோ?

ஆனால், நச்சினார்க்கினியரையோ சொல்ல வேண்டா!

பார்ப்பனர் என்றதும், பருந்தெனப் பாய்ந்து எடுத்துக்கொண்டு எழுதுவதற்கே பிறந்தவர், என விரிவாக எழுதினார்:

"ஆறு கூற்றினுட் பட்ட பார்ப்பியற் கூறும்.

ஆறு பார்ப்பியல் என்னாது வகையென்றதனால் அவை தலை இடை கடையென ஒன்று மூன்றாய்ப் பதினெட்டாம் என்று கொள்க.

அவை ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் கொடுத்தல் கோடல் என ஆறாம்.

**இருக்கும் எசுரும் சாமமும்** இவை தலையாய ஓத்து. இவை வேள்வி முதலியவற்றை விதித்தலின் இலக்கணமுமாய், வியாகரணத்தான் ஆராயப் படுதலின் இலக்கியமுமாயின.

**அதர்வமும் ஆறங்கமும் தருமநூலும்** இடையாய ஒத்து. அதர்வம் வேள்வி முதலிய சடங்கு கூறாது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமே யன்றிக் கேடும் சூழும் மந்திரங்களும் பயிறலின், அவற்றோடு கூறப்படா தாயிற்று.

ஆறங்கமாவன, உலகியற் சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் **நிருத்தமும்** அவ் விரண்டையும் உடனாயும் ஐந்திரத் தொடக்கத்து **வியாகரணமும், போதாயனீயம், பார்த்துவாசம், ஆபத்தம்பம், ஆத்திரையம்** முதலிய கற்பங்களும், **நாராயணீயம், வாராகம்** முதலிய கணிதங்களும் எழுத்தாராய்ச்சியாகிய **பிரமமும்**, செய்யுளிலக்கணமாகிய **சத்தமுமாம்**.

தரும நூலாவன உலகியல் பற்றிவரும் மனுமுதலிய **பதினெட்டும்**. இவை வேதத்திற்கு அங்கமானமையின் வேறாயின.

இனி **இதிகாச புராணமும்** வேதத்திற்கு மாறுபடுவாரை மறுக்கும் உறழ்ச்சி நூலும், அவரவர் அதற்கு மாறுபடக் கூறும் நூல்களும் கடையாய ஒத்து.

எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்ந்து இம்மைப்பயன் தருதலின் அகத்தியம் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களும் இடையாய ஒத்தாம் என்றுணர்க. இவையெல்லாம் இலக்கணம். இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம்.

இனித் தமிழ்ச் செய்யுட் கண்ணும் இறையனாரும், அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், வான்மீகனாரும், கவுதமனாரும் போல்வார் செய்தன **தலையும்,** இடைச் சங்கத்தார் செய்தன **இடையும்,** கடைச் சங்கத்தார் செய்தன **கடையுமாகக்** கொள்க.

இங்ஙனம் ஒத்தினையும் மூன்றாகப் பகுத்தது, அவற்றின் சிறப்பும் சிறப்பின்மையும் அறிவித்தற்கு"

'பார்ப்பனப்பக்கத்து' ஓதுதலுக்குத்தான், இவையெல்லாம் எழுதினார். மேலும், "இனிப் பார்ப்பனப் பக்கத்து வகையாவன **பார்ப்பார்க்குப் பார்ப்பனக் கன்னியிடத்தே கற்பு நிகழ்வதற்கு முன்னே, களவில் தோன்றினானும், அவள் பிறர்க்கு உரியவள் ஆகிய காலத்துக் களவில் தோன்றினானும், அவள் கணவனை இழந்து இருந்துழித் தோன்றினானும், ஒழிந்த மூவகை வருணத்துப் பெண்பாற்கண்ணும் இவ்வாறே தோன்றினாரும் அவரவர் மக்கட்கண் அவ்வாறே பிறழத் தோன்றினாருமாகிய சாதிகளாம்**. இன்னோரும் தத்தம் தொழில் வகையால் பாகுபட மிகுதிப்படுத்தல் வாகைத் திணையாம்.

*பார்ப்பனர் என்பதை வசைச் சொல்லாகவும், பழிச் சொல்லாகவும் கருதி அச் சொல்லைப் பிறர் சொன்னால் வெறுப்பவர், அப்பழஞ் சொல்லுக்கு உரிமை கொண்டாடல் பொருந்துமா? பார்ப்பனர், அந்தணர் என்பன வெல்லாம் பிராமணர்களாகிய எங்களையே என்பவர்க்கு இப் பகுதியை* **'இனியர்' வழங்கிய படையலாக்கல் தகும்தானே!**

*இவ்* ***வெழுத்தின்படி, எச்சாதியேனும் தூயது எனப்பெருமை கொண்டாட முடியுமா? சாதி கெட்டதற்குப் பெயர் சாதி எனச் சாதித்தல் அறமாகுமா?***

*சாதி என்பது விலங்குக்கும் பறவைக்கும் மீனுக்கும் உரிய 'இனப் பிரிவு' என்பது '**மரபியல்**' செய்தி. இல்லாச் சாதியை உருவாக்கி, இழிவாக்கிக் காட்டியமை எச்சாதியர் சாதனை? எண்ணுவார் அறிவர்.*

*பார்ப்பனர், அந்தணர், அறிவர், அறவர், அரசர், வணிகர், வேளாளர், கொல்லர், தச்சர், மறவர், பறையர், பள்ளர், முதலி, பிள்ளை, செட்டி என்னும் எப்பெயரும் சாதிப் பெயர் இல்லை.*

*புலவர் ஆசிரியர் கணியர் எனச் சாதியர் இல்லாமைபோல், பார்ப்பார் என்பதும் சாதிப் பெயர் இல்லை. பிராமணர் அவர் என்னின், அவர் தூய தமிழ்ப் பெயரைக் கொள்ளார். தூய தமிழ்க் கடவுள் பெயர் சொல்லவும் சொல்லார்; சூட்டவும் சூட்டார்; சூட்டியிருப்பினும் மாற்றி வைப்பதையே வழிவழியாகப் போற்றுவார்.*

*செம்பொருட் சிவம் 'ருத்ரா' ஆவர். அம்மை 'அம்பா' ஆவார். முருகன் 'சுப்பிரமணியன்' ஆவான்; (சுப்பிரமணியன் - பிராமணனுக்கு நன்மை செய்பவன்)*

*முருகனைச் சுப்பிரமணியனாக்கி, இருவரும் ஒருவரே என்று கூறினாலும், சுப்பிரமணியனின் மனைவி தேவயானையையும் வள்ளிக் குறத்தியையும் ஒன்றாக்க மாட்டார். ஏன்? கீழ் சாதி என இணைக்க உடன் பாடில்லை!*

***விழிப்புடையவர்கள்**, பிறர் **விழிக்கக்** கடமை செய்தல் வேண்டும்!*

***அஃதறம்! அந்தண்மை!***

*ஆனால்,* ***'விழித்தலே ஆகாது' எனத் திட்டமிட்டுத் 'தமிழே தீட்டு' 'தமிழினம் தீண்டக் கூடாத இனம்' என்று கண்மூடித் தனத்தைக் கால மெல்லாம் பெருக்கித் தமிழினமே தமிழினப் பகையாக இருக்கச் செய்துவருதல், இன்றில்லை எனினும், விரைவில் தமிழரை எண்ணிப் பார்க்கச் செய்தல் உறுதி!*** *ஒப்பநோக்கும் உயர்குணத்தர் இவருள் இருந்திலரோ எனின், இருந்தவரும் இருப்பவரும் இக் குறைக்கு ஆட் படாத*

வணங்கத்தக்க பெருமையர்! அவர் என்றும் தமிழரால் போற்றப் படுபவரே அன்றிப் புறக்கணிக்கப்பட்டார் அல்லர் என்பது வரலாற் றுண்மை.

இனிப் 'பார்ப்பனப் பக்கம்' யாதெனப் பார்க்கலாம்.

பார்ப்பனர் என்னும் பெயரை எண்ணுதல் வேண்டும்.

பார்த்தார் - பார்க்கிறார் - பார்ப்பார்.

பார்த்தனர் - பார்க்கின்றனர் - பார்ப்பனர்.

பார்த்தல் வழியாக ஏற்பட்ட முக்காலப் பெயர்கள் இவை. இவற்றுள் பார்ப்பார், பார்ப்பனர் பெயர்களாக வழக்கூன்றின.

கணியம் பார்ப்பார், குறிபார்ப்பார், ஏடு பார்ப்பார், ஐந்திரம் (பஞ்சாங்கம்) பார்ப்பார், நாடி பார்ப்பார், கணக்குப் பார்ப்பார், சகுனம் பார்ப்பார் எனப்படுவார் வழக்கில் இல்லாமல் போய்விடவில்லையே!

இப் பார்ப்பார், அறுவகைத் தொழில் பார்ப்பாராகத் தொல் காப்பியர் காலம் தொட்டே வாழ்ந்த தமிழர். அவர்கள் குருக்கள், ஓதுவார், பூசகர் (பூசாரி) பண்டாரம், பூக்கட்டி, வேளார் என்பார்.

குருக்கள், பூசகர் - வழிபாட்டாளர்.

ஓதுவார் - தேவபாணி இசைப்பார்.

பண்டாரம் - கோயில் பொருட்காவலர்.

பூக்கட்டி - நந்தவனம் பேணி, மலர் பறித்துத் தருவார்; மாலை தொடுப்பார்.

வேளார் - தெய்வப் படிவம் செய்வார், மண்ணீட்டாளர்; குயவர் என்பாரும் அவர். குயவர் - பார்ப்பார்; குயம் - குசம் ஆகிப் புல்லாகி, பார்ப்பாரும் ஆகியது. குசம் - தருப்பைப்புல் (அறுகு) தருப்பைப் புல்லால் வந்தவன் குசன் (லவன் குசன்).

இனி, இவரையன்றித் தலைவன் களவுக்குத் துணையாய பார்ப்பனப் பாங்கன், வேள்வி செய்யாத வேளாப்பார்ப்பான், வானியல் நுணுக்கம் அறிந்த முதுகண்ணன் அல்லது கணியன் என்பாரும் அறிய வருகின்றனர். இவர்கள் எத் தொழில் செய்தாரோ, அத் தொழில் செய்த பார்ப்பார். இவருள் தொல்காப்பியர் நாளில் வாழ்ந்தவர் அறுவகைப் பார்ப்பார் ஆகலின் அவர்தம் தொழில் கருதி எண்ணினார். ஆசாரிய (கம்ம)த் தொழிலர் ஐவர் பகுப்பு இன்னும் உளதாதல் ஒப்பிட்டுக் காணத்தக்கது.

*'ஐவகை மரபின் அரசர் பக்கம்'*

என்பது ஐவகைக் குடிவழியினராகிய அரசர் பகுதி என்பது. சேரர் சோழர் பாணடியர் என்பார் மூவேந்தரும், வேளிரும், குறுநில மன்னரும்

என்பார்போல் தொல்காப்பியர் காலத்தில் அறியப்பட்ட ஐவர், தலையாலங் கானத்துச் செரு வென்ற பாண்டியனை எதிரிட்டார் பல்வகையர் ஆதல் போல், அந் நாளில் ஐந்து வகை அரச குடியினர் இருந்தமையால் அவரைக் குறித்தார்.

ஒரே காலத்தில் சேரர் சிலரும், சோழர் சிலரும், பாண்டியர் சிலரும் ஆட்சிக் கட்டிலில் இருந்தமை அறியவரினும், அவர் ஒருகுடியினர் ஆதலின் ஒருவராகவே எண்ணப்பட்டனர். வேளிர் போல்வாரும் அவ்வாறேயாம், 'பதினெண்குடி வேளிர்' எனல் அறிக.

*"இரு மூன்று மரபின் ஏனோர் பக்கம்"*

என்பது இவ்விரு வகையினரையும் அல்லாமல், அறுவகைப்பட்ட பிற குடியினர் பகுதி. அவர் "அறுதொழிலோர்" எனத் திருக்குறளில் குறிக்கப் பட்டவராகலாம். அவ்வறு தொழிலோர்,

*"உழவு தொழிலே வரைவு வாணிகம்*
*விச்சை சிற்பம் என்றித் திறத்**தறு***
***தொழில்** கற்ப நடையது **கரும பூமி**"* (கரும பூமி = தொழில் உலகம்)

என்று கூறும் திவாகர நிகண்டு.

மேலே குறித்த மூன்று பகுதிகளுடன், குற்றமற்ற செயற்பாடுடைய வரும், இறப்பு நிகழ்வு என்னும் கால அறிவால் எதிரது உணரவல்லவரும், வாழும் நெறிகளை வகுத்துக் காட்டியவரும் ஆகிய அறிவர் பகுதியும், எண்வகை வழக்குடைய துறவர் பகுதியும் (நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடைபுனைதல் எரியோம்பல், ஊரடையாமை, காட்டுணவு கோடல், வழிபாடு என்பவை துறவர் எண்வழக்கு என்பார் **இளம்பூரணர்**. உண்ணாமை, உறங்காமை, போர்த்தாமை, வெயிலில் இருத்தல், நீரில் நிற்றல், காமம் கடிதல், வறுமை பொறுத்தல், வாய்மையால் வருந்தல் போல்வன என்பார் **நாவலர் பாரதியார்**) அறவியல் அறிந்து மறத்திறம் புரியும் போர்வீரர் பகுதியும், அத்தகையதாகிய ஒப்பற்ற பெருமிதப் பகுதியும் கூடிய எழுவகைச் சிறப்பினது வாகைத்திணை என்கிறார் தொல்காப்பியர் (1021) இவை வாகைத் திணையின் வகை.

வாகைத்திணையின் துறைகளைக் 'கூதிர் வேனில் என்றிரு பாசறை' எனத் தொடங்கும் அடுத்த நூற்பாவில் கூறுகிறார் (1022). அத்துறைகளை மற வகை அறவகை என இரண்டாகப் பகுத்து இருபாற்பட்ட ஒன்பதிற்றுத் துறைத்தே (9+9=18) எனக் கூறுகிறார்.

அவற்றுள், எட்டுவகை நுதலிய அவையம் என்பதொரு துறை. அத்தகு அவையமே திருவள்ளுவர் கூறும், பெற்றோர் தம் மக்களை முந்தியிருக்கச் செய்யும் அவையமாகும்.

*"குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி*
*விழுப்பேர் ஒழுக்கம் பூண்டு காமுற*
*வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையின்*
*காதல்இன் பத்துள் தங்கித் தீதறு*
*நடுநிலை நெடுநகர் வைகி வைகலும்*
*அழுக்கா றின்மை அவாவின்மை என்றாங்கு*
*இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்*
*தோலா நாவின் மேலோர் பேரவை"*

என்று அவ்வவையத்தைக் கூறும் **ஆசிரியமாலை**. அவ்வவையில் ஒருநாள் அளவேனும் தங்குதற்கு வாய்ப்பின், பலப்பல பிறப்புத் துயர்களையும் படலாம் என்பதை,

*"உடனமர் இருக்கை ஒருநாட் பெறுமெனின்*
*பெறுகதில் அம்ம யாமே வரன்முறைத்*
*தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து*
*நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது*
*நிலையழி யாக்கை வாய்ப்ப இம்*
*மலர்தலை உலகத்துக் கொட்கும் பிறப்பே"*

என்று கூறி முடிக்கின்றது.

குடிப்பிறப்பு, உடை; நூல் சூடும்பூ; ஒழுக்கம், அணிகலம்; வாய்மை, ஊண்; தூயகாதல், உறைவிடம்; நடுவுநிலை, நகர்; அழுக்காறு இல்லாமை, அவா இல்லாமை, செல்வம்; இவற்றையுடையவர் தோலா (தோல்வியுறாத, பொய்க்காத) நாவின் மேலோர். இத்தகும் அவையம் ஒன்றை எண்ணிய அளவிலேயே எத்தகைய பெருமிதம் உண்டாகின்றது! அவர்கள், தகுதி இல்லார் வரினும் அவரைத் தகுதியராக்கிக் கொள்ளுதல் இன்றித் தள்ளுதல் இல்லார் என்னும் சிறப்பினர் ஆதலால்தான், எந் நிலத்தாரும் எக் குடியாரும் எத் தொழிலாரும் ஆடவர் பெண்டிர் என்னும் பால்வேறுபாடும் இல்லாமல் புலமைச் செல்வராகத் திகழ்ந்தனர் என்பது சங்கச் சான்றோர் பெயர்ப்பட்டியலைப் புரட்டிய அளவானே புலப்படும்.

இந்நிலை தாழ்ந்து தடம் புரண்டமை,

தன்மகன், ஆசான்மகன், பொருட் கொடையன் முதலோர்க்குக் கற்பித்தலும், களி, மடி, மானி, கள்வன், பிணியன், ஏழை, பிணக்கன், சினத்தன், தொன்னூற் கஞ்சித் தடுமாறுளத்தன், தறுகணன் பாவி, படிறன், இன்னோர்க்குக் கற்பித்தல் ஆகாமையும், கற்பிப்போன் கருத்தாகி விட்டதை வெளிப்படுத்தும் நன்னூல் கொண்டு தெளியலாம்.

**நோயுள்ளவனுக்குத் தானே மருத்துவன் உதவி வேண்டும்! நோயனை நெருங்க விடேன் என்பான், மருத்துவன் என்னும் பெயர்க் குத் தானும் உரிமையன் ஆவனா?**

இதில் கூறப்படும் இன்னொருதுறை,

*"கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை"*

என்பது. கட்டாவது உறுதிப்பாடு. உரன் என்பதும் அது. "உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்" "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்னும் வள்ளுவங்கள் கட்டமை ஒழுக்கம் பற்றியவை. கண்ணுமை = பொருந்தி நிற்கும் தன்மை.

இதற்கு அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறை யுடைமை என்பவற்றை எடுத்துக் கூறுவார் **இளம்பூரணர்.**

வாகைத் திணையின் நிறைவுத் துறைகளாக வருவன, அருளொடு புணர்ந்த அகற்சி என்பதும் காமம் நீத்த பால் என்பதுமாம்.

வாகையாவது வெற்றி: வாழ்வின் வெற்றியாவது அருள்கலந்த துறவும் (அருட்பணி புரிவதற்காகவே கொள்ளும் பற்றறுதலும்) காமம் நீங்கிய தூய்மையும் ஆகும் என்கிறார்.

இவ்விடத்தே, நாம் முன்னர்க் கண்ட,

*"காமம் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"*

என்னும் கற்பியல் நிறைவு விளக்கத்தை எண்ணல் வேண்டும்.

*"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்*
*ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்*
*ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"*

என்னும் களவியல் தொடக்கமும் நோக்குதல் வேண்டும். மேலும், ஆரா இயற்கை அவா நீத்துப் பேரா இயற்கைப் பெற்றியுறுதல் கூறும் வள்ளுவ மும் எண்ணல் வேண்டும்.

**காஞ்சி**

காஞ்சி என்னும் புறத்திணை, பெருந்திணை என்னும் அகத் திணைக்குப் புறனாகும்.

பலவகைச் சிறப்புகளும் உடையதுதான் உலகம்; எனினும் அது நிலை பெறாத் தன்மையும் பொருந்தியதாகும் என்பது காஞ்சித் திணையின் பொருள்.

*"பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்*
*நில்லா உலகம் புல்லிய நெறித்தே"*

என்பது நூற்பா (1024). புல்லுதல் பொருந்துதல்.

நில்லா உலகம் என்றது, அழுது அரற்றுதற்குக் கூறியதா?

உலகியல் உண்மை புரிந்து, உரமாகக் கடனாற்றுதற்கும், நில்லா உலகில் நிலைபெற வாழமுடியும் என்பதைப் புகழால் நிலை நாட்டுதற் குமேயாம். "மன்னா (நிலையா) உலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந் தனரே" என்னும் புறமும், "ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்" என்னும் அறமும் தெளிவிக்கும்.

காஞ்சி, உலகியல் அறிவு முதிர்நிலை என்பதும், பெருந்திணை காமமுதிர்நிலை என்பதும் எண்ணின் புறனாதல் புலப்படும்.

மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமை என்பது முதலாகக் காடு வாழ்த்து ஈறாகக் காஞ்சித்திணை இருபது துறைகளையுடையது. முன்னவை பத்தும் ஒப்பிலாச் சிறப்பும், பின்னவை பத்தும் நிலையாமைக் குறிப்பும் கூறுவன.

மாற்றுதற்கு அரியது இறப்பு. அதனைச் சிறப்பு ஆக்குதற்குக் கூடும். அதனாலேயே இறப்பு என்பதற்குச் 'சிறப்பு' என்னும் பொருளும் நம் முந்தையர் கண்டனர். மாண்டார் என்பதும் அப் பொருளதே. சிறப்புடன் இறக்கும் இறப்பே இறப்பு (மற்றவை சாவு) என்றனர். இதனை,

> "மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமை"

என்றார் ஆசிரியர்.

அமர்க்களம் சென்றான் ஒருவன், அருங்கடனாற்றி அமர்க்களத்தே அமரன் ஆகின்றான். குடிமையராலும் நாட்டவராலும் தெய்வமாகக் கல்நட்டு, பீடும் பெயரும் எழுதப்பட்டு, வழிபாடு செய்யப்படுகின்றான். வானுறையும் தெய்வ நிலையை வையகத்தே பெற்றுவிடுகிறான். இது பெருமை; பிறர் பெறாப் பெருமை; கூற்றுக்கும் அஞ்சாத பெருமை என்பதன் வழி மொழிதலாக,

> "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமை உடைத்திவ் வுலகு"

எனவரும் குறளை எண்ணினால் 'பெருமை' ஆளப்பட்ட வகை தெரிந்து பொருள் புலப்பாடும் ஆகும்.

நிலையாமை போலிமையாகத் திணிக்கப் படாமல், அவரவரே அறிவு முதிர்வு, அகவை முதிர்வு. பட்டறிவு என்பவற்றால் தாமே உணர்ந்து போற்றும் வகையில் அமைந்தமை, தமிழியல் நெறியாம். அதனாலேயே போர்க்களம், இறப்பு, அழிவு, வெற்றி என்பவை யமைந்த புறத்திணையின் முடிநிலையாகிய காஞ்சித் திணையின் திரட்டு என நிலையாமை வைக்கப் பட்டதாம்.

நாலடியார், இளமை நிலையாமை யாக்கை நிலையாமை செல்வம் நிலையாமை என்னும் நிலையாமைகளை முதற்கண் கூற, திருக்குறளோ படிமான வளர் முறையில் தொல்காப்பிய நெறி போற்றி இல்லற முதிர்வில் அருளுடைமை தொடங்கி வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல் லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என வரிசைப் படுத்தியமை உணர்ந்து போற்றத்தக்கது.

கணவன் இறக்க மனைவியும் உணர்வொன்றி இறத்தல் '**மூதானந்தம்**'.

காதலியை இழந்தமை '**தபுதாரம்**'

காதலனை இழந்தமை '**தாபதம்**'

கணவனொடு மனைவி தீப்புகுதல் '**முதுபாலை**'

அமர் மேம்பட்டு அமரனாகிய மகனொடு முடியும் தாய் நிலை '**தலைப்பெயல் நிலை**'

எவரெவர் முடிந்து சென்றாலும் முடிந்து போகாமல் கிடக்கும் சுடு - இடுகாட்டினை வாழ்த்தும் வாழ்த்து '**காடு வாழ்த்து**'

இன்னவை காஞ்சித் திணைத் துறைகளுள் சில.

**பாடாண் திணை**

பாடாண் திணை என்னும் புறத்திணை, கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனாகும்.

கைக்கிளையின் ஒருபாற் கூற்றுப் போண்றதே, புரவலர்ப்புகழும் புகழ்ச்சி ஆதலின், அதன் புறன் ஆயிற்று.

> "அமரர்கண் முடியும் அறுவகை யானும்
> புரைதீர் காமம் புல்லிய வகையினும்
> ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப"

என்பது பாடாண் பற்றிய இலக்கணத்தின் ஒருபகுதி.

அமரர்கண் என்றதும் பழைய உரைகாரர்கள் விண்ணேறித் தேடினர். மண்ணின் மக்களுக்கு மண்ணின் மைந்தரால் தந்த மண்வள நூல் என்பதை மறந்து விட்டனர். எனினும் **எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேல் மிதக்கும்** என்பதுபோல் **நாவலர் பாரதியார்** வழியாக உண்மை கண்டது தமிழ் உலகம். தொடர்ந்து குழப்புவதே குறியாகி எழுதினாரும் உளர் எனினும் தகவுரையை ஏற்றுப் போற்றினாரும் உளர் என்பது தொல்காப்பியத் தோன்றல் **பேரா. இலக்குவனார், பேரா. வெள்ளை வாரணனார்** முதலியவர்களால் வெளிப்பட்டது.

"அமரர் என்னும் சொல் அமர் என்பதன் அடியாகப்பிறந்த பெயராய்ப் போர் செய்தலையே தமக்குரிய தொழிலாகக் கொண்டு வாழும் வீரரைக் குறித்து வழங்கும் தனித் தமிழ்ச் சொல்லாம்"

"போர் மறவர்பாற் சென்று அமைவனவாக முன் இவ்வியலில் விரித்து விளக்கிய வெட்சி முதல் காஞ்சி யீறான புறத்திணை வகைபற்றிய ஆறுமே அமரர்கண் முடியும் அறுவகை எனப்பட்டன என்பார் **நாவலர் சோம சுந்தர பாரதியார். இக் கருத்தே ஆசிரியர் தொல்காப்பியனார் கூற்றுக்கும் சங்கத்தொகை நூல்களாகிய தமிழ்ச் செய்யுட்களின் அமைப்புக்கும் ஏற்றதாகும்**" என்பார் வெள்ளைவாரணர் (தொல் காப்பியம்; தமிழிலக்கிய வரலாறு பக்.108-9).

பாடாண் துறையில் இயற்பாவொடு இசைப்பாவும் (வண்ணமும்) வரப்பெறல் உண்டு. தலைவனை முற்படுத்திப் பாடாண்பாடும் புலவர் தம்மைச் சார்ந்தாரை உட்படுத்தி, 'வண்ணம் பாடுவம்' என்பது கண்கூடு.

மக்கட் காதல் பாட்டு, தெய்வக் காதல் பாட்டாகவும் வரும் என்பதை,

"காமப் பகுதி கடவுளும் வரையார்"

என்பதன் வழியே சுட்டுவார் ஆசிரியர் (1029). தேவார, திருவாசக, திருவாய் மொழி முதலாம் இறைநூல்களிலும் கோவை நூல்களிலும் இக் காதல் பாக்களைக் காணலாம்.

குழந்தைகள் மீது கொண்ட பேரன்பால் பாடுதலும் உண்டு. ஆழ்வாரின் கண்ணன் பிள்ளைத் தமிழும், பாரதியாரின் கண்ணன் பாட்டும், பிள்ளைத் தமிழ் நூல்களும் இதன் விரிவாக்கமாம். காதல் தழுவிய இப் பாடல்களில் ஊரும் பேரும் பிறசிறப்பும் கூறுதல் உண்டு. ஏனெனில் அகப் பாடலில் அவ்வுரிமை இல்லை ஆதலால், இதனைக் குறிப்பிட்டுக் காட்டினார் (1031). இவையெல்லாம் வழக்கொடு கூடியவை என்பதை, "வழக்கொடு சிவணிய வகைமை யான" என்றார் (1032, 1033).

கடவுள் வாழ்த்துப் பாடும் வழக்கம் பண்டே இருந்தமையாலும், அவ் வாழ்த்துடன் தொடர்புடையவை சில வாழ்த்தப் பெற்றமையாலும் அவற்றைத் தொகுத்து வாழ்த்தினை நான்காக்கிக் கூறினார்.

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்பது அது (1034).

கொடிநிலை கந்தழி வள்ளி என்பவை குற்றமற்ற சிறப்பினவை. இவை மூன்றும் கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வருவன என்பது இதன் பொருள்.

கொடி என்பது வளைவுப் பொருளது. ஆதலால், படர்கொடி, ஆடு கொடி, பாம்பு, மின்னல் முதலிய பொருள்களைத் தரும்.

கந்தழி என்பது கந்து அழி என்னும் இருசொல் இணைவு. கந்தாவது கட்டுத்தறி. கட்டுத் தறி, நெய்வார் கருவிக்கு அமைந்த நிலைத் தூண்; மாடு கட்டுதற்கு அன்றி யானை கட்டுதற்கும் தறியுண்டு; கட்டிவைக்கும் இடம் கட்டுத் துறை; கட்டிவைக்கப் பயன்படும் தூண் கட்டுத்தறி. அழி என்பது அழிப்பது. கட்டினை அழிப்பது (அ) கட்டற்றது கந்தழி.

வள்ளி என்பது வளம், வளமை. கொடி ஒன்று வள்ளி; கொடை யாளர் வள்ளியோர்; வள்ளி, வளத்தக்காள் ஆகிய இல்லாள்.

கடவுள் வாழ்த்து என நூலொடு பாடப்பட்டுக் கிளர்ந்த நூல் நாமறி அளவில் முற்படக் கிடைத்தது திருக்குறளே. அதில் கடவுள் என்னும் சொல் ஆளப்பட வில்லை எனினும், கடவுள் வாழ்த்தென அதிகாரப் பெயர் உண்டு. அதிகாரப் பெயர் தவறாமல் மூலப்படி, உரைப்படி எல்லாவற்றிலும் இருந்துள்ளமை அறிதலால் நூலொடு கூடியமைந்ததேயாம்.

தொகைநூல் கடவுள் வாழ்த்தோ பாட்டின் கடவுள் வாழ்த்தாகிய திருமுருகாற்றுப்படையோ தொகுத்தார் அடைவில் அமைந்தவை.

இவ் வகையால் திருக்குறளை முன்வைத்து, கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத் தல் என்னும் நான்கு அதிகார வரிசையொடு ஒப்பிட்டுக் காணின் பொருந்த லாம் எனத் தக்க தெளிவு உண்டாகின்றது.

கொடி நிலை என்பது மின்னுக் கொடி என்னும் இளங்கோவடிகள் ஆட்சியால் மழையொடு தொடர்புறுதல் அறியலாம். ஆகலின், வான் சிறப்பு எனலாம்.

கந்தழி என்பது பற்றற்றது என்னும் பொருள் தருதலால் பற்றற்ற நீத்தார் பெருமை அக் கந்தழி ஆகலாம்.

வள்ளி, வளமிக்க தன்மையொடு, உளமிக்க தன்மையும் ஒன்றிய அறன் வலியுறுத்தலாகக் கொள்ளலாம்.

இவ் வகையால் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கும் முறையே, தொல்காப்பியர் கூறிய கடவுள் வாழ்த்து, கொடி நிலை, கந்தழி, வள்ளி என்பவற்றை உட்கொண்ட அமைப்பு ஆகலாம் என்பது. இதனை அருமையாக எடுத்துக் காட்டியவர் பேரா. **மு. இராகவ ஐயங்கார்** (பொருளதிகார ஆராய்ச்சி. பக். 143). இவ்வாறு அமைதி கொள்ளல் தகுமோ எனின், ‘தொல்காப்பியர் வழியில் திருவள்ளுவர்’ என்னும் விரி கட்டுரை காணல் தெளிவாம். ‘நூல்: திருக்குறளுக்கு உரை திருக்குறளே’ என்பது; எம் நூல்.

**ஒரே ஒரு குறிப்புச் சான்று**

*'அறம் முதலாகிய மும்முதற்பொருள்' என்னும் தொல்காப்பியமே, 'முப்பால்' முன்னோடி.*

**ஒரு தெளிவு**

*புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் உரிப்பொருள் வைப்பு முறை, தொல்காப்பியர் உரைத்தது (960). திருக்குறள் காமத்துப்பால் இவ்வைந்து உரிப்பொருள்களையே மாறா வரிசையில் வைத்து, ஒன்றற்கு ஐந்து அதிகாரங்களாக, ஐந்தற்கும் இருபத்து ஐந்து அதிகாரங்களைக் கொண்டு அமைகின்றது. ஒப்பிட்டுப் பார்த்து உண்மை காண்க.*

*உறக்கம் கொள்வதற்குப் பாடும் பாட்டு, **கண்படைநிலை**.*

*உறக்கம் நீங்குவதற்குப் பாடும் பாட்டு, **துயிலெடை நிலை**.*

*பிறந்தநாள் கொண்டாடுதல், **பெருமங்கலம்**.*

*முடிபுனைவிழா, **மண்ணுமங்கலம்**.*

*பரிசில் பெற்று விடை பெறுதல், **பரிசில் விடை**.*

*வாழ்த்துக் கூறுதல், **ஓம்படை**.*

*பாடாண் திணையின் துறைகளுள் சில இவை.*

***மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட இவ் வழக்கங்கள் புதுப் பொலிவுடன் இன்றும் நிகழ்தலை எண்ணிப்பார்க்கலாமே.***

*மேலும் **வாயுறை வாழ்த்து செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து** என்பனவும் பாடாண் துறைகளே. அவற்றைச் செய்யுளியலில் காணலாம்.*

*யாம் பெற்ற பேற்றை நீவிரும் பெறுக என வழிகாட்டும் '**ஆற்றுப் படை**' என்பதும் இப் பாடாண் துறைகளுள் ஒன்றேயாம். அது,*

*"ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்*
*பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்*
*சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்"*

*என்பது (1037).*

*செல்லும் வழியில் தம் எதிரேவரும் பாணர் கூத்தர் முதலோர்க்கு அப் பாணர் கூத்தர் முதலோர், யாம் இவரைக் கண்டு இவ்வளம் பெற்றேம்; நீவிரும் சென்று பெறலாம்; செல்லும் வழி ஈது; சென்று பயன் கொள்க என வழிப்படுத்துவது ஆற்றுப்படை யாகும்.*

*பத்துப் பாட்டுள் செம்பாதி ஆற்றுப்படை என்பதால் அது போற்றப் பட்ட வகை புலப்படும்.*

அந் நாள் **நிலநூல், சுற்றுலா நூல், வரலாற்று நூல், வழிகாட்டி நூல், மக்கள் தொடர்பு நூல், மாந்த நேய நூல்** என்பனவாக ஆற்றுப் படை விளங்கியமை புலப்படும்.

மேலும் **கலையே வாழ்வாக இருந்தவர் நிலை, அவர்தம் கருவி அமைப்பு, கலைத் திறம், வளம்பெற்றபின் வைத்து வாழத் தெரியாமை, நிலைப்பிலா வாழ்விலும் நிலைத்த குடும்பமும் சுற்றமுமாக வாழ்ந்த வாழ்வு என்பனவும் புலப்படும்.**

சான்றாகத் திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடு கடாம்) என்பவற்றை நோக்குக.

பாடுபுகழ்பெற்ற மன்னரும் தாம் பாணரும் கூத்தருமாகப் பாடினர் எனின், அவ் வாற்றுப் படையின் செல்வாக்கு தானே விளங்கும்.

"போக்குக் கற்றவன் 'போலீசுக்' காரன் (போக்கற்றவன்)

வாக்குக் கற்றவன் வாத்தியாயன்" (வக்கற்றவன்)

என்பது புது வழங்குமொழி. இப் போக்குக் கற்றவனும் வாக்குக் கற்றவனுமாகத் திகழ்ந்தவன் ஆற்றுப்படைக் கலைவல்லான் எனல் சாலும்!

### மெய்ப்பாடு

மெய்யின்கண் உண்டாகிய உணர்வு, பிறர்க்குப் புலப்படும் வகையால் வெளிப்படுவது, மெய்ப்பாடு ஆகும்.

"மெய்ப்பாடாவது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்" என்பார் பேராசிரியர்.

உள்ளத்து நிகழ்வது, கருத்துப் பொருள்; அது முகம், கண், காது, கால், கை, வாய், மெய் (உடல்) முதலியவற்றின் அசைவு, துடிப்பு, நடுக்கம், நிறமாற்றம், தடுமாற்றம், மயக்கம், மகிழ்வு, கிளர்ச்சி, துள்ளல் - இன்ன வற்றால் பிறர் அறியத் தோன்றும். இத் தோற்றமே அகவுணர்வின் வெளிப்பாடு ஆகும்.

குறிப்பறிதல், குறிப்புணர்தல், குறி கூறுதல், கோள் தாங்கி (கோடாங்கி) கூறல் என்பன வெல்லாம், மெய்ப்பாடு உணரவல்லார் தம் தேர்ச்சியினால், பிறரை ஒப்புக்கொள்ள வைப்பனவாம். **காப்பியக் கவின், மெய்ப்பாட்டில் தங்கியுளது** எனலாம்.

இயலினும் இசையும், இசையினும் கூத்தும், பொது மக்களை யன்றிப் புல மக்களையும், இளையர் முதுவர் ஆகியோரையும் ஒருங்கே கவர்தல் மெய்ப்படக் காட்டும் சிறப்பாலேயாம்.

'நாடகமே உலகம்' என்பது மாறித் 'திரையே உலகம்' 'காட்சியே உலகம்' என ஆகிய காலம் இது. 'ஆடுநர்க் கழியும் உலகம்' என மெய்யியல் காட்டியது பழந்தமிழ்ப் புறநானூறு. ஆடிச் செல்வாரைப் போல-வேடமிட்டு ஆடிச் செல்வாரைப் போல-போவது உலகியல் என்பது அது.

கூனியாக நடித்தவன் மீது, செருப்பை எடுத்து எறிந்தான் பார்வையன் ஒருவன். "இதுவரை எனக்குக் கிடைத்த எப் பரிசும், இப் பரிசு போலாகாது" என்று பாராட்டி, அடையாளப் பொருளாக்கிக் கொண்டான் கூனியாக நடித்தவன். அவன் மெய்யாக உணர்ந்து நடித்ததுமன்றிப் பார்ப்பவன் தன்னையும் தன்னை மறந்துபோகச் செய்து விட்டான் அல்லவா! மெய்ம் மறந்து நோக்கச் செய்து விடுவது, மெய்ப்பாடு ஆகும் நிலை இது.

மெய்ப்பாடு கலையாக இல்லாமல், வாழ்வாகி விடும் போது, எத்தனை பேரை நம்பி ஏமாறச் செய்ய - இழப்புக்கு ஆளாக்க முடிகின்றது என்பதை நாம் கேளாமலும் காணாமலும் இல்லையே. துறவர் போலிமை, கூடா ஒழுக்கமாவது இது. மெய்ப்பாட்டு விளக்கம், உயர்கலை விளக்கம்! ஆனால், அவன் வாழ்வில் மெய்யனாக இல்லாவிடில், பெருந் தீமையாம் என்க.

தொல்காப்பியர், மெய்ப்பாடுகள், அவை தோன்றும் நிலைக் களங்கள், அகவாழ்வு புறவாழ்வு இரண்டிலும் மெய்ப்பாட்டின் பங்களிப்பு, ஆகாதமெய்ப்பாடுகள் இன்னவை பற்றி ஆழமாக எண்ணிக் கூறுகிறார். அவர்தம் நுண்மாண் நுழைபுலமும், கலைத்துறைக் கவினும், கட்டமை கோப்பும் நம்மை வியப்பில் ஆழ்த்தும் வகையில் இயற்றியுள்ளார்.

சுவைப் பொருள், அதனை நுகரும் பொறியுணர்வு, அது உள்ளத் துப்பட்ட போது தோன்றும் குறிப்பு, அக் குறிப்பு மெய்யில் தோற்றமுறும் காட்சி என ஒரு மெய்ப்பாடு நான்காகும்.

மெய்ப்பாடு நூலோரால் எண்வகையாக உரைக்கப்படும். அவை, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன.

இவ் வெட்டையும், மெய்ப்பாட்டு நிலைக்களம் நான்கொடும் பெருக்கிக் காணின் முப்பத்து இரண்டாம்; இவற்றைச் சுவையும் சுவைப் பொருளும் ஒன்றாக்கிப் பதினாறு எனவும், உள்ளக் குறிப்பும் உடற் குறிப்பும் ஒன்றாக்கி எட்டு எனவும் கொள்வதும் உண்டு. இவற்றைக் கூறி மெய்ப்பாட்டியலை விளக்குகிறார் தொல்காப்பியர் (1195 - 1197).

முதல் மெய்ப்பாடாக நகைச்சுவையையும் இறுதி மெய்ப்பாடாக உவகைச் சுவையையும் தொல்காப்பியர் கூறுதல், **அவரின் பழுத்த**

**உளவியல் தேர்ச்சி காட்டும்**. இத் தேர்ச்சியின் வயப்பாடே, திருவள்ளுவர் ‘நகையும் உவகையும் கொல்லும் சினம்’ என முதலும் முடிவுமாகியவை இணைத்த இணைப்பாம்.

ஒவ்வொரு மெய்ப்பாடும் தோன்றும் காரணங்களை நான்கு நான்காகக் கூறுகிறார் தொல்காப்பியர்.

*“எள்ளல் இளமை பேதைமை மடனென்று*
*உள்ளப் பட்ட நகை நான்கு என்ப”*

என்பது நகைச்சுவைக்குக் காரணமானவற்றைக் கூறியது (1198).

எள்ளலாவது இகழ்தல்; எள்போல் சிறிதாக எண்ணிக் கூறுதல்.

இருவர் இருந்தனர் ஓர் இருக்கையில், இடையே இருந்த இடத்தில் ஒருவன் வந்து அமர்ந்தான். அவன் அழுக்குடை கண்டு “நீ முட்டாளா, மடையனா?” என்றான் இருந்த ஒருவன். “இருவருக்கும் இடையே இருப்பவன் யான்” என்றான். எள்ளல், மீட்டோர் எள்ளலும் ஆகியது இது.

நடக்க முடியாமல் தத்திப்பித்தி நடக்கும் குழந்தை நடை, அக் குழந்தை பேசும் மழலை நகைச்சுவைக்கு இடமாகி இன்பம் பயத்தல் கண்கூடு. ஆரியர் கூறும் தமிழ் நகைச்சுவைக்கு எடுத்துக்காட்டாதலைக் கூறும் செயிற்றியம். அதனை உரையில் காட்டுவார் பேராசிரியர். ஆங்கிலர் பேசும் தமிழும் அத்தகையதே. மொழிநிலையில் அவர்கள் இளமையராகத் தோன்றுதலே நகைக்கு இடம் தந்தது என்க.

### பேதைமை

பேதைமைத் தன்மை; அறியாத்தனம். அதனைக் காணும்போது நகைச் சுவை உண்டாகும்.

ஒருத்தி கைக்குழந்தை வைத்திருந்தாள்; அவள் கூந்தல் அவிழ்ந்து விட்டது. முன்னே அவள் அக்கை இருந்தாள். அவர்களுக்கு இடையே ஒருதூண்! தூணின் ஒருபக்கம் இருந்து கொண்டு குழந்தையை நீட்டினாள் தங்கை. அக்கை, தூணின் இருபக்கமும் இரண்டு கைகளையும் நீட்டிக் குழந்தையை வாங்கினாள். இந்தக் காட்சியை எண்ணின் நகைப்பு வராமல் போகுமா? நேரிலே கண்டால்... ‘யான் கண்டது இது’. மூன்றாமவர் குழந்தையை வாங்கியபின், ‘ஏதோ தோன்றியதுபோல்’ மூவரும் நகைத்தனர்..

### மடமை

மடமை என்பது அறிவுறுத்தக் கேட்டாலும், தான் கொண்ட கருத்தை மாற்றிக் கொள்ளாமல், அறிவுறுத்துவானையும் அறியாத வனாகக் கருதுதல், “காணாதாற் காட்டுவான் தான்காணான்; காணா தான், கண்டா னாம் தான்கண்ட வாறு” என்பது போன்ற தன்மை (குறள். 849)

அறிவுறுத்தியதைக் கேட்டு அதை விடாப்பிடியாகக் கொள்ளும் 'மடம்' ஓர் உயரிய பண்பியல். மகளிர்க்கு உரியதாகவும், துறவர்க்கு உரியதாகவும் அமைந்த மடம் அது. முன்னது தன்மை, பின்னது அத் தன்மையர் - உறையும் இடம்.

இம் மெய்ப்பாடுகளுக்கெல்லாம் சங்க இலக்கியங்களில் இருந்து எடுத்துக்காட்டு வழங்குகின்றனர் இளம்பூரணரும் பேராசிரியரும். சங்க இலக்கியம் வாழ்வியல் இலக்கணமாக இருப்பதன் சான்று அது. அதன் இலக்கணம் தொல்காப்பியத்தில் உண்டு என்றால், அதன் பொருள் என்ன? தொல்காப்பியர்க்கு முன்னரே பரவிக் கிடந்த வழக்காறும் இலக்கியங் களும் இலக்கணங்களுமே அவர் தொகை நூலுக்கு மூலப்பொருள்களாக இருந்தன என்பதை நோக்கத் தமிழ்மாந்தர் தொன்மையும் கலைச் சிறப்பும் பண்பாட்டு முதிர்வும் புலப்படும். **செயிற்றியத்தில்** இருந்து **இளம்பூரணர் காட்டும் பாட்டு அதனை இழந்து விட்ட நம்மை வாட்டவே செய்யும்**.

நகைக்கு மூலமாம் எள்ளல் முதலியவற்றைத் தம் எள்ளல் அடியாக வும், பிறர் எள்ளல் அடியாகவும் ஒன்று இரண்டாதலை விளக்குவர் உரையாசிரியர்கள். அவ்வாறே தம் இளமை, பிறரிளமை எனக் கூறி எள்ளல் முதலிய நான்கையும் எட்டாக்குவர். உரிய சான்றும் காட்டுவர்.

**அழுகை**

அழுகைச் சுவை, இளிவு (இழிவு), இழவு, அசைவு (முன்னிருந்த நிலையில் தாழ்தல்), வறுமை என்பவற்றின் வழியாகத் தோன்றும் (1199). இழிவு - இகழ்ந்து பேசுதலால் உண்டாவது; இழிவு - இழப்பின் வழிவரு வது; அசைவு - பழம் பெருமை, மதிப்பு ஆயவை குன்றல்; நிலைதாழ்தல்; வறுமை, துய்ப்புக்கு வழியில்லாமை;

"பட்ட இழிவும் பழித்த இழிவும் பக்கம் பக்கம் எண்ணின் எண்ணுவார்க்கு 'இளி'வின் அழுகை புலப்படும். இழவின் அழுகையே, 'ஒப்பாரி'; 'கையறுநிலை'ப் பாடல்கள். அசைவின் பாடே, பாரிமகளிரை வருத்திக் கிளர்ந்த பாட்டு!

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே"

என்பது அது (புறம்.112).

வறுமை அழுகைப்பிழிவு,

"இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு"

என்பது (குறள். 1048). அசைவு என ஒன்று இருந்தாலும் நான்கும் அசைப்பனவேயாம்.

விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்து அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்ததும், அழுகையொடு ஒத்ததாகலின் இளிவரலையும், தான் இளிவந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின் இளிவரலின் பின் வியப்பையும், வியப்புப் பற்றியும் அச்சம் பிறத்தலின் அதனை அடுத்து அச்சத்தையும், அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதன் பின்னும், அவ் வீரத்தின் பயனாகிப் பிறர்க்குவரும் வெகுளியை அதன்பின்னும், வெகுளிக்கு மறுதலையாகவும் ஓதுதற்குச் சிறந்ததாகவும் முதலாவது சொல்லிய நகைக்கு இயைபானதாகவும் அமைந்த உவகையை இறுதியிலும் வைத்தார் என வைப்பு முறை காட்டுவார் **பேராசிரியர்**.

நகை போலவே அழுகை முதலியனவும் தன்னிடத்துத் தோன்று தலும் பிறரிடத்துத் தோன்றுதலும் என எட்டாக்குவார் பேராசிரியர்.

இளிவு - பிறர் இகழ்விற் பிறக்கும் அவலம். 'இழிவே' என்னும் பாடம் சிறக்கும் என்பார் **நாவலர் பாரதியார்**. இளிவரல், மானம் குன்ற வருவது. "இளிவரின் வாழாத மானமுடையார்" எனவும் "இடுக்கண் வரினும் இளிவந்த செய்யார்" எனவும் வருதலான் இப் பொருட்டாதலை அவர் விளக்குவார். இளிவு, பழிபடு குற்றமின்றியும் வரும் ஆதலால் தன்னெஞ்சு சுடுதல் இன்மையால் வாழ்வு வெறுப்பு விளையாது. இளிவரல் உயிர்வாழ ஒல்லாமல் குன்றவரும் நிலையிழிவைக் குறிக்கும் என வேறுபாடும் காட்டுவார்.

இளிவரல், மூப்பு பிணி வருத்தம் மென்மை என்பவற்றால் உண்டாகும் (1200).

முற்றத் தளவும் போக முடியாத முதுமையின் வாழ்வை வெறுக்கும் தாய் நிலையும், பசிப்பிணிக் கொடுமையில் மனைவியும் மக்களும் வருந்தும் வருத்தமும் தம் நொய்ய வாழ்வும் எடுத்துக்காட்டும் ஒரு பாட்டு (புறம்.159).

இளிவரல் விளைவு விளக்கம்:

*"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்*
*ஆளன் றென்று வாளில் தப்பார்*
*தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய*
*கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்*
*மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்*
*தாமிரந் துண்ணும் அளவை*
*ஈன்ம ரோஇவ் வுலகத் தானே"*

என்னும் சேரமான் கணைக்கால் இரும்பொறை பாட்டும் (புறம். 74). "சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தா என்று பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக் கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சியபாட்டு" என்னும் குறிப்புமாம்.

**மருட்கை**

> "புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
> மதிமை சாலா மருட்கை நான்கே"

என்பது மருட்கைச் சுவை தோன்றும் நிலைக்களங்கள் பற்றியது (1201). மருட்கையாவது மயக்கம்.

பாராதன ஒன்றைப் பார்த்தல் மயக்கமாக்கும்.

எறும்பு ஒன்று எட்டடி நீளம் ஈரடி உயரத்தில் வரக்கண்டால்,

பூனை வடிவில் யானை ஒன்று நம் முன்வந்தால்,

இறந்து போனான் எனப்பட்ட ஒருவன் நம்முன் நடந்து வரக்கண்டால்

மருட்கை தோன்றாமல் இராதே.

"பறழுக்கு (குட்டிக்கு) வயிற்றில் பையையுடைய கங்காரு, பறக்கு மீன், சிற்றுயிர் உற்றக்கால் பற்றிப் பிசைந்துண்ணும் பூச்செடி, இருதலை, முக்கண் ஐங்கால் அறுவிரல் முதலிய வழக்கிறந்த உறுப்புடைய உயிர்கள் போல்வன" என்பார் **நாவலர்**.

**அச்சம்**

அணங்கு விலங்கு கள்வர் தம் இறை என்பன நான்கும் அச்சச் சுவை நிலைக் களங்கள் (1202).

ஒரு மரத்தில் ஒருவன் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்துவிட அதனை அறிந்தான், அவ்விடத்தை இரவில் போய்க்காண அஞ்சுதலும், சுடுகாட்டுக்குத் தனியே இரவில் சென்று மீள்வதற்கு அஞ்சுதலும், பேய் பிசாசு என்று கற்பிக்கப்பட்டவற்றை நினைத்து அஞ்சுதலும் அணங்குவழி அச்சம். மயக்கும் பெண்பேய் பற்றிய புனைவு பழமை மிக்கது; நீலி கதையோ நெடுங்கதை. இவை நூல்வல்லார் சுட்டும் அளவுக்கும் பெருக்கமாக மக்கள் வழக்கில் இருந்தமை புலப்படும். பேய் பிடித்தல் பேயோட்டல் உடுக்கடி என்பன இன்றும் மறைந்து விடவில்லையே!

புலி விலங்கு ஒன்று நம்முன் நிற்பதாகக் கனவில் காணினும் உண்டாகும் அச்சத்தை நோக்கும் போது நேரில் கண்டால்!

கள்வர் அச்சம் தந்த பாதுகாப்பே கதவு, பூட்டு, அரண், அகழ், காவல், இன்னவை. கள்வன் வலியனா காப்பு வலியதா என்பது முடிவுக்கு வராத பொருளாகவே என்றும் உள்ளது.

இறை - கடவுள், ஆள்வோன், ஆட்சி அலுவலன், தலைவன் ஆய பல பொருள் ஒரு சொல்.

"கடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடே நன்று"

என்பது அரசன் அதிவீரராம பாண்டியன் பாடியது.

ஆசிரியரைக் கண்டு ஓட்டமெடுத்த மாணவர் ஒளிந்தது மட்டு மில்லை; 'கழிந்ததும்' உண்டு. எழுத்தறி வித்தவன் இறைவன் எனப்பட்ட காலம் இருந்தது முதியர்க் கேனும் நினைவில் நிற்கும்.

## பெருமிதம்

பெருமிதம் வேறு செருக்கு (தலைக்கனம்) வேறு. பெருமிதப் பேறும் தலைக்கனத் தாழ்வும் எதிரிடைகள்.

"பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்"

என்னும் குறள் (979) விளக்கம் இரண்டும்.

பெருமிதச் சுவைக்களம்,

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

என்பது (1203).

கல்விச் சிறப்பு, போரில் காட்டியவீறு, வழிவழிப் புகழ், இணையிலா ஈகை என்பவை அவர்க்கே யன்றி அவர் பெற்றோர்க்கும் சார்ந்தோர்க்கும் பெருமிதம் தரும்.

கற்றவன் கொண்ட பெருமை கற்பித்தவனையும் உயர்த்திப் பிடிக்கிறதே! ஆயிரத்தில் ஒரே ஒருவன் பெற்ற கல்விச் சிறப்பு, அவ் வாசிரியன் மதிப்பை நாடறிபொருளாக்கி விடுகின்றதே!

**ஏனாதி** என்னும் பட்டம் தறுகண் வழியாகப் பெற்றமை வரலாறு.

மார்பு கொண்ட வேல் மறு பக்கம் துளைத்துச் செல்ல, புறப்புண் எனக் கொள்ளவும் நேருமே என வடக்கிருந்து உயிர் துறந்த புகழாளன் புகழ், வென்றவனையும் வென்றவன் ஆக்கிற்றே.

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற

*வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே*
*கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை*
*மிகப்புகழ் உலகம் எய்திப்*
*புறப்புண் நாணி வடக்கிருந் தோனே"*

என்னும் புறப்பாட்டு (66).

வ. உ. சிதம்பரனார், வீரபாண்டியக் கட்டபொம்மன் போர்வீறு நாடறிய லாயது, மெய்ப்பாட்டுத் திறத்தாலேயே! அவர்களைப் பற்றிய நூலைக் கற்றார் ஆயிரத்தில் ஒருவரும் அருமையே!

கொடைப் பெருமிதம் என்ன, முல்லை பல்லைக் காட்டிப் பாடியா பாரியிடம் தேர்ப்பரிசு பெற்றது! உடுத்தாது போர்த்தாது என அறிந்தும் மயிலுக்குப் 'படாம்' வழங்கினானே பேகன்! ஏன்? "வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய" எனப் பாடுபுகழ் பெற்றானே குமணன்! இவை **பெருமித மாதல் இவர் வேடமிட்டு நடிப்பார்க்கும் கிட்டுகின்றதே!**

## வெகுளி

*"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற*
*வெறுப்ப வந்த வெகுளி நான்கே"*

என்பது வெகுளிச் சுவை நூற்பா (1204).

காலை வெட்டுதல் கையை வெட்டுதல் கண்ணைத் தோண்டுதல் உறுப்பறை.

குடிகோள் ஒருகுடியையே முற்றாக அழித்தல். ஒருவன் செய்த குற்றத்திற்கு அவனைச் சார்ந்தாரையெல்லாம் கெடுத்தல்.

அலை - அலைக் களித்தல். அலைத்தலோடு அமையாமல் அதற்கு மகிழ்தல். பிறர் துயர்ப்படுதல் கண்டு களிப்புறுதல்.

கொலை: நன்றிமறத்தலையும் கொலையாகக் கண்ட தமிழ் மண்ணில், "கொள்ளும் பொருளிலர் எனினும் தலை துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவுதல்" கலித்தொகைச் செய்தி.

## உவகை

உவகைச் சுவை நான்கும்,

*"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென்று*
*அல்லல் நீத்த உவகை நான்கே"*

என்பது (1205)

"உனக்கு உவகை வந்தால் என்முதுகுக்கு ஒட்டுப் போட வேண்டும்" என்று வருந்திக் கூறினான் தன் நண்பனிடம்.

*'அவன் உவகை இவன் அல்லல்' ஆதல் ஆகாது என்பாராய் உவகையை 'அல்லல் நீத்த உவகை' என்றார். உவகை இருபாலும் இல்லையேல் அஃது உவகையன்றாம். பாலியல் உவகைக்கும் இவ் விருபால் ஒப்பும் இருத்தலைக் கருதியே "உருவு, நிறுத்த காமவாயில்" என்றவர் தொல்காப்பியர் என்பதை எண்ணின் விளக்கமாம். இந் நாள் மருத்துவ அறிவியல் இதனை வலியுறுத்தி ஆய்வு மேற்கொள்ளச் சொல்லுதல் தொல்காப்பிய அறிவர்தம் மேம்பாட்டு விளக்கம் (1219).*

*செல்வ உவகை பரம்பரை உடல் நிறத்தையே மாற்றிவிடுதல் கண்கூடு. புலன் என்பது* **புலமை அன்று; கல்விப்புலமை பெருமிதச் சுவைக் களங்களுள் ஒன்று. இப் புலன் "காதைகள் சொரிவன செவி நுகர் கனிகள்" என்பது போல அறிவு வழியாகத் துய்க்கும் பேறு. அது, அதன் வண்ணமாக அமைந்து மாறிப்புகும் இன்பம். அறிதோறும் அறியாமை கண்டு மகிழும் புலனுகர்வே இவண் புலன் எனப்பட்டதாம்.**

*புணர்வு உயிர்பகுத்தன்ன இருவர் ஒருவராகித் துய்க்கும் இன்பம்.*

*"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு?"*

*என ஐயவினா எழுப்பி அமைந்த விடை காட்டியது குறள் (1103). "உறுதோறு உயிர் தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு, அமிழ்தின் இயன்றன தோள்" என்று உவந்து வினாவியதும் அது (குறள். 1106).*

*உவத்தல் என்னும் சொல்வழியாகப் பிறந்தவையே 'புணர்வு' தொடர்பான மக்கள் வழக்குச் சொற்கள் என்பதை எண்ணிப் பார்ப்பின் உண்மை புலப்படும். புணர்வு நட்புப் பொருளதேனும் இதன்பாற்படுத்தல் கூடாதாம். "ஐம்புலனும், ஒண்டொடி கண்ணே உள" என்பது வள்ளுவம்.*

*விளையாட்டும் இருபாற் பொது. கடலாட்டு, புனலாட்டு, சோலைக் காட்சி, மலைச் செலவு, சிலம்பாட்டம், கும்மி, கோல், குரவை, பந்து என்பன வெல்லாம் உவகைப் பொருளவே ஆம்.*

**அல்லல் தொடராது அமைந்த இன்பங்களே இவை என்பதை இந் நாள் விளையாட்டுக் குழுவினர் எண்ணிப் பார்க்க இதனை அவர்க்குப் படையல் ஆக்கலாம்.**

**சிற்பி கட்டும் கட்டுமானச் சீர்மை** *தொல்காப்பியர் கைப்பொருளாக இருத்தல் இவற்றாலும் மேல் வருவனவற்றாலும் புலப்படும். மேலும்,* **இலக்கண வறட்சி என்பதற்கு இடம் தராமல்,**

*"உள்ளப் பட்ட நகைநான் கென்ப"*

*"விளிவில் கொள்கை அழுகை நான்கே"*

"யாப்புற வந்த இளிவரல் நான்கே"

"மதிமை சாலா மருட்கை நான்கே"

"பிணங்கல் சாலா அச்சம் நான்கே"

"சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

"வெறுப்ப வந்த வெகுளி நான்கே"

"அல்லல் நீத்த உவகை நான்கே"

என முதலடியோடு எதுகை வருவது கருதியது அன்றி, அப் பொருள்களின் உயிர்நாடியாம் அடைமொழிகளை நடைப்படுத்தியுள்ள நயம், **நினைப்பவர் நெஞ்சம் நிலைக்கவைக்கும் நீர்மை யுடையதாம்.**

### மேலும் 32 மெய்ப்பாடு

மெய்ப்பாட்டு நிலைக்களங்கள் முப்பத்திரண்டு கூறிய அவர், அவை அகத்துக்கும் புறத்துக்கும் ஒப்பானவை என வைத்து, அகத்துக்கே அவ்வாறு முப்பத்திரண்டு நிலைக்களங்கள் உண்மையைத் தொகுத்துச் சொல்கிறார். "ஆங்கவை ஒருபா லாக ஒருபால்" எனத் தொடர்கிறார்.

உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு என்றும்,

கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று, கனவு என்றும்,

முனிதல், நினைதல், வெருவுதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு என்றும்,

கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை, வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கம் என்றும்,

நாலெட்டாகப் பகுத்து உரைக்கும் அவற்றை முறையே இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கொடு தழாஅல், தோழியிற் புணர்வு மெய்ப்பாடுகள் என்று கூறுவார் நாவலர்.

### களவு மெய்ப்பாடு

களவிற்குச் சிறந்த மெய்ப்பாடுகள் இவை என்பதை நான்கு நான்காக அறுவகைப் படுத்தி முறையாக அடுத்து ஓதுவார் ஆசிரியர்.

தலைவன் தலைவியர் ஒருவரை ஒருவர் விரும்பி நோக்குதல், தலைவிக்கு நெற்றியில் வியர்வை உண்டாதல், காட்சி இன்பத்தைப் பிறர் அறியாதவாறு மறைத்தல், தமக்கு உண்டாகிய மாற்றத்தைப் பிறர்க்குப் புலப்படாவாறு மறைத்தல் என்பவை நான்கும் முதற்பகுதி. இவைமுறையே புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல், நடுநயம் மறைத்தல், சிதைவு பிறர்க்கு இன்மை எனப்படும்.

உள்ளத்து உணர்வைப் புலப்படாது மறைக்க முயன்றாலும் அவ்வுணர்வு ஓங்கிக் கூந்தலை விரிக்கவும், காதணியைத் திருகிக் கழற்றவும், மற்றை அணிகளைத் தடவவும், உடையை மாற்றி உடுத்தவும் ஆகிய மெய்ப்பாடுகள் நான்கும் இரண்டாம் பகுதியாம். இவற்றை, முறையே கூழைவிரித்தல், காதொன்று களைதல், ஊழணி தைவரல், உடைபெயர்த்து உடுத்தல் என்பார் ஆசிரியர்.

ஒடுங்கிய இடையைத் தடவுதல், அணிந்த அணிகளை மீளவும் திருத்தமாக அணிதல், தன் உளத்தில் இல்லாத வலிமையை இருப்பதாகக் காட்டிக் கொள்ளல், கைகள் இரண்டையும் தலைமேல் வைத்து ஆர்வம் காட்டல் என்பவை மூன்றாம் பகுதி. இவை முறையே, அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல், இல்வலியுறுத்தல், இருகையும் எடுத்தல் என்பனவாம்.

தலைமகன் சிறப்பியல்பைப் பாராட்டுதல், அறியாமை நீங்கி அறிவு மேம்படக் கூறுதல், அலர் எனப்படும் இரக்கமில்லாச் சொல்லை ஏற்று நாணுதல், தலைவன் வழங்கும் உடைமுதலியன கொள்ளுதல் என்பவை நான்கும் நான்காம் பகுதி. இவை முறையே, பாராட்டெடுத்தல், மடந்தப உரைத்தல், ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல், கொடுப்பவை கோடல் என்பன.

நெஞ்சங் கலந்த நிலையை இனி மறையாமல் தோழிக்கு வெளிப் படுத்துதலே நலம் எனத் தலைவி எண்ணுதலும், தலைவனைக் கண்டு மகிழ்ந்த மகிழ்வை வளர்க்கும் வகையால் மறுத்தலும், அவன் காணா வகையில் மறைந்து கொள்ளுதலும், ஒருகால் காணுமாயின் மகிழ்தலும் ஆகியவை நான்கும் ஐந்தாம்பகுதி. இவை முறையே, தெரிந்துடம்படுதல், திளைப்பு வினைமறுத்தல், கரந்திடத் தொழிதல், கண்டவழி உவத்தல் என்பன.

தன்னை அழகுறுத்துவார் செயல் கண்டு மனம் வருந்துதல், தலைவனைப் பிரிந்திருக்கும் தனிமையால் வருந்துதல், வருத்தத்தால் கலக்கமிக உரையாடுதல், எதுவும் செய்யமாட்டாத தன்நிலையை உரைத்தல் என்பவை நான்கும் ஆறாம் பகுதி. இவை முறையே, புறஞ் செயச் சிதைதல், புலம்பித் தோன்றல், கலங்கி மொழிதல், கையறவுரைத்தல் என்பன.

அன்பின் ஐந்தணையின் எல்லை கையற வுரைத்தல் என்பதே.

### தனிமை மெய்ப்பாடு

தலைவனைப் பிரிந்த தனிமையில் தலைவியின் மெய்ப்பாடுகளாக இருபதை எண்ணுவார் ஆசிரியர்.

*இன்பம் தருவன வெல்லாம் துன்பம் தருவனவாகத் தோன்றுதலால் அதனை வெறுத்தல், தனிமைத் துன்பம் தாங்காமல் புலம்புதல், உருவெளித் தோற்றம் கண்டு வருந்துதல், கூட்டத்திற்கு இடையூறானவற்றை எண்ணுதல், பசி வருத்தினும் தாங்கியிருத்தல், வண்ணம் மாறுதல், உணவு குறைதல், உடம்புமெலிதல், உறக்கம் கொள்ளாமை, கனவு கண்டு மயங்குதல், மெய்யையும் பொய்யாகக் கொள்ளல், பொய்யையும் மெய்யாகக் கொள்ளுதல், ஐயமுறுதல், தலைவன் உறவினரை விரும்புதல், அறத்தைப் பழித்துரைத்தல், உள்ளகம் உளைதல், எப்பொருளைக் காணினும் அப் பொருளைத் தலைவனொடு ஒப்பிட்டுக் காணல், ஒப்பிய வகையால் உவப்புறல், தலைவன் பெயர்கேட்க அவாவுதல், கலக்கமுறல் என்பவை அவை (1216). இவை யெல்லாம் களவு நிலை மெய்ப்பாடுகள்.*

**கற்பு மெய்ப்பாடு**

*கற்புநிலை மெய்ப்பாடுகளை அடுத்தே கூறுகிறார் ஆசிரியர் (1217, 1218). களவு வழித்தே கற்பு ஆகலின் அவற்றின் இறுதியும் முதலும் இணைத்துக் காண வேண்டியவையாம்.*

*களவுக் கூட்டத்திற்குத் தடையுண்டாய போது இடித்துரைத்தல் வெறுப்பை மனத்தில் நிலைநிறுத்தல், தமர்க்கும் பிறர்க்கும் அஞ்சுதலால் தலைவனைக் காணாது விலகல், அவன் குறிவருதலை மறுத்தல், தூது சொல்லுமாறு தான் விரும்புவன நோக்கிக் கூறுதல், உறக்கமும் சோர்வு மாக இருத்தல், காதல் மிகுதல், உரையாடாமை என்பவை மனம் அழியாத கூட்டத்திற்குரிய மெய்ப்பாடுகள்.*

*மேலும், தெய்வத்திற்கு அஞ்சுதல், உயர்ந்த அறம் ஈதெனத் தெளிதல், இல்லாததையும் இட்டுச் சொல்லிச் சினம் கொள்ளல், உள்ளதாம் உயர்வையும் வெறுத்துரைத்தல், இரவு பகலெனக் கூடியிருந்ததை எண்ணி மகிழ்தல், அவற்றை மறுத்திருத்தல், அருள்மிகக் கொள்ளல், அன்புப் பெருக்காதல், பிரிவு தாங்காமை, தலைவனைப் பற்றிப் பிறர் கூறிய பழிச் சொல் கேட்டு வருந்தல் என்பனவும் அவற்றொடு கூடிய மெய்ப்பாடுகளாம்.*

*காதலிருவர்க்கும் வேண்டிய ஒப்புமை பத்தும் முன்னே அகத்திணை இயலில் கூறப்பட்டன. அவை, "பிறப்பே குடிமை" முதலியன.*

**ஆகாமெய்ப்பாடு**

*காதலுக்கு ஆகாத மெய்ப்பாடுகள் இவை என்பதை,*

*"நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி,*
*வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை*
*இன்புறல், ஏழைமை மறப்போடு, ஒப்புமை,*
*என்றிவை இன்மை என்மனார் புலவர்"*

*என்றார் (1220).*

*நிம்பிரி - பிழையைப் பொறுத்துக் கொள்ளாமை; கொடுமை அறனெறி அழிப்பு. வியப்பு - தன்னைப் பெருமையாகப் பாராட்டல்; புறமொழி - புறங்கூறுதல்; வன்சொல் - வடுவாக்கும் சொல்; பொச்சாப்பு - மறதி; மடிமை - சோம்பல்; குடிமை இன்புறல் - குடிப் பெருமை பேசி இன்புறுதல்; ஏழைமை மறப்பு - நிலையில் தாழ்வெனக் கருதாமை; ஒப்புமை - ஒப்பிட்டுக் காட்டிக் கூறுதல்; இன்மை என்பது இவையெல் லாம் இல்லாமை என்னும் பொருளதாம்.*

**ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்காது வீம்பு காட்டும் குடும்பம் கெட்டுத் தொலைதல் மிகுதியாதலால் அது தலைப்பட வைக்கப்பட்டது போலும். அவ்வொன்று கைவரின் மற்ற தீயவை பலவும் ஒழிதல் உண்மையாம்.**

***தற்பெருமை கொள்வார், தம்மைச் சிறுமைப்படுத்தத் தாமே கட்டியங் கூறுபவர் ஆவர். பொதுவாழ்வுக்கே தற்பெருமை ஆகாது எனின் குடும்ப வாழ்வுக்கு அதன் வாடையும் அடித்தல் ஆகாது.***

*புறமொழியாவது புறங் கூறுதல்* **இழிவுமிக்கது**. *குடும்ப* **இழிவை ஊரிழிவாக ஆக்கும் கொடுமைப் பழிவழியது** *அது. அதனைத்*

> *“துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்*
> *என்னைகொல் ஏதிலார் மாட்டு”*

*என வினாவும் குறள் (188).*

*வன்சொல் சுடுசொல்,* **நாகாத்தல்; குடும்ப நலங்காத்தல்**.

*தீயினால் சுட்டது ஆறினும் ஆறாதது வாயினால் சுட்டது!*

*குடிப் பெருமை கூறுவது - பிறந்த குடிப்பெருமை கூறுவது, புகுந்த குடிப் பழியாகக் கொள்ளப்பட்டுக் கேடாதல் பெருவழக்கு. பிறந்த குடிப்பெருமை, புகுந்த குடியில் நடந்து கொள்ளும் நடையாலேயே சிறக்கப் பெற வேண்டுமேயன்றித் தான் கூறுதலால் இல்லை என்பதை உணர்தல் இல்லறச் சீர்மை. ஏழைமையாகிய நிலை சூழலால் ஏற்படுவது. நிலையில் தாழ்வு வறுமை ஏற்படல் பொதுவானது. அது குறித்து எங்கள் குடும்பம் இப்படிப் பட்டது எனத் தாழ்த்திக் கொண்டு ஒடுங்கி இருப்பதும் ஒப்புரிமை இல்லறச் சிறப்புக்கு உதவாது.*

*மனைவியைக் கணவன் இன்னவள் போல என்று ஒப்புக்காட்டி உரைப்பதோ, கணவனை மனைவி இன்னவன் போல என ஒப்புமை காட்டி உரைப்பதோ* **தீமையைத்தாமே கை கூப்பி வரவேற்பது ஒப்பதாம்**.

*இவையெல்லாம் நீங்கிய ஒத்த உரிமை வாழ்வே உயர்வாழ்வு, வாழ்வாங்கு வாழும் வாழ்வு எனத் தெளிவித்தாராம்.*

ஆகாக் குணங்களை அடுக்கி வைத்துள்ள இந் நூற்பாவினை உணர்ந்து பாராமல் எத்தனை குடும்பங்கள் கெட்டுள்ளன; கெட்டு வருகின்றன! கெடுப்பவற்றைக் கூறியது கதைப் படைப்புக் கருவுக்காகவா? கெடாத வாழ்வு சுரக்கட்டும் என்னும் பேரருள் குறிப்பு என உணர்வார், உணர்ந்த பின்னரேனும் வாழ்வில் போற்றி உய்வார்!

**தொல்காப்பியர் வேட்கை, தம் அறிவைப் பாராட்டுவர் கற்பார் என்பது அன்று. கற்பார் நிற்பாராதல் வேண்டும் என்பதே. அதனை மெய்ப்பாட்டியல் நிறைவு நூற்பாவான் உணர்த்துகிறார்:**

*"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்*
*உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்*
*நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"*

என்பது (1221). உணர்வுடை மாந்தர் உணர்வர்; பிறர் எண்ணி அறிதல் அரிது. ஆதலால், உணர்ந்து போற்றுக என்றார்.

*"உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே"*

என்பதும் அவர் உரை (876).

*"உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்*
*பாத்தியுள் நீர்சொரிந் தற்று"*

என்பது வள்ளுவர் உரை (குறள். 718).

**உவமை**

முதிய மாடு ஒன்று புல்லைக் கடித்தது; புல்லைக் கடிக்க முடியாமல் நாவால் தடவி வளைத்தது;அகப்பட்ட அளவில் குதப்பியது. அதனைக் கண்ட ஒரு முதியவர், "பல்போனவன் பக்காவடை தின்பது போலத் தின்கிறது" என்றார்.

அவரை ஏறிட்டுப் பார்த்தேன்; அவர்க்குப் பல் இல்லை. அவர் பட்டறிவு அப் 'பழமொழி'யாக வெளிப்பட்டது என உணர்ந்தேன். அது புதுமொழியே. அவரே சொன்னதாகக் கூட இருக்கலாம். ஆனால், பழமொழி, உவமை, விடுகதை போன்றவை தோன்றும் பட்டறிவு நன்கு புலப்பட்டது.

மாநிறம், கிளிப்பச்சை, மயில் கழுத்துச் சீலை, காக்கைக் கறுப்பு

- இப்படிப் படைக்கப்பட்டவை பொதுமக்கள் கொடையே.

புலிப்பாய்ச்சல், ஆமைநடை, குதிரை ஓட்டம், மாடுபோல உழைத்தல்

- இன்னவையும் அப்படியே.

குதிரைவாலி, காடைக்கண்ணி, வாளவரை - இவையெல்லாம் பொதுமக்கள் வழங்கியவையே.

அலைபோல, சூறாவளிபோல, காற்றாடி போல, பம்பரம் போல

- என்பன வெல்லாம் பெரிய இலக்கிய வாணர் படைப்பு இல்லை.

மக்கள் வாழ்வில் காணப்படும் உவமைகள் இவை.

உள்ளதை உள்ளவாறு மட்டும் சொல்லாமல், அதனை ஒத்த ஒன்று காட்டிப் பொருள் விளங்கவும் பொலிவு ஏற்படவும் செய்யும் உவமை மக்கள் பொது வளமாகப் புலமையர் கண்டு கொண்டு பாராட்டி ஒழுங்குபடுத்தியதேயாகும்.

கிளிப்பச்சையில் வண்ணம் உவமை.

குதிரை வாலியில் வடிவு உவமை.

புலிப்பாய்ச்சலில் வினை உவமை.

மழைக் கொடையில் பயன் உவமை.

சோழன் யானை, பகை வேந்தர் குடையை எற்றி எற்றித் தள்ளியது. யானை எற்றுதல், கொற்றக் குடையின் வடிவம், நிறம் ஆயவை ஆ உதைக்கும் காளாம்பியைக் (காளானைக்) கண்முன் கொண்டு வந்தது. அதன் பொருளும் ஒப்பும் விளக்கமும் அவரை வயப்படுத்தின. அதனால்,

"ஓஒ உமன் உறழ் வின்றி ஒத்ததே"

எனத் தொடங்கினார். உவமை எத்தகைய வேறுபாடும் இல்லாமல் ஒப்பாகி விட்டது என்பது அவர் வியப்பு. புலவர் பொய்கையார். நூல் களவழி நாற்பது.

சிவந்ததும் கூர்மையானது மாகிய நாரையின் அலகைப் புலவர்,

"பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவழக் கூர்வாய் செங்கால் நாராய்"

என்றார். அதனைக் கேட்ட வேந்தன், பூரித்துப் போய்ப் புலவனை அழைத்துப் பரிசு வழங்கினான். உவமைப் பெருமை அல்லவா இது. புலவர் சத்திமுற்றப் புலவர்! **கிழங்கைப் பிளந்து பார்த்தால் நாரையின் நாவும் தோற்றம் தருகிறதே. வண்ணமும் வடிவும் ஒத்த உவமை இது.**

மழைபோலக் கொடையைக் கூறுவர். ஆனால், மழைப் பொழிவு போன்றது சொற்பொழிவு எனக் கண்டார் ஒருவர். 'பிரசங்கம்' என்றும், 'பெருஞ்சொல் விளக்கம்' என்றும் வழங்கி வந்தவரிடையே 'சொற் பொழிவு' என ஒரு சொல்லைத்தந்தது மன்றிச், '**சொற்பொழிவாற்றுப் படை**' என்னும் நூலும் தந்தார். அவர் நெல்லை பால்வண்ணர் என்பார். வினையும் பயனும் அமைந்த உவமை.

**உவமை வகை**

*"வினை பயன் மெய்உரு என்ற நான்கே*
*வகைபெற வந்த உவமத் தோற்றம்"*

*என உவமை வகைகள் இவை எனக் கூறுவார் (1222). உவமை ஒவ்வொன்றும் தனித்தனியே வரும் என்பது இல்லை. இரண்டு மூன்று சேர்ந்து வருதலும் உண்டு.*

*வினையும் பயனும் ஓர் உவமையில் இருக்கலாம்.*

*ஓர் உவமையில் வண்ணமும் வடிவும் பொருந்தியிருக்கலாம்.*

*உவமையாகக் கூறுவது உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது ஆசிரியர் ஆணை (1224). பெருமை நன்மை காதல் வலிமை என்பவற்றை நிலைக்களமாகக் கொண்டுவரும். தாழ்ந்த பொருள் உவமையாவதை ஏற்கும் இடமும் உண்டு என்றும் கூறுவார் (1226). ஆனால் அத் தாழ்ந்ததி லும் உயர்ந்த தன்மையே உவமையாக்கப்படும் என்பது குறிப்பு. நன்றியறி தலுக்கு, "நாயனையார் கேண்மை கெழீஇக் கொள வேண்டும்" என்று உவமைப்படுத்துவது இல்லையா! அதுபோல்.*

*முழுமையான பொருள் முதல்; முதற் பொருளின் உறுப்பாக அமைந்தது சினை. முதற் பொருளுக்கு முதற்பொருளும், முதற் பொரு ளுக்குச் சினைப்பொருளும், சினைப் பொருளுக்கு முதற் பொருளும், சினைப் பொருளுக்குச் சினைப் பொருளும் உவமையாதல் உண்டு.*

*"மலை போன்ற யானை"*

*-முதலுக்கு முதல் உவமை*

*"தாமரை அன்ன தண்குடை"*

*-முதலுக்குச் சினை உவமை*

*"பனை நெடுங்கை"*

*-சினைக்கு முதல் உவமை*

*"ஆடுகை கடுப்பத் திரிமருப்பு"* (கடுப்ப - போல; மருப்பு - கொம்பு)

*சினைக்குச் சினை உவமை*

*"பவழச் செவ்வாய்"*

*என்பது பவழத்தை வாய்க்கு உவமை காட்டியது.*

*எதனால் உவமையாயிற்று எனின், செம்மை என்னும் நிறத்தால் உவமையாகியது. பவழ நிறமும் வாயின் நிறமும் சிவப்பு ஆதலால் உவமையாம். இதில் செம்மை என்பது வெளிப்படத் தெரிய உவமை அமைந்துள்ளது. இவ்வாறு வெளிப்படத் தெரியா வகையில் 'பவழவாய்' எனினும் உவமையே.*

இரண்டும் உவமையே எனினும் முன்னதில் செம்மை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பின்னதில் அப்படிக் காட்டப்படாமல் மறைந்துள்ளது. ஆதலால் முன்னது **சுட்டிக் கூறிய உவமை**; பின்னது **சுட்டிக் கூறா உவமை** என்கிறார் ஆசிரியர்.

"சுட்டிக் கூறா உவமை யாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே"

என்பது அது (1228). புணர்த்து - பொருத்தி; புணர்ந்தன - பொருந்துவன.

எடுத்துக் கொண்டது எதுவோ அது, **பொருள்.**

அதற்கு ஒப்புமை காட்டப்படுவது எதுவோ அது, உவமை.

இரண்டும் பொருந்த அமைதல் வேண்டும். (1229).

பொருள் என்பதைப் பிற்காலத்தார் உவமேயம் என்றனர்.

உவமை என்பதை உவமானம் என்றனர்; ஒப்பினைப் பொதுத் தன்மை என்றனர். இரண்டற்கும் அமைந்த இணைப்புச் சொல்லை உவம உருபு என்றனர். அவ்வுருபு வெளிப்பட இருந்தால் உவம விரி என்றும், மறைந்திருந்தால் உவமத் தொகை என்றும் வழங்கினர்.

முத்துப்பல் என்பது முத்துப் போன்ற பல் என உவமை ஆகும்.

இதில், 'பல்' பொருள்; 'முத்து' உவமை.

ஆனால், இவ்வாறு அன்றிப் 'பல் முத்து' எனினும் உவமையாகும் என்றார் ஆசிரியர். அதனை,

"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃதுவமம் ஆகும்"

என்பது (1230). இதனை **உருவகம்** என்பது பிற்கால வழக்கு.

பொருளினும் உவமை பெரியதாகவும் சிறியதாகவும் இருத்தலும் உண்டு. அலைக் கூந்தல் - அலைபோலும் கூந்தல் (பெரியது); ஊசிக் கோபுரம் - ஊசிபோலும் கோபுரம் (சிறியது) (1231).

உவமை என்பதை உணர்த்தும் சொற்கள் இவையென அடுக்கிக் கூறுகிறார் ஆசிரியர். அப் பட்டியைப் பார்த்த அளவிலேயே வாழ்வுக்கும் உவமைக்கும் உள்ள நெருக்கம் புலப்படும்.

**அன்ன**, ஏய்ப்ப, உறழ, **ஒப்ப**, என்ன, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, வென்ற, வியப்ப, எள்ள, விழைய, விறப்ப, நிகர்ப்ப, கள்ள, கடுப்ப, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புல்ல, **பொருவ**, பொற்ப, **போல**, வெல்ல, வீழ, நாட, நளிய, நடுங்க, நந்த, ஓட, புரைய என்பன ஆசிரியர் கூறுவன. முப்பத்தாறு உருபுகளைக் குறித்து விட்டு 'அன்னவை

*பிறவும்' எனச் சேர்த்துக் கொள்ளக் கூறுகிறார். அப்படிச் சேர்ந்தவை பல (1232).*

*"அவன் 'கணக்காக' இவன் உள்ளான்"*

*"அவள் 'கணக்காக' இவள் பேசுகிறாள்"*

இவண் 'கணக்காக' என்னும் பொருள்தரும் உவமை உருபு. இயல்பாக இறந்து கிடப்பவனுக்கும் உறங்கிக் கிடப்பவனுக்கும் வெளித் தோற்றத்தில் வேறுபாடு இல்லை. ஆதலால் '**செத்து**' என்பது உவமை உருபாயிற்று. 'புலி செத்து' என்றால் புலிபோல என்பதே பொருள்.

செத்து > செத்திரம் > சித்திரம் ஆயது

*ஒவ்வியம் > ஓவியம் ஆயது; ஒவ்வ உவம உருபு.*

*செத்து என்பது பழந்தமிழ்ச்சொல்; ஆயினும் உவம உருபுப் பட்டியில் இடம் பெற்றிலது.*

*சாயல், பார்வை என்பவையும் வழக்கில் காணும் உவமை உருபுகளே. இன்னவாறு மக்கள் வழக்கில் மறைந்து கிடப்பன பலவும் இன்னும் இடம் பெற்றில.*

## புது நூல்

**ஒரு மொழியின் வளர்ச்சி, காலந்தோறும் வழங்கும் சொற்களை யெல்லாம் தொகுத்து அடைவு செய்தலும் பயன்படுத்தலும் இலக்கண விரிவாக்கம் செய்தலும் ஆகும் என்பதைக் குறித்துக் காட்டுகின்றன. இன்னவை, மூவாயிர ஆண்டுக்கு முற்படு தொல்காப்பியத்தில் பின்னை மூவாயிர ஆண்டு மொழிவளர்ச்சி சேர வேண்டின், காலந் தோறும் அப்பணி நிகழவேண்டும் என்பதாம்.**

*இவ் வுவமை உருபுகளையும் இன்ன இன்ன பொருளில் வரும் என வகுத்துக் காட்டிய பெருமை தொல்காப்பியர்க்கு உண்டு. அம் மரபு படிப்படியே அருகிப் போயிற்று.*

*இரண்டாக வரும் பொருளுக்கு, உவமையும் இரண்டாக வரும். "இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே" (1243) என்கிறார்.*

*"இணை மாலை போலும் மணமக்கள்"*

*"திருக்குறள் ஈரடி என்னிருமக்கள்"*

*"பொன்காண் கட்டளை போன்ற சுண்ணம் பூசிய மார்பு"*

## உள்ளுறை

*முன்னே அகத்திணையில் சொல்லப்பட்ட உள்ளுறை பற்றியும் அதனோடு சிறப்புடைய இறைச்சி பற்றியும் இவ் வுவமைப் பகுதியில் ஆசிரியர் சில கூறுகிறார்.*

*(உள்ளுறை: அகத்திணை இயல் 46-48; இறைச்சி: பொருளியல் 35-37; உள்ளுறை வகை ஐந்து பொருளியல்: 48)*

உவமை இயலில் உள்ளுறை '**உவமைப் போலி**' எனவும், இறைச்சி '**உடனுறை**' எனவும் கூறும் வழக்குண்மையைக் குறிப்பிடுகிறார் (உவமை. 24, பொருளியல் 48). இப் பெயர்கள் இவற்றின் பொருள் புரிதற்கு உதவுகின்றன.

உள்ளுறை இறைச்சி என்பவை இன்றும் வழங்குமொழிகளாக உள. ஆனால், தொல்காப்பியர் வழங்கிய பொருளில் வழங்கப்படவில்லை.

ஒருநூலின் உள்ளே வருவன இவை என முற்படக் குறிப்பதை உள்ளுறை என்றும் உள்ளடக்கம் என்றும் கூறுதல் நாம் அறிந்தது. புலாலை இறைச்சி என்பதும் மக்கள் வழக்கே.

உள்ளுறை இறைச்சிகள் சொல் அளவில் நின்று பொருள் நிலையில் இழப்புற்றது போலவே இவற்றை இந் நாளில் பாவலர்தம் பாடு பொருளில் கொள்ளும் திறம் இல்லாராகிவிட்டனர். ஏனெனில் இவற்றைத் தெளிவாகப் பொருள் புரிந்து ஓதி, ஓதியதைப் பயன்படுத்தித் தமிழ் வளமாக்கும் நிலை அற்றுப் போகியது.

உள்ளுறையும் இறைச்சியும் பழந்தமிழர் ஆழங்கால் பட்ட ஆய்வு வழியே கண்டெடுத்த வயிரக் கட்டியும் பவழப் பாறையுமாம்.

உள்ளுறை என்பது என்ன?

1. உள்ளுறை உவமை சார்ந்தது.
2. உவமை போலப் பொருள் உவமை உருபு என்ற அமைவு இல்லாதது.
3. உவமைப் போலி எனவும் வழங்கப்படுவது.
4. வினை பயன் உறுப்பு உருவு பிறப்பு என்னும் ஐவகையில் வரும்.
5. தெய்வம் தவிர்ந்த கருப் பொருள்களை இடமாகக் கொண்டு வரும்.
6. இதன் இலக்கணம்;

*"உள்ளுறுத் திதனோடு ஒத்துப் பொருள்முடிகஎன*
*உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்"*

என்பது (எடுத்துக் கொண்ட பொருளை உள்ளே செறிய வைத்து அமைக் கப்படும் உவமை என்பது இதன் சுருக்க இலக்கணம்).

அகப் பொருளில் பயிலும் இவ்வுள்ளுறை தலைவி, தோழி, தலைவன், செவிலி ஆயோர் கூறுதற்கு உரியர்.

தலைவி, அவள் அறிந்த இடம், பொருள் கொண்டு சொல்வாள். தோழி, அவள் வாழும் நிலப்பரப்பளவும் கொண்டு சொல்வாள். தலைவன், அவன் அறிந்த விரிவாலும் அறிவாலும் சொல்வான். மற்றவர்க்கு இன்ன இடமென்னும் வரையறை இல்லை. உள்ளுறை இன்பந்தழுவியதாகவும் துன்பந்தழுவியதாகவும் உவமை வழியில் வெளிப்படும்.

உள்ளுறை கருப்பொருள் என்னும் இயற்கைச் சூழலில் இருந்து முகிழ்ப்பது. வெளிப் பார்வைக்குச் செடி கொடி மரம் பறவை விலங்குகளின் இயல் செயல்களைப் புனைவதுபோல் தோன்றும். இவற்றைக் கூறுவது தாம் கூறப்புகுந்த அகப் பொருளுக்கு நயமும் நலனும் சேர்ப்பதற்கே என்பதை உட்கொண்டே துய்க்க வேண்டும். பொருளும் காணவேண்டும். இல்லாக்கால் **இயற்கைப் புனைவு என்று மட்டுமே கொள்ளலாகி விடும். அது பாடுபுலவன் கருதிய பொருளுணர்ந்து ஓதுவதாக அமையாமல் 'வாளா' அமைந்துவிடும்.**

"உள் ஒன்று வைத்து அதற்கு இணையான புறம் ஒன்று கூறுவர். கூறினும் அத் தொடர்பான உட்கருத்து மெய்யுள் உயிர் போல விளங்கிக் கிடக்கும்" என்பார் **வ. சுப. மாணிக்கனார்**.

*"உடம்போ டுயிரிடை என்னமற் றன்ன*
*மடந்தையோ டெம்மிடை நட்பு"*

என்னும் உடலுயிர்க் காதல் (குறள். 1122) உள்ளுறையாக, உள்ளுறை இலக்கணம் அமைந்தது என்க.

பொதுமக்கள் வழக்குப் போல நேரிடையாக இடித்துக் கூறாமல், அறவோர் உரைபோல் வலியுறுத்து நேராகக் கூறாமல், கனிவொடு கூறிக் காதலும் கற்பும் வாழ்வும் வளமும் சிறக்கக் கூறுவது உள்ளுறை அடிப்படையாம்.

ஒரு சான்று:

*"யாரினும் இனியன்; பேரன் பினனே;*
*உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்;*
*சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்*
*தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்*
*நாறா வெண்பூக் கொழுதும்*
*யாணர் ஊரன் பாணன் வாயே."*

இது, குறுந்தொகை 85.

தலைவனுக்குப் பரிந்து கூறவந்த பாணனை நோக்கித் தோழி கூறியது இது.

"இனியவருள் எல்லாம் இனியன்; அன்பருள் சிறந்த அன்பன்; பாணனே நீ பரிந்து பேசும் தலைவன் தான் எத்தகையன்? ஊரனாகிய அவன் ஊர்க்குருவியைக் கண்டவன் தானே!

பெட்டைக் குருவி கருக்கொண்டு முட்டையிடப் போகிறது என்பதை முன்னுணர்ந்து இனிய கரும்பின் வெண்பூவைக் கொய்து வந்து முட்டை இட்டு வைத்தற்குரிய ஈன்இல் ஆகிய கூட்டைக் கட்டி முடித்தது" என்பது இப்பாடல் திரட்டுப் பொருள்.

**முட்டையிடும் பெட்டை என்று, ஆண்குருவி கூடு கட்டும் ஊரன், கருக் கொண்ட மனைவியை விட்டு விட்டு அயலே போய் விட்டானே ஊர்க் குருவியைக் கண்டேனும் ஊரன் புரிந்து கொள்ளக் கூடாதா? என்பது இதன் உள்ளுறை.**

குருவிக் குடும்பத்தைத் தோழி எடுத்துக் கூறியது இயற்கைப் புனைவு மட்டுமே கருதியதா! உட்பொருள் வைத்த உரை கருதியதே அல்லவோ!

**இறைச்சி**

இறைச்சி பற்றிக் காணலாம்:

"இறைச்சி தானே பொருட்புறத் ததுவே"

"இறைச்சியில் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே"

என்பவை இறைச்சி இலக்கணம் (1175, 1176).

பொருளியலில் உள்ள இந்நூற்பா விளக்கம், உள்ளுறையின் தொடர்பு கருதி இவண் கூறப்படுகிறது.

இறை கூர்தல், இறைகொண்ட, இறைகொள்ளும் என்பன சங்க நூல்களில் பெருக வழங்குவன.

இறை என்பது தங்குதல். இறை என்னும் அரசுவழிப் பெயரும், கடவுள் வழிப் பெயரும் தங்குதல் பொருளவே.

ஒன்றில் ஒன்று ஒன்றியிருத்தல் இறைச்சியாம். இதனை '**உடனுறை**' என்றது அறிந்தோம்.

மலருள் மணம் போலவும் தேனுள் சுவைபோலவும் ஒன்றி உடனாகி இருப்பது இறைச்சி. கொழுமை தங்கியிருப்பது என்னும் பொருளிலேயே ஊனாகிய இறைச்சியும் பெயர் பெற்றதாகலாம்.

உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் வேறுபாடு என்ன எனின், உள்ளுறை, உவமையைக் கூறிப் பொருந்திய பிறிதொரு பொருளைப் பெற வைப்பது. அவ்வாறன்றிச் சொல்லிய பொருளிலேயே அதன் குறிப்பாகப் பிறிதொரு பொருளைக் கொள்ள வைப்பது இறைச்சி.

“குறிப்புப் பொருளே இறைச்சியாகும்; உள்ளுறை உவமைபோல ஒன்றற்கு ஒன்று என்று ஒப்புமைப் படுத்திப் பார்ப்ப தெல்லாம் இங்குக் கூடாது; இயலாது” என்பார் பெருமுனைவர் **தமிழண்ணல்.**

“இறைச்சி தானே உரிப்புறத் ததுவே” என்பது **இளம்பூரணர்** பாடம்.

“இறைச்சிப் பொருள் என்பது உரிப்பொருளின் புறத்ததாகித் தோன்றும் பொருள்” என்பது அவர் உரை.

“ஓரறிவு உயிர்முதல் ஐயறிவு உயிரி ஈறாகிய கருப்பொருள் இயக்கங்களைப் பின்னணியாகக் கொண்டு மாந்தர்தம் காதல் கற்பு ஆகிய பாலுணர்வு வாழ்வைக் குறிப்பால் உணர்த்துவது இறைச்சி” எனத் தெளியலாம்.

“அம்ம வாழி தோழி, யாவதும்
வல்லா கொல்லோ தாமே; அவண
கல்லுடை நன்னாட்டுப் புள்ளினப் பெருந்தோடு
**யாஅம் துணைபுணர்ந்து உறைதும்**
**யாங்குபிரிந் துறைதி என்னா தவ்வே”**

என்னும் இது, ஐங்குறுநூறு (333).

பறவைகளை நொந்து சொல்லியது என்னும் குறிப்புடைய இப்பாட்டு, “பறவைக் கூட்டமாம் யாம், துணை துணையாக வாழுகிறோம். இது கண்டும் நீ துணை பிரிந்து எவ்வாறு வாழ்கிறாய் என்று கேட்கமாட்டாவோ?” என்று தலைவி கூறிய இறைச்சி.

இத்தகைய உள்ளுறை இறைச்சி ஆகியவை அகப் பொருளின் அகப் பொருளாக அமைதல் தமிழர்தம் **நாகரிகக் கொள்கலங்கள்** எனத் தக்கவை.

**கதையர்**

இந் நாள் கதைப்புனைவர் கருத்தில் கருக்கொள்ளுமா இவ் வக நாகரிகம்! குப்பை வாரிக் கொட்டும் எழுத்தாளர் தம் குடும்பத்து உறுப்பினரும் படிப்பரே என்று துளியளவேனும் எண்ணியேனும் எழுதக் கூடாதா?

“இன்னும் இப்படி எழுதினால், உன் மனைவியையும் மகளையும் உன் எழுத்துப்படி செய்வோம் என்று கண்டித்து எழுதினர். அவன் எழுதினான் ‘அவருள் எவர் என்னவர்’ என்பதை என்னாலேயே கண்டு கொள்ள முடியாத போது நீதானா கண்டு கொள்வாய்” என்று மறுமொழி எழுதும் அயல் நாட்டு நிலை இந் நாட்டுக்கு எய்துதலைத் தவிர்க்க வேனும் எழுதுக என்பதே எம் உள்ளுறை, இறைச்சிகளாம்.

**வேறுவகை உவமை**

*"பாரியே ஒருநீதானா கொடையன்; மாரியும் உண்டே"*

என்பது மறுப்பது போன்ற உவமை அல்லவா.

விரைந்து செல்லும் கதிரே, வரம்பிட்டுச் செல்கிறாய்; மறைகிறாய்; வருகிறாய்; விண்ணிலேயும் பகலில் மட்டும் விளங்குகிறாய்; நீ எப்படிச் சேரலாதனுக்கு ஒப்பாவாய் என்பதும் உவமையே (புறம். 8). அது **ஓரீஇ** (விலக்கி)க் **கூறல் உவமை** (1254).

கொடியோ இடையோ என ஐயுற்றுத் தடுமாறுவதாகக் கூறுவது **தடுமாறு உவமம்** (1256). தடுமாறல் என்பது இன்றும் வழக்குச் சொல் இல்லையா! 'தட்டுத் தடுமாறி' என்னும் இணைச் சொல்லும் வழக்கில் உண்டே. அற்றைக் கலைச் சொல், இற்றைவழக்குச் சொல்லாவது இது.

*"மதியத் தன்ன வாள்முகம் போலும் தாமரைப் புதுப்பூ"*

என இரண்டு முதலிய உவமைகளை அடுக்குதல் ஆகாது. ஆதலால்

*"அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே"*

என்றார். இனி,

*"கலகவான் விழி வேலோ சேலோ*
*மதுரவாய் மொழி தேனோ பாலோ"* (திருப்புகழ்)

என்பது அடுக்கியது ஆகாது. ஐய உவமை யாகிவிடும்.

உவமை வழிப்பட்டவையே அணிகள் அனைத்தும் என்னும் துணிவால் 'மயங்கா மரபின்' நூல் யாத்த தொல்காப்பியர், 'உவமை இயல்' என்றே வகுத்தார். பின்னூல்கள் பிறபிற விரித்துப் பெருக்கி, பொருள் விளக்குதல் என்னும் வகையால் பொருள் தகுதி இழந்து போயின; போகின்றன.

அகம் புறம் ஆகிய பொருள்களுக்கு இடமாகியதும், மெய்ப்பாடு உவமை என்பவற்றின் உறைவிட மாகியதும், **செய்யுள்**. ஆதலால், அதனைச் '**செய்யுளியல்**' என்று வகுத்தார் ஆசிரியர்.

**செய்யுள் உறுப்பு**

செய்யுள் உறுப்புகள் என முப்பத்து நான்கினை எண்ணி, அவற்றை முறையே, விரிக்கிறார்.

**செய்யுள், பா, தூக்கு, பனுவல், தொடை, யாப்பு** என்பன வெல்லாம் ஒருபொருள் குறித்த, பொருள் பொதிந்த சொற்கள். பொதுமக்கள் வழக்கில் பண்டு தொட்டு இன்று வரை வழங்கிவரப் பெறுவன.

**செய்யுள்**

*செய்* - *விளைநிலம்: செய்தற்கு இடமாகியது; செம்மை செய்யப்பட்டது; புன் செய்; நன் செய்; செயல், செய்கை என்பனவற்றின் மூலமாய சொல்.*

*பா* - *பரவுதல், விரிதல் பொருளது. பார், பாரி, பாய், பாய்தல், பாய்ச்சுதல் இன்னவற்றின் அடிச்சொல்.*

*தூக்கு* - *தூக்கிப் பார்க்கும் எடை, எடைக்கல், ஆராய்தல், உயர்த்துதல், எடுத்தல் இன்னவற்றின் ஏவல்.*

*பனுவல்* - *பன் - பருத்தி; பன்னல் - பருத்தி, கூறுதல்; பனுவல் - பாடல்; நூல். "பஞ்சிதன் சொல்லா பனுவல் இழை யாக" -நன்.*

*தொடை* - *தொடுக்கப்படுவது, இணைப்பது, இசைப்பது; மாலை - தொடையல்; எதுகை மோனை முதலியன தொடுத்தல்; தொடுப்பு, தொடர்பு - நட்பு; தொடுக்கும் - தொடர்பு. ஒன்றோடு ஒன்று ஒன்றுவது தொடை.*

*யாப்பு* - *யா - கட்டு; யாமரம் கட்டுதற்குரிய பட்டையும் வளாரும் உடையது; யாக்கை - உடல்; யாத்தல் - கட்டுதல்; ஆக்கை - கட்டும் நார், வளார்; யாப்பு - பாத்தி, பாத்தி கட்டுதல்; கட்டுதல் அமைந்த பாட்டு.*

*செய்யுள் குறித்த சொற்கள் அனைத்தும் மக்கள் வழக்கில் உள்ளதால், அவற்றுக்குள்ள இடம் புலப்படும்.*

**நாட்டுப் பாட்டு**

***பழமொழி*** *பன்னீராயிரம் கொண்ட தொகுதி உண்டு. பழமொழி பதின்மூவாயிரம் தொகுத்தார் பாவாணர். பழமொழிகள் பொதுமக்கள் வழக்கில் உள்ளவை. '**முது மொழி**' என்பதும் அது. செய்யுள் வகையுள் அது ஒன்று.*

*"**ஆடி**ப் பட்டம் **தேடி** விதை"*

*"**சித்திரை** மாதப் புழுதி **பத்தரை** மாற்றுத் தங்கம்"*

*இவற்றைப் பாருங்கள். ஆடி, தேடி; எதுகைத் தொடை இது. முதல் எழுத்து மாத்திரை ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து அவ் வெழுத்தாகவோ அதன் இன எழுத்தாகவோ வருவது 'எதுகை'!*

*"**தை**ப்பனி **த**ரையைப் பிளக்கும்"*

*"**மாசி**ப்பனி **ம**ச்சைப் பிளக்கும்"*

*இவற்றில், தை, த என்றும், மா, ம என்றும் முதல் எழுத்து ஒத்திருத்தலால் யாப்பியற்படி இவை 'மோனை' எனப்படும்.*

"முதலெழுத்து ஒத்தல் மோனை" "முதல் எழுத்து அளவால் ஒத்து, இரண்டாம் எழுத்து ஒத்தல் எதுகை"

எதுகை மோனையை வெறுக்கும் ஒருவர் கூறினாராம்!

"**மோ**னை பார்ப்பவர் **மு**ழுமூடர்;
**எ**துகை பார்ப்பவர் **ஏ**துமறியார்"

இவ் விரண்டிலும் மோனை ஒட்டிக் கொண்டனவே! '**மோனை எதுகை வெறுப்பரும், விலக்க முடியாதவை அவை** என்பது, இதன் குறிப்பாம். ஏனெனில், இம் மண்ணில் வளம் இம் மண்ணின் மைந்தரை விடாமல் ஒட்டும் என்பதே'.

இனித் **தாலாட்டு** என்ன? **ஒப்பாரி** என்ன? **விடுகதை** என்ன?

**மா**மி அடித்தாளோ
**ம**ல்லிகைப்பூச் செண்டாலே!
**பா**ட்டி அடித்தாளோ
**பா**ல் போட்டும் கையாலே!

- துள்ளி வருகின்றனவே மோனை! இது தாலாட்டு!

**க**த்தரிக் காய் **எங்**களுக்குக்
**க**யிலாசம் **உங்**களுக்கு
**பூ**சணிக்காய் **எங்**களுக்கு
**பூ**லோகம் **உங்**களுக்கு.

- இவ் வொப்பாரியில் மோனை மட்டுமா; இறுதி **இயைபும்** அமைந்துளதே.

தமிழனென்று **சொல்லடா**!
தலைநிமிர்ந்து **நில்லடா**!

- இறுதியில் இவ்வாறு பொருந்திய இசைவருவது 'இயைபு.' பின்னே வரும் பெட்டியும் குட்டியும் இயைபே!

**நா**லு மூலைப் **பெட்டி**
**ந**ந்த வனத்துப் **பெட்டி**
**ஓ**டும் குதிரைக் **குட்டி**
**வீ**சும் புளிய ஆக்கை

இது விடுகதை; கிணறு - கமலை - ஏற்றம் இறைக்கும் மாடு, சாட்டைக் கோல் பற்றியது. ஓ, வீ என்பன நெட்டெழுத்து ஒன்றுதல் மோனை (நெடிலொன்று மோனை).

*கணவன் பொய் சொல்கிறான்; மனைவி சொல்கிறாள்:*

*"**வித்**தாரக் கள்ளி **வி**றகொடிக்கப் போனாளாம்*

***கத்**தாழ முள்ளு **கொத்**தோட **குத்**திச்சாம்"*

*இதில், எதுகை மோனை மட்டுமா? மேற்கதுவாய் எதுகை வந்துளது; இரண்டாம் அடியில் இரண்டாம் சீர் ஒன்றுதானே எதுகை பெறவில்லை. இப்படி வருவது, '**மேற் கதுவாய்**', 'கதுவாய்' இப்பொழுது எப்படி வழங்குகின்றது. '**கொறுவாய்**', உடைந்து போனது என்னும் பொருளில் வழங்குகின்றது. **கதுவாய்,** இல்லாமல் போனது என்னும் பொருள் தருவது.*

*இன்னும் பாருங்களேன்:*

*"பள்ளம் மேடு பார்த்துப்போ", "அவனுக்கு நல்லது கெட்டது புரியாது", "எப்படியும் உள்ளதும் இல்லதும் வெளியாகிவிடும்", "பெரியவர் சிறியவர் அறியாமல் பேசாதே" இவையெல்லாம் **முரண்கள்;** எதிரிடையாயவை. இவ் விலக்கணம் முரண் தொடை.*

*'ஆ' 'ஓ' என்று சொல்வது இல்லையா? நீட்டிச் சொன்னால் ஆஅ, ஓஒ என வரும்.*

*'பாலோ ஓஒ பால்'*

*'தயிரோ ஓஒ தயிர்'*

*இப்படி நீட்டிச் சொல்வது, நாள்தோறும் நாம் கேட்பவை தானே. ஒலி அளவில் மிகுவதால் அளபெடை என்பது பெயர். இசை பாடும் போது, நீட்டி நீட்டிப் பாடுவதைக் கேட்கிறோமே! அவையெல்லாம் அளபெடை.*

*இயலுக்கு ஒருமாத்திரை அளவுதான் கூட்டல் உண்டு. சில இடங்களில் இரண்டு மாத்திரை கூட்டலும் உண்டு. ஆனால், இசைக்கு அளவு அவரவர் தொண்டை தான் போலும்! "காயாத கானகத்தே"- எவ்வளவு நீட்டி இசைக்கக் கேட்டது!*

*'எல்லாம் பாட்டு! எங்கும் பாட்டு! எவரும் பாட்டு! என்ற தமிழ்மண், பாட்டுப் பாடி இசைக்கும் பாணன் துணைவிக்குப் '**பாட்டி**' என்று பெயரிட்டது. **பாட்டன், பாட்டி** என முறைப் பெயரும் கண்டது. '**பாட்டாங்கால்**' எனப் பாடுபட்டுப் பண்படுத்திய தோட்டப் பெயர் கொண்டது. பாட்டியர் திட்டுதல் ஆகாது! ஏனெனில், பழங்காலத்தில் பன்றி, நாய், நரி என்பவற்றுக்கும் **பாட்டி** என்பது பெயராக இருந்துள்ளது (1165). '**உள்ள**தைச் சொ**ல்லப்** பொ**ல்லா**ப்பு வேண்டாவே' -பாருங்களேன் இப் பழமொழியில் எதுகை கொஞ்சுதல்! இன்னொரு செய்தி; உரை யாசிரியர் காலத்துக்கு முன்னரே பாட்டி பற்றிய இவ் வழக்கு அழிந்து*

*விட்டது. அதனால், எடுத்துக்காட்டுத்தர அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.*

## பாட்டு அளவு

*பாட்டு என்றால் பெரிதாக - நீளமாக - இருக்க வேண்டுமா? அரும்பாடு பட்டு அமைக்க வேண்டுமா? இல்லை! இல்லை! என்கிறார் தொல்காப்பியர். ஓர் அடி சிறப்பாக அமைந்தால் போதும்; அது பாட்டு! சரி,* ***அடி*** *என்றால் 16-சீர், 32-சீர், 64-சீர் என நீண்டிருக்க வேண்டுமா? வேண்டாவே! இருசீர் அடி குறளடி;* ***குறளடி ஒன்று அருமையாக அமைந்து விட்டால் அது பாட்டுத்தான்****. குறள் அடி என்றால் இரண்டடியுடைய குறட்பாவை அன்று; இரண்டு சீர்களையுடையது. அதனை உலகறியக் காட்டிய பாட்டி ஔவையார்:*

*"அறஞ்செய விரும்பு"*

*"ஆறுவது சினம்" என்றார்.*

*அரிய பாட்டுகள்தாமே இவை.*

## செய்யுள்

*இனிச் செய்யுள் பற்றித் தொல்காப்பியர் சொல்வதை அறியலாம். செய்யுள் முதல் உறுப்பு* ***மாத்திரை****; அடுத்தது* ***எழுத்து. மாத்தல் என்பது அளத்தல். மாத்தம் அளவு. 'பா' என்றால், அளவுக்கு முதலிடம் தருதல் வேண்டும். அவ், அளவும் எழுத்திலேயே தொடக்கமாகிவிட வேண்டும். மற்றை மற்றை உறுப்புகளிலும் அளவு பேணப்பட வேண்டும்*** *என்னும் முற் குறிப்பினது மாத்திரை என்பதாம்.*

*அளவுடன் அமைந்தனவே எழுத்தொலிகள். 'நா' எழுந்து ஒலி செய்ய வேண்டும் எனின்,* ***அசை****யாமல் இயலாது. நா, இதழ், வாய் இன்னவை அசையும். அசையின், இசையாம். அவ் வசைகள் சில சீராக அமைவது* ***சீர்****; அச் சீர்களைக் கொண்டு அல்லது சீர்களால் அமைவது அடி; அடி தனித்து நிற்பினும் பிற அடிகளொடு கட்டுற்று நிற்பினும்* ***யாப்பு*** *ஆகும்.*

*இதுவரை சொல்லப்பட்ட மா****த்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு*** *என்னும் ஆறும்* ***செய்யுள் மாளிகையின் அடிப்படைக் கட்டுமானப் பொருள்களாவன****.*

## பா – பாவு

*ஆடை நெய்யும் தறியைப் பாருங்கள்; அங்கே அசை, சீர், அடி, பா என்பவையும் தளை, தொடை என்பவையும் உண்டு. அவர்கள் நெய்வதும், இவர்கள் செய்வதும் ஒப்பது! '****நூற்றல்****' என்பது நூல் இழைத்தலையும் நூல் இயற்றலையும் குறிக்கும் சொல்லாயிற்று. இவை,* ***தமிழர் வாழ்வியல்***

**தொழிலொடு கலையுணர்வும் ஒன்றிச் செல்லுதல் காட்டும். 'கலை' என்பது ஆடைக்கும், பாடல் முதலிய கலைகளுக்கும் பொதுப் பெயராதல் அறிக.**

**அடி**

*ஒன்றன் அடியாக இருப்பது அடி. தேக்கடி, தேரடி, மரத்தடி மட்டுமா?*

*'இரயிலடி' எனத் தொடர்வண்டி நிலையம், பெயர் கொண்டதே.*

*அடி ஒன்று கொண்டது, இயற்கை அல்லது நிலைத்திணை. ஆயிரம் அடி ஆல மரமும் ஓரடியின் வளர்ச்சியே.*

***அடி ஒன்றுடையது இயக்கமின்றி நின்றது. இயக்கமாக இரண்டு அடி வேண்டியதாயிற்று. ஆம்! ஊன்று நிலை, இயக்க நிலையாக - இரண்டு அடிகள் தேவைப்பட்டன.*** *பறவைகள் ஈரடி பெற்றன.*

*விலங்குகள் குறுக்கில் இயங்குவன. அதற்கு வாய்ப்பாக நான்கு அடிகள் கொண்டன. பூனை என்ன யானை என்ன; எலி என்ன புலி என்ன; நான்கு அடிகள் கொண்டன. மாந்தனும் ஒருகாலம் நான்கு அடிகள் கொண்டிருந்தே நிமிர்ந்தான். முன்னிரண்டு அடிகளும் கைகள் ஆயின. இக் காலம் வரை அந் நிலையைக் காட்டும் சான்றாகக் குழந்தை தவழ்ந்து பின் நிமிர்கிறது. முழுதுறு சான்றாக இருப்பது குரங்கு.* ***நடக்கக் காலாக இருப்பவை, பற்றிப் பிடிக்கக் கையாகவும் இருத்தலைக் கண்டு எண்ணலாம்!***

*வாற் குரங்கு, வாலில்லாக் குரங்கு என்னும் வகையையும் நோக்கலாம்.*

*அடி இரண்டு - முழந்தாள் இரண்டு - தொடை இரண்டு; தொடை இரண்டும் தொடுத்தது இடை அல்லது இடுப்பு, இடுப்பின் மேலே, தொடை தொடையாக இணை இணையாக - அமைந்த முள்ளந்தண்டு முதுகெலும்பு எத்தகைய அரிய இயற்கைக் கொடை!*

**ஈரடி**

*ஈரடிப் பெருமை என்ன?*

*தனித்தனியே நின்றால் - தொடுக்கப்படாமல் நின்றால், ஊன்று நிலை மட்டுமே இருக்கும்; இயக்கநிலை எய்தாது. இயக்கத்திற்குத் தொடை வேண்டும். ஆதலால், தொடை - தொடையல் என்பவை தொடுத்தல், தொடர்ச்சி, தொடர்பு, தொடரி எனத் தொடர்ந்தன. இயங்கா மலையும் இடையீடு இன்றி இருந்தால், மலைத் தொடர் எனப்பட்டது.*

*ஈரடி எவ்வளவு நடக்கும்? கடக்கும்.*

*மண்ணையும் கடக்கும்; விண்ணையும் கடக்கும்.*

இக் கற்பனையே, **ஈரடியால் உலகளந்த** 'கதை.' வள்ளுவர் காலத்திலேயே இக் கதை கிளர்ந்தமையால் அவர், மெய்ம்மை காட்ட வேண்டி, "மடியில்லாத முயற்சியாளி எவனாக இருந்தாலும் அவன் மண்ணையும் விண்ணையும் எட்டலாம்" என்றார்.

*பாரடி யெல்லாம் சுற்றிவரப்*
*படர்ந்த அடிகள் எத்தனை? -குழந்தாய்!*
*படர்ந்த அடிகள் எத்தனை?*
*ஈரடி தானே குழந்தாய் – திருக்குறள்,*
*ஈரடி தானே குழந்தாய்!*

என ஈரடியால் உலகளந்த - அளக்கும் - விளக்கம் அறியலாம். இவை யெல்லாம் அடியும் தொடையும் 'பா'வியக்கமாகும் வாழ்வியல் அடிக் களங்களாம்.

### சும்மா

என்ன வேலை செய்கிறாய்?-சும்மா இருக்கிறேன்.

எதற்குப் போகிறாய்?-சும்மா போகிறேன்!

என்ன பேசுகிறீர்?-சும்மா பேசுகிறோம்!

**உயர் பொருட் 'சும்மா', உற்ற தாழ்நிலை இது.**

'சும்மா' என்றால், நோக்க மற்ற - குறிக் கோளற்ற - ஒரு நிலையை வெளிப்படுத்தலாக இந் நாள் விளங்குகின்றது. ஆனால், செய்யுள் ஒன்று கிளம்ப வேண்டும் என்றால், 'சும்மா' கிளம்பக் கூடாது.

### நோக்கு

**நோக்கு** ஒன்று கொண்டே செய்யுள் கிளம்ப வேண்டும். "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று வாழ்வு அமைதல் ஆகாது; அவ்வாறு, "குறிக்கோள் இலாது கெட்டது" என வாக்கும் அமைதல் ஆகாது. நோக்கு ஓரிடத்து மட்டும் இல்லை எல்லா உறுப்புகளும் பொருந்த நோக்குவதாக அமைவது நோக்கு. நோக்கு மட்டும் செவ்விதாக அமைந்தால் போதுமா? நோக்கை அடையும் வழியும் செவ்விதாக அமைதல் வேண்டும். "பெற்றவள் பசியைத் தீர்த்தல் பிள்ளையின் கடமை என்றாலும், அப் பசியை எப்படியும் தீர்க்கலாம் எனின், அப் பெற்றவளே ஒப்பாள்" என்பது, தமிழ் மண்ணின் கொள்கை. ஆதலால், "நோக்குடன், நோக்கை அடையும் வழியும் சரியாக இருக்க வேண்டும்" என்பதை ஆசிரியர் தொல்காப்பியர் '**மரபு**' என்றார்.

### மரபு

ஓரிடத்தை அடைதல் நோக்குடன் புறப்பட்டார், போகும் வழி, போகும் முறை என்பவற்றைக் கட்டாயம் கருதவேண்டும் என்பதால், வழி

நடைக்குச் 'சாலை விதி'கள் சட்டமாக்கப் பட்டமை உலகளாவிய முறை. பாட்டைக்குக் கண்டதைப் பாட்டுக்கும் கண்டது நம் பண்டையர் முறை. அதுவே, 'மாற்றருஞ் சிறப்பின் மரபு' என்பது. அதனைத் தெள்ளிதில் உணரச் செய்வதே தொல்காப்பிய **மரபியல்.**

மரபு பேணி அமைத்தல், நோக்குடையதாதல் என்ற அளவில் பா அமையின் 'பாடுவோன்' அறிவு நிலை சார்ந்தோ உணர்வு நிலை சார்ந்தோ மட்டும் அமைந்து விடும்!

**தூக்கு**

பாடுவோன், தானே துய்க்கவோ பாடல் இயற்றினான்? இல்லையே! அவன், படிப்பானைக் கருத்தில் கொள்ளாமல் பாடினால், அப் பாட்டு அவனைத் தொடாமலே போகிவிடுமே! ஆதலால், படிப்பான் எண்ணத் தைத் தான் நுண்ணிதின் உணர்ந்தவனாய் அல்லது பயில்வான் எவ்வெவ் வகையால் எல்லாம் ஆய்வான் - தடைவிடை கிளத்துவான் - என்பவற்றை யெல்லாம் எண்ணி அப் படிப்பாளியாகத் தான் இருந்து கொண்டு பாவைப் படைக்க வேண்டும். அதற்குத் தான் '**தூக்கு**' என்பது பெயர். தூக்குக்கு ஒத்துவராதது 'தூக்கு' என்னும் பெயர் கொள்ளத் தகுவது ஆகாதே (தூக்கு = பாட்டு).

**தொடை**

சொல்லும் பொருள் தெளிவு திட்பம் மரபு இன்னவற்றை உடையது எனினும், சுவையுடையதாகச் சொல்லப்பட்டால்தான், கேட்பார் விரும்ப அமையும். ஆதலால், பாவலன் **கேட்பான்** செவியைத் தன் செவியாகக் கொள்ளலும் கடப்பாடாம். கேட்கும் சுவை "செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" எனப் பாராட்டப்படும். "அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" எனவும் போற்றப்படும். தன் வயப்படுத்திக் கொள்ளாமல் ஒருவனுக்குச் சொல்லப்படும் செய்தி உட்புக வாய்ப்பே இல்லாமல், வாளா போகிவிடும். இன்னது கொண்டே பாவின் நயத்திற்குத் '**தொடை**' என்னும் ஒன்றையும் கண்டனர். அத் தொடைகளே மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை, செந்தொடை என்பனவாம்.

**அளவு**

எத்தகு சுவையது எனினும் - பொருள் பொதிவு உடையது எனினும் - அளவோடு அமைதலும் வேண்டும் என்பதும் தொல்காப்பியர் தெளிவு. ஆதலால், '**அளவியல்**' என்றோர் உறுப்பையும் கொண்டார். இவற்றை முறையே தொல்காப்பியர் **மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல்** என வரிசைப்படுத்துகிறார்.

கட்டடக் கட்டுமானப் பொருள்களாக நாம் முன்னர்க் கண்ட ஆறு உறுப்புகளையும் கொண்டு, கட்டப்பட்ட **கட்டுமான உறுப்புகள்** இந்த ஆறும் எனலாம்.

யாப்பு மாளிகைக்குக் **கட்டுமானப் பொருள், கட்டுமானப் பணி** என்பவை மட்டுந்தாமா உண்டு?

தளமென்ன, பூச்சு என்ன, வண்ணமென்ன, வனப்பு என்ன, ஏந்து என்ன, இயைவு என்ன - எல்லாமும் கருதப்பட வேண்டுமே! எல்லாமும் கூடும் போதுதானே 'ஏராரு மாளிகை'யாய் ஏற்றம் பெறும்!

இவற்றைக் கருத்தில் கொண்டே, பிற உறுப்புகளை வகுத்தும் தொகுத்தும் கூறுகிறார் ஆசிரியர்.

திணை எனப்பட்ட அகப் பொருள் (அகத்திணை) புறப் பொருள் (புறத்திணை) என்னும் இரண்டும், பாடுபொருளாக இருக்க வேண்டும். களவு கற்பு என்னும் **கைகோள்** (ஒழுக்க நெறி) இடம் பெற வேண்டும். அவற்றைக் **கூற்று** வகையால் கூற வேண்டும். கூறினால் அதனைக் **கேட்போர்**, கேட்கப்படும் **இடம்**, கேட்கும் **காலம்** என்பனவும் பொதுள வேண்டும்.

கேட்டல் **பயன்**. கேட்டலால் உண்டாகும் மெய்ப்பாடு, இன்னும் சேர்க்கத் தக்கனவாம் பிற (**எச்சம்**) என்பவும் இணைய வேண்டும். கூறுவார் இவர், கேட்பார் இவர் என்னும் **குறிப்பும்** (முன்னம்), கேட்பார்க்குப் பயனுண்டாகப் புலவனால் படைக்கப்படும் புதுமைப் **பொருள்**, கூறப்படும் பொருளின் **துறை**, ஒன்றனோடு ஒன்று பொருந்தி நிற்கும் வகை (**மாட்டு**), ஓசை இன்பமாம் **வண்ணம்** என்பனவும் ஒன்ற வேண்டும்.

இவையெல்லாம் எண்ணின், **உறுப்புகள் இருபத்து ஆறாம்**, செய்யுள் '**வனப்பு**' எனப்படுவன எட்டு. அவை: **அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு** என்பன (அவற்றின் விளக்கம் மேலேவரும்).

### பாடுவது எளிது

"**இவ்வளவும் பார்த்துப் பாடுவதுதான் பாவா? அப்பாடா! நடக்கும் செயலா? பாடல் இயற்றுவது எளிமை இல்லை**" என்கிறீர் களா? இல்லை! இல்லவே இல்லை! "முடியாது என்னும் எண்ணத் தடை ஒன்றே தடை! பாடல் இயற்றுவது தடையில்லை! யாப்புத் தடையும் இல்லை! யார் தடையும் இல்லை! இதனை முதற்கண் தெளிவித்து விட வேண்டும்" என்பதற்காகவே, பழமொழி, தாலாட்டு, விடுகதை முதலிய வற்றில் எல்லாம் 'யாப்பியல்' இயல்பாக அமைந்திருப்பதைச் சுட்டிக் காட்டப்பட்டது. இதற்காகவே எம்மால் எழுதப்பட்ட நூல் ஒன்று '**எளிதாகப் பாடலாம்**' என்னும் யாப்பியல் நூல்.

**மிக எளிது**

*மூச்சுவிடுமுன்னே முன்னூறு பாடுவாராம்! நானூறும் பாடுவாராம்! 'ஆச்சு' என்று தும்மல் அடிக்குமுன்னே, ஆயிரம் பாடிவிடுவாராம்! ஒரு புலவர் கூறியது இது. இன்னொரு புலவர் கூறுகிறார்:*

*"ஏடாயிரம் கோடி எழுதாது தன்மனத்து*
*எழுதிப் படித்த விரகன் இமசேது பரியந்தம்*
*எதிரிலாக் கற்ற கவிவீர ராகவன்"*

*என்று தம்மைக் குறிப்பிடுகிறார். இன்னொரு வேந்தன் - பின்னாளை வேந்தன்,*

*"கன்னல் பாகில் கோல்தேனில்*
*கனியில் கனிந்த கவிபாட"*

*என்கிறான்.*

*"தென்னுண் தேனின் செஞ்சொற் கவியின்பம்"*

*என்கிறான் ஒரு பெரும்புலவன்.*

*"சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய*
*வந்த இருவினைக்கு மாமருந்து - முந்திய*
*நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்*
*மன்னிய இன்குறள்வெண் பா"*

*என்பது வள்ளுவ மாலையுள் ஒன்று.*

*வண்ணம் பாடல் அரிதுதான் - ஆனால்!* ***அருணகிரியார்க்கு?***

*ஒலியல் அந்தாதி பாடலும் அரிதே - ஆனால்!* ***வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளுக்கு?***

*ஏகபாதம் என்னும் 'ஓரடி' பாடல், அருமையே - ஆனால்!* ***சோழ வந்தான் அரசஞ்சண்முகனார்க்கு?***

*பண் சுமந்த பாடல் எவ்வளவு எளிமையாகப் பாடியுளர்* ***தேவார மூவர்!***

***பாரதியாரும் பாவேந்தரும்****, பாவாலே நிலைத்து விடவில்லையா?*

*செந்தமிழும் நாப்பழக்கம்!*

***பாடிப்பாடித் தழும்பேறினால் அரியதும் எளியதாம்!***

*வளையக் காட்சியைப் (சர்க்கசைப்) பார்த்தால் அருமையெல்லாம், எவ்வளவு எளிமை!*

*ஆர்வம் வருக! அதிலே ஊன்றுக! அதன் வடிவே ஆகுக! ஆக்குவ வெல்லாம் ஆக்கமிக்க பாடலேயாம்!*

**அசையும் இசையும்**

*அசையும் சீரும் அடுக்குவதா பாட்டு? இல்லை!*

*"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி"*

*இனிக்கப்பாடுக என்கிறார் (1268) ஆசிரியர்.*

*அசைவகை, சீர்வகை, அடிவகை, தளைவகை, பாடலாகும் வகை என்பவற்றை எல்லாம் விரிவாகக் கூறுகிறார்.*

**புதுப்பா**

*இந்நாளில் புதுக்கவிதை எனப்படுகிறது; உரைவீச்சு எனப்படுகிறது. '**ஐக்கூ**' எனப்படுகிறது. '**வசனகவிதை**' எனவும் தோன்றியது. இளங்கோ வடிகள் **உரைப்பாட்டு மடை** இயற்றினார். **உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்** எனவும் சிலப்பதிகாரம் வழங்கலாயிற்று. பாட்டும் உரையுமாக நடந்த பெருந்தேவனார் பாரதமும் கிளர்ந்தது. இவற்றையெல்லாம் தொல்காப்பியம் கொள்ளுமா? தள்ளுமா?*

*தொல்காப்பிய அளவுகோல், கொள்ளுவது, தமிழ்வழக்கு; தள்ளுவது அயல்வழக்கு;*

*தொல்காப்பியம் கொள்ளுவது மொழிக்காவல் - பண்பாட்டுக் காவல்.*

*தொல்காப்பியம் தள்ளுவது மொழிக்கேடு, பண்பாட்டுக்கேடு.*

*தொல்காப்பியம் கொள்ளுவது மொழித் தூய்மை.*

*தொல்காப்பியம் தள்ளுவது மொழிக் கலப்பு.*

*ஒரோ ஒருகால் ஒருவேற்றுச் சொல்லை ஏற்பினும், அது தமிழியல்பு கொண்டு அமைக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அதற்கு மாறாக அமைத்தல் ஆகாது. வேற்றுச் சொல்லை மாற்றித் தமிழியல்பில் வழங்கினும் கட்டாயம் வேற்று எழுத்து வடிவத்தை எந்த வகை கொண்டும் புக விடுதல் ஆகாது என்பனவேயாம்.*

***இவை மீண்டும் இங்கு வலியுறுத்தித் தொகுத்துக் கூறியது, பழமரபு காக்கும் இலக்கண நூல் - மறைநூல் - தொல்காப்பியம் என்பதை உறுதிப்படுத்தவேயாம்.***

***எத்தகைய பெருமையர் - அருமையர் - பதவியர் - ஆட்சியர் - எனினும், அவர் தொல்காப்பிய நோக்கைப் பாதுகாத்துப் போற்ற உரிமையரே அன்றி, அழிக்க உரிமைப்பட்டவர் அல்லர் என்பதே, அவரை (தொல்காப்பியரை) அடுத்து வந்த நூலாசிரியர் ஒருவர் கட்டளை அது, தொல்காப்பியன் தன் ஆணை*** *என்பது. அது வருமாறு:*

*"கூறிய குன்றினும் முதல்நூல் கூட்டித்*
*தோமின் றுணர்தல் **தொல்காப் பியன்தன்***
***ஆணையிற் றமிழறிந் தோர்க்குக் கடனே**"*

பெருந்தொகை.1368) தோம் இன்று = குற்றம் இன்றி.

**தடையா?**

***மொழிவளர்ச்சிக்கு இவ்வாணை தடை இல்லையா? மொழிக் காவல், மொழி வளர்ச்சித் தடையாகாது. வளர்ச்சிக்குரிய ஆக்கங் களை யெல்லாம் இயல்தோறும் அதிகாரம் தோறும் புறநடையாக ஆசிரியர் சொல்லிச் செல்வதையும், நூற்பாக்களில் சுட்டுதலையும் எண்ணிப்பார்ப்போர் இவ்வாறு கூற எண்ணியும் பாரார் என்க.***

**உரைப்பா**

*செய்யுள் ஒன்றே யாப்பு எனப் பின்னூல்கள் கொண்டிருக்கவும், தொல்காப்பிய முந்து நூலோ, எழுவகை யாப்புக்களைக் குறிக்கிறது.*

***பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல்*** *என்பவை அவை. அவற்றைக் கூறும் நூற்பாவிலேயே,*

*"வண்புகழ் மூவர் தண்பொழில் உரைப்பின்*
*நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்*
*யாப்பின் வழியது என்மனார் புலவர்"*

*என்றார் (1336).*

*பாட்டு யாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, வாய்மொழி யாப்பு, பிசியாப்பு, அங்கத யாப்பு, முதுசொல்யாப்பு என இவற்றை விரித்துக் கொண்டால் தெளிவாகும். பிசியாவது புதிர் (விடுகதை). அங்கதம் வசையும் இசையும் அமைந்த பா. முதுசொல் - பழமொழி. இவற்றின் விளக்கம் மேலேகாண்போம்.*

**சொல்மரபு**

*சொல்லின் மரபு சொல்லும் ஆசிரியர்,*

*"மரபே தானும்,*
*நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று"*

*என்கிறார் (1337).*

*நாற் சொல்லாவது, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனச் சொல்லதிகாரத்துச் சொல்லப்பட்டவற்றை.*

**ஓசைவகை**

***அகவல்*** *என்பது என்ன எனின், மயில் அகவுதல் போல்வது. அந்த யாப்பினை ஆசிரியர் கற்பித்தற்கும் நூல் இயற்றுதற்கும் பெரிதும் பயன்படுத்தியமையால் '**ஆசிரியப்பா**' எனவும் பட்டது. நூல் இயற்றப்*

பயன்படுத்தியமையால் '**நூற்பா**' எனப்பட்டது. இரண்டற்கும் வேறுபாடு, அகவற் பாவிற்குரிய அடிவரையறை, முடிநிலை என்பவை நூற்பாவிற்குக் கொள்ளுதல் வேண்டுவது இல்லை. ஓர் அடியாலும் வரலாம்; குறைந்தும் வரலாம். மிக்குப் பெருகிவரினும் அகவல் முடிவுபோல் முடியவேண்டும் என்பது இல்லை என்பவை இவற்றின் வேறுபாடாம்.

ஆசான், **நுவல்வது > நூல் ஆயது; அதன்பா, நூற்பா** எனப்பட்டது. நூல், மறை என்பன இலக்கணம் குறித்துநின்று பின்னர்ப் பொருள் விரிவும், திரிபும் கொண்டன. மறை என்பதன் பழம்பொருள் பாதுகாப்பு, களவு என்பவையாம். எ-டு: மெய்ம்மறை (கவசம்) ; மறையோர் - களவொழுக்கக் காதலர் (1442). அகவல் ஓசை இருவகையாம். அவை நேர் ஒன்றல், நிரை ஒன்றல் மா முன் நேர், விளமுன் நிரை என்பன.

**செப்பல்**

ஆசிரியர் உரைப்பது போல் ஒரு போக்காக இல்லாமல், கூற்றும் மாற்றமும் - செப்பும் வினாவும் - போல வரும் யாப்பு **வெண்பா யாப்பு.**

"அஃதான் றென்ப வெண்பா யாப்பே"

(அஃது + அன்று = அஃதான்று) வெண்பா ஓசை **செப்பல்.** காய்முன் நேர்வரல் செப்பல்.

**துள்ளல்**

கலிப்பாவின் ஓசை துள்ளல். நின்று மேலேறிக் கீழேவீழ்தல் துள்ளல் 'துள்ளல் ஆட்டம்' (துள்ளாட்டம்) ஆட்டங்களுள் ஒன்று. தத்து வாய்மடை, கலிங்கல் என்பவை நீர் துள்ளிவீழும் இடங்களாம். துள்ளி வீழும் நீர் துள்ளி ழூ துளி ஆயது. மீன் துள்ளி, துள்ளம் என்பவை ஊர்ப் பெயர்கள்.

"தன**தனனா** தன**தனனா** தன**தனனா** தனதனனா"

நீர் துள்ளி வீழ்தல்போல் சீர் இறுதி நெடிலாகவும் அடுத்த சீர்முதல் குறிலாகவும் இருத்தல் காண்க.

"காய்முன் நிரைவரல் கலித்தளை" என்க.

எ-டு :

"அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்"

**தூங்கல்**

இனி "தனதனதன தனதனதன" என்னும் ஓசையுடன் வரின் வஞ்சித் தளை. அது தூங்கல் ஓசை எனப்படும். தூங்கல் என்பது யானை. அதன் கையை இப்பாலும் அப்பாலும் அசைப்பது போலவும், தொங்கும் ஊசல், காதணி, கடிகையாரத் தொங்கல் என்பன இயங்கும் இயக்கம் போலவும் இப்பாலும் அப்பாலும் செல்வது. தூங்கல் ஓசை **வஞ்சிப்பாவின் ஓசை**.

கனிமுன் நிரையும், கனிமுன் நேரும் வருதல். முன்னது ஒன்றிய வஞ்சி; பின்னது ஒன்றா வஞ்சி.

எ-டு :

"முரசியம்பின முருடதிர்ந்தன
முறையெழுந்தன பணிலவெண்குடை
அரசெழுந்ததோர் படியெழுந்தது"

என்பது சிலப்பதிகார மங்கல வாழ்த்து. இவை முழுவதும் ஒன்றிய வஞ்சி.

### மருட்பா

இந்நாற்பாவுடன் **மருட்பா** என ஒன்று உண்டு. அதனை 'அம்மையப்பன்' போலவும் 'நரமடங்கல்' (நரசிம்மம்) போலவும் என்பார் யாப்பருங்கல விருத்தியார். யானைக் கையும், அரிமா உடலும் கொண்ட '**யாளி**' என்னும் உருவம் கோயிற் சிலைகளில் உண்டே அது போல் என்பது. மருளாவது மயக்கம். இதுவும் அதுவும் கலந்த ஒன்று. வெண்பா முன்னாக அகவல் பின்னாக அமையும் யாப்பு அது (1342).

### செந்தொடை

தொடை பற்றி முன்னரே கண்டோம்

தொடை எதுவும் வாராமல் தொடுப்பதும் தொடையே! அது பொருளே போற்றிவரும் '**செந்தொடை**' என்பது (1357). செம்மையாவது இயல்பு.

### இருபா

அகவல் வெண்பா கலிப்பா வஞ்சிப்பா எனப் பாவகை நான்கெனக் கூறினும், அகவலுள் வஞ்சியும், வெண்பாவுள் கலியும் அடங்குதலின் **ஆசிரியப்பா, வெண்பா** என்னும் இரண்டு பாவினுள் அடங்கும் என்பார். (வஞ்சி நெடும் பாட்டு என்னும் பட்டினப்பாலையும், வெண்கலிப்பா, கலிவெண்பா என்னும் யாப்பும் இவண் நோக்கத் தக்கவை)

### வாழ்த்து

'ஐங்குறு நூல்' வாழ்த்துதலையே முதலடியாகக் கொண்ட முதற் பத்து உடையது. "வாழி யாதன் வாழி யவினி" என்பதே அம் முதலடி பத்தும். சிலப்பதிகாரக் காப்பியம், ஒருவரைக் காணும் காலும், அவரிடம் விடை பெறும் காலும் வாழ்த்துடன் வந்து வாழ்த்துடன் விடை பெறு தலைக் காட்டும். கடவுள் வாழ்த்திலேயே, திருவள்ளுவர் நீடு வாழ்தலைச் சுட்டினார் இருமுறை. இன்பத்துப் பாலில் நீடு வாழ்க என்பாக்குத் தும்முதலைச் சுட்டினார்.

வாழ்த்துதல் என்னும் பண்பு நம்மவர் உயர்பண்பு. இதன் மூல வைப் பகம் தொல்காப்பியம். அது,

*"வாழ்த்தியல் வகைநாற் பாவிற்கும் உரித்தே"* (1366)

என்று எங்கெங்கும் வாழ்த்துக்கு வழி கூறியுள்ளது. **புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ** என்பவற்றை அறம் முதலாகிய மும்முதற் பொருளையும் காக்கும் வகையால் கூறுகின்றது (1363).

### புறநிலை வாழ்த்து

*நீ வழிபடுகின்ற தெய்வம் உன்னைக் காப்பதாக!*

*பழியற்ற வகையில் செல்வம் சேர்வதாக!*

*வழிவழியாகக் குடிநலம் பெருகி வாழ்வாயாக!*

- என்று வாழ்த்துவது புறநிலை வாழ்த்து (1367).

"எவ்விடத்தாயினும் தெய்வம் உறைதலின், திருக்கோயில் வளாகமே யன்றி எங்கும் வழிபாடு செய்யலாம்; வாழ்த்துக் கூறலாம்" என்பதை உணர்த்தும் வகையால் **புறநிலை வாழ்த்து** என்றார். நீ வழிபடு தெய்வம் 'நிற்புறம் காப்ப' என்பது இறை உடனாகி ஒன்றாகிக் காக்கும் என்பது. "புறம் புறம் திரிந்த செல்வமே" என்னும் மணிவாசகத்தால் இது புலப்படும். மற்றும், "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும்" என்னும் குறள் (1023) முயற்சியாளனுக்குத் தெய்வம் ஓடிவந்து உதவும் என்பதும் எண்ணத் தக்கது. "**தெய்வம் நின்புறம் நிற்பதாக**" என்று வாழ்த்துதலால் புறநிலை வாழ்த்தாம்.

### வாயுறை வாழ்த்து

வேம்புபோல் கசப்பும், நஞ்சுபோல் அழிப்பும் உடைய கொடிய சொற்கள் இடம் பெறல் இல்லாமல், வாழ்த்துதலும், நீ எடுக்கும் முயற்சி களும் செல்லும் செலவுகளும் மேலும் மேலும் நலமாக அமைவதாக என்று வாழ்த்துதலும் வாயுறை வாழ்த்தாம்.

வாயுறை வாயில் இருந்து பொழியும் அமிழ்து. **வானில் இருந்து பொழியும் அமிழ்துபோல் வாயில் இருந்து பொழியும் அமிழ்து வாயுறை** ஆயிற்று. உறை = மழை, அமிழ்து. இன்பத்து அமிழ்த்துவது ஆதலாலும் வாய்க்கண் இருந்து அவ்வின்பச் சுரப்பு வெளிப்படுதலாலும் வாயுறை ஆயிற்று.

*"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்*
*வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்*
*தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று*
*ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே"*

என்னும் இந் நூற்பாவிற்கு (1369),

"முற்பருவத்துக் கைத்தும் பிற்பருவத்து உறுதிபயக்கும் வேம்பும் கடுவும் போல வெய்யவாயின சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்கு மெனக் கருதிப் பாதுகாத்துக் கிளக்கும் கிளப்பினான் மெய்யாக அறிவுறுத் துவது வாயுறை வாழ்த்து எனப்படும்" என்பது பேராசிரியர் உரை.

**அவையடக்கியல்**

தேர்ச்சியில்லாத சொற்களைச் சொல்லும் வகை தெரியாமல் யான் சொன்னாலும் உங்கள் தேர்ச்சியால் அமைத்துக் கொண்டு அருள்வீராக என அவையோரை வேண்டிக் கொள்ளுதல் அவையடக்கியலாகும்.

அவையை அடக்குதல் தகுமோ எனின், **அவைக்குந் தான் அடங்கியமை உரைத்து வேண்டுதலால் அவர்தம் தகவால் அடங்குவர் ஆதலால்** அவரை, **அடங்குதல் வகையால் அடக்குதல்** ஆயிற்று என்க. "என்றும் பணியுமாம் பெருமை" என்பது கூறுவார்க்கும் கூறக் கேட்பார்க் கும் பொதுமையது ஆகலின். '**அடங்கிப் போதல், அடக்கும் கருவி**' என்பது அரிய வாழ்வியல் வளச் செய்தியாம்.

**செவியுறை**

செவியை உறுத்தும் வகையில் இடித்துக் கூறி இன்பம் சேர்ப்பது செவியுறை ஆகும். உறுத்தும் உரை உறை ஆயது.

இடிக்கும் துணையாரை இல்லாதவர் வாழ்க்கை கெடுப்பவர் இல்லாமலும் கெடும் என்பது வாய்மொழி யாதலும், "இடிக்கும் கேளிர்" என்பது நட்பியலாதலும் அறிந்து போற்றத் தக்கவை.

"செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே"

என்பது நூற்பா (1371).

பொங்குதல் = செருக்குதல்; புரையோர் = உயர்ந்தோர்; அவிதல் = அடங்கி நடத்தல்.

"எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்வில்லை
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்"

என்பது வள்ளுவம் (896).

புறநிலை வாழ்த்துக் கூறும்போது **அவ் வாழ்த்து, கலிப்பாவும் வஞ்சிப்பாவும் கொள்ளாது என்றார்** ஆசிரியர். ஏன்?

வாழ்த்து அளவுடையதாக அமைதல் வேண்டும். வரம்பிலா வாழ்த்து இயல்பிலாததாகிவிடும். ஈரடி, மூவடி, நாலடி அளவில் அமையும் வெண்பாவும் அகவலும். ஆனால், கலியும் வஞ்சியும் அவ்வாறு அமையா.

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், அம்போதரங்கம், கொச்சகம் என்ன அமையும் கலியும், அதன் இளையோன் போன்ற வஞ்சியும் வாழ்த்துக்கு வேண்டா என்று ஒதுக்கிய வகை இதுவாம் (1367, 1417).

சிலர் மேடையில் வாழ்த்தும் வாழ்த்துதல் அவையோர்க்கு மட்டுமன்றி, வாழ்த்துப் பெறுவோரையும் நெளிய வைத்தல் கண்கூடு.

அம்மட்டோ! அம் மேடை விட்டு இறங்கியதும் எவ்வளவு வாழ்த்திப் பேசினாரோ அதனினும் மிகப் பழிப்பதும் கேட்க, '**சீ! சீ! என்ன பிறவி இது**' என்று பழி கொள்வாராக்கும், இவ் வாழ்த்து வேண்டுவது தானா? இதற்கு மாறானவரும் உண்டு. மனையில் புகழ்வார்; மன்றில் பழிப்பார் அவர். ஆதலால்,

*"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு*
*சொல்வேறு பட்டார் தொடர்பு"*

*"எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ*
*மன்றில் பழிப்பார் தொடர்பு"*

என்றார் வள்ளுவர் (819, 820).

**வண்ணம்**

வளமான இசையமைந்த பா, வண்ணப்பா, வள் மூ வண். வண் + அம் = வண்ணம்.

வண்ணம் எழுத்தின் தோற்றத்திலேயே தோன்றியது. மெய்யியல் தோற்றம் எப்படி எழுத்தொடு கொண்டதோ, அப்படிக் கொண்டது வண்ணமும்.

ஓசை நயம் கொண்டு வண்ணங்களை இருபது எனக் குறித்தார் தொல்காப்பியர். அதனை நூறாக்கினர் பின்னவர்; பன்னூறாகப் பாடிய வரும் உளர்.

**பாஅ வண்ணம்:** அசையா சீரா தளையா பார்க்க வேண்டா வண்ணம் பாஅ வண்ணம். அவ் வண்ணம் இலக்கணம் கூறும் நூலுள் பயில (நிரம்ப) வரும். அதற்குச் சொல்லே சீராய் அமையும். நூற்பா வண்ணம் என்பதும் இதற்கு ஒரு பெயர்.

*"அவற்றுள்,*
*பாஅ வண்ணம்*
*சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்"*

என்னும் **இந் நூற்பாவே, பாஅ வண்ணச் சான்று** (1470)

**தாஅ வண்ணம்:** இடையிட்டு வரும் எதுகை யுடையது தாஅ வண்ணம்.

எ-டு :

*"**உரி**ச் சொற் கிளவி **விரி**க்கும் காலை"* (782)

***வல்லிசை வண்ணம்:*** வல்லெழுத்துப் பலவாக அமைந்தால் அது வல்லிசைவண்ணம்.

எ-டு :

*"**மாற்றரும் கூற்றம் சாற்றிய** பெருமை"* (1025)

***மெல்லிசை வண்ணம்:*** மெல்லெழுத்துப் பலவாக அமைதல் மெல்லிசை வண்ணம்.

எ-டு :

*"**வண்டும் பெண்டும் இன்னொடு** சிவணும்"* (420)

***இயைபு வண்ணம்:*** இடையெழுத்துப் பலவாக வருதல் இயைபு வண்ணம்.

எ-டு :

*"**தலைவரு விழும நிலையெடுத்** துரைப்பினும்"* (985)

***அளபெடை வண்ணம்:*** உயிரளபெடை, ஒற்றளபெடை என்னும் அளபெடை இரண்டும் மிகுந்து வருவது அளபெடை வண்ணம்.

எ-டு :

*"**ஒரூஉ** வண்ணம் **ஒரீஇத்** தோன்றும்"* 1483)

*"**கண்ண் டண்ண்** எனக் கண்டும் கேட்டும்"*

***நெடுஞ்சீர் வண்ணம்:*** நெட்டெழுத்து மிகுந்து வருவது நெடுஞ்சீர் வண்ணம்.

எ-டு :

*"**கேடும் பீடும் கூறலும் தோழி**"* (1048)

***குறுஞ்சீர் வண்ணம்:*** குற்றெழுத்து மிகுந்து வருவது குறுஞ்சீர் வண்ணம்.

எ-டு:

*"**புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇ**"* (1053)

***சித்திரவண்ணம்:*** நெடிலும் குறிலும் ஒப்ப வருவது சித்திரவண்ணம்.

எ-டு:

*"**காமம் நீத்த பாலி னானும்**"* (1022)

***நலிவு வண்ணம்:*** ஆய்த எழுத்து மிகுந்து வரின் அது நலிபு வண்ணம்.

எ-டு:

*"னஃகான் றஃகான் நான்கன் உருபிற்கு"* (123)

***அகப்பாட்டு வண்ணம்:*** *இறுதியடி இடையே வரும் அடிபோல் நிற்பது.அதாவது முடியாத் தன்மையான் முடிந்ததாய் அமையும்.*

*எ-டு:*

*“மரபுநிலை திரியா மாட்சிய வாகி*
*உரைபடு நூல்தாம் இருவகை இயல*
*முதலும் வழியுமென நுதலிய நெறியின்”* (1593)

*(நுதலிய நெறியின இருவகை இயல எனமுடிக்க)*

***புறப்பாட்டு வண்ணம்:*** *முடிந்தது போல் தோன்றி முடியாததாய் வருவது புறப்பாட்டு வண்ணம்.*

*“இன்னா வைகல் வாரா முன்னே*
*செய்நீ முன்னிய வினையே*
*முந்நீர் வைப்பகம் முழுதுடன் துறந்தே”*

*-ஈற்றயலடி முடிந்தது போன்று முடியாத தாயிற்று (பேரா).*

***ஒழுகு வண்ணம்:*** *ஒழுகிய இனிய ஓசையால் வருவது ஒழுகு வண்ணம்.*

*“உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்*
*உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்*
*மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்*
*மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியும்”...* (106)

***ஒரூஉ வண்ணம்:*** *கூறப்பட்ட வண்ண வகையுள் எதனையும் சாராது வண்ணம் நீங்கிச் செந்தொடையாக வருவது.*

*“சிறப்பொடு வருவழி யியற்கை யாகும்”* (349)

***எண்ணுவண்ணம்:*** *ஒன்று இரண்டு என்பன முதலாக எண்ணுவகை பொருந்தி வருவது எண்ணுவண்ணம்.*

*எ-டு :*

*“நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்”* (1589)

***அகைப்பு வண்ணம்:*** *அறுத்து அறுத்து வருவது அகைப்பு வண்ணம்.*

*அகைத்தல் = அறுத்தல்.*

*“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே*
*இரண்டறி வதுவே அதனொடு நாவே*
*மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே.....”* (1526)

***தூங்கல்வண்ணம்:*** *வஞ்சியுரிச் சீராகிய கனிச்சீர் மிகுந்து வருவது தூங்கல் வண்ணம். தூங்கல் = அசைநடையது.*

*"முரசியம்பின முருடதிர்ந்தன*
*முறையெழுந்தன பணிலவெண்குடை"* (சிலம்பு)

***ஏந்தல் வண்ணம்:*** *சொல்லிய சொல்லினாலே சொல்லப்பட்டது சிறக்க வருவது ஏந்தல் வண்ணம்.*

*"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்"* (குறள். 751)

***உருட்டு வண்ணம்:*** *உருளை ஓடும் ஓட்டம் போலச் சொல் ஓட வருவது உருட்டு வண்ணம். உருளற்கு ஏற்ப நெடிலும் வல்லொற்றும் பெரிதும் வாராது தொடுத்தல் வேண்டும்.*

*எ-டு:*

*"எரியுரு வுறழ விலவ மலர"* (கலி.33)

***முடுகு வண்ணம்:*** *உருட்டு வண்ணம் போன்று, நாற்சீரடியின் மிக்க அடியில் வருவது முடுகுவண்ணம்.*

*எ-டு:*

*"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ"* (கலித். 39)

*வண்ணங்கள் இவை என எண்ணி அவற்றை நிரற்பட உரைத்து நிறைவில், "வண்ணந் தாமே இவையென மொழிப" என முடித்தார் (1490).*

***வண்ண இயற்கை:*** *வண்ணங்கள் இருபதும் குறுங்கணக்கு, நெடுங் கணக்கு என்னும் 'அரிவரி' வரிசையிலேயே இயல்பாக அமைத்துக் கொண்ட அருமை வியக்கத்தக்கதாம்.*

*பெயர்களைப் பாருங்களேன்:* ***பா****அ வண்ணம்,* ***நூற்பா*** *வண்ணம்,* ***தாஅ*** *வண்ணம் - இடையிடல்தானே* ***தாவுதல்****; வல்லிசை, மெல்லிசை, இயைபு ஆகிய மூன்றும்,* ***வல்லினம், மெல்லினம், இடையினம்*** *வருதல் தானே. இனி, அளபெடை வண்ணம் சீரிய* ***ஓசை நீட்டம்*** *கருதியது அல்லவோ! நெடுஞ்சீர் குறுஞ்சீர், சித்திரம் நலிபு என்பவை முறையே* ***நெடில், குறில், நெடிலும் குறிலும், ஆய்தம்*** *என்பவை மிகுந்தவைதாமே.* ***அகப்பாட்டு புறப்பாட்டு*** *வண்ணங்கள் முடிநிலை பற்றியவை.* ***ஒழுகு*** *வண்ணம் ஆற்றுநீர் ஓட்டம் போல்வது;* ***ஒரூஉ****, வண்ணமில்லா வனப் பினது;* ***எண்ணு****வண்ணம் எண்ணிக்கை சுட்டிவருவது.* ***தூங்கல், ஏந்தல், உருட்டு, முடுகு*** *என்பவை முறையே அசைந்துவருதல், பல்கால் வருதல், உருண்டுவருதல் ஆகிய நடைகுறித்தவை. இவையெல்லாம்* ***செயற்கை யில்லா இயற்கை யமைந்தவை****.*

*இனி, இவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் எங்கிருந்து காட்டப்பட்டன என்பதைப் பாருங்கள்.* ***14 வண்ணங்களுக்குத் தொல்காப்பியத்தில் இருந்தே எடுத்துக்காட்டுகள் காட்டப்பட்டுள****.* ***ஏந்தல்*** *வண்ணத்திற்கு*

“இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு, இன்னென் சாரியை இன்மை வேண்டும்” என்பதும் (131) **உருட்டு** வண்ணத்திற்கு, “உளவென மொழிப இசையொடு சிவணிய” என்பதும் (33) எடுத்துக்காட்டு ஆகலாம். அவ்வா றாயின், நான்கு வண்ணங்களுக்கு மட்டுமே எடுத்துக்காட்டுக் காட்ட இயலாதாயிற்று. ஏன்?

**ஒற்றளபெடை** வருதல் இலக்கிய வழக்கிலும் அரிதானது. **புறப்பாட்டு** வண்ணம் நூற்பாவிற்கு ஏலாதது. **தூங்கல்** வண்ணம் வஞ்சியடி யுடையது; நூற்பாவோ அகவலடி யுடையது. இனி **முடுகு** வண்ணமோ நாற்சீர் அடியின் மிக்க அடிக்கண் வருவது; நூற்பா அடிக்குப் பொருந்தாதது. இன்னவற்றாலேயே, இவ்வண்ணங்களுக்கு இலக்கணம் கூறிய தொல்காப்பியத்திலே இலக்கியமும் காட்ட இயலாததாயிற்று.

வண்ணம் பாடிய இசை நூலும் அன்று; காப்பியமும் அன்று; தொல்காப்பியம். **இலக்கணம் கூற வந்தநூல் இவ்வளவும் கூறியது செயற்கரிய சீர்மையது அன்றோ**!

ஓர் இலக்கணத்தை இத்தகு சுவையும் நயமும் கமழ இயற்றல் எளிமையாமா என்பதை உணர்ந்து போற்றுவதற்கே நாம் எடுத்துக் கூறுவதிதுவாம். **தொல்காப்பியர் அரிய படைப்பாளி மட்டுமல்லர்; மிக இனிய துய்ப்பாளியுமாவர் என்பதன் சான்றுகளுள் ஈதொன்று என்க**.

### வனப்பு

வனப்பு எனச் சொல்லப்பட்ட செய்யுள் உறுப்புக் கூறும் ஆசிரியர், அம்மை முதலாகக் கூறுகிறார். வனப்பு = இயற்கை எழில் (வனம் மூ வனப்பு). “கைபுனைந் தியற்றாக் கவின்பெரு வனப்பு” என்பது முருகு.

***அம்மை:*** “அம்மை தானே அடிநிமிர்வு இன்றே” (1491) என்கிறார். நிமிர்தல் = மிகுதல். அடிமிகாமல் சுருங்கச் சொல்வதே அம்மை என்னும் அழகாகும். பத்துவகை அழகுகளில் சுருங்கச் சொல்லல் என்பதே முதல் அழகு (நன்). “அம்ம கேட்பிக்கும்” (61) என்பது போதுமே.

***அழகு :*** செய்யுட் சொல்லாகிய உரிச்சொல் மிகுதியாக வர இயற்றுவது அழகு என்னும் வனப்பாகும்.

எ-டு :

*“ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்*
*ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்”* (813)

**தொன்மை :** இடை இடையே உரைநடை வரப் பழமையாக வழங்கிவரும் பொருளைக் கூறும் செய்யுள்களை யுடையது தொன்மை.

இதற்குத் '**தகடூர் யாத்திரை**'யைக் கூறுவர். சில பாடல்களை யன்றி நூல் எய்திற்றில்லை. எய்திய பாடல்கள் எம்மால் உரைகண்டு நூலாக்கம் பெற்றுளது. **பெருந்தேவனார் பாரதம்** உரையிடை இட்டது.

**தோல்** :

'**இழு**மென் **மொழி**யால் **விழு**மியது நுவலினும்
பரந்தமொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்"

என்னும் இந் நூற்பாவின் முதல் இலக்கணத்திற்கு இம் முதல் அடியே எடுத்துக்காட்டு. பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகுவதற்குச் சான்று பத்துப்பாட்டு.

**விருந்து** : விருந்து என்பது புதிதாகப் பாடும் நூல் வகையைக் குறிக்கும். புதுயாப்பினது என்பதுமாம். முத்தொள்ளாயிரம், அந்தாதி, கலம்பகம் என்பவற்றை எடுத்துக்காட்டுவார் பேராசிரியர்.

**இயைபு**: 'ஞ்' என்னும் எழுத்து முதல் 'ன்' என்னும் எழுத்து ஈறாக வரும் புள்ளி எழுத்துக்களைக் கொண்டு முடியும் பாடல்களையுடைய நூல் இயைபு இலக்கணம் உடையதாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை என்பன இவ்வகையின. 'என்' என முடிந்தவை.

**புலன்** : எளிய வழக்குச் சொற்களைக் கொண்டு ஓடிய ஓட்டத்தில் பொருள் புரியுமாறு பாடப்படுவது புலன் என்னும் வனப்பாகும். எ-டு : குடும்ப விளக்கு; இருண்ட வீடு; பாஞ்சாலி சபதம்.

**இழைபு** : வல்லொற்று வாராது குறளடி முதலாக ஏறிய அடிகள் பலவும் வரத்தொடுப்பது இழைபு வனப்பு எனப்படும். இதுவும் புலன் போன்ற பொருள் புலப்பாடு உடையதாதல் வேண்டும்.

எ-டு : கலியும், பரிபாடலும் என்பார் பேராசிரியர்.

வனப்பு அமைக.

இனிப் '**பா**' பற்றிச் சில காணலாம்.

**பா, உரைப்பா**

பா = பாட்டு. இப் பாட்டினைத் தொல்காப்பியத்தை உள்வாங்கி, **ஏட்டுப்பாட்டு** எனவும் **நாட்டுப்பாட்டு** எனவும் இரு வகையாகக் காணலாம்.

**ஏட்டுப்பாட்டு** என்பது அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபா, அங்கதப்பா, தேவபாணி என்பனவாம்.

**நாட்டுப்பாட்டு** என்பது, உரைப்பாட்டு, பிசிப்பாட்டு, முதுமொழிப் பாட்டு, மந்திரப்பாட்டு, குறிப்புப்பாட்டு, பண்ணத்தி என்பவை.

**அகவல் : அகவல் முதலாகிய பாக்கள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருளும் கூறுவனவாக வரும். அவற்றுக்குச் சீர் வரையறை அடிவரையறை முடிநிலை வரையறை என்பவையும் உண்டு.**

ஆசிரியப்பா நால்வகைப்படும். அவை நேரிசை, நிலைமண்டிலம், அடிமறிமண்டலம், இணைக்குறள் என்பன.

இறுதியடிக்கு முன்னடி முச்சீராய் வருவது **நேரிசை**. எல்லா அடிகளும் நாற் சீராய் வருவது, **நிலைமண்டிலம்.** எந்த அடியை எந்த அடியாக மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாதது, **அடிமறி மண்டிலம்.**

முதலடியும், இறுதியடியும் நாற்சீரடியாய் இருக்க இடையடிகள் சில இருசீர் முச்சீர் அடிகளாகவும் வருதல், இணைக்குறள். ஆசிரியப்பா இது சங்கநாளில் பெருஞ் செல்வாக்குடையதாக விளங்கியது. மேற்கணக்கு எனப்படும் பாட்டு, தொகையாகிய பதினெட்டு நூல்களில் கலித்தொகை, பரிபாடல் என்னும் இரண்டும் தவிர்ந்த பதினாறு நூல்களும் அகவலால் அமைந்தவையே. இந் நாள்வரை அதன் செல்வாக்குப் பெருகியே உள்ளது.

மூன்றடிச் சிறுமை ஆயிரம் அடிப்பெருமை எனப்பட்ட அப் பா ஆயிரம் அடியைத் தாண்டியும் வள்ளலாரால் பாடப்பட்டது.

**வெண்பா :** வெண்பா ஈரடிச் சிறுமையும் பாடுவோர் எண்ணத் திற்குத் தகுந்த பெருமையும் உடையது. கலித்தொகையில் கலிவெண்பாவும் உண்டு. குறள்வெண்பா, குறுவெண்பாட்டு எனப்படும். அதனின் நீண்ட வெண்பா நெடுவெண்பாட்டு எனப்படும். குறுவெண்பாவுக்குக் குறள் நூலும், மற்றை வெண்பாவுக்குப் புறப்பொருள் வெண்பாமாலையும் நமக்குக் கிடைத்த தனி நூல்கள். பாரத வெண்பா பெருந்தேவனார் பெயரால் விளங்குகிறது. உரையிடையிட்ட வெண்பாவுடையது. 830 பாடல்கள் அளவில் முன்னும் பின்னும் இல்லாமல் கிடைத்து வெளிப்பட் டுளது. அது பிற்காலத்தே உரையிடையிட்ட தோற்றமுடையது ஆயிற்றுப் போலும்!

வெண்பா, குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, அளவியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, கலிவெண்பா எனப் பல வகைகளை யுடையது. வெண்பாப் பாடுதலில் பின்னாளில் பெரும் புகழோடு விளங்கியவர் புகழேந்தியார். அவர் கொண்டவை நேரிசை வெண்பா. நான்கடியான் வருவது அது. மூவடியால்

வருவது சிந்தியல். இரண்டாமடியில் தனிச்சொல் இன்றி வருவது இன்னிசை; பன்னீரடி வரையுடையது பஃறொடை (பல தொடை); அதனின் நீண்டது கலிவெண்பா.

**கலிப்பா** : கலிப்பா பல உறுப்புகளையுடையது. தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், அம்போதரங்கம், கொச்சகம், வண்ணகம் என்பன அதன் உறுப்புகள். கொச்சகம் சிலவாகவும், பலவாகவும் வரும். பின்வந்த தாழிசை, துறை, விருத்தம் என்னும் இனப்பாவிற்குத் '**தாய்ப்பா**' கலிப்பா. **தரவு** - முற்படத் தந்து நிறுத்துவது. **தாழிசை**-தாழமமைந்த ஓசையுடையது; ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவது. **சுரிதகம்** - முடிநிலை. **அம்போத ரங்கம்** - நீரலை போல்வது; கரைசாரச்சாரச் சுருங்கி வரும் அலைபோலச் சுருங்கிவரும் அடிகளையுடையது. **கொச்சகம்** என்பது கொய்சகம். மகளிர் உடுத்தும் உடை இடையில் மடிப்புடன் வருவதுபோல் வருவது. இன்றும் 'கொசுவம்' என வழங்கப்படுவது. விரிவுமிக்கதும் கூற்றும் மாற்றமுமாகத் தொடர வாய்த்ததும், இசை கூட்டிப் பாட வாய்ப்பதும் இது. காலப்போக்கில் அருகி வருவது இப்பா. வண்ணகம் இசை நலம்மிக்கது.

**வஞ்சிப்பா** : வஞ்சிப்பா குறளடி வஞ்சி, சிந்தியல் வஞ்சி என இருவகையது. முன்னது இரு சீராலும் பின்னது முச்சீராலும் வருவது. வஞ்சிப்பாவும் பாடுதல் அரிதாயிற்று. அன்றியும் அப் பாவால் அமைந்த நூல் ஒன்றுதானும் இல்லை. கிடைத்தவை தனித்த பாடல்களேயாம்.

**பரிபா** : பரிபா என்பது கலிப்பாவைப் போல் பல உறுப்புகளை யுடையது (1377). 140 அடி வரை நீள்வது; 25 அடிச் சிறுமையது; அருவியும் ஆறும் பரியும் கரியும் கீரியும் முயலும் நடையிடுவது போன்ற நடையது. பண்வகுத்துப் பாடப்பட்ட பெருமைக்குரியது. இந் நாளில் அதனைப் பாடுவார் அரியர் ஆயினர். அந் நாளில் ஒரு நூலாவது கிளர்ந்தது. அதன் பெயர் பரிபாடல். 70 பரிபாடல்களில் முற்றாகக் கிடைத்தவை 22 மட்டுமே.

**மருட்பா** : மருட்பா வெண்பாமுன்னாகவும் அகவல் பின்னாகவும் கொண்ட மயக்கப்பா என்பது முன்னரே கண்டுளோம். தனிநூலாக்கம் மருட்பா பெற்றதில்லை.

**அங்கதம்** : அங்கதப்பாவும், தேவபாணிப் பாவும் பொருள் வழியால் பெயர் பெற்றவை. தனியாப்புப் பெற்றவை அல்ல.

அங்கு = வளைவு. சொல்வதை உள்ளது உள்ளபடி நேருக்குநேர் உள்ளவாறு கூறாமல், புகழாகவும் வசையாகவும் பாடுவது அங்கதமாகும். அங்கதம், செம்பொருள் பழிகரப்பு (பழியை மறைத்துக் கூறல்) என இருவகைப்படும் (1381). செம்பொருள் என்பது வசையை வெளிப்படக் கூறும். வசையை மறைத்துக் கூறுதல் பழிகரப்பு. தேவபாணி என்பது, இறை

வழுத்துப் பாடல். அது பாடல் அளவால் பெருந்தேவபாணி, சிறு தேவபாணி என இருவகைப்படும் (1395) கலி வகையைச் சேர்ந்தது.

**பாடுபுகழ் :** சங்க நாளில் "இன்னது பாட இவர்" என்னும் புகழ் பெற்றார் இருந்தனர். குறிஞ்சிக்குக் கபிலன்; முல்லைக்கு நப்பூதன்; மருதம் மருதனிலநாகன்; நெய்தல் நல்லந்துவன்; பாலை பெருங்கடுங்கோ. இவர் இத் திணைகளைப் பாடுதலில் வல்லார். பரணன் வரலாறு பாடுதலில் வல்லான். பின்னாளிலும் 'இது பாட இவர் வல்லார்' எனப் புகழ் மரபு ஒன்றும் கிளர்ந்தது.

இனி, அடி வரையறை இல்லாத உரை முதலியவற்றை எண்ணு வோம். இவை **பொதுமக்கள் புலமக்களாய்த் தமிழுக்கு வழங்கிய கொடையாகும்.**

**உரைப்பா :** உரைப்பா நான்கு வகை என்பதை,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பா இன்று எழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
**உரைவகை நடையே** நான்கென மொழிப"

என்பார் ஆசிரியர் (1429).

இதில் வரும் உரைவகை நடை என்பதே '**உரைநடை**' என்னும் வழக்குக்கு மூலமாகும்.

பாட்டின் இடையே வைக்கப்பட்ட பொருட்குறிப்பு உரை,

பாடல் இல்லாமலே சொல்லப்பட்ட உரை,

பொருளொடு பொருந்தாத பொய் (புனைவு) உரை,

பொருளொடு பொருந்திய நகைச்சுவை உரை

என நால்வகை உரைநடைகளும் பண்டுதொட்டே வழங்குதலைக் குறிக்கிறார் ஆசிரியர். ஆதலால், **பண்டை உரைநடை வழக்குக்குன்றி மீட்டெடுப்புச் செய்யப்பட்டது பின்னே என்பதை உணரலாம்.**

மெய்ப்பாடுகளுள் முதற்கண் வைக்கப்பட்டது '**நகைச்**' சுவை. அச் சுவை மிக ஆக்கப்பட்ட உரைநடை நூல்கள், அந் நாளே இருந்தன என்பதையும் இந் நூற்பாவால் உணரலாம்.

**பிசி :** பிசி என்பது 'புதிர்' என இந் நாளில் வழங்குகின்றது. 'விடுகதை' எனவும் படுகிறது.

ஒப்பமைந்த உவமை, ஒன்று சொல்ல ஒன்று தோன்றுவதாம் குறிப்பு என இருவகையாகப் பிசிவரும்.

*"அச்சுப் போலே பூப்பூக்கும் அமலே என்னக் காய்காய்க்கும்." இது, உவமை பற்றி வந்தது என்பார் இளம்பூரணர்.*

*'பிறை கவ்வி மலை நடக்கும்' என் றுரைத்து யானையைச் சுட்டுவார் பேராசிரியர்.*

*"நீராடான், பார்ப்பான் நிறம் செய்யான் நீராடின்*
*ஊராடு நீரிற்காக் கை"*

*என்று பின்னதற்கு எடுத்துக்காட்டும் தருவார் அவர். இது நெருப்பு.*

***முதுமொழி :*** *நுண்மை - சுருக்கம் - விளக்கம் - எளிமை என்பவை விளங்கக் கருதிய பொருளைத் தருவது முதுமொழியாகும்.*

*"கன்றுக் குட்டிமேயக் கழுதைக் குட்டியைக் காதறுத்தான்" என்பதும் "பழிஓரிடம்; பாவம் ஓரிடம்" என்னும் பழமொழியும் அறிக.*

***மந்திரம் :***

*"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப"*

*என்பது இதன் இலக்கணம் (1434).*

*சொல்லிய சொல், வெல்லும் சொல்லாக அமையவல்லார் ஆணை மொழியே மந்திரம் ஆகும். 'தானே' என்று பிரித்தான்,* **இவை தமிழ் மந்திரம்** *என்பதற்கு என்றார்* **பேராசிரியர்**. *இதற்கு அவர் காட்டும் பாட்டுகளும் விளக்கமும்:*

*"ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த*
*காரியத்தால் காலக்கோட் பட்டானைச் - சீரிய*
*அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்*
*செந்தமிழே தீர்க்க சுவா"*

*எனவும்,*

*"முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி*
*பரண கபிலரும் வாழி - அரணியல்*
*ஆனந்த வேட்கையான் வேட்கோக்* ***குயக்கோடன்***
*ஆனந்தம் சேர்க சுவா"*

*எனவும், இவை தெற்கண் வாயில் திறவாத பட்டிமண்டபத்தார் பொருட்டு* **நக்கீரர் ஒருவன் வாழவும் சாவவும் பாடிய மந்திரம்** *என்பது.*

***குறிப்பு :*** *குறிப்பு என்பது எழுத்தொடும் சொல்லொடும் பொருந் தாது, புறத்தால் பொருள் அறியுமாறு பாவால் கூறுவது. பிசிக்கும் இதற்கும் வேறுபாடு அது உரைப்பாட்டாய் வருவது; இது பாவாய் வருவது என்பது.*

*"குடத்தலையார் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையின்*
*அடக்கிய மூக்கின ராம்"*

என்பது பேராசிரியர் காட்டும் எடுத்துக்காட்டு. இது, யானை.

**பண்ணத்தி :** பாட்டிடையே அமைந்ததாய்ப் பாட்டாகி வருவது பண்ணத்தி (1436). நத்துதல் விரும்புதல். பண் நத்தி என்பது பண்ணத்தி. சிலம்பில் பாட்டின் இடையே பாட்டெனு எதுகை மோனை இயைய நடையிடும் **உரைப்பாட்டு மடை** இஃதாகும். இசைநய எடுப்பொடும் பாடற்கும் ஏற்றதாம்.

### நிறைவு

"சொல்லப்பட்ட இலக்கணம் பிழைத்தது போலத் தோன்றினும், தோன்றக்கூடும். அதனை வந்ததொன்றைக் கொண்டு மாறுபாடு இல்லாமல் அமைத்துக் கொள்ளுதல் தெளிந்த அறிவினர் கடமை" என்று இச் செய்யுளியலை நிறைவிக்கிறார் ஆசிரியர் (1499).

### மரபியல்

**வழக்கு :**

*"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட் டாக லானே"* (1592)

என வழக்கு என்பதைக் கூறுகிறார். "பண்புடையார்ப் பட்டுண் டுலகம்" என்பது இது. சட்டத்தின் ஆளுகையினும் சான்றோர் காட்டும் சால்பு ஆளுகையே உலகை - உலகியலைக் காக்கும் என்பதன் குறிப்பு இதுவாம்.

**மரபு : சான்றோரும் அறிவரும் கண்ட வழக்குகளே மரபு** ஆகும். **மரபு மாற்றருஞ் சிறப்பினது** என்கிறார். ஏனெனில், **மரபுமாறின் பிறிது பிறிதாகிப் போகும்** (1500, 1591).

மரபு என்னும் சொல்லே, அதன் பொருள் விளக்கமாக உள்ளது. ஒரு மரத்தின் வித்து மீண்டும் மரமாகி வித்துத் தந்து, வழிவழி மாறாமை போல, மரபு என்பது மாறாதது; மாற்றக் கூடாதது; மாற்றின் பொருட்கேடாகும் என்பவற்றை எண்ணல் நலம்.

**இளமை :** மரபியலில் **இளமைப் பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர்** என்பவற்றைக் குறிப்பிட்டு முறையே அவற்றை விளக்குகிறார். தொல்காப்பியர் கூறும் **இளமைப் பெயர்கள்** பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என்பவை.

**ஆண்மை :** ஆண்பாற் பெயர்களாக ஏறு, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் என்பவற்றைக் குறிக்கிறார்.

**பெண்மை :** பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி என்பவை பெண்பாற் பெயர் என்கிறார்.

## இளமைப் பெயர்களும், அவற்றைப் பெறுவனவும்

**பார்ப்பு** - பறவை, தவழ்பவை, குரங்கு.

**பறழ்** - மூங்கா, வெருகு, எலி, அணில், நாய், பன்றி, புலி, முயல், குரங்கு.

**குட்டி** - மூங்கா, வெருகு, எலி, அணில், நாய், பன்றி, புலி, முயல், குரங்கு.

**குருளை** - நாய், பன்றி, புலி, முயல், நரி.

**கன்று** - யானை, குதிரை, கழுதை, கடமை, ஆன், எருமை, மரை, கவரி, கராம், ஒட்டகம், ஓரறிவுயிர் (நெல் புல் அல்லாதவை).

**பிள்ளை** - பறவை, தவழ்பவை, மூங்கா, வெருகு, எலி, அணில், பன்றி, புலி, முயல், குரங்கு, ஓரறிவுயிர் (நெல் புல் அல்லாதவை).

**மக** - குரங்கு, மக்கள்.

**மறி** - ஆடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய்.

**குழவி** - குஞ்சரம், ஆ, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம், மக்கள், ஓரறிவுயிர் (நெல் புல் அல்லாதவை).

**போத்து** - ஓரறிவு (நெல் புல் அல்லாதவை). இவ் விளமைப் பெயர் முதல் அடங்கலில் சுட்டப்படாதது : ஆண்பாற் பெயர்களுள் அமைந்தது.

"குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ அல்ல மக்கட் கண்ணே"

என மக்கள் இளமைப் பெயர் இரண்டே குறிக்கிறார். 'இரண்டு அல்லவை கிளவ (சொல்ல) அல்ல' என்றும் கூறுகிறார்.

## ஆய்வு

**பிள்ளை** என்னும் பெயர் பெருவழக்காக இந் நாள் உள்ளது. ஆண்பிள்ளை, பெண்பிள்ளை, ஆண்பிள்ளைப்பிள்ளை (ஆம்பிளப் பிள்ளை), பெண்பிள்ளைப் பிள்ளை (பொம்பிளப் பிள்ளை) எனவும் வழங்குகின்றன. 'பிள்ளைத்தமிழ்' இலக்கியம் பெருவரவினது. 'பிள்ளை யாண்டான்' என்பதும் வழக்கு.

இவ்வாறு வழக்கு உள்ளமையால்,

"முடிய வந்த அவ்வழக்கு உண்மையின்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே"

என்னும் ஆணை கொண்டு நாம் இணைத்துக்கொள்ள வேண்டும் (1568).

குழந்தை என்னும் பொருளில் '**பாப்பா**' என்பது பெருவழக்காக உள்ளது. **பார்ப்பு**, பறவை இளமைப் பெயர். அப் பெயர் **பாப்பு - பாப்பா** என ஆயது. பெண் குழந்தை கண்'**பாவை**' எனப் பெற்றோரால் பேணப் படுவதால் 'பாவை' எனப்பட்டது. பார்வை > பாவை. பாவை நோன்பு, பாவை ஆட்டம் என்பன வழக்கில் உள்ளன.

இஞ்சி, மஞ்சள் முளைகள் பழநாள் தொட்டுப் '**பாவை**' என வழங்கப்பட்டன. அப் பெயர், இப் பட்டியில் இடம்பெறவில்லை.

குருளை '**சிங்கக் குருளை**' எனக் கம்பரால் ஆளப்படுகின்றது. சேர்க்கப்பட வேண்டிய ஒன்றாகின்றது அது. '**குட்டி**' என்னும் பெயர் பெண் மக்கள் இளமைப் பெயராக வழங்கப்படுதல் எவரும் அறிந்தது. அது போல் '**குட்டன்**' ஆண்பாலுக்கு வழங்கப்படுதல் நாலாயிரப் பனுவலில் உண்டு. 'என் மாணிக்கக் குட்டன்' என்பது அது. இப் பெயர்கள் சேரலத்தில் பெருவழக்காக உள்ளவை. குட்டியப்பா சிற்றப்பா; குட்டிப்பல் சிறியபல்; குட்டி சிறுமை ஒட்டு.

இவ்வாறு இவ் வியலை ஆய்தல் பெரும் பயன் செய்யும். இவ் வியலில் **விடுபாடு உண்டு; இடைப்பாடு உண்டு; முன்பின் தள்ளல் உண்டு; பொருந்தாச் சேர்ப்பும் உண்டு**. மரபு காக்கவென்றே ஆக்கப் பட்ட அருமையமைந்த இவ் வியலில் உள்ள **மரபுக் கேடுகள்** பலப்பல. அவை **தனியே ஆயப்பட்டுத் தனி நூலாக்கம் பெறுகின்றன, இங்கு இவ் வாழ்வியல் நோக்குக்கு ஏற்ற அளவில், குறிப்புகள் இடம்பெறு கின்றன** என்பதைச் சுட்டிக்காட்டி மேலே செல்லலாம்.

"சொல்லிய மரபின் இளமை தானே
சொல்லுங் காலை அவையலது இலவே"

என்று முடித்த ஆசிரியர், ஓரறிவு முதல் ஆறறிவு வரை அமைந்த உயிரிகளைப் பற்றிக் கூறுகிறார்.

இருபதாம் நூற்றாண்டில், 'செடி கொடிகளுக்கு உயிர் உண்டு' என்பதை ஆய்ந்து உலகப் புகழ் பெற்றார் **சர் சகதீச சந்திரபோசு**. ஆனால், அவர்க்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியரால் காணப்பட்ட அவ் வுண்மை, தமிழரால் அறிவிக்கப்படாமலும், ஆராய்ந்து நிறுவப்படாமலும் அடங்கிக் கிடப்பதாயிற்று.

அறிவியல் விளக்கமாக அமைந்த இப் பகுதியை இன்றேனும் தமிழ அறிவியலார் பயன்கொள்ளல் கட்டாயத் தேவை. தமிழில் அறிவியல் சிறந்து விளங்கியமையை உலகுக்கு எடுத்துக்காட்டலும், தமிழ் மரபில் அறிவியல் நூல் யாத்தலும் அவர்தம் கடமையாம். இதற்கு ஓர் அறிமுகமாக எம்மால் '**தமிழில் அறிவியல்**' என்றோர் சுவடி வெளிப்படுத்தப்பட்டுளதாம்.

**அறிவுவகை**

அறிவியல் எவ்வளவு எளிமையாய் இனிமையாய் உயிரோட்டம் பெறுகிறது என்பதை இந் நூற்பாக்களைக் கொண்டு தெளிக.

*'ஒன்றறி வதுவே **உற்றறி** வதுவே;*
*இரண்டறி வதுவே அதனொடு **நாவே;***
*மூன்றறி வதுவே அவற்றொடு **மூக்கே;***
*நான்கறி வதுவே அவற்றொடு **கண்ணே;***
*ஐந்தறி வதுவே அவற்றொடு **செவியே;***
*ஆறறி வதுவே அவற்றொடு **மனனே;***
***நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"*** (1526)

இவ்வாறு அறிவு வகை கூறியவர், அவ் வறிவு உயிர்களை எடுத்துக் காட்டுகிறார்.

*"**புல்லும் மரனும்** ஓரறி வினவே;*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"*

*"**நந்தும் முரளும்** ஈரறி வினவே;*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"*

*"**சிதலும் எறும்பும்** மூவறி வினவே;*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"*

*"**நண்டும் தும்பியும்** நான்கறி வினவே;*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"*

*"**மாவும் மாக்களும்** ஐயறி வினவே;*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"*

*"**மக்கள் தாமே** ஆறறி வுயிரே;*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"* (1527 - 1532)

எமக்கு முன்னரே நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே என்று முந்தை அறிவரைச் சுட்டினார் ஆசிரியர். புல்லும் மரனும் என்றால் பூண்டு, செடி, கொடி என்பன அக் கிளைப் பிறப்பு. அவ்வாறே பிறவும் கொள்க.

**ஆய்வு**

ஐந்து வகை, உயிரிகளையும் சுட்டும் நூற்பாக்களின் அமைதி கண்டு, ஆறாம் அறிவு உயிரியைச் சுட்டும் நூற்பாவை மீண்டும் காண்க.

*"மக்கள் தாமே ஆறறி வுயிரே"*

என்னும் இந் நூற்பா, இவ் வோரடியால் முடிந்து விடவில்லையா? ஐந்து நூற்பாக்களிலும் 'பிறவும் உளவே' என்பதைப் படியெடுத்த கை, ஆறாவதும் அப்படியே எடுத்துவிட்டது என்பது புலப்படவில்லையா?

மக்களைச் சுட்டிய அவர் **மக்கள் தாமே** என்று உறுதிப்படுத்தியமை புலப்படவில்லையா. பிறரைச் சுட்டவேண்டிக் கூறினார் எனின், அடுத்த அடியைப்

'பிறரும் உளரே அக்கிளைப் பிறப்பர்'

என்றல்லவோ யாத்திருப்பார்? இதன் விளைவு என்ன?

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை"

என நன்னூலாரை நூற்பா யாக்க வைத்ததென்க.

'தேவரும் நரகரும்' வடவேங்கடம் தென்குமரி ஆயிடை வாழ்நரா? செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தரா?

**காழ் :** ஓரறிவு முதலாகக் கூறிய ஆசிரியர் புறக்காழ், அகக்காழ் (வயிரம்), தோடு, இலை, காய் இன்னவற்றைக் கூறவேண்டுமானால் எங்கே கூறுவார்? கூறியிருப்பார்! இவ் வுயிரிகளைத் தொடர்ந்து தானே கூறியிருப்பார்.

**வைப்பு முறை தவறா வன்பிடியராகிய அவர் தம் 'கட்டமைதி' அறிந்தார், இவ் விட்டமைதியைத் தெளிவாக அறிவர்.**

1532ஆம் நூற்பாவில் இருந்து 1585ஆம் நூற்பா வரை '**இடைப் பிறவர**' நூல் யாப்பாரா?

அவர் வரன்முறைப்படியே ஆண்பாற் பெயர் பெண்பாற் பெயர் இவற்றை முடித்து, அந்தணர், அரசர், வைசியர், வேளாளர், மாந்தர் என்பார் பற்றி 1570 முதல் 1584 வரை கூறுகிறார். பின்னர் ஓரறிவுயிர் பற்றித் தொடர்கிறார். இவை **அவர் வைப்பு முறை எனலாமா?**

"எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேல்மிதக்கும்" என்பது பழமொழி. **இடைச்சேர்ப்பின் உண்மை வெளிப்பாடு இஃதென்க.** இதனைப் பற்றி அப் பகுதியில் காணலாம்.

### ஆண்பாற் பெயர்களும் அவற்றைப் பெறுவனவும்

**ஏறு** - பன்றி, புல்வாய், உழை, கவரி, எருமை, மரை, பெற்றம், சுறா.

**ஏற்றை** - எல்லா ஆணுக்கும் பொது.

**ஒருத்தல்** - புல்வாய், புலி, உழை, மரை, கவரி, கராம், யானை, பன்றி, எருமை.

**களிறு** - வேழம், கேழல்.

**சே** - எருது.

**சேவல்** - மயிலலாப் பறவை, குதிரை.

**இரலை** - புல்வாய்.

***கலை*** *- புல்வாய், உழை, முசு.*

**மோத்தை** *- ஆடு.*

***தகர்*** *- ஆடு.*

***உதன்*** *- ஆடு.*

***அப்பர்*** *- ஆடு.*

**போத்து** *- பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய், நீர்வாழ்வன, மயில், எழால்.*

***கண்டி*** *- எருமை.*

***கடுவன்*** *- குரங்கு.*

**பெண்பாற் பெயர்களும் அவற்றைப் பெறுவனவும்**

*பேடை - கோழி*

*பெடை - ஒட்டகம், குதிரை, கழுதை, மரை.*

*பெட்டை - ஒட்டகம், குதிரை, கழுதை, மரை.*

*பெண் - மக்கள்.*

*பிணா - மக்கள்.*

*மூடு - ஆடு.*

*நாகு - எருமை, மரை, பெற்றம், நந்து.*

*கடமை - ஆடு.*

*அளகு - கோழி, கூகை, மயில்.*

*மந்தி - குரங்கு, முசு, ஊகம்.*

*பாட்டி - பன்றி, நாய், நரி.*

*பிணை - புல்வாய், நவ்வி, உழை, கவரி.*

*பிணவு - பன்றி, புல்வாய், நாய்.*

*பிணவல் - பன்றி, புல்வாய், நாய்.*

*பிடி - யானை.*

*ஆ - பெற்றம், எருமை, மரை.*

*இவற்றைக் கூறிய ஆசிரியர், கூகையைக் கோட்டான் என்பதும், கிளியைத் தத்தை என்பதும், வெருகைப் பூசை என்பதும், பன்றியை ஏனம் என்பதும் பிறவும் சுட்டுகின்றார். இவ்வளவும் கூறியபின்,*

*"பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே"*

*என எடுத்த பொருளை முடித்ததைக் கூறுகிறார் (1569)*

**ஒட்டுவேலை**

இதன் மேலே தொடர்கிறது நூற்பா:

*“நூலே கரகம் முக்கோல் மணையே*
*ஆயுங் காலை அந்தணர்க் குரிய”* (1570)

மேலே அரசர்க்குரியவை. வைசிகற்குரியவை, வேளாண் மாந்தர்க் குரியவை இவை இவை எனக் கூறுகிறார். ‘இழிந்தோர்’ என்று நாலா மவரைச் சுட்டுகிறார். இவற்றை முடித்து, ‘புறக்காழ்’ தொடங்குகிறார். இவ்வாறு தொல்காப்பியர் அமைத்திருத்தல் இயலாது என்பதை **அவர்தம் ஓரியல் ஓதினாரும் அறிவர்.**

இவ் வியலிலேயே ‘**மாற்றருஞ் சிறப்பின் மரபு**’ என்று தொடங்கி இளமைப் பெயர், ஆண்பாற்பெயர். பெண்பாற் பெயர் இன்னவை எனக் கூறினார். இளமைப் பெயர் இவை இவை பெறுமென (1503 - 1524) உரைத்து,

*“சொல்லிய மரபின் இளமை தானே*
*சொல்லுங் காலை அவையலது இலவே”*

என முடித்தார் (1525).

அதன்மேல் ஓரறிவு முதல் ஆறறிவு கொண்ட உயிர்களை ஓதினார் (1526 - 1532). அந் நூற்பாவில், ‘மக்கள் தாமே ஆறறிவுயிரே’ என்று கூறி ஆண்பாற் பெயரை (1533 - 1549) நிறைத்து,

*“ஆண்பால் எல்லாம் ஆண் எனற் குரிய;*
*பெண்பால் எல்லாம் பெண் எனற் குரிய;*
*காண்ப அவைஅவை அப்பா லான”*

என்றார் (1550).

அதன்மேல் பெண்பாற் பெயரைக் கூறத் தொடங்கி,

*“பிடியென் பெண்பெயர் யானை மேற்றே”* (1551)

எனக்கொண்டு

*“பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே”*

என முடித்தார் (1569).

**கூறிய இவை ‘மாற்றருஞ் சிறப்பின் மரபு’கள் என்பதில் தடையில்லை. ஆனால், நூலே கரகம், படையும் கொடியும், கண்ணியும் தாரும்**, வாணிகம் வேளாண் என்பவை **மாற்றருஞ் சிறப்பினவா?**

**மாறுவது மரபா?**

இளமை, ஆண்மை, பெண்மை என்பவை **தற்கிழமை** - தன் பிறப்புரிமை - கொண்டவை. பின்னே கூறியவையோ ‘**எடுத்தால் உண்டு. விடுத்தால் இல்லை. இவை பிறவியுரிமை எனின், இளமை போலவோ,**

**ஆண்மை போலவோ, பெண்மை போலவோ பிறவியொடு வந்தவையா?**

*எங்கேனும், பிறந்த பிறவி நூலொடும், படையொடும், குடை யொடும் ஏரொடும் பிறவொடும் பிறந்ததுண்டா? ஏன்?* ***மானங்காக்கும் உடையொடு தானும் பிறந்ததுண்டா?*** *மேல் தோல் - தற்கிழமை. உடை - பிறிதின் கிழமை. (கிழமை = உரிமை). கதை கட்ட வேண்டுமானால், கவசகுண்டலப் பிறப்புக் கூறிப்பொய்ப்பிக்கலாம். நடைமுறை ஆகுமா?*

*இருதலை ஒட்டல், ஈருடல் ஒட்டல் நேரலாம். அவை பிறப்பொடு நேர்ந்தவை. இயற்கை இணைப்பு. செய்பொருள் தாய் வயிற்றினின்று வரும்போதே இருந்ததென்றால், சொல்பவர் சொன்னாலும் கேட்பவர்க்கு மதிவேண்டும் அல்லவோ!*

***மரபொடு பொருந்தாத ஒட்டு ஒன்றை ஒட்டவே இயற்கையாய் அமைந்திருந்த தொடர்ச்சியை வெட்டி ஊடே தம் விருப்பத்தை ஒட்டி, வெட்டிய இயற்கைத் தொடர்பை மீண்டும் ஒட்டி வைத்தமை புலப்படுகின்றது***. *இவ்வொட்டு வேலை உரையாசிரியர்கள் காலத்திற்கு முற்பட்டது என்பது அவர்கள் உரை இப்பகுதிக்கும் உள்ளமையால் தெளிவாகும். அவர்கள் காலத்தில் வருணப்பிரிவுச் சிறுமை செய்தலும் ஏற்றலும் உணராவகையில் பழகிப்போய் விட்டன ஆகவேண்டும் அல்லது அவர்கள் ஒப்புக் கொண்டவை ஆகவேண்டும். ஏனெனில்,* ***அப் பிரிவை வலுவாக்கி உள்நாட்டிலும், மொழியாக்கம் செய்து வெளிநாட்டிலும் பரப்பிய ஆய்வுத் தோன்றல்கள், இருபதாம் நூற்றாண்டிலும் இருந் துள்ளமை கண்கூடாம் அல்லவோ!***

*இனி, இடையொட்டுப் போகக் கடையொட்டையும் விட்டுவிட வில்லை.*

*நூலின் மரபாக,*

*“மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை*
*மரபுவழிப் பட்ட சொல்லி னான”*

*“மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும்”*

*“வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட் டாக லான”*

*“மரபுநிலை திரியா மாட்சிய வாகி*
*உரைபடு நூல்தாம் இருவகை இயல*
*முதலும் வழியுமென நுதலிய நெறியின”*

*“வினையின் நீங்கி விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்”*

*"வழிஎனப் படுவது அதன்வழித் தாகும்"*

*"வழியின் நெறியே நால்வகைத் தாகும்"*

*"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து*
*அதர்ப்பட யாத்தலோடு அனைமர பினவே"*

இவ்வளவுடன் நூலை நிறைத்துப் புறனடை கூறல் முறைமை. ஆனால், சூத்திரம் காண்டிகை நூற்குற்றம் உத்தி என்பவை தொடர்கின்றன. வழிநூல் முதனூல் என்பவும் ஊடு புகுகின்றன. நூற் புறனடை என்னத்தக்க நூற்பா **ஊடு கிடந்து பாடிழந்து நிற்கின்றது**. அது,

*"நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும்*
*கலந்த மயக்கம் உலகம் ஆதலின்*
*இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்*
*திரிபில் சொல்லொடு தழாஅல் வேண்டும்"*

என்பதாகும் (1589). **ஐம்பூதக் கலப்பே உலகம் என்பதை இந் நாள் அறிவியல் அறிஞர் மெய்ப்பிப்பதை அந்நாளே கூறிய அறிவர் தொல் காப்பியர் எனின் எத்தகைய நுண்ணியர் அவர்.**

### பின்னொட்டு

இனி, இம் மரபியல் ஒட்டுப்பகுதியெனக் கருதும் நூற்பாக்களில் வரும் சொற்கள் மூன்று, சுட்டத் தக்கவை. ஒன்று : **உத்தி**. இரண்டு : **காண்டிகை**. மூன்று : **வைசியன்**.

உத்தியும் காண்டிகையும் இவ் வொட்டில் அன்றித் தொல் காப்பியத்தில் இடம்பெறாதவை

வைசியனோ, மிகப்பிற்படு சொல். தொகை, பாட்டு, கீழ்க்கணக்கு, முத்தொள்ளாயிரம் வரை இடம்பெறாதது. அச் சொல் தொல்காப்பியத்தில் இடம் பெற்றமை இயல்பில்லை.

செய்யுளியலில் நூல், சூத்திரம், இயல் முதலியவை இடம் பெற் றுள்ளன. அங்கே இடம் பெற்றிருக்க வேண்டும் மரபியலில் வரும் நூல், உரை முதலியன.

தொல்காப்பியர் கூறும் சூத்திர இலக்கணம் :

*"சூத்திரம் தானே,*
*ஆடி நிழலில் அறியத் தோன்றி*
*நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க*
*யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே"*

என்பது (1425). இது **செய்யுளியலில்** உள்ளது. இனி, **மரபியலில்** வருவது,

*"மேற்கிளந் தெடுத்த யாப்பின் பொருளொடு*
*சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்*
*சொல்லுங் காலை உரையகத் தடக்கி*
*நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகி*
*துளக்கல் ஆகாத் துணைமை எய்தி*
*அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்*
*பல்வகையானும் பயன்தெரி வுடையது*
*சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்"*

என்பது (1600). இரண்டு நூற்பாக்களும் ஒருவர் நூற்றவை தாமா? முன்னே கூறியதைப் பின்னேயும் கூறியதும் ஏன்? கூறவேண்டியிருப்பின், 'மேற் கிளந்தன்ன', 'முற்கிளந்தன்ன' என்று கூறுதல் அன்றோ, 'அவர் நூன் முறை'.

## ஆய்வுர் முடிபு

இத் தொல்காப்பிய ஆய்வில் தலைப்பட்ட புலமைச் செல்வர் இருவர் கருத்துகளை நாம் அறிதல் இம் மரபியல் ஒட்டின் தெளிவுக்கு உதவும்.

"மக்களை **நிலத்தாற்** பிரித்துரைப்பதன்றி **நிறத்தால்** (வருணத்தால்) பிரித்துப் பேசுதல் பழந்தமிழ் மரபன்றாம். **அயலாரால் இந் நாட்டில் பிற்றை நாளில் புகுத்தப்பட்ட நால்வகைச் சாதிப்பிரிவு, தொன்மை வாய்ந்த தொல்காப்பிய மரபியலிலும் பிற்காலத்தவரால் நுழைத்து உரைக்கப்பட்டுள்ளது**.

இளமை, ஆண்மை, பெண்மை முதலியன காரணமாக உயிர்களுக்கு வழங்கும் மரபுப் பெயர்களை விரித்துரைக்கும் இவ்வியலில் 1 முதல் 70 வரை அமைந்த நூற்பாக்கள் முற்கூறிய மரபினையே விரித்துரைப்பனவாம். இவற்றின் பின் 86 முதல் 90 வரையுள்ள நூற்பாக்களும் இம் மரபினையே தொடர்ந்து பேசுவன. ஒன்றற்கு ஒன்று நீங்காத தொடர்புடையனவாய் அமைந்த இச் சூத்திரங்களின் இடையே,

*"நூலே கரகம் முக்கோல் மணையே*
*ஆயுங் காலை அந்தணர்க் குரிய"*

என்பது முதல்,

*"அந்த ணாளர்க் கரசுவரை வின்றே"*

என்பது முடியவுள்ள பதினைந்து சூத்திரங்களும், **சிறிதும் தொடர்பற்ற நிலையிற் பின்வந்தவர் ஒருவரால் நுழைக்கப்பட்ட இடைச் செருகலாகும். இவை தொல்காப்பியனாரால் இயற்றப்பட்டன அல்ல என்பது சிறிது நூற் பயிற்சியுடையார்க்கும் தெளிவாகத் தோன்றும்.**

**இவ்வாறே இவ் வியலில் சேர்க்கப்பட்டனவாக ஐயுறுதற் குரியனவும் சில உள**" என்பது முதுநூற் புலமையர் **க. வெள்ளைவாரணனார்** எழுத்து (தொல்காப்பியம் - தமிழிலக்கிய வரலாறு பக்.16).

தமிழ்நெறிக் காவல் நூலாக எழுந்த தொல்காப்பியத்தை, ஆரிய வழி நூலாகக் காட்டி மாசு ஏற்றினோர் தம், மாசு துடைக்க என்றே தொல் காப்பியத்தை ஆங்கிலத்தில் பெயர்த்தும், விரிந்த ஆய்வுரை வரைந்தும், அதனாலேயே முனைவர் பட்டம் பெற்றும் தமிழ்ப் பெருங்காவலராகத் திகழ்ந்த பேராசிரியர் **சி. இலக்குவனார்**, "மரபுகளை விளக்கும் இம் மரபியல், **ஆசிரியர் கூறிப்போந்தவாறு நமக்குக் கிடைத்திலது என்று எண்ண வேண்டியுள்ளது. தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கட்டுக் கோப்புக்கு உட்படுத்திச் சொல்லும் ஆற்றல் பெற்றுள்ள ஆசிரியர் போக்குக்கேற்ப மரபியல் அமைந்திலது. முறைபிறழ்ந்து கிடக்கின்றது. ஆசிரியர் கருத்துக்குப் பொருந்தாத செய்திகள் கூறப்பட்டுள்ளன. இடைச்செருகல் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு நிற்கின்றது**" என்கிறார் (தொல்காப்பிய ஆராய்ச்சி. 249).

மெய்ம்மை காண இப் பெருமக்கள் மேலாய்வு துணையாம் என்பதால் இவண் எடுத்துக்காட்டலாயிற்று.

**தொல்காப்பியர் காட்டும் வாழ்வியல் தமிழர் வாழ்வியலே யன்றி அயலவர் வாழ்வியல் பற்றியதுமன்று; ஒட்டியதுமன்று என உறுதிப்படுத்துவோமாக.**

# இளம்பூரணர்

**உரையாசிரியர்**

உரையாசிரியர் என்ற அளவானே, 'இளம்பூரணர்' என அறியப் பெறும் பெருமையுடையவர் இவர். தொல்காப்பியத்திற்கு முதற்கண் உரை கண்டவராதலுடன், முதன்மையான உரை கண்டவரும் இவரே. மற்றொரு சிறப்பு இவருரையே நூன் முழுமைக்கும் கிடைத்துள்ளமை. உரை யாசிரியர் புலமை நலத்தையும், பேரருள் பேருள்ளத்தையும், உரையெழுது தற்கே தம் தவவாழ்வைச் செலவிட்ட தமிழ்ப்பற்றையும் எத்துணை விரித்துச் சொல்லினும் குறைவுடையதாகவே அமையும். அத்தகும் உயர்வற உயர்ந்த உயர்வர் இவர்.

"சென்னபட்டணத்தில் இற்றைக்கு ஐம்பதறுபது வருடத்தின் முன்னிருந்த **வரதப்ப முதலியாரின்** பின், எழுத்துஞ் சொல்லுமேயன்றித் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை உரை உதாரணங்களோடு பாடங் கேட்டவர்கள் மிக அருமை. முற்றாய் இல்லை என்றே சொல்லலாம். வரதப்ப முதலியார் காலத்திலும் தொல்காப்பியம் கற்றவர்கள் அருமை என்பது, அவர் தந்தையார் **வேங்கடாசலம் முதலியார்** அதனைப் பாடங்கேட்கும் விருப்பமுடையராயின பொழுது பறையூரில் **திருவாரூர் வடுகநாத தேசிகர்** ஒருவரே தொல்காப்பியம் அறிந்தவர் இருக்கிறார் என்று கேள்வியுற்றுத் தமது ஊரைவிட்டு அதிகத் திரவியச் செலவோடு அவ்விடம் போய் இரண்டு வருடமிருந்து பாடங்கேட்டு வந்தமையாலும் வரதப்ப முதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்டறிந்தவர் என்பதனாலும் அது காரணமாக அவருக்குத் தொல்காப்பியம் வரதப்ப முதலியார் என்று பெயர் வந்தமையாலும் பின்பு அவர் காலத்திருந்த வித்துவான்கள் தமக்கு யாதாயினும் இலக்கணச் சமுச்சயம் நிகழ்ந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையாலும் நிச்சயிக்கலாம்." - என்பது தொல். பொருள். நச்சினார்க்கினியப் பதிப்பில் (1885) சி. வை. தாமோதரம்பிள்ளை எழுதியுள்ள பதிப்புரை. பார்த்திப ஆண்டு ஆவணித் திங்கள் வந்த இப்பதிப்பில் தொல்காப்பியப் பின்னான்கியல் உரைகளே உள. இவை நச்சினார்க்கினியம் அன்று, பேராசிரியம் எனச் செந்தமிழ்த் தொகுதி 1. பகுதி 1; தொகுதி 2 பகுதி 11 ஆகியவற்றிலும், தொல். செய்யுளியல்

நச்சினார்க்கினியர் உரையுடன் வெளிவந்த தமிழ்ச் சங்கப் பதிப்பிலும் பெரும்புலவர் இரா. இராகவ ஐயங்கார் எழுதினார்.

தொல்காப்பியம் வரதப்பர் வரலாறும், தாமோதரனாரின் நச்சினார்க்கினியர் உரைப்பதிப்புக் குறிப்பும் மேல் ஆய்வும் நமக்கு என்ன சொல்கின்றன? இளம்பூரணரும் பிறரும் உரை வரைந்து நூலைப் பொருளுடன் காத்த பின்னரும் அஃதறிஞரும் அறியா நிலையில் இருந்தது என்றால், இளம்பூரணர் உரை வரைதலை மேற்கொள்ளா திருந்திருந்தால் தொல்காப்பியத்தின் நிலைமை என்ன ஆகியிருக்கும், என்பதே!

தொல். பொருள். இளம்பூரணத்தை 1920இல் வெளியிட்ட கா. நமச் சிவாய முதலியார் 1924இல் தொல். பொருள். மூலத்தை முதற்கண் வெளியிட் டுள்ளார், உரையொடு கூடிய மூலத்தில் இருந்து தனியே மூலத்தைப் பெயர்த்துப் பதிப்பித்த பதிப்பே மூலப்பதிப்பு என்பதை எண்ணிப் பார்த் தால், நாம் இளம்பூரணர்க்குப் பட்டுள்ள நன்றிக் கடனுக்கு அளவுண்டோ? இவர்தம் உரைச்சுவடி இல்லாக்கால், மற்றையர் உரைவரையும் வாய்ப்பும் ஏற்பட்டிராதே! தொல்காப்பியம் நமக்குக் கிட்டியமை இளம்பூரணர் உரைகொண்ட நலத்தாலேயே என்பதை எண்ணும் போதே இவர் தொண்டு மலை விளக்கென இலங்குவதாம்.

**இளம்பூரணர்**

இளம்பூரணர் என்னும் பெயரால், “இவர் இளமையிலேயே முழுதறிவு பெற்றுச் சிறந்தமை கண்ட சான்றோர் இச்சிறப்புப் பெயரால் இவரை வழங்கினர்” என்பது விளங்கும். இஃதவர் இயற்பெயராக இருத்தற்கு இயலாது. கண்ணகியார் ‘சிறுமுதுக்குறைவி’ எனப்பட்டதும், நம்மாழ்வார் ‘சிறுப்பெரியார்’ எனப்பட்டதும் அறிவார் இதனைத் தெளிவார்.

‘இளங்கோ வேந்தர்’ ‘இளங்கோவடிகளா’ராகப் பெயர் பெற்றமை போல் இளம்பூரணரும் தம் துறவினால் ‘இளம்பூரணவடிகளார்’ எனப் பட்டார் என்பது விளங்குகின்றது.

இவர் துறவோர் என்பதை நமக்கு வெளிப்படக் கூறுபவர் நன்னூல் முதலுரையாசிரியர் மயிலைநாதர். அவர் எச்சங்களின் வகையை எடுத்துக் காட்டுங்கால்(359) இளம்பூரணர் உரையை உரைத்து “**இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரண ரென்னும் ஏதமில் மாதவர் ஓதியவுரையென் றுணர்க**” என்கிறார்.

இதில் இளம்பூரணரை ‘ஏதமில் மாதவர்’ என்ற செய்தி, இவர் துறவோர் என்பதைக் காட்டும் புறச்சான்றாம். அகச்சான்று உண்டோ எனின் உண்டு என்பது மறுமொழியாம்.

*"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை என்ப"*

என்னும் நூற்பா அகத்திணையின் முதற்கண் உள்ளது. இதில் அகத்திணை ஏழும் முறை பெற நிற்கும் வகையைக் கூறுகிறார் ஆசிரியர். இதற்கு உரைவிளக்கம் வரையும் இளம்பூரணர், "இந்நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணனும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் ஒருங்கு உளவழி இன்பம் உளதாம் எனவும், கைக்கிளை ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிது எனவும் கூறுதலான் **இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்து கொள்க**" என்கிறார்.

'காமம் நீத்தபால்', 'கட்டில் நீத்தபால்', 'தாபத நிலை', 'தபுதாரநிலை', 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயன்' எனவரும் இடங்களில் இத்தகு கருத்து உரைக்கப் பெறின் பருந்தும் நிழலுமென நூலாசிரியர் சொல்லொடு பொருள் பொருந்திச் செல்வதாகக் கொள்ள வாய்க்கும். இவ்விடத்தில் அக்குறிப்பு இல்லையாகவும் 'இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு' என்பது இளம்பூரணர் உட்கோளேயாம் என்பதை வெளிப்படுத்தும்.

இவரையன்றி இப்பகுதிக்கு உரைகண்ட பழைய உரையாசிரியர் நச்சினார்க்கினியரே. அவர் தாமும் இவர்க்குப் பின் உரை கண்டவர். இவரை ஏற்றும் மறுத்தும் உரைப்பவர். அவர் பொருளதிகாரத்தில், "இல்லறம் உணர்த்திப் பின் துறவறமும் சிறுபான்மை கூறுப" என்றும், "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் என்னும் சூத்திரத்தான் இல்லறமும் துறவறமும் கூறினார். இந்நிலையானும் பிறவாற்றானும் வீட்டிற்குக் காரணங் கூறினார்" என்றாரே யன்றிக் காமத்துப் பயனின்மை உய்த்துணரவைத்தாரெனக் கூறினாரல்லர். அவ்வாறு ஆசிரியர் கூறக் கருதியிருந்தால் உய்த்துணர்வில்லாமலே வெளிப்பட விளங்க உரைப்பார் என்பது இளம்பூரணரோ அறியார்? **இவர் கொண்டிருந்த துறவுநிலை உந்துதலால் வந்த மொழி ஈதெனக் கொள்ளல் தகும்**. "இனி மாறுகொளக் கூறல்," என்பதற்குத் "**தவம் நன்று என்றவன் தான்தவம் தீதென்று கூறல்**" என்பதும் (பொ.654) குறிப்பாகலாம். இவர் துறவர் என்பது 'இளம்பூரண அடிகள்' என்னும் அடியார்க்கு நல்லார் குறிப்பாலும் (சிலப்.11 : 18 -20) புலப்படும்.

மயிலைநாதர் வரைந்த தொடரிலே இளம்பூரணர்க்குரிய தனிப் பெருஞ் சிறப்பொன்றைச் சுட்டுதலறிந்தோம். அஃது, 'உளங்கூர் கேள்வி' என்பது. "செவி வாயாக நெஞ்சு களனாகப்" பாடம் கேட்பதும் கேட்ட

வற்றை உளத்தமைத்துக் கொள்வதும் பண்டைப் பயின்முறை. அம்முறையில் பல்கால் பலரிடைச் சென்று கேட்டுக் கருவூலமெனத் தேக்கி வைத்துக் கொண்ட முழுதறிவாளர் இளம்பூரணர் என்பதை நாம் அறிய வைக்கிறது. இதற்கு அகச்சான்று என்னை எனின், பலப்பலவாம்; முதல் உரையாசிரியராகிய இவர் பலரிடைக் கேட்ட உரைகளைக் கொண்டே, '**ஒரு சார் ஆசிரியர் உரைப்பர்**' என்றும், '**உரையன் றென்பார்**' என்றும், '**ஒருவன் சொல்லுவது**' என்றும் கூறிச் செல்கிறார் என்பது கொள்ளக் கிடக்கின்றது என்க.

இளம்பூரணர் தொல்காப்பியர்மேல் கொண்டிருந்த பேரன்பும், பெருமதிப்பும் அவரைத் தொல்காப்பியரெனவே மதிக்கத் தூண்டுகின்றதாம். அகத்திணை ஏழாதல் போலப் புறத்திணையும் ஏழே என்பதை வலியுறுத்திக் கூறும் இளம்பூரணர், புறப்பொருள் பன்னிரண்டு என்பாரை மறுத்து அவ்வாறு கொள்வது, "**முனைவன் நூலிற்கும் கலி முதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் பொருந்தாது என்க**" என்கிறார். ஆசிரியர் தொல்காப்பியனார், "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூல் ஆகும்" என்றதை உளங்கூர்ந்து, அதனை அவர்க்கே ஆக்கி வழிபட்ட சான்றாண்மை இளம்பூரணர் வழியே புலப்படுதல் கண்டு கொள்க.

> "அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
> உளவென மொழிப இசையொடு சிவணிய
> நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்பதன் விளக்கத்தில் (எழுத்.33), "இசை நூலாசிரியரும் முதனூலாசிரியர் தாமே யெனினும், 'மொழிப' என வேறொருவர் போலக் கூறியது, அதுவும் வேறொரு நூலாகச் செய்யப்படும் நிலைமை நோக்கிப் போலும்" என்று வரைகின்றார். தொல்காப்பியரை இளம்பூரணர் முதனூலாசிரியராகக் கொண்டார் என்பது இதனால் விளங்கும்.

முன்னிலையாக்கல் எனவரும் பொருளதிகார நூற்பா விளக்கத்தில் (98), "உலகத்துள்ளார் இலக்கணமெல்லாம் உரைக்கின்றாராகலின் இவ்வாசிரியர் உரைக்கின்றவாற்றான் நிகழ்தல் பெரும்பான்மை" எனத் தொடர்கின்றார். தொல்காப்பியர் பற்றி இளம்பூரணர் குறித்த மதிப்பீடு எத்தகு பெருமைக்குரியது!

பொருளதிகாரத் தொடக்கத்திலே, "பிற நூலாசிரியர் விரித்துக் கூறினாற்போல அறமும் பொருளும் விரித்துக் கூறாதது என்னையோ எனின், உலகத்தில் நூல் செய்வார் செய்கின்றது அறிவிலாதாரை அறிவு கொளுத்த வேண்டியன்றே; யாதானும் ஒரு நூல் விரித்தோதிய பொருளைத்

*தாமும் விரித்து ஓதுவாராயின் ஓதுகின்றதனாற் பயன் இன்றாமாதலால் முதனூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும் தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் செய்யும் மரபு என்றுணர்க. அஃதேல் இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாதெனின் காமப்பகுதியும் வீரப்பகுதியும் என்க. இன்பம் காரணமாகப் பொருள் தேடும் ஆகலானும் பொருளானே அறஞ் செய்யும் ஆகலானும் இன்பமும் பொருளும் ஏற்றம் என ஓதினார் என உணர்க,'' என்று வரையும் எழுத்தால் தொல்காப்பிய நூலோட்ட நுணுக்கத்தை நுவல்கிறார்.*

*உழிஞைத் துறையை, "அதுவே தானும் இருநால் வகைத்தே" என்னும் ஆசிரியர் (பொ.67) அடுத்த நூற்பாவில் அத்துறைகளைக் கூறி "நாலிரு வகைத்தே" (பொ.68) என்றும் கூறுகிறார். இதனைக் கூறியது கூறல் என எவரும் எண்ணி விடுவரோ என்னும் எண்ணம் "கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை" இளம்பூரணர்க்குத் தோன்றிற்றுப் போலும். அதனால், "பதினெட்டு இருபத்தொன்பது என்பார் மதம் விலக்கியமை தோன்றப் பெயர்த்துந் தொகை கூறினார். இது கூறியது கூறலன்று; தொகை" என்றார்.*

*'ஆசிரியன் ஓதினான்' என்பது போலக் கூறுதலே பண்டை உரையாசிரியர் மரபு (எழுத்.469). "குறிப்பு என்றார்", "கூறினார்" (பொருள்.104) என இளம்பூரணத்துள் வருதல் பதிப்பாசிரியர் கருத்துப்போலும்!*

*மிகைபடக் கூறல் என்னும் நூற்குற்றம் விளக்கும் இளம்பூரணர், "மிகைபடக் கூறலாவது அதிகாரப் பொருளன்றிப் பிறபொருளும் கூறுதல். அஃதாவது தமிழிலக்கணஞ் சொல்லுவான் எடுத்துக்கொண்டான் வடமொழி இலக்கணமும் கூறல்" என்கிறார். இக்குற்றம் செய்யாத சீருரை யாளர் செந்தமிழ் இளம்பூரணர். இக்குற்றம் செய்தார், 'இவர் வடமொழி யறியார்' என்பர். எழுத்து. 42, 45, 75, சொல். 443, பொருள். 30, 151, 656 ஆகிய நூற்பாக்களின் உரைகளைக் காண்போர் இவர் வடமொழி அறியார் எனக் கருதார்.*

*இளம்பூரணர் சமணர் என்றும் சைவர் என்றும் கூறுவாருளர்.*

*படிமையோன் என்பதற்குத் 'தவவொழுக்கத்தையுடையோன்' என உரைவரைந்ததையும் (பாயிரம்) படிமை என்பது சமண சமயத் துறவிகளின் தவவொழுக்கத்தைக் குறிக்கும் சொல் என்பதையும் குறித்துச் சமணர் என்பர். படிமை என்பது கட்டமை ஒழுக்கத்தைச் சுட்டுவது என்பதைப் பதிற்றுப்பத்துள் கண்டு கொள்க (74). படிவம் என்பதும் அப்பாடல் ஆட்சியில் உண்டு என்பதும் அறிக.*

*"னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின்வைக்கப்பட்டது" (எழுத்.1) என்று இவர் எழுதுவது கொண்டு சமணர்*

என்பர். முற்பட வைக்கப்பட்ட அகரத்தின் சிறப்புக் கூறியவர் பிற்பட வைக்கப்பட்ட னகரத்தின் சிறப்புக் கூறுவாராய் இது கூறினர். முற்படக் கூறலும் சிறப்பே; பிற்படக் கூறலும் சிறப்பே என்பது நூன்முறை. அம்முறைக்கேற்ப னகரச் சிறப்பாகக் கூற இதனைக் கூறினாரேயன்றி 'மகளிர் வீடு பேறு எய்தார்' என்னும் குறிப்பு அதில் இல்லை எனக் கொள்க.

இனிச் சமணர் அல்லர் என்பதற்கு, "நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும், கலந்த மயக்கம் உலகம்" எனவரும் தொல்காப்பிய (பொ.635) நூற்பாவில் விசும்பும் ஒரு பூதமெனக் கொண்டதைக் காட்டுவர். நூற்பாவிற் கிடந்தாங்கு உரை விரிக்கும் மரபுடைய இளம்பூரணரை அதனைக் காட்டி ஒரு சார்பிற் கூட்டல் சாலாது.

"குமர கோட்டம் குமரக்கோட்டம், பிரமகோட்டம் பிரமக் கோட்டம்" என்பவர் "அருக கோட்டம் அருகக் கோட்டம்" எனக் காட்டாமையால் சமணச் சார்பினர் அல்லர் என்பர். காட்டாமையால் அச்சார்பினர் அல்லர் என்பது ஏற்காமை போல, காட்டியமையால் அச் சார்பினர் என்பதும் ஆகாதாம். எடுத்துக்கொண்ட பொருளுக்கு எடுத்துக்காட்டுப் பொருந்துவதா என்பதே உரை நோக்கு.

குமரகோட்டம் காட்டியதற்கு முற்றொடரிலேயே 'ஆசீவகப்பள்ளி' என்பதைக் காட்டுகிறாரே; அவர் அருகக் கோட்டம் காட்டாமையால் சமணர் அல்லர் என்று கொண்டால், ஆசீவகப் பள்ளியை முற்படக் காட்டல் கொண்டு சமணர் எனக் கொள்ள வேண்டுமன்றோ! ஆகலின் பொருளில என்க.

இனி, 'இளம்பூரணர்' என்பது முருகன் பெயர்களுள் ஒன்றாகலின் சைவர் என்பர். 'இளையாய்' என்பதிலும் 'இளம்' என்பதிலும் கண்ட சொல்லொப்புமையன்றிப் பொருளொப்புமை காட்ட முடியாக் குறிப்பு ஈதெனல் தெளிவு.

> "ஆறு சூடி நீறு பூசி
> ஏறும் ஏறும் இறைவனைக்
> கூறு நெஞ்சே குறையிலை நினக்கே"

என்பதை 'இவர் திருவுள்ளத் தூறிய பெரும் பொருட் சிறுபாடல் எனக் கூறிச் சைவராக்கினால், அடுத்தாற் போலவே (தொ.பொ. 359),

> "போது சாந்தம் பொற்ப வேந்தி
> ஆதி நாதர்ச் சேர்வோர்
> சோதி வானந் துன்னு வோரே"

என்பது கொண்டு சமணரெனக் கொண்டாடல் தவிர்க்க முடியாததாகி விடும்.

"தன்தோள் நான்கின்" எனவரும் பாடலை இளம்பூரணர் மேற்கோள் காட்டுகிறார் (தொல். பொருள். 50). இதனைச் சேனாவரையர் தம் நூலில் முதற்காப்புப் பாடலாக அமைத்துக் கொள்கிறார். இதனால் இவர் சிவச் சார்பினர் எனின், சேனாவரையர் போலவே தாமும் காப்புச் செய்யுளாக வைத்திருப்பார். **சேனாவரையர் சிவநெறியர் என்பதற்கு இது சான்றாமேயன்றி இளம்பூரணரைச் சாராதாம் என்க.**

"இசை திரிந்திசைப்பினும்" என்னும் பொருளியல் முதல் நூற்பா உரையில் மேற்கோளாகக் "கார்விரிகொன்றை" என்னும் அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலைக் காட்டும் இளம்பூரணர், 'சிவானுபூதியிற் பேருலகம் தங்கிற்று' என்று உரையெழுதுவது கொண்டு இவரைச் சிவநெறியர் என உறுதிப்படுத்துவர். அஃதாயின், அப்பாடல் தொடரொடு தொடர்பிலாத அச்செறிப்பும், 'தாவில்தாள் நிழல்' என்பதன் பொருள் விடுப்பும் கொண்டு ஐயுறவு கொள்ளற்கு இடமுண்டு! பாடல் தொடரையே இசைத்துத் தொடர்புறுத்தும் அவ்வுரையில் அஃதொன்று மட்டும் ஒட்டா ஒட்டாக இருத்தலும், தாவில்தாள் நிழல் விடுபாடும் பிறிதொருவர் கைச்சரக்கோ என எண்ணவே வைக்கின்றது.

இளம்பூரணர் வள்ளுவர் வாய்மையில் நெஞ்சம் பறிகொடுத்த தோன்றல் என்பது இவர் எடுத்துக்காட்டும் மேற்கோள் விளக்கப் பெருக்கத்தானே நன்கு புலப்படும். அதிகாரங்கள் பலவற்றை அடுக்கிக் கூறுதலாலும் விளங்கும். இத்தகையர் வள்ளுவரைப் போலச் சமயக் கணக்கர் மதிவழிச் செல்லாத சமநிலைச் சால்பினர் என்பதே தெளிவாம். சமயச் சார்பினர் வெளிப்படக் காட்டும் வலிந்த பொருளாட்சி, மேற்கோள் ஆயவை இவரிடத்துக் காணற்கில்லாமல் எச்சமயமும் ஒப்பநினைத்துப் போற்றும் ஒரு பெருந்தகைமையே காணப்படுகின்றது என்க.

தொல்காப்பிய உரையாசிரியர் **இளம்பூரணரும்** திருக்குறள் உரையாசிரியர் **மணக்குடவரும்** ஒருவரே என்பர். ஒருவர் ஒரு நூற்கு ஒரு பெயரும், மற்றொரு நூற்கு ஒரு பெயரும் கொண்டு உரை வரைந்தனர் என்றல் மரபு நிலைப்படாது. ஒருவர், இருவர், மூவர் பெயர் கொண் டெழுதிப் பிழைக்கும் 'வணிக நோக்கர்' அச்சடிப்புக் காலத்தே காண லாமே யன்றிப் பயில்வார் பயன்பாடு என்னும் ஒன்றே குறியாக் கொண்ட ஏட்டுக்காலத்துத் தூயரை அக்கூட்டிற் சேர்க்க வேண்டுவதில்லையாம்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பல நூல்களுக்கு உரை கண்டவர். அவர் தம் பன்னூல் உரையொப்பைச் சுட்டிச் செல்கிறார். அத்தகு குறிப்பொன்றும் இளம்பூரணர் உரையில் இன்மை, இக்கருத்தின் அகச்சான்றின்மைச் சான்றே. ஒரு தனிப்பாடல் செய்தி கொண்டு இம் முடிவுக்கு வருதல் சாலாது. 'மணக் குடி புரியான்' என்பது 'மணக்குடவர்'

பெயராகலாம். ஆனால் 'மணக்குடி புரியராம் அவரே இளம்பூரணர்' என்பதற்கு அப்பாடல் சான்றாகாது. மற்றும் உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள் எனக் கூறும் அடியார்க்கு நல்லார் மணக்குடவ ராகிய இளம்பூரண அடிகள் என்று கூறத் தவறார். ஏனெனில் உரையாசிரி யர் என்னும் பொதுப்பெயரினும் அவர் குடிப்பெயர் விளக்கமானதன்றோ!

தொல்காப்பிய இளம்பூரணருரை முற்றாகக் கிடைத்துளது. அதில் அச்சிறப்புப் பாயிரம் இல்லை. திருக்குறள் மணக்குடவருரையும் முற்றாக வாய்த்துளது. அதிலும் அச்சிறப்புப் பாயிரம் இல்லை. சிதைவுற்ற நூலாயின் தனித்துக் கிடைக்க - பிறர் உரைக்கண் கண்டெடுக்க - முறை யுண்டு. அன்னவகை எதுவும் இல்லாச் சிறப்புப் பாயிரங் கொண்டு முடிவுக்கு வருதல் தகுவது அன்று.

இளம்பூரணர் திருக்குறள் அதிகாரத் தலைப்புக்குத் தரும் பொருளுரை மணக்குடவ ருரையொடும் பொருந்தி நிற்பதைக் காட்டி ஈருரையும் அவருரையே என்பர். ஈருரையும் பொருந்தாவுரையும் உண்மை யால் வேறுரையாம் என்பார்க்கு மறுமொழி இல்லாமை கண்கூடு.

துறவாவது தன்னுடைய பொருளைப் பற்றறத் துறத்தல் என்பது தொல்காப்பியம் (பொ.75).

துறவாவது ஒருவன் தவம் பண்ணாநின்ற காலத்து யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும் அதனைப் பற்றறத் துறத்தல் என்பது திருக்குறள் மணக்குடவருரை (அதி.துறவு).

ஒப்பியவுரையை அப்படி அப்படியே ஏற்றுக்கொண்டு போற்றுவ தும், ஒப்பா இடத்து மட்டும் தம் உரையும் விளக்கமும் தருதலும் உரை மரபு ஆகலின் இளம்பூரணத்தைக் கற்ற மணக்குடவர் தம் உரையில் அவ்வுரையைப் போற்றிக் கொண்டார் என்பது பொருந்துவதாம்.

இளம்பூரணர் உரையில் காணும் எடுத்துக்காட்டுகளைத் தொகை யிட்டுக் காண்பவர் திருக்குறள் மணக்குடவர் உரையை இவருரையெனக் கொள்ளார் என்பது தெளிவு.

இளம்பூரணர் உரை வழியே நன்னூலார் பலப்பல நூற்பாக்களை இயற்றியுள்ளார். ஆகுபெயர் என்ற அளவானே குறித்தார் தொல்காப் பியர்(சொ.110). அதனை "ஆகுபெயர் என்ற பொருண்மை என்னையெனின் ஒன்றன்பெயர் ஒன்றற்காய் நிற்றல் என்றவாறு" என்றார் இளம்பூரணர். அதனையே நன்னூலார் "ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத் தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே" என நூற்பாவாக்கிக் கொண்டார் (பெயர்.33). இவ்வாறு இளம்பூரணக் கொடை மிகக் கொண்டு விளங்கியது நன்னூலாகலின், அந்நூலார் காலத்துக்கு முன்னவர் இளம்பூரணராவர்.

நன்னூலாரைப் புரந்த சீயகங்கன் காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டு என்பர். எனவே அக்காலத்திற்கு முற்பட்டவர் இளம்பூரணர் என்க. புறப்பொருள் வெண்பா மாலையில் இருந்து இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். ஆகலின் அம்மாலை தோன்றிய 9ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் ஆகிறார் இளம்பூரணர். மேலும் பரணியாற் கொண்டான், (எழுத்.125, 248) என வருவது கொண்டு கூடல் சங்கமத்துப் பரணி கொண்ட வீரராசேந்திரன் காலத்திற்குப் பிற்பட்டவர் எனத் தேர்ந்து 11ஆம் நூற்றாண்டு என்பர்.

இளம்பூரணர் சோணாட்டைச் சேர்ந்தவர் என்றும், வேளாண் குடியினர் என்றும் கூறுவர். இவர் சோணாட்டைச் சொல்வதுடன் மலாடு மழநாடு முதலிய நாடுகளையும் சேரமான் மலையமான் பாண்டியன் சேரன் செங்குட்டுவன் முதலிய வேந்தர்களையும் குறிக்கிறார். உறையூரைக் கூறும் இவர் கருவூர், மருவூர், குழிப்பாடி, பொதியில் என்பவற்றையும் குறிக்கிறார். இவர் பார்வை தமிழகப் பார்வையாக இருந்தது மிகத் தெளிவாக உள்ளது.

கைவாய்க்கால் என்பது சோணாட்டு வழக்கு; இன்றும் வழங்குவது என்பர். அது பாண்டி நாட்டும் இன்றும் வழக்கில் உள்ளதே. 'கோடின்று செவியின்று' என்பது கொண்டு இந்நாளிலும் அங்கு அவ்வழக்குண்மையைக் குறிப்பர். ஆனால் அதனைக் கூறுமிடத்தேயே (சொல். 216)

*'கோடின்று செவியின்று'*

*'கோடில செவியில'*

*'கோடுடைய செவியுடைய'*

*'கோடுடைத்து செவியுடைத்து'*

என உண்மையும் இன்மையும் அடுக்கிக் கூறுவர். இவரை உண்மைப் பாற்படுத்துவதும், இன்மைப்பாற்படுத்துவதும் வேண்டிற்றன்று. **தமிழ்நாட்டு வழக்கு முழுதுற அறிந்த இவர்க்கு எவ்வெடுத்துக்காட்டு முந்து நிற்கிறதோ அதனைக் கூறுவர் எனக் கொள்ளலாம்.**

'நும் நாடு யாது என்றால் **தமிழ்நாடு** என்றல்' எனச் செப்பும் வினாவும் வழுவாது வருவதற்குக் கூறுவதும் (சொல். 13) 'தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்' என்பதும் (சொல்.33) 'தமிழ்நாட்டு மூவரும் வந்தார்' என்பதும் (சொ.250) 'புலிவிற் கெண்டை' என்பதும்(சொல். 411) இளம்பூரணரின் தமிழ் நில முழுதுறு பார்வையையே சுட்டுகின்றன. மேலும், "நாயை ஞமலி என்ப பூழி நாட்டார் என்றக்கால் அச்சொல் எல்லா நாட்டாரும் பட்டாங் குணரார்; நாய் என்பதனையாயின் எவ்வெத் திசை நாட்டாரும் உணர்ப என்பது", என்று கூறும் இவர் உரையால் (சொல். 392) நாடு தழுவிப் பட்டாங்குணரச் செய்தலே இவர் பெரும் பார்வை என்க.

**இளம்பூரணர் உரைநயங்கள்**

*அருஞ்சொல்லுக்குப் பொருள் கூறுதல் :*

*'குயின் என்பது மேகம்' (எ.336), 'மின் என்பது ஓர் தொழிலுமுண்டு பொருளுமுண்டு' (எ.346), 'அழனென்பது பிணம்' (எ.355) 'மூங்கா என்பது கீரி' (பொ.550) நவ்வி என்பது புள்ளிமான் (பொ.556) 'கராகமென்பது கரடி' (பொ.56) இவ்வாறு அருஞ்சொற்பொருள் வேண்டுமிடத்துரைக் கின்றார்.*

***கோயில்** என்பதா? **கோவில்** என்பதா? எனின் இரண்டும் சரியே என்பார் உளர். அவற்றுள் 'கோயில்' என்பதே சரியானது என்பதை 'இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்' என்னும் நூற்பாவில் (எ. 294) தெளிவாக்குகிறார்.*

***'கஃறு' என்பது உருவு. 'சுஃறு' என்பது இசை** என்பதைத் தேர்ந்து சொல்கிறார் (எ.40).*

***'தபு'** என்பது படுத்துச் சொல்ல 'நீசா' எனத் தன்வினையாம் எனவும், அதனை எடுத்துச் சொல்ல 'நீ ஒன்றனைச் சாவி' எனப் பிறவினையாம் எனவும் அசையழுத்தம் (accent) காட்டி விளக்குகிறார் (எ.76).*

*அஃறிணை என்பது அல்திணை. அல்லதும் அதுவே, திணையும் அதுவே எனப் பிரித்துக் காட்டி விளக்குகிறார் (சொ.2).*

***சேரி** என்பது பலர் இருப்பதுமன். ஆயினும் ஆண்டுச் சில பார்ப்பனக்குடி உளவேல் அதனைப் பார்ப்பனச்சேரி என்பது; இஃது உயர்திணைக்கண் தலைமை பற்றி வந்தது என்கிறார் (சொ.49).*

*"பல **பொத்தகம்** கிடந்த வழி ஒருவன் ஏவலாளனைப் பார்த்து, பொத்தகங் கொண்டு வா' என்றால், அவன் ஒரு பொத்தகங் கொண்டு வந்த விடத்துத் தான் கருதிய பொத்தகம் அன்றெனில் 'மற்றையது கொணா' என்னும்; என்றக்கால் இக் கொணர்ந்ததனை ஒழிக்கும் சொல் இக் கொணர்ந்த பொத்தகம் சுட்டிற்றாகலான் கொணர்ந்ததனை ஒழிக்குஞ் சுட்டு நிலை அதனை ஒழித்து ஒழிந்ததென்று அவ்வினத் தல்லது பிறிதொன்று குறித்தது கொல்லோ எனிற் குறியா; மற்று அப் பொத்த கத்துள் ஒன்றே பின்னும் குறித்தது எனப்படும்" என்பதன் வழியாக ஓரிலக்கணம் கூறுவதுடன் புத்தகம் என்பதன் செவ்விய வடிவத்தையும் நிலைப்படுத்துகிறார்.*

*சங்கத்தார் நாளில் 'உளறுதல்' என்பது கூந்தலை உலர்த்துதல் பொருள் தந்தது. அப்பொருளை இளம்பூரணர் காலத்தில் 'உலறுதல்' என்பது தரலாயிற்று என்பதை, "உலற்றத் திறமின்றிப் பயின்றார் ஒரு சான்றார் மயிர் நீட்டி உலறி நின்றாரைக் கண்டு ஒருவன், எம்பெருமான்*

உலறி நின்றீரால் என்றக்கால் வாளாதே உலறினேன் என்னற்க, இது காரணத்தால் உலறினேன் என்க. இது தனக்கு உற்றதுரைத்தது" என்பதன் வழியாக அறிய வைக்கிறார் (சொ. 56).

பிறரொடு தொடர்பு இல்லானைக் 'கெழீஇயிலி' என்பதும் (சொ.57) தொழில் செய்யும் ஏவலாட்டியைத் 'தொழீஇ' என்பதும் (சொ. 122) அரிய சொல்லாட்சியாம்.

**'அண்ணாத்தேரி'** என்பதை இவர் எடுத்துக்காட்டுவதைத் திருவண்ணாமலையகத்து ஏரி எனக் கருத்துரைத்தார் உளர். அது **'வானம் பார்த்த ஏரி'** என்பதாம். ஆறு, கால் ஆயவற்றின் நீர் வரத்தின்றி வானம் பார்த்து இருக்கும் ஏரியே அப்பெயரியதாம் (எ. 134). 'அண்ணாத்தல்' 'அண்ணாந்து நீர் குடித்தல்' என்னும் வழக்குகளைக் கொண்டு அறிக. "அண்ணாத்தல் செய்யா தளறு" என்றார் வள்ளுவர். **திட்டாத்துக்குளம்** என்று பிறர் கூறுவது **மேடுபட்ட குளம்** என்றாதல் கருதுக.

"காமப்புணர்ச்சி எனினும், இயற்கைப்புணர்ச்சி எனினும், முன்னுறு புணர்ச்சி எனினும் தெய்வப்புணர்ச்சி எனினும் ஒக்குமென" ஒரு பொருட் பலபெயரைச் சுட்டி ஐயமகற்றுகிறார் (களவியல் முன்னுரை).

**செங்கடுமொழி** என்பதைக் "கொடிய கடுமொழியேயன்றி மனத்தினால் இனியளாகிக் கூறும் கடுமொழி" என நயமுற விளக்குகிறார் (பொ. 112).

ஒத்ததெனப் பொதுவில் தோன்றும் இரண்டன் நுண்ணிய வேறுபாட்டையும் அரிதாக விளக்கிச் செல்கிறார்.

"மடம் என்பதற்கும் பேதைமை என்பதற்கும் வேறுபாடு என்னை எனின் மடம் என்பது பொருண்மை அறியாது திரியக்கோடல்; **பேதைமை** என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாக் கோடல்" (பொ. 248).

'ஐவகை யடியும்' (செய். 48) என்பது ஆசிரியப்பாவிற்குரிய இலக்கண முடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரியம் எனப்படாது நூலெனப் படும் என்று கொள்க (பொ. 391).

"**கலத்த**லாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போறல். **மயக்க**மாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாதல் போறல்" என்பவற்றைக் காண்க.

எடுத்துக்கொண்ட ஒன்றை உவமையால் விளக்கும் நயத்தையும் அரிதாக மேற்கொள்கிறார் இளம்பூரணர்.

சிறப்புப் பாயிரத்தில் "பாயிரமென்பது புறவுரை. அறநூற்குப் புறவுரையேல் அது கேட்டு என்னை பயனெனின் கற்று வல்ல கணவற்குக்

கற்புடையாள் போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும் திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம் போல அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும் பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனில் குறிச்சி புக்கமான்போல மாணாக்கன் இடர்ப்படுமாகலானும் பாயிரம் கேட்டல் பயனுடைத்தாயிற்று" என ஓரிடத்தே மூன்றுவமைகள் வைத்து விளக்குகிறார்.

இகர உகரங்களுக்கும் குற்றியலிகர குற்றியலுகரங்களுக்கும் ஒலியளவையால் வேறுபாடு உண்டாயினும் உயிர் என்னும் பெயரீட்டில் வேறுபாடு இல்லை என்பாராய், "சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற்பாலன" என்கிறார் (எ. 2).

உயிர்மெய் ஒலிக்கும் வகையை விளக்கும்போது "மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெற நிற்கும் என்றமையால் அக்கூட்டம் **பாலும் நீரும் போல உடன் கலந்ததன்றி விரல் நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறு நின்று கலந்தன அல்ல** என்பது பெறுதும்" என்கிறார் (எ.18).

'இதழ் போறலான் வாய் இதழ் எனப்பட்டது' என வாய்க்கு இதழ் எனப் பெயர் வந்த பொருத்தத்தை உவமையால் விளக்குகிறார் (எ. 83).

கலிப்பாவிற்குரிய துள்ளலோசை பற்றிக் கூறும்போது, "துள்ளுத லாவது ஒழுகுநடைத்தன்றி இடையிடையுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற் றென்றாற்போலக் கொள்க" என்கிறார் (பொ.387). இவ்வாறே பிறவும் வரும் உவமைகளும் உள.

உவமையின் பயன், "புலன் அல்லாதன புலனாதலும், அலங்கார மாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும்", என்று உவமையியல் முகப்பில் கூறும் அவர்தம் உவமைகளால் தம் கருத்தை மெய்ப்பிக்கிறார் என்க.

**உரைவளம்**

இளம்பூரணர் உரைவளம், வேண்டுமிடத்து வேண்டுமளவான் விளங்கி நலம் சேர்க்கின்றது.

எழுத்தை எட்டுவகையாலும் எட்டிறந்த பலவகையாலும் உணர்த்தி னார் என அவற்றைக் குறிப்பதும் (எ. முகப்பு) செப்புவகை ஆறு என்பதும், வினாவகை ஐந்து என்பதும் (சொ.13) தகுதி, வழக்கு ஆகியவற்றைப் பற்றிப் பகுத்துரைப்பதும் (சொ. 17) முதலியவை நன்னூலார் முதலிய பின்னூ லோர்க்கு உதவிய உரைவளங்களாம்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னும் நூற்பாவுக்கு (சொ. 152) "பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும் பொருள் குறியாது நில்லா" என

உரை கூறுகின்றார். 'பொருள் குறித்து நிற்கும்' என்னாமல், **பொருள் குறியாது நில்லா** என்று ஈரெதிர் மறைகளால் உடன் பாட்டுக் கருத்தை வலியுறுத்துவது, "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே; அவ்வாறு குறியாதது சொல்லன்று" என்பதை உறுதிபடக் கூறுவதற்கேயாம்.

முக்காலங்களையும் சுட்டும் இளம்பூரணர், "இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை" என்கிறார். எளிமையும் அருமையும் மிக்க குறிப்புகள் இவை.

கைக்கிளை 'சிறுமை உறவு' என்று கூறவேண்டுமெனக் கருதுகிறார் உரையாசிரியர். அதனை, "கை என்பது சிறுமை பற்றி வரும்; அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல்; கிளை என்பது உறவு; பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு, கைக்குடை, கையேடு, கைவாள், கைஒலியல், கைவாய்க்கால் எனப் பெருமையில்லாதவற்றை வழங்குபவாகலின்" என விளக்கியமைகிறார் (பொ. 1). கை சிறுமைப் பொருட்டாதலை நிறுவுதற்கு நடைமுறைச் சான்றுகள் பலவற்றை அடுக்குகிறாரே! பொருள் விளக்கம் செய்தலிலும் அவர்க்கிருந்த பற்றுதலின் விளைவு தானே இது!

பிரிவு என்னும் உரிப்பொருளைக் கூறும் தொல்காப்பியர், 'கொண்டு தலைக் கழிதலும், பிரிந்தவண் இரங்கலும்' என இரண்டாகப் பகுத்துக் கூறுகின்றார். இதனை, "கொண்டுதலைக் கழிதலாவது உடன் கொண்டு பெயர்தல். அது, நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமை யானும், உடன் கொண்டு பெயர்தலின் பிரிதலின் அடங்காமையானும் வேறு ஓதப்பட்டது" என நூலாசிரியர் கருத்தைத் தெளிவு செய்கிறார் (பொ.17).

"இளமை தீர் திறம்" என ஆசிரியர் கூறினாராயினும் அதனை, "இளமை தீர் திறமாவது; இளமை நீங்கிய திறத்தின்கண் நிகழ்வது. அது மூவகைப்படும்: தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதலும், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கிய வழி அறத்தின்மேல் மனம் நிகழ்தலின்றிக் காமத்தின் மேல் மனம் நிகழ்தலும் என" என்கிறார். "எண்ணி உரைகாரர் ஈவார்" என்பதை மெய்ப்பிப்பவை இத்தகையவை (பொ.54). "கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்" என்பதன் விளக்கமும் காண்க (பொ. 87).

'ஏறிய மடற்றிறம்' முதலாக ஆசிரியர் சொல்லும் உடன்பாடுகளை 'ஏறா மடற்றிறம்' முதலாக எதிர்மறையாக்கிக் கொண்டு இளம்பூரணர் கூறுவது வியப்பு மிக்கது (பொ. 55).

"மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்" என்பதற்கு, "குற்றமற்ற செயலையுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த அறிவன் பக்கமும்" எனப் பொருள் வரைந்து, "இறந்த காலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியினால் தோற்றிய அறிவன் பக்கம் என்றாலோ எனின், அது முழுதுணர்ந்தோர்க்கல்லது புலப்படாமையின் அது பொருளன் றென்க" என விளக்குகிறார். தாம் சுட்டிய பொருளே பொருளெனப் பன்னிருபடலச் சான்று காட்டுகிறார். "அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன் வீழ்வும் கோள் நிலையும் மழை நிலையும் பிறவும் பார்த்துப் பயன்கூறல்" என மேல் விளக்கம் செய்கிறார் (பொ.74). எத்தகு நாகரிகமாக மறுக்கிறார். **அவருரை முதலுரையாகலின் மறுப்புரை மிகக் கூறவேண்டும் நிலையில்லை. எனினும் பல்வேறு பாடங்களும் உரைகளும் பற்பலரிடத்துக் கேட்டிருக்கக்கூடும். அவற்றை உட்கொண்டு ஒரு விளக்கம் கூறுகிறார்.**

"பன்னிரு படலத்துள் கரந்தைக்கண் புண்ணொடு வருதல் முதலாக வேறுபடச் சிலதுறைகள் கூறினாராதலின், புண்படுதல் மாற்றோர் செய்த மறத்துறையாகலின் அஃது இவர்க்கு மாறாகக் கூறலும் மயங்கக் கூறலுமாம். ஏனையவும் இவ்வாறு மயங்கக் கூறலும் குன்றக் கூறலும் மிகைபடக் கூறலும் ஆயவாறு எடுத்துக்காட்டின் பெருகுமாதலின் உய்த்துணர்ந்து கண்டு கொள்க" என அமைதி காட்டுகின்றார். ஆகலின் **மறுப்புக் கூறுதலில் இளம்பூரணர் பெரிதும் மனங் கொண்டிலர்** என்பதும், கற்பார் தம் 'நுண்மாண் நுழைபுலத்தால்' கண்டுகொள்வார் என அமைந்தார் என்பதும் விளங்கும்.

தலைவிக்குக் களவில் கூற்று நிகழுமிடங்கள் என்பது குறிக்கும் துறைகளுள் ஒன்று 'கட்டுரை இன்மை' என்பது. அதற்குச் சான்று வேண்டுமோ? 'கட்டுரை இன்மைக்குக் கூற்று நிகழாது' என்பதும் கூறுகின்றார். எவரேனும் அதற்குச் சான்று இல்லையே என ஐயுறுவரோ என்பதை உன்னித்த குறிப்பு இது (பொ.109).

'சிற்றாறு பாய்ந்தாடும்' எனப் பன்னீரடிப் பஃறொடை வெண்பா ஒன்றைக் காட்டுகிறார் இளம்பூரணர் (பொ.123). அதில், "இது பன்னிரண் டடியான் பெருவல்லத்தைக் கூற வந்த இன்னிசைப் பஃறொடை வெண்பா" என்று குறிப்பு வரைகிறார். 'பெருவல்லம்' என்ற பெயர் இல்லாக்கால் இப் பாடற் பொருள் எவ்வாற்றானும் காணற்கரிது. ஆதலால் 'திறவு' வேண்

டுங்கால் தந்து செல்லும் 'திறம்' இளம்பூரணர் உடைமையாக இருந்துளது எனலாம்.

அவரே, 'சூத்திரத்தாற் பொருள் விளங்கும்' எனவும் (பொ. 585) விடுத்துச் செல்கிறார்.

### சில வழக்காறுகள்

இளம்பூரணர் காலத்து வழக்காறுகள் சில அவர் உரை வழியே அறிய வாய்க்கின்றன.

**எட்டி, காவிதி** என்னும் பட்டங்கள் வழங்குவதுபோல் **'நம்பி'** என்னும் பட்டம் வழங்குதல் (எ. 155), மகப்பாலுக்காக ஆடு வளர்த்தல் (எ. 220), புளிச்சோறு ஆக்குதல் (எ. 247), பேயோட்டுதல் (சொ. 312), வெள்ளாடை மகளிர் உடுத்தல் (சொ. 412), தைந்நீராடல் (சொ. 50), குறித்ததொரு நாளில் கறந்தபால் முழுவதையும் அறத்திற்கென ஆக்குதல் (சொ. 50), ஆடு மாடுகள் தினவுதீரத் தேய்த்துக் கொள்ள 'ஆதீண்டு குற்றி' நடுதல் (சொ. 50), சேவற் சண்டை நடத்துதல் (சொ. 61), **ஒற்றிக்கலம்** (ஆவணம்) எழுதுதல் (சொ. 76), நெல்லடித்துத் தூற்றும் களத்திற்குத் **'தட்டுப்புடை'** எனப்பெயர் வழங்குதல் (சொ. 77), வெற்றிலையும் பூஞ்செடியும் நடுதல் (சொ. 110), பொழுதின் ஒரு பகுதியைக் **கூறு** எனக் கூறுதல் (பொ. 9) முதலிய வழக்காறுகள் ஆங்காங்கு அறிய வருகின்றன.

### பல்துறைப் புலமை

நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், தெறித்தளத்தல் தேங்கமுகந்தளத்தல், சாத்தியளத்தல், எண்ணியளத்தல் என எழுவகை அளவைகளைக் கூறுவதும் (எ. 7), "கடுவும் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின" என்றும், "எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்தமையால் பைங்கூழ் நல்ல" என்றும் கூறுவதும் (சொ. 21, 22) "விலங்கும் மரனும் புள்ளும் உள்ள நோய் உற்றாற்கு மனக்குறைக்கு மறுதலை மாற்றம் கூறுவன போலும் குறிப்பின" எனலும் (சொ. 416) வாளானும் தோளானும் வேறலன்றி, "சொல்லான் வேறலும் பாட்டான் வேறலும் கூத்தான் வேறலும் சூதான் வேறலும் தகர்ப்போர் பூழ்ப்போர் என்பனவற்றான் வேறலும்" எனப் போர்வகை அடுக்குதலும் (பொ. 74) (அடியர்) "அகத்திணைக்கு உரியரல்லரோ எனின், அகத்திணை யாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும், இன்பத்தின் வழாமலும், இயலல் வேண்டும்; அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக் குறைபாடுடைய ராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக்கருதுவராகலானும், இன்பம் இனிது

*நடத்துவார் பிறரேவல் செய்யாதார்" என்பதனானும் "இவர் புறப் பொருட் குரியராயினார் என்க" என்பதனானும் பிறவற்றாலும் இளம்பூரணர் பல்துறைப் புலமை நன்கறிய வருகின்றது.*

*"சாத்தன் கையெழுதுமாறு வல்லன்; அதனால் தன் ஆசிரியன் உவக்கும்; தந்தை உவக்கும்" என்பதால் உரையாசிரியர்* **கையெழுத்தழகை எவ்வளவு விரும்பினார்** *என்பது விளங்கும் (சொ. 40).*

**"மனைவியைக் காதலிக்கும்; தாயை உவக்கும்"** *என்பவற்றால் வாழ்வியல் நுணுக்கத்தை எவ்வளவு தேர்ந்திருந்தார் இளம்பூரணர் என்பது விளங்கும் (சொ. 72).*

*மணந்தபின்னரும் மனைவியைக் காதலிக்கலாம் எனவும், ஒருத்தியை மணந்த பின்னரும் தன் தாயை உவந்து பாராட்டலாம் எனவும் கூறல் அத்தகைய தூய துறவர் இல்லறம் நல்லறமாகத் திகழ வழிகாட்டவும் வல்லார் என்பதை மெய்ப்பிப்பதாம்.*

# நச்சினார்க்கினியர்

### தனிப்பெருஞ்சிறப்பு

தமிழெனும் பெருங்கடற் பரப்பில் ஒரு கலஞ்செலுத்தி உலாக் கொண்டு, உயர்மணித் தொகுதிகளையெல்லாம் தொகுத்துப் பின்னவர்க்குக் கருவூலமென வைத்துச் சென்ற உரையாசிரியர் ஒருவர் உண்டென்றால் அவர் **நச்சினார்க்கினியரே**! அவரை அடுத்து எண்ணத்தக்க ஒருவர் **யாப்பருங்கல விருத்தி உரைகாரரே**! இன்னொருவர் **அடியார்க்குநல்லார்**. எத்தனை நூல்களுக்கு உரை கண்டுள்ளார் நச்சினார்க்கினியர்! எத்தனை நூல்களை மேற்கோள் காட்டியுளார்! வாழ்நாளை எல்லாம் முற்றாக உரை வரைதற்கெனவே பயன்படுத்திய பெருந்தகை நச்சினார்க்கினியரே.

### உரை கண்ட நூல்கள்

*"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்*
*ஆரக் குறுந்தொகையுள் ஐஞ்ஞான்கும் - சாரத்*
*திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்*
*விருத்திநச்சி னார்க்கினிய மே"*

என்னும் வெண்பாவுரைக்குமாறு தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி ஆகியவற்றுக்கு நச்சினார்க்கினியர் வரைந்த உரை நமக்கு வாய்த்துள்ளது. குறுந்தொகைக்குப் பேராசிரியர் வரைந்த உரை அகப்படாமை போலவே நச்சினார்க்கினியர் வரைந்த 20 பாடல்களின் உரையும் அகப்பட்டிலது. தொல்காப்பியம் முழுவதற்கும் உரைகண்டிருப்பினும் பொருளதிகாரத்திலுள்ள மெய்ப்பாட்டியல், உவமையியல், மரபியல் ஆகிய மூன்றியல்களுக்கும் உரை கிடைத்திலது.

'பாரத்தொல் காப்பியம்' என்னும் வெண்பா நச்சினார்க்கினியர் உரையை 'விருத்தி' என்று கூறியிருப்பினும் தொல்காப்பியத்தில் காண்டிகை உரை என்னும் குறிப்பே உள்ளது. பத்துப்பாட்டு கலித்தொகை ஆகியவற்றிலும் 'விருத்தி' என்னும் குறிப்பு இல்லை. ஆதலால் இவ்வெண்பாப் பாடியவர் விருத்தி என்று கருதினார் என்று கொள்ளலாம். நச்சினார்க்கினியர் கருத்து அஃதன்று என்றும் கொள்ளலாம்.

**பெயரும் குடிவழியும்**

நச்சினார்க்கு (விரும்பினார்க்கு) இனியர் என்பது இறைவன் பெயர்களுள் ஒன்று என்பர்.

*"நச்சுவார்க் கினியர் போலும் நாகவீச் சரவ னாரே"*

என்பது **அப்பரடிகள்** தேவாரம் (4.66:1). இதில் பெயராக வந்திலது. இறைவன் இயலாகவே வந்துளது என்பது எண்ணத்தக்கது. அப்பரடி களுக்குக் காலத்தால் மிகப்பிற்பட்ட சிவஞானமுனிவரர், "நச்சினார்க் கினியாய் போற்றி" என்றதும் இயல்விளிப் பெயரேயாம். பெயரன்று என்பதறிக. இவற்றால் இவர் இயற்பெயர் வேறொன்றாக இருந்து இவர்தம் உரைச் சிறப்பறிந்தவர்கள் இப்பெயரை வழங்கியிருத்தல் வேண்டும். அதுவே இயற்பெயர்போல அமைந்துவிட்டது எனலாம்.

'மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்' என்று தொல் காப்பியம், பத்துப்பாட்டு ஆகியவற்றின் ஒவ்வொரு பகுதி நிறைவிலும் வருகின்றது. இக்குறிப்பை விளக்குவதுபோல்,

*"வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்*
*எண்டிசை விளங்க வந்த ஆசான்*
*பயின்ற கேள்விப் பாரத்து வாசன்*
*நான்மறை துணிந்த நற்பொருள் ஆகிய*
*தூய ஞானம் நிறைந்த சிவச்சுடர்*
*தானே யாகிய தன்மை யாளன்*
*நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்"*

என இவரைப் பற்றிய பாயிரப் பகுதி கூறுகின்றது. இவற்றால் இவர் மதுரையார் என்பதும் "பாரத்துவாச கோத்திரத்தார் ஆகிய பிராமணர் என்பதும் புலப்படும். பாரத்துவாச கோத்திரத்தினர் வைணவர், சுமார்த்தர், மாத்துவர் என முப்பிரிவினர் என்றும் அவருள் இவர் சுமார்த்தர் என்றும் அத்வைதக் கொள்கையர்" என்றும் கூறுவர் (உரையாசிரியர்கள் பக். 141; நச்சினார்க்கினியர் பக். 6, 7).

**சமயம்**

இவர் வேத வழிப்பட்ட நெறியினர் எனினும் 'சிவச்சுடர்' எனப் பாயிரம் சொல்லுதலாலும் நூலில் வரும் சில குறிப்புகளாலும் சிவனெறிப் பற்றாளர் என்று கொள்ளலாம். எனினும் இவர்தம் சிந்தாமணி உரையைப் பயின்றாரும், அச் சிந்தாமணி யுரையை அச் சமய நோக்குக்கு முரணா வகையில் உரை வரைய வேண்டும் என்பதற்காகவே அச்சமயம் புகுந்து அழுந்தக் கற்று அதன் முன்னே தாம் எழுதிய உரையை விடுத்துப் புத்துரை செய்தார் என்று கூறப்படும் செய்தி அறிந்தாரும் நச்சினார்க்கினியர் சமயச் சால்பைப் போற்றாமல் இரார். ஒரு நூலுரை செய்தற்காகத் தம் வழிவழிச்

*சமயந் துறந்து வேறொரு சமயத்துப் புகுந்தார் என்பதினும், அக்கொள்கைகளை அழுந்தக் கற்றார் என்பதே சிறக்கும். ஒருகால் அச்சமயத்தார்க்கன்றிப் பிற சமயத்தார்க்குக் கற்பித்தல் இல்லை என்னும் கடுநெறி ஒன்று இருந்திருக்குமானால் அச் சமயத்திற்கே புகழ் வருவதாக இல்லை. அதனை அச்சமயஞ் சார்ந்து பயின்று, பயின்று முடித்த பின்னர் அதனைத் துறந்து தம் சமயம் சார்ந்தார் நச்சினார்க்கினியர் எனின், இவர் சூழ்ச்சியாளர்; பயன்கருதிய இந்நாளைக் கட்சி மாறியர்போல் - சமய மாறியர் - என்ற பழியே இவர்க்கு எய்துவதாம். இவற்றின் இடையேயும் ஒரு பசுமையான செய்தி : ஒரு நூலுக்கு மரபு பிறழாமல் உரை வரைவதற்காக எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார் என்பதே. இச்செயல் இந்நாளைக்கு மட்டுமன்று எதிர் நாளைக்கும் இனிய வழிகாட்டும் மாண்பினதாம்.*

**காலம்**

*நச்சினார்க்கினியர் உரை வழியால் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் ஆகிய தொல்காப்பிய உரையாசிரியர்களுக்கும், நன்னூல் பவணந்தியார், திருக்குறள் பரிமேலழகர், சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் ஆகியோர்களுக்கும் பிற்பட்டவர் இவர் என்பதற்குச் சான்றுகள் உண்மையால் 14ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியினர் என்பது தெளிவாகும்.*

**தமிழ்ம்மை**

*“தத்தம் புதுநூல் வரிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூற வேண்டும் என்றுணர்க” என்றும் (புறத். 35),*

*“இனித் தேவர்க்குரியவாக உரிஞையிற் றுறைகள் பலருங் கூறுவரால் எனின், அவை உலகியலாகிய அரசியலாய் எஞ்ஞான்றும் நிகழ்வின்றி ஒருகால் ஒருவர் வேண்டியவாறு செய்வன வாகலிற் றமிழ் கூறு நல்லுலகத்தன அல்லவென மறுக்க” என்றும் (புறத்.12),*

*“அகரம் முதலாதல் ஆரியத்திற்கும் ஒக்குமேனும் ஈண்டுத் தமிழெழுத்தே கூறுகின்றா ரென்பது உணர்தற்கு னகர இறுவாய் என்றார்” என்றும் (நூன்.1),*

*“தானே என்று பிரித்தார், இவை தமிழ் மந்திரம் என்றற்கும், மந்திரந்தான் பாட்டாகி அங்கதம் எனப்படுவன வுள, அவை நீக்குதற்கும் என்றுணர்க” என்றும் (செய். 178) இன்னவாறு கூறுமிடங்களில் தமிழ் வரம்புக்குரிய நூல் தொல்காப்பியம் என்பதை உணர்ந்து கூறுகின்றார். அதனைப் போற்றுதல் கடப்பாட்டையும் வலியுறுத்துகிறார்.*

### எதிரிடை

*"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்*
*ஐயர் யாத்தனர் கரணம் என்ப"* (கற். 4)

*என்னும் நூற்பாவில், "ஈண்டு 'என்ப என்றது முதனூலாசிரியரை யன்று; வடநூலோரைக் கருதியது" என்கிறார். இவ்வாறு எதிரிடைப் போக்கில் அல்லது வலிந்த நோக்கில் செல்வதால் தாம் சுட்டிய தமிழ் நெறியைத் தாமே சிதைப்பவராக உரை வரையத்துணிந்தார். அதனால், "அங்கியங் கடவுள் அறிகரியாக மந்திர வகையாற் கற்பிக்கப்படுதலின் அத்தொழிலைக் கற்பென்றார்" (கற். 1) என்றும் "முற்காலத்து நான்கு வருணத்தார்க்கும் கரணம் ஒன்றாய் நிகழ்ந்தது" (கற். 2) என்றும், "மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைந்த வகையாற் பள்ளி செய்து ஒழுகி; ஆன்றோராவார் மதியும் கந்தருவரும் அங்கியும்" என்றும் (கற்.5) கூறுவதும், அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்பதன் (புறத். 20) உரை விளக்கங் களும், "வேத முடிபு" (அகத். 5), "வேத நெறி அன்மை" (அகத். 11), "வேத நூலுள் இழைத்த பொருண் முடிபு" (அகத். 28), "வேதத்தையே" (அகத். 31), "வேதவிதி" (புறத். 2), "வேத முடிபு" (கள. 8) என நெடுகலும் கூறிச் செல்லுதலும் அவர் எடுத்துக்கொண்ட நூலின் தடத்தை மாற்றி எங்கோ இட்டுச் செல்லுதல் தெளிவாகின்றது. கந்தருவநெறிக்கும் களவுநெறிக்கும் உள்ள வேறுபாட்டை, "கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது என்றற்குத் துறையமை என்றார்" என்று பிறர்க்கு இல்லாத் தெளிவு காட்டும் திறத்தார் நச்சினார்க்கினியர் (கள. 1) என்பதை மறக்க முடியாது.*

### அறிந்தே செய்யும் பிழை

*காலம் உலகம் என்னும் சொற்களை வடசொற்களாகச் சேனா வரையர் கூற, "காலம் உலகம் என்பன வடசொல் அன்று. ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறாராகலின்" (சொல். 58) என்று ஆசிரியர் ஆணை கூறுபவர் நச்சினார்க்கினியர். இவர் "அகர இகரம் ஐகாரமாகும்", "அகர உகரம் ஔகாரமாகும்" என்னும் நூற்பாக்களின் உரைகளில் "அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம்போல இசைக்கும்; அது கொள்ளற்க"; "அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல ஔகாரம் போல இசைக்கும்; அது கொள்ளற்க" என்று எழுதுதல், நூலாசிரியர் கருத்துக்கு மாறுகொளல் என்பது தெளிவாகின்றது.*

*மேலும், "ஆகும் என்றதனான் இஃதிலக்கணம் அன்றாயிற்று" என்றும் கூறுகிறார். இஃது இவர் அறியாமையால் செய்வதன்று என்பது விளங்குகின்றது. சில இடங்களில் வலிந்து சூத்திரங்களை நலித்துப் பொருள்*

கூறும் வழக்கினை இவர் மேற்கொண்டவர் என்பதும் அதையும் உணர்ந்து கொண்டே செய்தார் என்பதும் விளங்குகின்றது.

"அளபிறந் துயிர்த்தலும்" எனவரும் நூன்மரபு நூற்பா (33) விளக்கத்தில்,

"சூத்திரத் துட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை எல்லாம்
ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே"

என்னும் மரபியற் சூத்திரத்தானே (103) "இவ்வாறே சூத்திரங்களை நலித்துப் பொருளுரைப்பன வெல்லாம் கொள்க" என இவர் எழுதுதல் இவர் தம் உட்கோளைத் தெளிவாக்கும்.

"வரகு, கொற்றன் ஈரெழுத் தொருமொழி; அகத்தியனார் ஐயெழுத் தொருமொழி; திருச்சிற்றம்பலம் ஆறெழுத் தொருமொழி; பெரும்பற்றப் புலியூர் ஏழெழுத்தொரு மொழி" என்று அவர் எழுத்தெண்ணிக் காட்டுதல் (குற்றியலுகரம், மெய்களை நீக்கி எண்ணிக் காட்டுதல்) செய்யுளியற் கோட்பாட்டை உரைநடைக் கோட்பாடாக்கிக் காட்டும் முறையல்லா முறையாகிவிடுகின்றது.

கரணம் வடநூல் பற்றியது எனப் பல்கால் கூறும் நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள்களோ அகம். 86, 136ஆம் பாடல்களாம். அவற்றில் அங்கியங் கடவுளோ அறிகரியாக மந்திர வகைக் கரணமோ ஒன்றும் இல்லாமை எவர்க்கும் வெளிப்பட விளங்கியும்கூட, "**கரணங்கள் நிகழ்ந்த வாறும் தமர் கொடுத்தவாறும் காண்க**" என்று துணிந்து கூறுகிறார். இந்நிலை நூற்கருத்துக்கோ நூலாசிரியர்க்கோ பெருமை தருவது இல்லை என்பது பற்றிக் கவலை கொண்டார் இல்லை எனலாமா? தம் கொள்கையை நூலாசிரியர் தலையில் கட்டிவிடுதல் எனலாமா?

ழ, ள என்னும் இரண்டு எழுத்துகளும் பிறப்பு செய்கைகளில் ஒவ்வா என்பதை உணரும் நச்சினார்க்கினியர், "ழகாரமும் ளகாரமும் ஒன்றானும் இயைபில வேனும் 'இடையெழுத் தென்ப யரல வழள' (எழுத். 21) என்றாற் சந்தவின்பத்திற்கு இயையுடைமை கருதிச் சேரவைத்தார் போலும்" என ஆசிரியர் வைப்பு முறைக்குச் சான்று தேடிக் காட்டிச் சிறப்புச் செய்கின்றாரே! (நூன்.1).

'கண்ணிமை நொடியென' ஆசிரியர் வைப்பு முறை செய்ததை, "நொடியிற் கண்ணிமை சிறப்புடைத்து, உள்ளத்தான் நினைத்து நிகழாமை யின்" என்று எவ்வளவு கூர்ப்புடன் உரைக்கிறார்! (நூன்.7).

"இவ்வாசிரியர் நூல் செய்கின்ற காலத்து வினைத்தொகைக் கண்ணும் பண்புத்தொகைக் கண்ணும் அன்றி ஒரு மொழிக் கண்ணே

மயங்குவனவும் உளவாதலின், அவற்றைக் கண்டு இலக்கணங் கூறினார். அவை பின்னர் இறந்தன வென்று ஒழித்து உதாரணம் இல்லனவற்றிற்கு உதாரணங் காட்டாமல் போதலே நன்றென்று கூறலும் ஒன்று" என்று எவ்வளவு சால்புடன் கூறுகிறார்! (நூன். 24).

'காரும் மாலையும் முல்லை' என்னும் ஆசிரியர் நூற்பா நடைக்கு, "முல்லைப் பொருளாகிய மீட்சிக்கும் தலைவி இருத்தற்கும் உபகாரப் படுவது கார் காலமாம்; என்னை? வினைவயிற் பிரிந்து மீள்வோன் விரைபரித்தேரூர்ந்து பாசறையினின்று மாலைக் காலத்து ஊர்வயின் வரூஉங்காலம் ஆவணியும் புரட்டாதியும் ஆகலின், அவை வெப்பமும் தட்பமும் மிகாது இடை நிகர்த்தவாகி ஏவல் செய்து வரும் இளையோர்க்கு நீரும் நிழலும் பயத்தலானும் ஆர்பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலின் களி சிறந்து மாவும் புள்ளும் துணையோடின்புற்று விளையாடுவன கண்டு தலைவற்கும் தலைவிக்கும் காமக் குறிப்பு மிகுதலானும் என்பது. புல்லைமேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றாக் கன்றை நினைந்து மன்றிற் புகுதரவும் தீங்குழல் இசைப்பவும் பந்தர் முல்லை வந்து மணங் கஞற்றவும் வருகின்ற தலைவற்கும் இருந்த தலைவிக்கும் காமக் குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப் பொழுதும் உரித்தாயிற்று" என்று எதுகை மோனை இயற்கையழகு கொஞ்சும் உரைப்பாட்டு இலக்கிய நடையில் எழுது கின்றார் நச்சினார்க்கினியர் (அகத். 6). நூலாசிரியரோடு ஒப்ப ஒரு நூலாசிரியராயன்றோ திகழ்கின்றார்!

இவ்வாறாகவும், வலிந்தும் நலிந்தும் சில இடங்களில் இவர் கூறியுள்ள உரை - ஆசிரியர் நூலுக்கும் தமிழர் நெறிக்கும் ஒவ்வாது இவர் கூறியுள்ள உரை - நடுவுள்ளங்கொண்டு நாடுவாரையும் வருத்தும். "இது போன்ற உரைகளையெல்லாம் தொல்காப்பியர் காண நேர்ந்தால் எத்துணை நொந்து போவார். இவற்றையெல்லாம் படித்துவிட்டு இத்துணைக் காலம் தமிழுள்ளம் மரக்கட்டையாகவே இருந்து வந்திருப் பதுதான் வியப்பாகும்" என்றும் "நச்சினார்க்கினியர் பிற சமயங்களை வெறுத்துப் பேசாதவராயினும் வேத வைதிகப் பற்றுமிக்கவர். ஆனால் வேண்டாத இடங்களிலெல்லாம் 'வேதம் வேதம்' என்று கூறிக் கொண்டே இருப்பதால் அவரது வேதப் பற்றைக் கண்டு நாம் சலிப்படைகிறோம்" என்றும், "அவருடைய காலத்தில் தமிழைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு சர்வாதிகாரியைப் போலவே விளங்கியிருப்பார். இங்கிலாந்து நாட்டில் ஜான்ஸன் காலத்தில் ஜான்ஸன் ஆங்கில மொழியின் சர்வாதிகாரியைப் போல விளங்கினார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கு நாம் நச்சினார்க்கினியரை அப்படி நினைத்துக்கொள்ளலாம். பாட்டின் சொல் லமைப்பை அவர் எப்படிச் சிதைத்தாலும் பண்டிதர் பரம்பரை வழிவழி

யாக அவரைப் போற்றி வந்திருக்கின்றமையும் நினைக்கத்தக்கது'' என்றும் வருவன (நச்சினார்க்கினியர் - பேரா. மு. அண்ணாமலை) தெளிந்து கூறிய தேர்ச்சி யுரைகளாம்.

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்'' என்பது முதுவோர் உரை! அவ்வுள்ளது சிதைப்பதை உணர வாய்த்திருந்தும், உணர்த்தக் கேட்டும் - கற்றும் - இருந்தும், இந்நூற்றாண்டின் இடைக்கால ஆய்வுக்கள மேலாண்மையரும் நச்சினார்க்கினியர் சிதைவுக்கு விளக்கங்கூறியே விழுப்பம் எய்தினர் என்னும்போது அக்காலச்சூழலில் நச்சினார்க்கினியர் சில இடங்களில் தடம் மாறி உரை வரைந்தது வியப்பும் இல்லை! பரியதோர் குறையும் இல்லை!

நச்சினார்க்கினியர் புலமை, 'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமைக்கும் ஏமாப் புடைத்து' என்பதற்குச் சான்றாவது; எத்தனை உவமைகள்! எத்தனை எடுத்துக்காட்டுகள்! எத்தனை வரலாற்றுப் பின்னல்கள்! எத்தனை சிறப்புப் பெயர்கள்!

"ஆய்தம் என்ற ஓசைதான் அடுப்புக் கூட்டுப்போல மூன்று புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு 'ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்' என்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப'' (நூன். 2).

"கோட்டு நூறும் மஞ்சளும் கூடிய வழிப் பிறந்த செவ்வண்ணம் போல நெடிலுங் குறிலுங் கூடிய கூட்டத்துப் பிறந்த பின்னர்ப் பிளவுபடா ஓசையை அளபெடை என்று ஆசிரியர் வேண்டினார்'' (நூன். 6).

"அகரந் தனியே நிற்றலானும் பலமெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்ட தாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையை யுடைத் தென்று கோடும். இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும் பல்லுயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல'' (நூன். 8).

"ஒன்றரை மாத்திரையும் இரண்டரை மாத்திரையும் உடையன (வாகிய உயிர் மெய்கள்) ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் ஆயவாறு என்னை எனின், நீர் தனித்து அளந்துழியும் நாழியாய், அரை நாரி யுப்பில் கலந்துழியும் கூடி ஒன்றரை நாழியாய் மிகாதவாறு போல்வ தோர் பொருட்பெற்றி'' (நூன். 10).

இவை நூன்மரபில் நச்சினார்க்கினியர் காட்டும் உவமைகள். நச்சினார்க்கினியர் உரையால் மட்டுமே அறியப்படும் நூல்கள் சில உள. அவற்றுள் சீரிய ஒன்று 'பெரும் பொருள் விளக்கம்' என்பது. அந்நூலைப் புறத்திரட்டு வழியால் பெயரறிந்து கொள்ளவும் ஒப்பிட்டுக் காணவும் வாய்க்கின்றது. புறத்திரட்டில் காணாத பாடல்கள் மிகப் பல புறத்திணை

இயலில் இடம் பெற்றுத் தனி நூலாகி உள்ளன. களவியல் கற்பியல்களிலும் புறத்திணையியலில் காணப்படும் பெரும் பொருள் விளக்க வெண்பாக் களை அன்னவை, எடுத்துக்காட்டாக இலங்குகின்றன. அவற்றை நோக்க அகப்பொருள், புறப்பொருள் இரண்டும் கூடிய பொருளின் முழுப்பரப்பும் தழுவிய நூலாக அந்நூல் இருந்திருத்தல் கூடுமென எண்ண இடமா கின்றது. தகடூர் யாத்திரை, ஆசிரிய மாலை என்பவற்றிலிருந்தும் அரிய பாடல்களைப் பரிசிலென வழங்குகின்றார் இனியர்.

**வரலாற்றுச் செய்தி**

புறத்திணையியலில் நச்சினார்க்கினியர் காட்டும் வரலாற்றுச் செய்திகள் மிகப் பலவாம்.

“ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன் மதிற் புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமான் இருந்ததாம்” (புறத்.7).

அதியமானால் சிறப்பெய்திய பெரும்பாக்களை மதியாது சேரமான் முனைப்படை நின்றானைக் கண்டு அரிசில்கிழார் பொன்முடியார் ஆகியோர் பாடிய தகடூர் யாத்திரைப் பாடல்களைக் குறிக்கிறார் (புறத். 8).

பெருங்கோழி நாய்கன் மகள் ஒருத்தி (நக்கண்ணையார்), ஒத்த அன்பினாற் காமுறாதவழியும் குணச்சிறப்பின்றித் தானே காமுற்றுக் கூறியதை, காமப்பகுதி கடவுளும் வரையார் என்னும் நூற்பாவில் (புறத். 28) எடுத்துக்காட்டுகிறார்.

தமிழகத்துச் செய்தியாம் இவையன்றி அக்காலத்தில் தமிழில் வழங்கிய இராமாயண பாரதப் பழநூல்களில் இருந்து (அவை அகவற் பாவால் இயற்றப்பட்டவை) மேற்கோளும் செய்திக் குறிப்பும் காட்டுகிறார்.

கொள்ளார் தேஎங் குறித்த கொற்றத்திற்கு (புறத். 12) “இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது” என்கிறார்.

“செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ, ஒருவன் மண்டிய நல்லிசை நிலை” என்பதற்கு (17) “குருகுல வேந்தனைக் குறங்கறுத்த ஞான்று இரவு ஊரெறிந்து பாஞ்சாலரையும் பஞ்சவர் மக்கள் ஐவரையும் கொன்று வெற்றி கொண்ட அச்சுவத்தாமாவின் போர்த்தொழில் போல்வன” என்கிறார்.

இவ்வாறு இராமாயண பாரதச் செய்திகளை எடுத்துக்காட்டுவ துடன் தொன்ம (புராண)ச் செய்திகளையும் சுட்டுகிறார்.

“இரணியனைப் போல வலியானும் வருத்தத்தானும் கூறுவித்துக் கோடல் வாகையன்றாயிற்று” என்பது ஒன்று (புறத்.19).

*'முழுமுதல் அரணம்' என்பதை விளக்கும் நச்சினார்க்கினியர் (புறத்.10), "முழு அரணாவது மலையும் காடும் நீருமல்லாத அகநாட்டுட் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்துத் தோட்டிமுள் முதலியன பதித்த காவற்காடு புறஞ்சூழ்ந்து அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து யவனர் இயற்றிய பல பொறி களும் ஏனைய பொறிகளும் பதணமு மெய்ப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து எழுவும் சீப்பும் முதலியவற்றால் வழுவின் றமைந்த வாயிற்கோபுரமும் பிறவெந்திரங்களும் பொருந்த இயற்றப் பட்டதாம்" எனச் செறிவு மிகக் கூறுகிறார்.*

*இனி இதே நூற்பாவில், "சிறப்புடை அரசியலாவன மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெறாதோனையும், மயிர் குலைந்தோனையும், அடிபிறக்கிட்டோனையும், பெண்பெயரோனையும், படை இழந்தோனை யும், ஒத்தபடை எடாதோனையும் பிறவும் இத்தன்மையுடையோரையும் கொல்லாது விடுதலும் கூறிப் பொருதலும் முதலாயினவுமாம்" என்று சொல்ல வேண்டும் என்னும் ஆர்வத்துடிப்பால் இயைத்துக் கூறுகின்றார்.*

### தெளிபொருள்

*'குற்றியலிகரம்' உயிரா? ஒற்றா? இதனை இந்நாளிலும் ஒற்று என்பார் உளர். "ஊர்ந்தெனவே குற்றியலிகரமும் உயிரென்பது பெற்றாம். உயிர்க்கல்லது ஏறுதலின்மையின்" என்கிறார் (மொழி.1).*

*இராக் காக்கை, இராக் கூத்து எனவரின் இராவிடத்துக் காக்கை இராவிடத்துக் கூத்து எனப் பொருள் தரும் என்றும், இராஅக் காக்கை, இராஅக் கூத்து எனவரின் இராத என்னும் எதிர்மறைப் பெயரெச்சப் பொருள் தரும் என்றும் விளக்குகிறார் (உயிர். 25). இவ்வாறு மயக்கம் அறுக்கும் இடங்கள் பலவாம்.*

*"இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்" என்பதற்குக் 'கோவில்' என்று எடுத்துக்காட்டுக் கூறுகிறார் (உயிர். 91). அது 'கோயில்' என்றே இருந்திருக்கும். 'படியெடுத்தோர் பிழையோ' என எண்ண வேண்டியுளது. இளம்பூரணர் மரபு நிலை மாற்றாமல் 'கோயில்' என்றே கொண்டார் என்பது அறியத்தக்கது. 'கோவில்' என்பது 19ஆம் நூற்றாண்டு உரைநடைக் காலத்து வந்த தவறான புது வழக்கு.*

### வழக்குகள்

*'புடோலங்காய்' என்பதைப் புள்ளிமயங்கியல் புறநடையில் (110) எடுத்துரைக்கிறார் நச்சினார்க்கினியர். 'புடலங்காய்' என்பது அவர் காலத்தில் அவ்வாறு வழங்கிற்றுப் போலும்!*

*"ஊ என்பது தசையை உணர்த்தி நின்ற வழக்கு ஆசிரியர் நூல் செய்த காலத்து வழக்கு. அன்றித் தேய வழக்கேனும் உணர்க" என்கிறார் (உயிர். 67). இவ்வாறு காலவழக்கு இடவழக்கு ஆகியவற்றைச் சுட்டுதலை யும் இவர் வழக்காகக் காணலாம்.*

**மாட்டின் விளைவு**

*'மாட்டு' என்பதோர் இலக்கணத்தைத் தொல்காப்பியர் செய்யுளிய லில் கூறுகின்றார். ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழைப்பார் போல அவ்விலக்கணம் கொண்டு நச்சினார்க்கினியர் மாட்டிச் செல்லும் தனிச் செலவில் அவர்க்கு ஒப்ப ஒருவர் இதுகாறும் இருந்தார் இலர். அம் மாட்டுரையே, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை முதலியவற்றுக்கு மறைமலையடிகளாரைப் புத்துரை காண ஏவிற்று. நெடுநல்வாடை, முருகாற்றுப்படை ஆகியவற்றுக்குக் கோதண்டபாணியாரை நயவுரை காணத் தூண்டிற்று! இவருரையில் அமைந்துள்ள சில நூற்பாக்களின் பொருட்போக்கே நாவலர் பாரதியாரைத் தொல்காப்பியப் புத்துரை காண அழுத்திற்று. இவையும் நச்சினார்க்கினியர் கொடையெனின் கொள்ளத் தக்கவாம்.*

*"ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?" என்னும் சாமிநாத தேசிகர் உரையே, "தனித்தமிழ் இயக்கம்"காண எதிரிடைத் தூண்டல் ஆயிற்று அல்லவோ! எதிரிடைப் பயனும் ஏற்புடைப் பயனாதல், எண்ணுவார் எண்ணத் திண்மையும் எழுச்சிச் செயற்பாடும் பற்றியவை. மற்றையரோ நீரில் கரைந்த மண்ணாகி நெளிந்து போய்விடுவர்.*

# சேனாவரையர்

சேனாவரையர் என்பது பட்டப்பெயர். எட்டி, காவிதி என்னும் பட்டங்கள்போல் படைத்தலைவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட பட்டப்பெயர் அது. அதனால் சேனாவரையரின் முன்னோருள் ஒருவர் அப்பட்டப்பெயர் பெற்று விளங்கி அது குடிப்பெயராகப் பின்னர் விளங்கியிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

அரையர் = அரசர்; ‘சேனை அரையர்’ என்பது சேனாவரையர் ஆயது. சேனைமுதலி, தளவாய் முதலி, நாயகர், தலைவர் படையாச்சி (ஆட்சி) என்னும் குடிவழிப் பெயர்களின் வரலாற்றை அறிந்தால் சேனா வரையர் என்பதன் பொருள் தெளிவாகும்.

**ஊரும் காலமும்**

தூத்துக்குடி திருச்செந்தூர்ப் பெருவழியில் ஆற்றூர் என்றோர் ஊர் உள்ளது. அவ்வூர் பொருநையாற்றின் கரையில் அமைந்தது. அவ்வூரி லுள்ள சோமநாதர் கோயிலில் மாறவர்மன் குலசேகரனின் ஏழாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டுள்ளது. அதில் **ஆற்றூர்ச் சேனாவரையர்** தம் முன்னோரிடமிருந்து தமக்குக் கிடைத்த நிலங்களைச் சோமநாதர் கோயிலுக்கு வழங்கிய செய்தி உள்ளது. இக்கல்வெட்டின் காலம் 1276 என்பர். அதனால் சேனாவரையர் பதின்மூன்றாம் நூற்றாண்டினர் என்பது தெளிவாம்.

ஆற்றூர் ஏரல், கொற்கை சார்ந்த ஊர். கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியனைச் சிலம்பு பாடுகின்றது. அக்கொற்கையில் நாணயம் அடிக்கும் அக்க சாலை இருந்தது. இன்றும் அவ்விடம் ‘அக்கா சாலை’ என வழங்குகின்றது. ஆங்கிருந்த கோயில் ‘அக்கசாலை ஈசுவரர் கோயில்’ என்பதை அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது. செழிய நங்கை கோயில் என்பதொன்றும் ஆங்குண்டு. அப்பெயர் நெடுஞ்செழியன், வெற்றிவேற்செழியன் பெயர்களை நினைவூட்டுகின்றது. கொற்கை சூழ்ந்த பகுதியில் படைகள் தங்கியிருந்த சான்று காட்டும் ஊர்ப்பெயர்கள் உள்ளன. ஆதலால் அப்படைத் தலைவர் ஒருவர் குடிவழிப் பெயரே சேனாவரையர் என்பதற்குக் கிட்டும் சான்றுகள் இவை எனக் கொள்ளலாம்.

ஆற்றூர்க் கல்வெட்டு மற்றொன்றில் சேனாவரையர்க்கு '**அழகப் பிரான் இடைக்கரையாழ்வான்**' என்றொரு பெயருண்மை கொண்டு அப்பெயரே சேனாவரையரின் இயற்பெயராக இருக்கக் கூடும் என்பர்.

சேனாவரையர் உரையாசிரியர் இளம்பூரணர் உரையைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். நேமிநாதம் இயற்றிய குணவீர பண்டிதர் நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் ஆகியோர் கொள்கைகளை மறுத்துரைக்கும் இடங்களும் இவர் நூலில் உள. ஆதலால், அவர்களுக்குக் காலத்தால் பிற்பட்டவர் இவர் என்பது உறுதியாகும்.

'**மாறோகம்**' என்பது பழமையானதோர் ஊர். அவ்வூர்ப் புலவர் 'மாறோகத்து நப்பசலையார்' என்பார் சங்கச் சான்றோர் வரிசையைச் சார்ந்தவர். அம் மாறோகம் கொற்கை சூழ்ந்த பகுதியாகும். அதன் வழக்கம் ஒன்றைச் சேனாவரையர் தம் உரையுள் எடுத்தாள்கிறார். அதிலும் '**இக்காலத்தும்**' என நிகழ் காலத்தால் சுட்டுகிறார். தம் ஊர்ச்சார்புச் செய்தியாக விளங்குகின்ற அது, "புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப" என்பது (164).

"தென்பாண்டி நாட்டார் ஆ எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும், தம்மாமி என்பதனைத் 'தந்துவை' என்றும் வழங்குப" என்றும் (400), நாட்டைச் சுட்டி எடுத்துக்காட்டுக் காட்டும் இப்பகுதியும் இவர்தம் நாட்டுச் சார்புக்குரிய சான்றாகக் கொள்ள வாய்க்கின்றது.

**சமயம்**

ஆற்றூர்ச் சேனாவரையர் அவ்வூர்ச் சோமநாதர் கோயிலுக்கு நிலம் வழங்கிய செய்தியால் அவர் சைவ சமயத்தவர் என்பது தெளிவாம். மேலும் பிறர் உரைகளின் முகப்பில் இறைவணக்கப் பாடல்கள் இல்லாதிருக்கவும் இவருரை முகப்பில் பிள்ளையார், சிவபெருமான், கலைமகள், அகத்தியர் ஆகியோரைப் பற்றிய வாழ்த்துப் பாடல்கள் அமைந்துள்ளமை இவர்தம் சமயச்சார்பை விளக்கும். இளம்பூரணர் தொல்பொருள். ஐம்பதாம் நூற்பாவில் மேற்கோள் காட்டும், "தன்தோள் நான்கின்" என்னும் மூத்த பிள்ளையார் பாடலை இவர்தம் உரை நூன் முகப்புப் பாடலாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாம்.

சேனாவரையர் உரை சொல்லதிகாரம் ஒன்றற்கே கிடைத்துள்ளது. மற்றை அதிகாரங்களுக்கு இவர் உரை எழுதினார் என்பதற்குரிய சான்று இவர் உரையிலோ பிற வகைகளிலோ கிட்டிற்றில்லை. ஆனால் எழுத்து, பொருள் அதிகாரங்களில் இவர் கொண்டிருந்த புலமை நலம் சொல்லதிகார உரையால் விளக்கமாகின்றது.

**நூலாசிரியரைச் சிறப்பித்தல்**

நூலாசிரியர் தொல்காப்பியர் இலக்கண நூற்பா யாத்தனர் எனினும், அந் நூற்பா இலக்கிய நயமுடையது என்பதை உட்கொண்டவராய்ச் "செய்யுளின்பம் நோக்கி அளபெழுந்து நின்றது" என்றும் (210), "செய்யுளின்பம் நோக்கி வினையொடும் பெயரொடும் என்றார்" என்றும் (295), "தாம் என்பது கட்டுரைச் சுவைபட நின்றது" என்றும் (398) இன்னவாறு நயம் உரைக்கும் பகுதிகளால் சேனாவரையர் நூலாசிரியரைச் சிறப்பித்தலை நிலைப்படுத்துகிறார்.

"அகத்திய முதலாயின எல்லா இலக்கணமும் கூறலிற் பல்வேறு செய்தியின் நூலென்றார்" என்று சொல்லதிகார இறுதி நூற்பா விளக்கத்தில் சேனாவரையர் வரையும் உரை, தொல்காப்பியர் புலமைப் பரப்பை நோக்கிக் கூறியதாம் (463).

விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமையுள் அடக்குதலும், தனியே பிரித்து எண்ணலும் என இருமுறைகளும் வடமொழியில் உண்டு என்றும், ஐந்திர நூலார் தனியே பிரித்து எண்ணுபவர் என்றும், தொல் காப்பியர் அம்மதத்தைக் கொண்டவர் ஆகலின் வேற்றுமை எட்டெனக் கொண்டார் என்றும் சேனாவரையர் விளக்கிக் கூறுகிறார். இக்கருத்தை விளக்குதற்கே "பாயிரத்துள் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்று கூறப்பட்டது என்பதையும் சுட்டுகிறார் (74).

பொருள் விளங்கா நிலையில் 'அகப்படச் சூத்திரம் செய்யார் (குன்றக் கூறலாக அமையார்) என்றும் 'பொருள் விளங்க விதந்து கூறுவார்' (விளக்கித் தெளிவுறக் கூறுவார்) என்றும் இவர் கூறுவன நூலாசிரியர் நூற்ற திறத்தை நயமுறக் கூறுவதாய் அமைகின்றன (35, 36).

பலபொருள் ஒருசொல் அமையும் வகைகளைக் கூறி அவ்வகை களின் இலக்கணத்தைத் தனித்தனியே குறிக்கிறார் தொல்காப்பியர். அந்நூன் முறையை நயக்கும் சேனாவரையர், "இலக்கணச் சூத்திரங்களே அமையும்; இச்சூத்திரம் வேண்டா பிறவெனின், இருவகைய என்னும் வரையறை அவற்றால் பெறப்படாமையானும், வகுத்துப் பின்னும் இலக்கணம் கூறியவழிப் பொருள் இனிது விளங்குதலானும் இச் சூத்திரம் வேண்டும் என்பது" என்கிறார். இதனால், தொல்காப்பியர் நூலியற்றிய சிறப்பைச் சுட்டும் அளவுடன் நில்லாமல், இந்நெறியைப் போற்றுதல் சிறப்பு எனப் பின்வருவார்க்கு எடுத்துக்காட்டும் தேர்ச்சியாளராகவும் சேனாவரையர் அமைதல் புலப்படுகின்றது.

ஆசிரியர் தொடுக்கும் நயத்தைத் தக்காங்கு எடுத்துரைத்தலில் தனித்திறம் காட்டுகிறார் சேனாவரையர்.

*“வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது*
*நினையுங் காலைக் காலமொடு தோன்றும்”*

என்னும் நூற்பா விளக்கத்தில் (198), “ ‘வேற்றுமை கொள்ளாது’ என்னாது காலமொடு தோன்றுமெனின் தொழில் நிலை ஒட்டும் தொழிற் பெயரும் வினைச் சொல்லாவான் செல்லுமாகலானும், ‘காலமொடு தோன்றும்’ என்னாது வேற்றுமை கொள்ளாது எனின் இடைச் சொல்லும் உரிச் சொல்லும் வினைச்சொல்லெனப்படும் ஆகலானும் அவ்விரு திறமும் நீக்குதற்கு ‘வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றும்” என்றார். வினைச் சொல்லுள் வெளிப்படக் காலம் விளங்காதனவும் உள. அவையும் ஆராயுங்கால் காலமுடைய என்றற்கு ‘நினையுங் காலை’ என்றார்” என்பது அத்தகையவற்றுள் ஒன்று.

இடையியலில் ‘எல்லே இலக்கம்’ என்றொரு நூற்பா அமைந் திருத்தலைக் காண்கிறார் சேனாவரையர். அஃது உரிச்சொல் ஆதலால் உரியியலில் இடம் பெறவேண்டும் என்று நினைக்கிறார். ஆயின் நூற்பா இடையியலில் அன்றோ கிடக்கின்றது! அதனை மாற்றியமைத்தல் நூன்முறையாகாது என்று எண்ணியவராய், “எல்லென்பது உரிச்சொல் நீர்மைத்தாயினும் ஆசிரியர் இடைச் சொல்லாக ஓதினமையான் இடைச் சொல் என்று கோடும்” என்கிறார். இதனால் நூலாசிரியர் நுவற்சியைத் தலைமேல் தாங்கிச் செயற்பட வேண்டும் உரையாசிரிய மரபை உணர்த்தி விடுகிறார் அவர். அதற்கு அவரே சான்றாக விளங்குவதைத் தம் எழுத்தா லேயே புரிவிக்கவும் செய்கிறார் (269). முந்நூற்றுத் தொண்ணூற்றொன் பதாம் நூற்பா விளக்கத்திலும் இக்கருத்தைத் தெளிவிக்கிறார்.

இடைச்சொல், உரிச்சொல் முதலியவற்றை இடைச் சொற்கிளவி, உரிச்சொற் கிளவி என ஆள்கிறார் ஆசிரியர். இவற்றுள் கிளவி என்பது மிகை என்று கருதுவார் உளராகலாம் என எண்ணிய சேனாவரையர், “கிளவி என்பது மிகையெனின்; மிகையாயினும் இன்னோரன்ன அமைவுடைய என்பதுணர்த்துதற்கு அவ்வாறோதினார் என்பது” என அமைதி கூறுகின்றார். இன்னவை நூலாசிரியர் ஆணைவழிச் செல்லும் உரைமரபு காட்டுவன என்க.

நூலாசிரியர்க்குரிய நெறிகளுள் ஒன்று ‘உய்த்துணர வைத்தல்’ என்பது. எனினும், சில இடங்களில் உய்த்துணர வேண்டாமல் வெளிப்பட நூல் இயற்றுவதும் வழக்கே. அத்தகைய இடங்கள் சிலவற்றில் சேனா வரையர் நயம்பட உரை வரைகின்றார். ‘வழாஅல் ஓம்பல்’ என்று வழுவாமல் காத்த ஆசிரியர் (13),

*"செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு*
*அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே"*

என விளக்குகிறார் (16). இந்நூற்பா விளக்கத்தில் சேனாவரையர், "நுண்ணுணர் வுடையார்க் கல்லது அதனால் உணர்தலாகாமையின் விரித்துக் கூறியவாறு" என நூலாசிரியர் பேரியலை வெளிப்படுத்துகிறார். இவ்வாறே, "ஆக்கந் தானே காரண முதற்றே" என்னும் நூற்பா விளக்கத்திலும் (21) நுண்ணுணர் வுடையார்க்குத் தம்மரபினவே (11) என அடங்குவ ஆயினும் ஏனை உணர்வினார்க்கு இவ்வேறுபாடு உணரலாகாமையின் விரித்துக் கூறினார்" என்கிறார்.

ஆசிரியர் வெளிப்பட விளக்கும் இடங்களில், வேறொரு வாய்பாட்டானும் சேனாவரையர் கூறுகிறார்:

*"இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை*
*வழக்கா றல்ல செய்யு ளாறே"*

என்னும் நூற்பாவில், "ஒன்றன தாற்றலான் ஒன்று பெறப்படுதலின் வழக்காறல்ல என்றானும், செய்யுளாறு என்றானும் கூற அமையுமெனின், 'உய்த்துணர்வது சொல் இல்வழி' எனமறுக்க" என்கிறார். வேண்டும் சொல் இல்லாக்கால்தான் உய்த்துணர வேண்டும் என்னும் நெறியை இவ்வாறே மேலும் கூறுவார் (43, 133).

**வேறுரைகள்**

சேனாவரையர்க்கு முன்னரே சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர் உரையெழுதியிருந்தார். அவருரை சேனாவரையர் உரைத் தெளிவுக்கு மிக உதவியிருக்கும். இளம்பூரணரின் ஆய்வின் மேல் ஆய்வு சேனாவரையர் செய்தலால், உரைச்செப்பங்களும், விளக்கங்களும் கிடைத்தல் இயற்கை. ஆதலால், முதல் நூற்பாவிலேயே உரையாசிரியரைச் சுட்டுகிறார் சேனாவரையர்.

"சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது. உரையாசிரியரும் எழுத்தாதல் தன்மையொடு புணர்ந்து என்பார் 'எழுத்தொடு புணர்ந்து' என்றாராகலின், ஒருபுடை ஒற்றுமையே கூறினார். தன்மையொடு புணர்ந்து என்னாக்கால் ஓரெழுத்தொரு மொழிக்கு எழுத்தொடு புணர்தல் இன்மையின் சொல்லாதல் எய்தாதென்க" என்று கூறி உரையாசிரியரைப் பாராட்டுகிறார்.

உரையாசிரியரை ஐம்பத்திரண்டிடங்களில் சுட்டிச் செல்கிறார் சேனாவரையர். 'அவர்க்கு அது கருத்தன்று என்க' என்னும் வாய்பாட்டால் 27 இடங்களிலும், 'அவ்வுரை போலியுரை என்க' என்னும் வாய்பாட்டால் 18 இடங்களிலும், 'உரையாசிரியர் கருத்து இதுவேயாம்' என ஓரிடத்தும்,

'உரையாசிரியர் பிறர் மதம் உணர்த்திய கூறினார்' என மூன்றிடத்தும் 'மறுக்க' என ஓரிடத்தும், 'ஆண்டு அடங்காது' என ஓரிடத்தும் பாராட்டுதல் ஓரிடத்துமாக அவரைச் சுட்டுதல் 52 இடங்களாம்.

இனி உரையாசிரியர் பெயர் சுட்டாமல் 'ஒருரை' என்றும் (249, 428), என்பாரும் உளர் என்றும் (186, 285,316, 368, 450, 451), ஒரு சாரார் என்றும் (394, 441, 449, 452, 453, 457, 463), 'மற்றொரு சாரார்' என்றும் (412) உரைக்கின்றவற்றை நோக்கச் சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர் உரையை யன்றிச் சேனாவரையர் காலத்திற்கு முன்னரே மற்றோர் உரை இருந்த தென்றும், வாய் வழியாக உலவிய உரை மரபுகளும் விளங்கின என்றும் அறியலாம்.

*"அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து*
*சீர்நிலை திரியாது தடுமா றும்மே"*

என்னும் நூற்பா விளக்கத்தில் (407) 'நிரனிறை தானே' 'சுண்ணந் தானே', 'மொழிமாற் றியற்கை' என்பனபோல ஈண்டும் 'அடிமறிச் செய்தி' என்பதனைக் குறளடியாக்கி, 'அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது தடுமா றும்மே பொருள்தெரி மருங்கின்' என்று சூத்திரமாக அறுப்பாரும் உளர்" என்கிறார் சேனாவரையர். இவ்வாறு இளம்பூரணர் அறுத்தார் அல்லர். சேனாவரையர் கொண்ட பாடமே, அவர் பாடமுமாம். ஆதலால் சேனா வரையரால் சுட்டப்பட்டவர் வேறொருவர் என்பது தெளிவான செய்தி. இவர்க்குப் பின்னர் உரைகண்ட தெய்வச் சிலையார் பாடமும் இளம்பூரணர் கொண்ட பாடமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

உரையாசிரியர் பெயர் சுட்டிச் சேனாவரையர் மறுக்கும் இடங்கள் சிலவற்றில் அவ்வுரை, உரையாசிரியர் உரையில் காணப்படாமை கொண்டு உரையாசிரியர் இளம்பூரணரின் வேறொருவர் என்று கருதுவாரும் உளர். உரையைப் படியெடுத்தோர் 'விழ எழுதுதல்' உண்டு என்றும், சில இடங்களில் 'இடைச் செறிப்பு' உண்டு என்றும் பட்டாங்கு அறிவோர் ஐம்பத்திரண்டு இடங்களில் ஒரு நான்கு இடங்களில் மட்டும் உரையாசி ரியர் உரையின்மை கொண்டு வேறொருவராகக் கருதார். உரையாசிரியரும் இளம்பூரணரும் ஒருவரே என்பதைத் தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரண ஆராய்ச்சி முன்னுரைக்கண் பேரா. திரு. கு. சுந்தரமூர்த்தி தெளிவுறுத்துதல் கண்டு கொள்க. (சை.சி.க. பதிப்பு)

**உரைமரபு**

இலக்கண உரையாசிரியர்களின் உரைப் போக்கைப் பொதுவகை யில் நோக்கினால், அவர்கள் **பயிற்றாசிரியர்களாக** (போதக ஆசிரியர்க

ளாக) இருந்தவர்கள் என்பது விளங்கும். அவ்வகையில் சேனாவரையர் உரையில் 'வினவி' 'விடை' கூறும் பகுதிகள் மிகவுண்மை தெளிவிக்கும்.

'இச்சூத்திரம் என்ன நுதலிற்றோ?' எனின், 'இன்னது நுதலிற்று' என நூற்பாக்கள் தோறும் சொல்லிச் செல்லுதல் **இளம்பூரணர் உரை மரபு**. சேனாவரையர் இம்மரபைக் கொண்டாரல்லர். அது கூறாக்காலும் நூற்பாவுக்குப் பொருள் கொள்ளத் தடையொன்றின்மை கண்டு அவர் விலக்கியிருத்தல் கூடும். அவர்தம் உரைச் செறிவு அவ்வாறு எண்ணத் தோன்றுகின்றது.

ஓ ஓ என வழங்கும் ஒலிக் குறிப்பை அறிவோம். "ஓ ஓ, அப்படியா செய்தி", "ஓ ஓ என்று வாழ்கிறான்" (ஓகோ), "ஓ ஓ என்று கத்தியும் கேட்கவில்லை" இப்படியெல்லாம் இந்நாள் வழங்கும் வழக்கு சேனா வரையர் காலத்திலும் இருந்தமை அவருரையால் அறிய வருகின்றது. அது தொல்காப்பியர் காலத்தில் 'ஔ ஔ' என்று இருந்து மாறியதை அவர் சுட்டுகிறார். 'ஔகாரத்தைச் சுட்டும் அவர், "இதனை இக்காலத்து ஓகாரமாக வழங்குப" என்கிறார். (281).

'கண்டீரே கண்டீரே' என்பன போலவரும் அசை நிலையடுக்கும், 'நின்றை காத்தை' என்பன போலவரும் அசைநிலையும் இக்காலத்து அரிய என்றும், இக்காலத்துப் பயின்று வாரா என்றும் கூறுகிறார் (425, 426).

ஏ என்னும் உரிச்சொல் 'பெற்று' என்னும் பொருளது என்கிறார் தொல்காப்பியர் (304). அதனை விளக்கும் சேனாவரையர் "பெற்று - பெருக்கம். ஈது அக்காலத்துப் பயின்றது போலும்" என்கிறார். இத்தகைய குறிப்புகள் மொழி வரலாற்றுக்கு வாய்க்கும் அரிய கருவிகளாம்.

சில சிறப்புப் பெயர்கள், சிறப்புக் குறிப்புகள் ஆகியவற்றைச் சுட்டுவதால் பல்வேறு வரலாற்றுத் துணைகளை வழங்குதல் உரைவல்லார் மரபு. அம்மரபில் தக்க பங்கு பற்றிக் கொள்கிறார் சேனாவரையர்.

அகத்தியனாரால் தமிழுரைக்கப்பட்டது (73)

உறையூர்க்கண் நின்ற சிராப்பள்ளிக்குன்று (82)

சீத்தலைச் சாத்தன் (174)

தெய்வப் புலவன் திருவள்ளுவன் (41)

பட்டிபுத்திரர் கங்கை மாத்திரர் (165)

பரணரது பாட்டியல் (80)

பெருந்தலைச் சாத்தனார் (26)

பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (26)

முடத்தாமக் கண்ணியார் (270)

இன்னவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.

'பெண்' என்னும் சொல் 'பெண்டு' என்றும் வழங்கும். 'பெண்டாட்டி' என்றும் வழங்கும். இவ்வழக்கு சேனாவரையரால் பெரிதும் ஆளப்படு கின்றது (24, 25, 161, 163).

பொத்தகம் என்பது பழவடிவம். அதனைப் 'புத்தகம்' என்பது பின்வழக்கு. சாத்தன் புத்தகம், சாத்தனது புத்தகம் என வழங்குகிறார் சேனாவரையர் (413).

நாடகம் அல்லது கலை நிகழ்ச்சி நடத்தும் அரங்கு '**ஆடரங்கு**' என வழங்குதலும், செயற்கை மலை உருவாக்கி வைத்தலும் (செய்குன்று) சுட்டுகிறார் (415).

நிலத்தை ஒற்றி வைக்கும் உறுதியோலை '**ஒற்றிக்கலம்**' எனவும், விலைக்கு விற்று எழுதிய எழுத்தை '**விலைத்தீட்டு**' எனவும் வழங்கும் வழக்கைக் குறிக்கிறார் (80). இவை அறிய கலைச் சொற்களாவன.

நூலின் இடையும் கடையும் தலையும் மங்கலம் அமைய நூலியற்றும் வழக்கைக் குறிப்பிடுகிறார் (82).

கெட்டது என்பது காணாமற்போனது என்னும் பொருள் தருதலை "நம் மெருது ஐந்தனுள் கெட்ட எருது யாது?" என்பதால் அறிய வைக்கிறார் (32).

"**வினை** என்பது அறத்தெய்வம். **சொல்** என்பது நாமகளாகிய தெய்வம்" என்று இவர் கூறுவது ஆழ்ந்த கருத்தினது (57).

"உருபின் பொருளவாகிய வடிவு, பிழம்பு, பிண்டம் என்னும் தொடக் கத்தன" என்பதால் ஒரு பொருட் பன்மொழிகளை அமைக்கிறார் (24).

இனியது என்பதைத் '**தீவிது**' என்பது நயமாக உள்ளது (78).

தொண்டு தொண்டன் என்பவை மதிப்புப் பொருளாக வழங்காமை அவர் காலத்திருந்தது என்பதை, "தாம் வந்தார் தொண்டனார் எனப் பன்மைக் கிளவி இழித்தற் கண்ணும் வந்ததால் எனின், ஆண்டு உயர் சொல்தானே குறிப்பு நிலையாய் இழிபு விளக்கிற்றென்பது" என்பதால் அறியச் செய்கிறார் (27).

"**முன்தேற்று** - புறத்தின்றித் தெய்வ முதலாயினவற்றின் முன்னின்று தெளித்தல்" (383).

"எவ்வகையானும் அறியாப் பொருள் வினாவப் படாமையின் ஈண்டு அறியாப் பொருள் என்றது பொது வகையான் அறியப்பட்டுச் சிறப்பு வகையான் அறியப்படாத பொருளையாம்" (31).

- இன்னவை தெளிவுறுத்த வல்ல தேர்ச்சிச் சான்றுகள்.

"உலக வழக்கு நடை இத்தகைத்து என்பதை அருமையாகக் குறிக்கிறார் சேனாவரையர் (416).

"உலக வழக்காவது சூத்திர யாப்புப்போல மிகைச்சொற்படாமைச் சொல்லப்படுவதொன்றன்றி, மேற்றொட்டுங் கேட்டார்க்குப் பொருள் இனிது விளங்க வழங்கப்பட்டு வருவது"

உலக வழக்கை விளக்கும்போதே, சூத்திர யாப்பு இத்தகைத் தெனவும் சொல்லி இரு வழக்கையும் விளக்கும் அருமையது இது.

இரண்டன் வேறுபாடுகளை விளக்கிக் காட்டலிலும் விழிப்போடு இருக்கிறார் சேனாவரையர்.

"இனத்தொடு சார்பிடை வேற்றுமை என்னை எனின், ஒரு சாதிக்கண் அணைந்த சாதி இனமெனப்படும். அணைந்த சாதியன்றி ஒருவாற்றான் இயைபுடையது சார்பெனப்படும் என்பது." (53)

"குறிப்பு - மனத்தாற் குறித்துணரப்படுவது;

பண்பு - பொறியான் உணரப்படும் குணம்" (297) - இத்தகையவை அவை.

"ஈண்டு இரட்டைக் கிளவி என்றது மக்களிரட்டை விலங்கிரட்டை போல வேற்றுமையுடையவற்றையன்றி இலையிரட்டையும் பூவிரட்டை யும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றை", என்பது போன்ற இடங்களில் இலக்கணத்தை இலக்கியச் சுவைபடச் செய்யும் நேர்த்தியராகச் சேனாவரையர் விளங்குகின்றார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் சேனாவரையரை மிக மிகப் போற்றியவர் சிவஞானமுனிவரர். "வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையர்" எனப்பாராட்டும் முனிவரர், "எழுத்ததிகாரத்திற்கு உரை செய்தார் ஆயின் இன்னோரன்ன பொருளனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர்" என்றும் தொடர்ந்து எழுதுகின்றார் (தொல்காப்பிய சூத்திர விருத்தி).

மொழி என்பதாம் 'பாஷை' யைப் பாடையென வழங்குகிறார் சேனாவரையர் (397); வடபாடை என்றும் சொல்கிறார் (401).

தமிழ்ச் சொல் வடபாடைக்கட் செல்லாது என்னும் கொள்கை யுடைய இவர் (401), 'குமரி வடமொழிச் சிதைவு என்றும் (196) நீர் ஆரியச் சிதைவு என்றும் (398) கூறுவது வியப்பாகாது.

செய்யுட்குரிய இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்னும் நால்வகைச் சொற்களுள், "திசைச் சொல்லுள் ஏனைச் சொல்லும் உளவேனும் செய்யுட்குரித்தாய் வருவது பெயர்ச்சொல்லேயாம். **வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட் குரியவாகா.** இவ்வாறாதல்

சான்றோர் செய்யுள் நோக்கிக் கண்டு கொள்க" என்னும் செய்தி சங்க நூற் பரப்பை முழுதுறக்கண்டு கூறிய முடிவுடையதாம்.

ஞாபகம், அநுவாதம், யோகவிபாகம், நேயம், காரகம், தாது இன்னவற்றை ஆங்காங்குரைத்து விளக்குகிறார். பதினைந்து இடங்களுக்கு மேல் சேனாவரையரின் வடமொழிப் புலமை அறியும் வண்ணம் உரை விளக்கம் அமைந்துள்ளது.

தொல்காப்பியர் வடநூலொடு மாறு கொள்ளாமல் நூலியற்றியவர் என்பதை முடிந்த முடிவாகக் கொண்டு உரை வரைந்தவர் சேனாவரையர் என்பது, "வடநூலுள் பொருள் வேற்றுமையான் அல்லது உருபு வேற்றுமையான் ஒரு வேற்றுமையும் ஓதப்படாமையானும் ஈண்டும் எல்லா ஆசிரியரும் ஒரு வேற்றுமையாகவே ஓதினார் என்க. வடநூலொடு மாறு கொள்ளாமைக் கூறல் ஆசிரியர்க்கு மேற்கோளாயின் விளி வேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கற் பாலராவர். அவ்வாறடக்கலிலார் எனின், அற்றன்று; விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கல் ஆண்டு எல்லார்க்கும் ஒப்பமுடிந்த தன்று" என்பதால் (74) புலப்படும்.

சேனாவரையரின் கல்வி யாழத்தையும் உரைச்செறிவையும் நூன்முழுவதும் கண்டு மகிழ்வார், அவர்தம் பண்புச் செறிவையும் ஓரிடத்தில் அறிய வாய்க்கின்றது. அது,

"வினைச் சொற் காலமுணர்த்துங்காற் சில நெறிப்பாடுடைய வென்பது விளக்கிய, 'நெறிப்படத்தோன்றி' என்றார். நெறிப்பாடாவது அவ்வீற்று மிசைநிற்கும் எழுத்து வேறுபாடு. அவை முற்ற உணர்த்த லாகாவாயினும், அவ்வீறுணர்த்தும் வழிச் **சிறிய சொல்லுதும்**" என்பதாம் (201).

'உரையாசிரியர்க்கு அது கருத்தன்று' என்று கூறும் அளவில் நாம் அமைகின்ற நிலையும், 'போலியுரை' என்று கூறும் இடங்களிலெல்லாம் நாம் அடைகின்ற புண்பாடும், 'முற்ற உணர்த்தலாகாவாயினும், சிறிது சொல்லுதும்' என்பதைக் காணும்போது மாறி ஒரு மயக்க நிலைக்கு ஆட்படுகின்றோம். தாம் காணும் உண்மைப் பொருள் காட்டலில் சேனாவரையர்க்குள்ள தணியா வேட்கையே 'போலிக் காய்வை' உண்டாக் கிற்றுப் போலும்.

'பெயர் நிலைக் கிளவியும்' என்னும் எச்சவியல் நூற்பாவில் வரும் **'தொன்னெறி மொழிவயின் ஆஅகுநவும்'** என்பதற்கு, "முது சொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும் என்று உரை கூறி, "யாற்றுட் செத்த எருமை ஈர்த்தல் ஊர்க்குயவர்க்குக் கடன் என்பதுமுதலாயின" என்கிறார் சேனாவரைவர்.

**ஆற்றிற் செத்த எருமைக்கும் ஊர்க்குயவர்க்கும் என்ன தொடர்பு?** அதுதான், **‘இயைபு இல்லாததை இயையக் காட்டுவது’;** அது வருமாறு:

மாட்டு வணிகன் ஒருவன், எருதுகள் (மாடுகள்) சில பிடித்தான். அவற்றைத் தன் ஊர்க்கு ஓட்டிக் கொண்டு வந்தான். வரும் வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. தன் எருதுகளை நீர் குடிக்கவிட்டுக் காலாறச் சிறிது பொழுது தங்கிப் புறப்பட்டான். அப்போது எதிர்பாராமல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வந்தது. அவ்வெள்ளத்தால் சில எருதுகள் அடித்துச் செல்ல அவை இறந்துபட்டன. ஆற்றில் இறந்து கிடந்த எருதுகள் நாறலாயின. அடுத்திருந்த ஊரவர்க்கு நாற்றம் தாங்கமுடிய வில்லை. இறந்த எருதுகளை எடுக்கவும் ஊரவர் எவரும் முன்வரவில்லை.

இந்நிலையில் ஊரவர் இவ்வெருதுகளை அகற்றுதல் எவர் பொறுப்பு என ஊர்க் கணக்கனை வினவ, அவன் **தனக்கு வழக்கப்படி தரவேண்டிய தொகையைத் தராத குயவனைப் பழிவாங்க நினைத்துப்** பழைய ஏடு ஒன்றை எடுத்து ஒரு பாடலை எழுதி ‘ஊரடங்கல்’ ஏட்டுள் ஊடுவைத்து ஊரவர் முன் படித்துக் காட்டினான். அப்பாட்டு இது:

“காட்டெரு முட்டை பொறுக்கி
மட்கலம் சுட்ட புகையான்
மேற்கே மேகம் தோன்றி
மின்னி இடித்து மழைபொழிந்து
யாற்றில் நீத்தம் பெருகி
அடித்துக் கொல்லும் எருமைகளை
ஈர்த்துக் கொணர்ந்து கரையேற்றல்
இவ்வூர்க் குயவர்க்கு என்றும் கடனே”

மட்கலங்கள் எருவால் சுடப்படுதலால் எழுந்த புகையே, வான் முகிலாகி மழைபெய்ய அந்நீர்ப் பெருக்கால், எருது இறந்ததால், அதனைக் கரையேற்றல் குயவர் கடன் என்று தீர்மானித்தது, பொருந்தாததைப் பொருத்திக் காட்டிய புனைவு தானே.

அதிகாரம் என ஒன்று வாய்க்கப் பெற்றால் தன்னலத்தார் எப்படி நடந்து கொள்வர் என்பதும், எப்படியெல்லாம் பொய்ப்புனைவு செய்து அறத்தின் கழுத்தை அறுத்து விடுவர் என்பதும், ஏமாந்தவர்களுக்கு எப்படியெல்லாம் தண்டனை கிட்டும் என்பதும் இந்நாள் வரை காட்சிச் செயலாகத் தானே உள்ளது! சேனாவரையர் காலத்தில் அவர் கேட்ட செய்தி, காலமெல்லாமா தொடர வேண்டும்? இதனால், ஏட்டறிவோடு நாட்டறிவும் அருமையாகப் பெற்றுப்பதிவு செய்தவராகிறார் சேனா வரையர் என்பது விளக்கமாம்.

# கல்லாடர்

தொல்காப்பியத்திற்கு உரைகண்டாருள் ஒருவர் கல்லாடனார். இவர் சொல்லதிகாரத்திற்கு உரை கண்டுள்ளார். அவ்வுரையும் இடையியல் பத்தாம் நூற்பா உரை தொட்ட அளவிலேயே கிட்டியுள்ளது. எஞ்சியவை கிட்டிற்றில்லை. இவர் "ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்திற்கு உரை யிடையிட்ட விரகர் கல்லாடர்" என்று பாராட்டப்படுகிறார். கல்லாடம் என்பது பாண்டி நாட்டகத்ததோர் ஊர் என்பது மணிவாசகர் வாக்கால் அறிய வாய்க்கின்றது. "கல்லாடத்தினில் கலந்தினிதருளி" என்கிறது அது. அக் கல்லாடத்துப் பிறந்ததனாலோ, முந்தையோர் பெயர்வழி வந்தமை யாலோ கல்லாடர் என்னும் பெயர் பெற்றார் எனலாம்.

### பெயர்

கல்லாடர் என்னும் பெயரால் அறியப் பெறுவார் நால்வருளர். அவருள், சங்க நூல்களால் அறியப்பெறும் கல்லாடர் ஒருவர். அவரே, யாப்பருங்கலவிருத்தியுடையாரால் கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர் என எண்ணப்படும் வரிசையுடையவர். மற்றொருவர், கல்லாடம் எனப்படும் அகப்பொருள் நூல் அருளியவர். இவ்விருவரினும் வேறொருவரே, தொல்காப்பிய உரையாளர் கல்லாடர். இனித் திருவள்ளுவமாலைக் கல்லாடரோ எனின், பெயர் சூட்டும் அளவில் ஒருவர் இட்டமைத்ததே அப்பெயர் என்க.

### காலம்

இக் கல்லாடர் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் தெய்வச் சிலையார்க்கும் பழைய உரையாசிரியர்க்கும் முற்படவும், மற்றையோர்க் கெல்லாம் பிற்படவும் இருந்தவர் என்பது விளங்குகின்றது. "பெண்மை அடுத்த மகனென் கிளவி" என்பதற்குச் சேனாவரையரைத் தழுவி உரைவரையும் இவர், "நாணுவரை இறந்தாள் தன்மையளாகிப் புறத்துப் போய் விளையாடும் பெண்மகளைப் பெண்மகன் என்பது முற்காலத்து வழக்கம். அதனை இப்பொழுது மாறோக்கத்தார் வழங்குவர். மாறோக்கம் என்பது கொற்கை சூழ்ந்த நாடு" என்கிறார் (167).

*ஆனால், தெய்வச்சிலையாரோ "விளையாடும் பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்பது பண்டையோர் வழக்கு" என்கிறார். இதனால் தெய்வச்சிலையார் கல்லாடர்க்குப் பிற்பட்டவராக இருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாம்.*

*பிரயோக விவேக நூலார் "மக்கட் சுட்டு என்பதனைக் கல்லாட னாரும் பின்மொழியாகு பெயராய் நின்ற இரு பெயரொட்டுப் பண்புத் தொகை என்பர்" என்று கல்லாடர் பெயரைச் சுட்டிக் கூறுகிறார் (பிரயோக. 22 உரை). ஆதலால் அவர்க்கு முன்னரும் நச்சினார்க்கினியர்க்குப் பின்னருமாம் காலத்தில் அதாவது 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர் எனக் கொள்ளலாம்.*

**நாடு**

*முன்னவர்கள் உரையையே வாங்கிக்கொண்டு எழுதும் இவர் நும்நாடு யாது என்னும் வினாவுக்குப் பாண்டிநாடு என்று விடை கூறுவது கொண்டு பாண்டிநாட்டவர் என உறுதி செய்ய முடியாது எனினும் கல்லாடம் பாண்டி நாட்டகத்ததோர் ஊர் என அறியப்படுதலாலும், மாறோகம் கொற்கைப்பகுதி ஆதலாலும், அதனைச்சுட்டி 'இப்பொழுது மாறோக்கத்தார் வழங்குவர்' என்று பாண்டிநாட்டு ஆற்றூர்ச் சேனா வரையர் வழங்குமாறே வழங்குதலாலும் இவர் பாண்டி நாட்டவர் ஆகலாம்.*

**சமயம்**

*ஆறாம் வேற்றுமை பற்றிய நூற்பாவில் வரும் (சொல். 81) நிலை என்பதற்குப் பிறரெல்லாம் சாத்தனது நிலை என்றும் அவரவரது நிலைமை என்றும் கூறினாராகவும், பெரிதும் முன்னையோர் உரையைத் தழுவியே உரை வரையும் இவர் இவ்விடத்தில், "நிலை - பெண்ணாகத்துப் பெருஞ் சங்கரனாரது நிலை. இஃது ஒன்றிய தற்கிழமை" என்று கூறுவது சிவநெறிச் சார்பினர் என்று கொள்ளக்கிடக்கிறது.*

**சால்பு**

*இவர் 'இரண்டு வகையாக இலக்கணம் கூறி, "இரண்டனுள் நல்லது தெரிந்துரைக்க" என்பதும் (210), ஒரு காரணத்தைக் கூறி, "பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம்" என்பதும் (222) ஐயமுற்ற இடங்களில் 'வாராது போலும்' எனப் போலும் வாய்பாட்டால் கூறுவதும் இவர்தம் சால்பினைச் சாற்றுவன.*

**விருத்தியுரை**

*எடுத்த பொருளை நன்கு விளக்கிக் கூறுதலில் இவர் பெரிதும் கருத்துச் செலுத்துகிறார். அதனால் இவ்வுரையை விருத்தியுரை எனக் கொண்டமை வெளிப்படுகின்றது.*

"ஓசை எனினும், அரவம் எனினும், இசை எனினும், ஒலி எனினும் எழுத்தானாம் ஓசைக்கும் எழுத்தல் ஓசைக்கும் பொது கிளவி எனினும் மாற்றம் எனினும் மொழி எனினும் இவையெல்லாம் எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசைமேல் நிற்கும்" என்றும் (1),

"சேரி என்பது பலகுடியும் சேர்ந்திருப்பது. தோட்டம் என்பது பலபொருளும் தொக்கு நின்ற இடம்" என்றும் (49) கூறுகிறார். முன்னதில் ஒருபொருட் பன்மொழிகளைத் தொகுத்துரைப்பதும், பின்னதில் தோடு (தொகுதி) என்னும் வேர்ப்பொருள் உணர்ந்து கூறுவதும் அவர்தம் பொருள் விளக்கச் சிறப்பைப் புலப்படுத்தும். "**எல்லாச் சொல்லும்**" என்பதற்குத் தமிழ் இலக்கணம் கூறும் நூலாகலின் தமிழ்ச் சொல்லே சுட்டப்படுவது எனத் தெரியப் பெறுமாயினும் நன்கு விளங்குமாறு '**தமிழ்ச்சொல் எல்லாம்**' என்று இவர் உரைப்பது (158) குறிப்பிடத்தக்கது.

**உரைநயம்**

முயற்கோடு, ஆமை மயிர்க் கம்பலம் என்பவை இன்மைப் பொருள். இவற்றுடன் "அம்மிப்பித்தும் துன்னூசிக்குடரும்" என இவர் இயைத்துக் கொள்வது (34) சுவை மிக்கது. 'ஏமாளி கோமாளி' என்பவை இன்றும் வழக்கில் உள்ளவை. இவர் 'ஏமாள் கோமாள்' என்கிறார் (148). கன்று என்பது 'பூங்கன்று' என வருதலைச் சுட்டுகிறார் (55).

"கலம் - சாத்தனது கலம்; கலம் என்பதனை ஒற்றிக் கலத்தின் மேற் கொள்க. பிற கலத்தின்மேற் கொள்ளாமைக் காரணம் என்னை எனின் இஃதொரு பொருள் இருவர்க்குடைமையாக நிற்கும் வேறுபட்டதாகலின் என்க. இஃது உரையிற் கோடல்" என்று இவர் தரும் விளக்கம் புதுவது.

"காடன், நாடன்" என்பவற்றுக்குக் "காடி, நாடி" எனப் பெண்பால் கூறுவதும் (177), "உழுது கிழுது" (235) என்பதும் புதுமைய. நன்னூலார் 'இடைப்பிறவரல்' என்பதை இவர் 'இடைக் கிடப்பு' என்பதும் அது.

வினையெச்ச வாய்பாடுகளின் வைப்பு முறையைக் கூறும் இவர் "செய்து என்பது முதலாகச் செய்தென என்பது ஈறாக அந்நான்கும் இறந்தகாலத்தவாகலான் முன்னே உடன் வைக்கப்பட்டன. அவற்றுள், செய்து என்பது பெருவழக்கிற்று ஆகலின் அவற்றுள்ளும் முன் வைக்கப்பட்டது (230) என்பது முதலாகக் கூறுவதும், பிறிது பிறிது இடங்களில் இவ்வாறே விரித்துரைப்பதும் ஆசிரியர் வைப்புமுறைச் சிறப்பை வெளிப்படுத்துவனவாம்.

ஒரு சூத்திரப் பொருளை வேறொரு சூத்திரத்தால் பெற வாய்ப் பிருந்தும் ஆசிரியர் மீண்டும் கூறுதலைக் கூறியது கூறலாகக் குறை காணாமல், "மாணாக்கனை நன்கு தெளிவித்தற் பொருட்டுக் கூறினார்" என நிறையாக்குகின்றார் (117).

சில இடங்களில் இவர் உரைக்கும் வேறுபாடுகள் சுவையானவை. ‘பொற்றொடி’ என்பதை இரு பெயரொட்டுக்கு எடுத்துக்காட்டும் இவர் “இஃது அன்மொழித் தொகையன்றோ எனின், **படுத்தலோசை பட்டவழி அன்மொழித் தொகையாம்; எடுத்தலோசை பட்டவழி ஆகுபெய ராகும்**” என்கிறார்.

காலங்குறித்த பல்லோர் மதங்களைத் திரட்டிக்கூறும் இவர், “காலம் தன்னை மூன்று என்பாரும் தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சி யாகலின் அஃது ஒரு கணம் நிற்பதல்லது இரண்டு கணம் நில்லாமையின் நிகழ்ச்சி என்பதொன்று இல்லை; ஆதலின், இறப்பும் எதிர்வும் எனக்காலம் இரண்டே என்பாரும், நிகழ்காலம் என்ற ஒன்றுமே உண்டு என்பாரும் எனப்பல மதம் உண்டு என்பது அறிவிக்கப்பட்டது” என்பது தம் உரையைக் கற்பார் பல்லோர் உரைகற்ற பயனை அடைய வேண்டும் என்னும் எண்ணத்துடன் எழுதினார் என்பது புலப்படுகின்றது.

# தெய்வச்சிலையார்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை கண்டாருள் ஒருவர் தெய்வச்சிலையார். அவருரை சொல்லதிகாரம் முழுமைக்கும் கிடைத்துள்ளது.

### பெயர்

'தெய்வச்சிலையான்', 'தெய்வச்சிலைப் பெருமான்' என்பன கல்வெட்டுகளில் வரும் பெயர்கள். "அரையன் தெய்வச்சிலையான் எடுத்தகையழகியான்", "இளையாழ்வார் தெய்வச்சிலைப் பெருமாள் ஆன விக்கிரம பாண்டிய காலிங்கராயர்" என்பன அவை. அவற்றால் 'தெய்வச் சிலையார்' எனப்படும் பெயருடையார் பிறரும் இருந்தமை புலப்படும். கல்வெட்டு கூறும் தெய்வச்சிலையார் என்னும் பெயருடையாருள் முன்னவர், பாண்டி மண்டலத்துக் காகூர்க் கூற்றத்து வளமர் ஆன வேம்ப நல்லூரினர். பின்னைக் கல்வெட்டு நெல்லை மாவட்டத்து மன்னார் கோயிலில் உள்ளது . ஆதலால் இப்பெயருடைய இவ்வுரையாசிரியரும் பாண்டி நாட்டைச் சேர்ந்தவர் எனக் கொள்ள இடமுள்ளது.

### காலம்

இவர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், ஆகியோரைப் பெயர் சுட்டாமல் மறுத்தெழுதிச் செல்கிறார். நச்சினார்க் கினியர் சேனாவரையர் ஆகியோர்க்கு இவர் முற்பட்டவர் எனின் இவர் பெயரை அவர்கள் சுட்டியிருப்பர். அதனால், அவர்களுக்கு இவர் பிற்பட்டவர் என்பது தெளிவாகின்றது. மேலும் "பெண்மையடுத்த மகனென் கிளவி" (சொல்.160) என்பதற்குப் பெண்மகன் என்று மாறோகத் தார் இக்காலத்தும் கூறுப என்று நிகழ்காலத்தால் சேனாவரையரும் கல்லாடனாரும் கூறினர். ஆனால் இவரோ "விளையாடும் பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்றல் பண்டையோர் வழக்கு" என இறந்த காலத்து நிகழ்வாகக் கூறினார். அதனாலும் சேனாவரையர்க்கும் கல்லாட னார்க்கும் பின்னவர் என்பது விளங்கும். இவற்றாலும் முற்காட்டப்பட்ட கல்வெட்டுகள் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியும் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகிய காலத்தன எனப்படுதலாலும்

கல்லாடனார் காலம் நச்சினார்க்கினியர்க்கும் பிற்பட்டது ஆகலானும் இவர் 16 ஆம் நூற்றாண்டினர் ஆகலாம்.

**சமயம்**

"மன்னாப் பொருளும் அன்ன இயற்றே" என்னும் நூற்பா விளக்கத்தில் (32) "வேதாகமத் துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து, உலகும் உயிரும் பரமும் அனாதி; பதியும் பாசமும் அனாதி எனவரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும் பாசமும் பதியும் இவற்றோடு பொருந்தாத பொருள் ஆனவாறும் காண்க" என்பதும், "மந்திரப் பொருள் வயின் ஆஅகுநவும்" என்பதற்கு (439),

"மண்ணைச் சுமந்தவன் தானும் வரதராசன் மகன்றானும்
எண்ணிய வரகாலி மூன்றும் இரண்டு மரமும் ஓர்யாறும்
திண்ணமறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே"

என்பதை எடுத்துக்காட்டி "இதனுள் மண்ணைச் சுமந்தவன் - ந, வரதராசன் மகன் - ம, வரகாலி மூன்று - சி, இரண்டு மரம் - வா, ஓர்யாறு - ய, எனக்கூற 'நமச்சிவாய' எனப் பொருளாயிற்று என்று குறிப்பதும் கொண்டு இவர் வைதிகம் சார்ந்த சைவ சமயத்தர் எனக் கருதலாம்.

**உரைநிலை**

இவர், 'கடாவிடை யுள்ளுறுத்து' முதல் நூற்பாவுக்கு உரை விரிக்கிறார். அதன் நிறைவில் "இனி இச்சூத்திரத்திற்குப் பிறவாற்றானும் கடாவிடையுள்ளுறுத்து உரைப்பிற் பெருகும்" என அமைகிறார். எனினும் இவருரை காண்டிகை யுரையினும் விரிவுரையாகவே செல்கின்றது.

தமிழ் வழக்காற்றை இவர் 'தமிழ்நடை' என்கிறார் (2, 243); காலம் உலகம் எனவரும் நூற்பாவில் வரும் (56) "சொல்" என்பதற்கு வேதம் எனப் பொருள் செய்கிறார். "சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்வது. அச்சொல்லினான் இயன்ற மந்திரம், விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று. இந்நூல் செய்தான் வைதிக முனிவர் ஆதலின் சொல்லென்பது 'வேதம்' என்று கொள்ளப்படும்" என்கிறார். இவர் தொல் காப்பியரை வைதிக முனிவர் என்று கொண்டதால் அக்கொள்கைக்கு ஏற்ப உரை செய்யத் துணிகிறார்.

**வடசொல்**

"எல்லா நாட்டிற்கும் பொதுவாயினும் வடநாட்டிற் பயில வழங்குதலின் வடசொல் ஆயிற்று. வடசொல் என்றதனால் தேயவழக்காகிய பாகதச் சொல்லாகி வந்தனவும் கொள்க.

வடமொழியாவன: வாரி, மணி, குங்குமம் என்னும் தொடக்கத்தன. வட்டம் நட்டம் பட்டினம் என்பன பாகதம்" என்கிறார் (397).

*ஒருவினை ஒடுச்சொல் என்னும் நூற்பா உரையில் (88), பிற உரையாசிரியர்களின் கருத்துக்கு மாறுபடும் இவர் "இப்பொருள் பாணினி யார்க்கும் ஒக்கும்" எனத் தமக்குச் சார்பு காட்டுகிறார். ஒரு சார் ஆசிரியர் வேற்றுமை ஏழெனக் கொண்டதையும் குறிக்கிறார் (150).*

### ஆசிரியர் சிறப்பு

*" 'ஆஅய்' என யகர ஈறு விளி ஏற்றதால் எனின் அவ்வாறு வருவன வழக்குப் பயிற்சியின்மையின் எடுத்தோதிற்றிலர்" என்று அமைதி காட்டும் இவர் அதிகாரப் புறநடையால் கொள்ள ஏவுகிறார் (150).*

*இடைச்சொல் உரிச்சொல் ஆகியவை பொருண்மை நிலையில் வரும் வகையை ஆசிரியர் விரித்துரையாமையை எண்ணும் இவர், "பொருண்மை நிலை வழக்கினும் சான்றோர் செய்யுளகத்தும் பயின்று வருதலானும் இவ்வழக்குத் தமிழ்நாட்டுப் பிறந்து தமிழறிவாரை நோக்குதலினாலும் இலக்கணம் இன்றியும் பாகம் உணர்வார் ஆகலானும் எடுத்து ஓதாராயினர். அஃது அற்றாதல், 'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொன் மேன' என ஓதிய அதனானும் கொள்க. சொன்மை நிலை இலக்கணம் இல்வழி உணர்வரிது ஆதலான் எடுத்து ஓதப்பட்டது" (155) என்கிறார். இத்தகையவை ஆசிரியர் சிறப்பியல் காட்டுவனவாம்.*

### உவமை

*"வலனாக என்னும் எச்சத்துக்கண் ஆக என்பது செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. தொக்கு நின்ற காலத்தும் அதற்கு இயல்பு முற்பட்ட நிலைமை என்று கொள்க. என்போலவோ எனின், வாலும் செவியும் இழந்த ஞமலியைப் பின்னும் ஞமலி என்றே வழங்கினாற் போல" எனச் சுவைமிக்க வகையில் உவமைப் படுத்துகின்றார் (408). பூத்தொடை யொடு சொற்றொடையையும் விரிய விளக்குகின்றார் (408).*

*"எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே" என்பதன் உரையில் 'இத்தமிழகத்தில் இல்லை" என்கிறார் (391).*

### தமிழ்நாடு

*செந்தமிழ் நாட்டு எல்லை குறித்து இவர் கூறும் கருத்து பிறரினும் தெளிவும் திருத்தமும் உடையதாம். பிறருரைகள் சோழ நாடே செந்தமிழ் நாடு என்பது சொல்ல இவர், "செந்தமிழ் நாடாவது வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் என்ப. இவ்வாறு உரைத்தற்கு ஓர் இலக்கணம் காணாமையானும் வையை யாற்றின் தெற்காகிய கொற்கையும் கருவூரின் மேற்காகிய கொடுங் கோளூரும் மருதயாற்றின் வடக்காகிய காஞ்சியும் தமிழ் திரி நிலமாதல்*

வேண்டுமாதலானும் அஃது உரையன்று என்பார் உரைக்குமாறு என்று வரைந்து வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறு நல்லுலகமே செந்தமிழ் நிலம்" என்கிறார் (394).

**பழங்கொல்லம்** கடல் கொள்ளப் பட்டபின், இப்பொழுதுள்ள கொல்லத்தை "அப்பெயரானே கொல்லமெனக் குடியேறினார் போலும்" என்கிறார் (396).

**உரைநலம்**

சில இடங்களில் இவர் தரும் விளக்கமும் எடுத்துக் காட்டும் நினைதோறும் இன்பம் பயப்பனவாம். முன்னவர் உரைகளைத் தழுவியும் சார்ந்தும் பின்னவர் உரைகாண்பதும் காட்டுவதும் வழக்கெனினும், அப்பின்னவர் உரைகளால் முன்னவர் விளக்காத பகுதிகள் விளக்கம் பெறுவதும், சிக்கல்கள் அவிழ்க்கப்படுவதும் பட்டறிவால் ஏற்படுவன. அவ்வகையில் தெய்வச்சிலையார் தனிச்சிறப்புக்குரியவராகச் சொல்லத் தக்கவர்.

'உண்டு' என்பதைப் பொதுவினை என்றும், சிறப்பு வினை என்றும் இருவேறு வகையாகக் கொள்வர் உரையாசிரியர்கள். இவர் தக்க எடுத்துக் காட்டுகளின் வழியே பொதுவினை என்பதை நிலைப்படுத்துகிறார். அது முன்னை உரையாசிரியர்களின் தோள்மேல் அமர்ந்து பார்க்கும் பார்வை யின் விளைவாம்.

"ஊன் துவை, கறிசோ றுண்டு வருந்து தொழில் அல்லது, பிறிது தொழில் அறியா வாகலின் (புறநா.14) என்ற வழி உண்டு என ஒரு வினை யான் வந்ததால் எனின், அது பொதுவினை என்று கொள்க. என்னை? 'உண்ணு நீர் வேட்டேன் என வந்தாற்கு' (கலி. குறி.15) எனவும், 'பாலும் உண்ணாள் பழங்கண்கொண்டு' (அகம்.48) எனவும், 'கலைப்புற வல்குல் கழுகு குடைந்துண்டு' (மணிமே.6:112) எனவும், 'கள்ளுண்ணாப் போழ்து' (திருக்.930) எனவும், 'உண்ணாமை வேண்டும் புலாஅல்' (திருக்.257) எனவும் வருதலின்" என்று எடுத்துக்காட்டி **'உண்டு' என்பது உண்ணல், கறித்தல், குடித்தல், சுவைத்தல் முதலிய பலவற்றுக்கும் வரும் பொது வினையாதலை விளக்குகின்றார்** (45).

'குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி' என்பதற்குச் 'சேவலை' எடுத்துக்காட்டுகிறார் (54). அதில், "நிவந்தோங் குயர்கொடிச் சேவலோய்' (பரிபா. 3:18) என்ற வழிச் சொல்லுவான் குறிப்பு மாயவனை நோக்கலிற் கருடனாயிற்று. 'சேவலங் கொடியோன் காப்ப' (குறுந். 1) என்ற வழிச் சொல்லுவான் குறிப்பு முருகவேளை நோக்குதலிற் கோழியாயிற்று" என்கிறார். இத்தகும் இணைப்புச் சான்றுகள் தெய்வச்சிலையார் கொண்டிருந்த இலக்கியப் பயிற்சியின் பரப்பை வெளிப்படக் காட்டுவன.

வேற்றுமைகள் அனைத்தும் முறையே வருமாறு இவர் காட்டும்,

"காதலி**யைக்** கொண்டு கவுந்தி**யொடு** கூடி
மாதரிக்**குக்** காட்டி மனை**யின்** அகன்றுபோய்க்
கோதில் இறைவ**னது** கூடற்**கண் கோவலன்**சென்
றேத முறுதல் வினை"

என்னும் இன்னிசை வெண்பா எடுத்த இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாவதுடன் சிலப்பதிகாரச் செய்திச் சுருக்கமாகவும் அமைந்து சுவை பயக்கின்றது.

**பாடம்**

"விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும்"

என இளம்பூரணரும்,

"விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்"

எனச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் பாடம் கொண்டனர். அதனை இவர்,

"விழுமம்,
சீர்மையும் சிறப்பும் இடும்பையும் சிறப்பும்"

எனப் பாடங்கொள்கிறார். இப்பாடம், இரு சார் கருத்தையும் ஏற்றுக் கொண்டு இவரே அமைத்துக் கொண்டதாகலாம் (349). அத்தகு கருத்துடையர் இவர் என்பது வினைமுற்றைப் பற்றி இவர் கொண்ட கருத்தினால் வலியுறும்.

"வினைச்சொற்கள் முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் என மூவகைப்படும். அவற்றுட் பெயரெச்சம் வினையெச்சம் என்பன இத் தன்மையன என்று எடுத்தோதி முற்றுச் சொல்லாவது இத்தன்மையது என்று ஓதிற்றிலர். அதற்கு இலக்கணம் யாங்குப் பெறுதும் எனின், எச்சவியலுட் பெறுதும். வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறிய அதனாற் பெற்ற தென்னை எனின், அஃது எனக்குப் புலனாயிற்றன்று. இஃதேல் வினையிலக்கணம் அறிந்தேன் ஆகுங்கால் முற்றிலக்கணமும் அறிதல் வேண்டும் அன்றே. அதனை ஆண்டுக் கூறியவாறு ஈண்டுரைத்தல் வேண்டும் எனின் உரைக்குமாறு" என்று கூறி வினைமுற்றுப் பற்றிய மூன்று நூற்பாக்களையும் காட்டி உரை வரைகின்றார். இவ்வகையால் இடப்பெயர்ச்சி செய்தாருள் முதல்வரெனத் தெய்வச்சிலையார் அமைந்து விடுகின்றார்.

இவ்விடப் பெயர்ச்சியிலும் பெயர்ச்சி வேண்டினார் விளக்கவுரை கண்ட கு. சுந்தரமூர்த்தியார்:

*"இங்ஙனம் ஆய்ந்து வைத்த அருமை பாராட்டுக்குரியதாம். பிறவுரையாசிரியர்கள் அனைவரும் இது பற்றிச் சிறிதும் நினைந்திலர். இவ்வகையில் இவ்வுரையாசிரியர் பாராட்டிற்குரியரேனும் இம்மூன்று நூற்பாக்களையும் வினையியலின் முதற்கண் வைத்திருப்பின் இன்னும் நலமாக இருக்கும் என்பது கருத்து ஆகும். முற்றின் இலக்கணத்தைக் கூறாது முற்றுக்களுக்குரிய ஈறுகளை வினையியலின் முதற்கண் கூறுதல் பொருந்தாது ஆதலான் இவை ஆண்டிருப்பதே இன்னும் பொருத்த முடையதாகும்"*.

**விளக்கம்**

*உரிச்சொல் திரிசொல் இடைச்சொல் என்பவற்றின் அடையாளத்தை எளிமையாய் அதே பொழுதில் அருமையாய் விளக்குகிறார் தெய்வச்சிலையார்.*

*"உரிச்சொல்லோடு இதனிடை (திரிசொல்லிடை) வேறுபாடு என்னை எனின்,* **உரிச்சொல் குறைச்சொல்லாகி வரும்; திரிசொல் முழுச்சொல்லாகி வரும்***" என்கிறார் (395).*

*எல் என்பதை உரிச்சொல்லெனக் கொண்டார் சேனாவரையர். எனினும் உரியியலுக்கு மாற்றாமல், உரிச்சொல்லாகக் கொண்டே ஆசிரியர் வைப்புப் போல இடையியலில் வைத்துத் தம் கருத்தை எழுதியமை அவர் உரையுள் அறியப்பட்டது . அச்சொல் இடைச்சொல்லே உரிச்சொல் அன்று என்று தெளிவிக்கிறார் தெய்வச்சிலையார்.*

*"இது (எல்) உரிச்சொல் அன்றோ எனின், அது குறைச் சொல்லாகி நிற்கும். இது குறையின்றி நிற்றலின் இடைச்சொல் ஆயிற்று" என்கிறார்.*

*எவரையும் பெயர் சுட்டிக் கூறாமல் எழுதுதல் தெய்வச்சிலையார் வழக்கு. அவ்வழக்குப்படியே சேனாவரையரை இவண் குறியாதே உரை வரைந்தார்.*

*முறைவைப்புக் கூறுதலில் மிக நுணுக்கம் காட்டுகிறார் தெய்வச் சிலையார்:*

*"பெயரை முதல் வேற்றுமை என்னாது எட்டு வேற்றுமையுள்ளும் யாதானும் ஒன்றை முதல் வேற்றுமை எனினும் அமையும் எனின், ஒருவன் ஒன்றை ஒன்றானே இயற்றி ஒருவற்குக் கொடுப்ப அவன் அதனை அவனினின்றும் தனது ஆக்கி ஓரிடத்து வைத்தான் கொற்றா என்றவழி, செய்கின்றான் முதல் வேற்றுமையாகி இம்முறையே கிடத்தலின் அமையாது என்க" என்று இலக்கண மரபினைப் போற்றுகிறார். இவர் காட்டும் வேற்றுமை எட்டன் வைப்புமுறைச் சிறப்பை வாழ்வியல் விளக்கத்துள் காண்க.*

'எல்லாம்' என்பது உயர்திணைப் படர்க்கையிலும் முன்னிலையிலும் வருவனவற்றை எடுத்துக்காட்டி "அவை இலக்கண வழக்கல்ல" (182) என்று மறுப்பு வகையாலும் மரபினைக் காக்கிறார்.

அஃறிணைக்கண் தன்மைக்கூற்று நிகழாது என்பதை, "கிளியும் பூவையும் ஆகிய சாதி எல்லாம் உரையாடும் என்னும் வழக்கின்மையானும், அவை உரைக்குங்கால் ஒருவர் உரைத்ததைக் கொண்டு உரைக்கும் ஆதலானும், ஒருவன் பாடின பாட்டை நரம்புக் கருவியின்கண் ஓசையும் பொருளும்பட இயக்கியவழிக் **கருவியும் உரையாடிற்றாதல் வேண்டுமாகலானும் அவ்வாறு வருவன மக்கள் வினையாதலால் தன்மை வினை அன்றென்க**" என உவமை நயத்துடன் விளக்கி மரபு காக்கிறார் (210).

இத்தகையவர், 'எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே' என்னும் நூற்பாவின் விளக்கத்தில் ஒருரை உரைத்துப் பின்னர், இன்னும் "எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறித்து நிற்கும் என்றவாறு, எனவே, இச்சொல் இப்பொருள் உணர்த்தும் என்னும் உரிமை இல என்றவாறாம். என்னை உரிமை இலவாகியவாறு எனின், உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடைதோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்ட துணையல்லது இவ்வெழுத்தினான் இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப்பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனவே **பொருள் பற்றி வரும் பெயரெல்லாம் இடுகுறி என்பது பெறப்பட்டது**" (151), என்பது வியப்பாக உள்ளது. இது நூலாசிரியர் கருத்தொடு மட்டுமன்றி, தாம் உரைத்த உரைக்கும் முரணாக உள்ளமை புலப்படுகின்றது!

### சில வழக்குகள்

தைந்நீராடல், ஈழத்திற்கு ஏற்றின பண்டம், சுக்ரீவன் துணையாக இலங்கை கொண்டான் என அக்கால வழக்குகள், தொன்மக் குறிப்புகள் ஆகியவற்றை ஆங்காங்குக் காட்டுகிறார்.

'கூப்பிடு தொலைவு' என நீட்டல் அளவும், 'அந்தணி' என அந்தணனுக்குப் பெண்பாலும், நெயவு தொடர்பான பல செய்திகளும், நாண்மீன் கோண்மீன் குறிப்பும் இன்னபிறவும் இவர் உரைக்கண் காணவாய்க்கின்றன. அரசன் வலத்திருந்தான் அமைச்சன்; அரசன் இடத்திருந்தான் சேனாபதி என அரசிருக்கை காட்டுகிறார்; இந்நாளில் வேளாங்கன்னி என்றும், வேளாங்கண்ணி என்றும் வழங்கப்படுவது **வேளாண்காணி** அல்லது வேளார் காணி என்பதோ என்று நினைக்க வைக்கிறார்:

"வேளார்காணி என்பது வேளார் காணியிற் பிறந்த ஆடையை அப்பெயரால் வழங்குதலின் ஆகுபெயராயிற்று" என்பது அது (111). அடுத்த

*நூற்பாவுரையிலும் வேளார் காணியைக் குறிக்கிறார் (112).* **செப்பு வகை நான்கனுள் வாய்வாளா திருத்தலையும்** *(மறுமொழி கூறாதிருத்தலையும்)* **ஒன்றாகக் கூறுகிறார்**. *ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை என்கிறார் (13).*

*தொல்காப்பியம் என்பதற்கும் இவர் இலக்கணம் கூறுகிறார்: "தொல்காப்பியம் என்பதோ எனின் அஃது ஈறு திரிந்து நின்று, அவனால் செய்யப்பட்டது என்னும் பொருளை விளக்குதலின் ஆகுபெயராகாது; காரணப் பெயராம்" என்பது அது (111).*

*அரிய செய்திகளையும் எடுத்துக்காட்டு நயங்களையும் உடையது தெய்வச்சிலையார் உரை.*

# பேராசிரியர்

தொல்காப்பியப் பின்னான்கு இயல்களுக்குப் பேராசிரியர் உரை கிடைத்துள்ளது. பேராசிரியர் என்பது சிறப்புப் பெயர் என்பது வெளிப்படை. அவர் இயற்பெயர் தெரிந்திலது.

**பேராசிரியர் பலர்**

சிறப்புப் பெயர் இயற்பெயருக்கு முன்னர் வருதல் வேண்டும் என இலக்கணம் கண்டது தொல்காப்பியம். அதன்படி பேராசிரியர் இன்னவர் என்பதில் 'இன்னவர்' என்பது குறியாமல், சிறப்புப் பெயராலேயே உலகு விளங்கும் நிலைமை உண்டாயிற்று எனக் கொள்ளலாம்.

பாலாசிரியர், இளம்பாலாசிரியர், ஆசிரியர், கணக்காயனார் என்னும் சிறப்புப் பெயர்களை அடுத்துள்ள இயற்பெயர்கள் பல, சங்கச் சான்றோர் பெயர் வரிசையில் இடம் பெற்றிருப்பதை அறிவார், இதனைத் தெளிவார்.

பேராசிரியர் என்னும் பெயரால் அறியப் பெறுவார் தமிழ்ப் பரப்பில் பலருளர். ஒருவர், பேராசிரியரால் சுட்டப்படும் ஆத்திரையன் பேராசிரியர். அவரை, "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் என்னும் பொதுப்பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன்" என்கிறார் (தொல். மர.98) தொல். உரை கண்ட பேராசிரியர். இப்பாயிரத்தை முழுமையாகச் சிவஞான முனிவர் தொல்காப்பியப் பாயிர விருத்தியுள் காட்டியுள்ளார். இவ்வாத் திரையன் பேராசிரியரே பேராசிரியப் பெயருடையாருள் பழையர் எனலாம்.

**திருக்கோவையார்**க்கு உரை கண்ட பேராசிரியர் மற்றொருவர். அவர் தொல்காப்பிய உரை கண்ட பேராசிரியரின் வேறானவர் என்பது கோவையைப் பற்றி எழுதுமிடத்தும், திருக்கோவையாரைச் சுட்டாமை யாலும், எடுத்துக்காட்டாக எங்கும் காட்டாமையாலும் விளங்கும்.

**மயேச்சுரர்** என்பாரும் பேராசிரியர் என்னும் பெயருடன் விளங்கு கின்றார். யாப்பருங்கல விருத்தியாரால் பெரிதும் பாராட்டப்படுபவர் அவர். இவ்வாறே **நேமிநாதரும்** பேராசிரியர் எனப்படுவார்.

குறுந்தொகைக்கு உரை கண்ட பேராசிரியர் ஒருவர் அறியப்படுகிறார். அவருரை கிடைத்திலது. கிடையாத உரை கொண்டு ஆய்வு செய்து 'அவர் இவர்' எனல் தீர்வு ஆகாது.

பேராசிரியர் உரை முதற்கண், நச்சினார்க்கினியர் உரை என்றே தொல்காப்பியப் பதிப்பாளர் **சி.வை. தாமோதரனாரால்** குறிக்கப்பட்டது. நச்சினார்க்கினியர் எழுதிய அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள் இயல்களுடன் இணைத்துப் பதிப்பிக்கவும் பட்டது. அவ் வுரையுள் மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு ஆகிய நான்கு இயல்களும் பேராசிரியருரை என்பதைச் செந்தமிழ் ஆசிரியர் **இரா. இராகவ ஐயங்கார்** ஆய்ந்து செந்தமிழ் இதழில் வெளிப்படுத்தினார். நச்சினார்க்கினியரின் செய்யுளியலுரைப் பதிப்பிலும் விளக்கினார். இவ்வாறு உரையாசிரியர் பெயரை அறிதலிலும் சிக்கலுண்டாயிற்று.

**பேராசிரியர் உரை**

பேராசிரியர் பொருளதிகாரம் முழுமைக்கும் உரைகண்டவர் என்பது புலப்படுகின்றது. மெய்ப்பாட்டியல் 18ஆம் நூற்பா உரையில் '**களவியலுட் கூறினாம்**' என்கிறார். அடுத்த நூற்பா உரையிலும், செய்யுளியல் முதல் நூற்பா உரையிலும் முறையே '**அகத்திணையியலுட் கூறினாம்**' என்றும், 'அகத்திணையியலுட் கூறிவந்தாம்' என்றும் கூறுகிறார். இவ்வாறே **கற்பியல், புறத்திணையியல்** ஆகியவற்றைச் சுட்டிய இடங்களும் உள. இவற்றால் பொருளதிகாரம் முழுமைக்கும் இவர் உரை கண்டார் என்பதை அறிந்து கொள்ள வாய்க்கின்றது.

பேராசிரியர் வரைந்த முதலைந்து இயல்களின் உரையும் கிடையாமல் போகவே, கிடைத்த உரைப்பகுதியின் முகப்பில் உரை கண்டவர் பெயர் இல்லாது போய்விடுதல் இயல்பு. ஆனால், விழிப்புடைய சிலர் ஒவ்வோர் இயல் முகப்பிலும் 'இன்னவர் உரை' என்று வரைவதுண்டு. அவ்வகையில் மெய்ப்பாட்டியல் முகப்பேட்டில் 'பேராசிரியர் உரை' என்னும் குறிப்பு இருந்தமை நல்வாய்ப்பாக அறிஞர் இரா. இராகவ ஐயங்கார்க்கு வாய்த்தமை பேரறிய வைத்தது. மற்றொரு குறிப்பும் அவர்க்குத் துணையாயிற்று.

மெய்ப்பாட்டியல் முதலாய நான்கு இயல்களின் தொடக்கத்திலும், "**இவ்வோத்து என்ன பெயர்த்தோ? எனின்?**" என்று உள்ளமை நச்சினார்க்கினியர் உரையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுதலைக் கண்டு கொண்டார். நச்சினார்க்கினியர் உரை இவ்வாறு இயலாமை அவருரையால் தெளிவாதலைச் சுட்டிக் காட்டி நிறுவினார்.

**காலம்**

*பேராசிரியர் இளம்பூரணர், இறையனார் களவியலுரைகாரர், யாப்பருங்கல விருத்தியார், தண்டியலங்காரர் ஆயோர்க்குப் பிற்பட்டவர் என்பதற்கு நூற்சான்றுகள் பலவுள்ளன (மெய்ப். 25; உவம. 37.). நச்சினார்க் கினியர் இவரைச் சுட்டிக் காட்டி வரைதலானும், பரிமேலழகர் பேராசிரியர் உரையை மறுத்து எழுதுதலானும் (திருக். 632) அவர்கட்கு இவர் காலத்தால் முந்தியவர் என்பது தெளிவாம். ஆகலின்* ***பதின்மூன்றாம் நூற்றாண்டின்*** *முற்பகுதியில் வாழ்ந்தவர் பேராசிரியர் என்க.*

**சமயம்**

*பேராசிரியர் கொண்டிருந்த சமயம் இன்னதென வெளிப்பட அறிய வாய்ப்பில்லை; எனினும், இவர் சிவவழிபாட்டினர் என்பது அறிய வாய்க்கின்றது. அச் சிவ வழிபாடும் நெகிழ்வுடையதாய் அமைந்துள்ள நிலைமையும் புரிகின்றது.*

*"வாழ்த்தியல் வகையே" என்னும் செய்யுளியல் நூற்பாவில் (109) வாழ்த்தப்படும் பொருளாவன, கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன; அவற்றுட் கடவுளை வாழ்த்தும் செய்யுள் கடவுள் வாழ்த்தெனப்படும்" என்று கூறி நற்றிணையிலும் அகநானூற்றிலும் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களை எடுத்துக் காட்டுகிறார். இவற்றுள் முன்னது திருமாலைப் பற்றியது; பின்னது சிவனைப் பற்றியது.*

*அடுத்துவரும் "வழிபடு தெய்வம்" என்னும் புறநிலை வாழ்த்து நூற்பாவுரையில் காட்டிய "இமையா முக்கண்", "திங்கள் இளங்கதிர்" என்பன சிவனைப் பற்றியவை. இவ்விரண்டும் இவர் இயற்றியவை என்று அறியத்தக்க பாடல்கள். மேலும், கொச்சக ஒரு போகில் (செய். 149) இவர் காட்டும் எடுத்துக் காட்டுகள் பெரும்பாலும் இவர் பாடியனவே என்று அறியக் கிடக்கின்றன. அவற்றுள் பலவும் சிவபெருமான் பற்றியவை. திருமால், மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையார் பற்றியும் பாடி யுள்ளார். இதே நூற்பாவுரையில் இளம்பூரணர் கலித்தொகைப்பாக் களையே எடுத்தாண்டமைகிறார் என்பது ஒப்பிட்டுக் காணற்குரியது.*

*கடவுளை வாழ்த்துதல், முனிவரை வாழ்த்துதல், ஆவை வாழ்த்து தல், பார்ப்பாரை வாழ்த்துதல், அரசரை வாழ்த்துதல், மழையை வாழ்த் துதல், நாட்டை வாழ்த்துதல் என்பன பழந்தமிழர் வழிவழிக் கொண் டொழுகிய வழிபாட்டியல்பினவே என்பதைச் சங்கச் சான்றோர் நூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றின் வழியே அறிந்து கொள்ளலாம். 'பார்ப்பார் வழிபாடும்' அத்தகைத்தோ எனின், "*__*பார்ப்பான் என்பான்*__

**நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான்**" என்னும் பேராசிரியர் உரையே தெளிவிக்கும் (செய். 189). 'அறிவன் தேயம்' (புறத். 16) என்பதில் வரும் '**அறிவன்**' என்பதற்குக் 'கணியன்' என உரையாசிரியர் வரைந்ததையும் அறிந்து கொள்க. ஆகலின் அறிவன் வழிபாடு அஃது என்றும், பார்ப்பான் என்னும் சொல் தூய செந்தமிழ்ச் சொல்லாதலையும், அவ்வாறே 'அந்தணன்' என்னும் சொல் இருத்தலையும் எண்ணின் இவை தமிழ் நெறிய வழிபாடுகளே என்பது விளங்கும். விளங்கவே பேராசிரியர் தமிழ் நெறி வழிபாட்டாளர் என்பது உறுதியாம். ஆரியர் கூறும் தமிழை நகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாக இவர் கூறுதலால் இவர் ஆரியரல்லர்; இப் பார்ப்பார் ஆரியரில் வேறாவர் என்பது தெளிவாம்.

மேலும் "வினையின் நீங்கி" என்னும் நூற்பாவுரையில் (மர. 94), "பெருமானடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும் பிற்காலத்தானும் முதனூலாவ தென்பது" என்று இவர் வரைவதும், 'சேவற் பெயர்க்கொடை' என்னும் நூற்பா (மர. 48) உரையில், "மாயிருந்தூவி மயில் என்றதனால் அவை தோகையுடையனவாகிப் பெண்பால் போலும் சாயல ஆகலான் ஆண்பாற்றன்மை இலவென்பது கொள்க; எனவே **செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படும் என்பது**" என்று வரைவதும் கருதத் தக்கன. இவை கட்டாயமாக நூற்பாப் பொருள் கூறும் வகையிலோ, அந்நூற்பாத்தொடரை விளக்கும் வகையிலோ அமைந்தவை அல்ல; உரையாசிரியர் தம் பற்றுமைச் சான்றாக வெளிப்பட்டு நிற்பனவாம். 'இறையனார்' என்பது நூல்யாத்தவர் பெயராகக் குறிக்கப்பட்டிருக்கவும் 'பெருமானடிகள்' என்றது இவர் தம் உணர்வு வெளிப்பாடேயாம். இவையும் பேராசிரியர் சமய உட்கிடைப் பொருளாவனவாம்.

### நூலாசிரியரை மதித்தல்

ஆசிரியர் தொல்காப்பியர் குறித்தும் அவர்தம் நூல்வழி குறித்தும் சில குறிப்புகளைப் போராசிரியர் சுட்டுகிறார்.

'எல்லா ஆசிரியருஞ் செய்த வழிநூற்கு இது (தொல்காப்பியம்) முன்னூலாதலின் இவரோடு (தொல்காப்பியரோடு) மாறுபடுதல் மரபன்றென மறுக்க. இசை நூலுள்ளும் மாறுபடுதல் அஃது அவர்க்கும் மரபன்று என்பது' என்னும் உரைப்பகுதி தொல்காப்பியர் ஆணை வழிநிற்கும் இவர்தம் செவ்வியைப் புலப்படுத்தும் (செய். 140). மேலும், "நண்டிற்கு மூக்குண்டோ எனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்" என்னும் இவருரை (மர. 31) அவர்தம் ஆணையே ஆணையெனக் கொண்டு உரை எழுதியமை காட்டும்.

அகத்தியமே முதனூல் என்றும், அதன் வழி நூல் தொல்காப்பியமே என்றும் அதனை மறுத்துக் கூறுவது வேதவழிப்படாத இக்காலத்தார்

*கூற்று என்றும், இறந்த காலத்துப் பிற பாசாண்டிகளும் (வேத வழக்கொடு மாறுபட்ட சமயத்தார்) நான்கு வருணத்தொடு பட்ட சங்கச் சான்றோரும் அது கூறார் என்றும் கூறுகிறார். மேலும் இக்கூற்றுக்குச் சான்றானவற்றை விரித்து விளக்கும் பேராசிரியர், "கடைச் சங்கத்தாருட் களவியற் பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர் இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்றார் ஆகலானும், பிற்காலத்தார்க்கு உரையெழுதினோரும் அது கூறிக் கரிபோகினார் (சான்றுரைத்தார்) ஆகலானும், அவர்* ***புலவுத் துறந்த நோன்புடையராக லாற் பொய் கூறார்*** *ஆகலானும் என்பது" என்கிறார். பல்காப்பியம், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலியவற்றுச் சான்று களையும் இவ்விடத்தே வரிசைப்படுத்திக் காட்டித் தம் கருத்தை நிறுவுகிறார் (மர. 94).*

*தொல்காப்பியம் முன்னூல் எனக் கூறும் பேராசிரியர், "மற்றுப் பல்காப்பியம் முதலியனவோ எனின், அவை வழிநூலே; தொல்காப்பியத் தின்வழித் தோன்றின என்பது" என்றுரைத்துப் பல்காப்பியம் காக்கைபாடினியம் இவைபற்றியெல்லாம் நிறுத்தி ஆய்ந்து கருத்துரைக் கிறார் (95). இத்தகைய அருமைப்பாடுகளையும், உரைநயங்களையும், தமிழ்நடை நலங்களையும் கண்ட பட்டறிவால், "பிறர்தம் உரை நெறிகளிலும் இவர்தம் உரைநெறி சாலச் சிறந்தது. இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வகுத்திருப்பரேல் அவ்வுரையே திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைபோல் தலைமை யெய்தியிருக்கும்" என முனைவர்* ***வ.சுப. மாணிக்கனார்*** *பாராட்டுகிறார் (தொல்காப்பியத்திறன், பக். 23).*

### செய்யுளியல் இடமாற்றம்

*செய்யுளியல், பொருளதிகாரத்தின் எட்டாம் இயல். இறுதியியல் மரபியல். சிலர் செய்யுளியலை இறுதியியலாகக் கொண்ட முறையும் பேராசிரியர் காலத்தில் இருந்தது என்பதை அவருரையால் அறிய வாய்க்கின்றது.*

*"இந்நூல் இலக்கணத்தினை இவ்வோத்தின் இறுதிக்கண் வைத்தான் வழக்கும் செய்யுளுமென்று விதந்து புகுந்த இரண்டிலக்கணமும் முடித் தல்லது அவற்றைக் கூறும் இலக்கணம் கூறலாகாமையின் என்பது. இக்கருத்தறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஓத்தென்ப" என்கிறார் (மர. 93). இக்குறிப்பால், செய்யுளியல் ஒன்பதாம் இயலாக இருந்ததென்றும், அதனொடு நூல், நூல்வகை, உரை பற்றிய நூற்பாக்கள் அதன் நிறைவில் இருந்தன என்றும் எண்ணுதற்கு இடனுள்ளது. இதனை மேலாய்வு செய்தல் வேண்டத்தக்கதாம்.*

### முறை வைப்பு

*பேராசிரியர் ஓரியலுக்கும் அடுத்துவரும் இயலுக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார். ஒரு நூற்பாவுக்கும் அடுத்துவரும் நூற்பாவுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டுகிறார். ஒரே நூற்பாவில் வரும் செய்திகளின் முறை வைப்பையும் உன்னிப்பாக எண்ணி எழுதுகிறார்.*

*'மேலோத்தினோடு இவ்வோத்தினிடை இயைபு என்னையோ எனின்' என்று மெய்ப்பாட்டியல் முதல் நூற்பாவில் விளக்குகிறார்.*

*'நகையே அழுகை' எனத் தொடங்கும் மெய்ப்பாட்டியல் நூற்பா விளக்கத்தில் மேல் வரும் எட்டு வகை மெய்ப்பாடுகளும் முறைமுறையே வைக்கப்படுதலின் அமைதியை விரித்துரைக்கிறார். ஒரு நூற்பாவொடு தொடரும் மஃறொரு நூற்பாவின் தொடர்பு காட்டுவதாக இவை அமைகின்றன.*

*"பாராட் டெடுத்தல்" என்னும் நூற்பாவில் (மெய்ப்.16), "புணர்ச்சிப் பின்னரல்லது பாராட்டுள்ளம் பிறவாமையானும், அதன் பின்னரல்லது பிறரோடு கூற்று நிகழாமையானும், அக் கூற்றுக் கேட்டல்லது தமரான் ஈரமில் கூற்றம் கோடலின்மையானும், அவையெல்லாம் முடிந்தவழித் தலைவன் மேற்சென்ற உள்ளத்தாற் கொடுப்பவை கோடற்குறிப்பினளாம் ஆகலானும் அம்முறையான் வைத்தான் என்பது" என்கிறார். இவ்வாறு முறைவைப்புக் கூறுதலால், நூற்சிறப்பை நன்கு வெளிப்படுத்துகிறார் பேராசிரியர்.*

### வரையறை

*ஒன்றைப் பற்றிக் கூறுங்கால் வரையறைப்படுத்திக் கூறும் நெறியை மேற்கொள்கிறார் பேராசிரியர்.*

*அச்சச் சுவையைக் கூறும் பேராசிரியர், "தன்கட்டோன்றலும் பிறன்கட்டோன்றலும் என்னும் தடுமாற்றமின்றிப் பிறிது பொருள் பற்றியே வரும்" என்பதும் (மெய்ப். 7), சமனிலை என்பது, "உலகியல் நீங்கினார் பெற்றியாகலின் ஈண்டு உலகியல் வழக்கினுட் சொல்லிய திலன்" என்பதும் போல்வன வரையறைச் சான்றுகள்.*

### வகைப்படுத்துதல்

*வகைப்படுத்திக் கூறுதலும் பேராசிரியர் மேற்கொண்ட நெறிகளுள் ஒன்று. "நகையென்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப" என்றும் (மெய்ப். 3), "முன்னம் என்பது உயர்ந்தோரும் இழிந்தோரும் ஒத்தோரும் தத்தம் வகையான் ஒப்பச் சொல்லுதற்குக் கருத்துப்படச் செய்தல்" என்றும் (செய். 1) வரும் இன்னவை வகைப்படுத்திக் கூறற் சான்றுகள்.*

### நூற்பா அமைதி காட்டல்

ஒரு நூற்பாவின் யாப்புறவை மற்றொரு நூற்பாவின் யாப்புறவுடன் இயைத்துக் கூறுதலையும் பேராசிரியர் மேற்கொள்கிறார்.

"தெய்வமஞ்சல்" என்னும் நூற்பாவில் (மெய்ப்.24) "பதினொன்றனை எண்ணிச் சிறந்த பத்து இவை என்ற தென்னை எனின், அதனை, 'ஒன்பதும் குழவியோடிளமைப்பெயரே' என்ற மரபியற் சூத்திரம்போல மொழி மாற்றியுரைக்கப்படும்" என்கிறார்.

### உரை நூற்பா

தாமே உரை நூற்பா வகுத்துக் கூறுவதுபோல் கூறும் இடங்களும் பேராசிரியர் உரையில் உள. அவற்றுள் ஒன்று: இருவகை நிலனென்பன, 'உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்' அன்றோ எனின், என்று அமைத்துக் கொண்டு, அதனை விளக்குதலால் அவர் உரை நூற்பா யாத்து விளக்குதல் அறியப் பெறும் (மெய்ப்.1). இவ்வாறே 'நிரனிறுத் தமைத்தல்' என்னும் நூற்பா உரையில் (உவம.37) 'அகனமர் கேள்வன்' என்றோர் நூற்பா வகுத்து 'அதன்மேல்' என்றோர் சூத்திரஞ் செய்யின் அவையும் அலங்காரம் எனப்படும் என்பது" என்பார். அதுவும் அது.

### பாடம் கூறுதல்

'கூற்று வகை' என்பதற்குக் 'கூற்றிவை' எனப் பாடமுண்மையைச் சுட்டும் பேராசிரியர், "இவை என்பது பாடமாயின் எண்ணிய மூன்றனையும் தொகுத்தவாறே பிறிதில்லை" என்கிறார் (செய்.1). இவ்வாறு பாடம் கூறலும் பேராசிரியர் உரைமுறைகளுள் ஒன்றாம்.

### வேற்றுமை கூறுதல்

வேற்றுமை கூறுதலையும் ஒரு நெறியாகப் பேராசிரியர் கொண்டுள்ளார். அவற்றுள் ஒன்று: "குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னை எனின், பிறப்பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத் தக்க ஒழுக்கம் குடிமை எனப்படும்" என்கிறார் (மெய்ப்.25).

### மறுப்புரை

மறுப்புக் கூறுதல் பேராசிரியர் உரையில் தனிச்சிறப்புடையது. மிக விரிவாக ஆய்ந்து படிப்படியாக விலக்கியும் விளக்கியும் மறுத்து ஆசிரியர் கோளை நிலைநாட்டல் அவர்தம் முறைமை.

தளை என்பதோர் உறுப்புக் கொள்வாரை மறுத்துரைத்தல் அதற்கொரு சான்றாம் (செய்.1).

### பிறருரை

தாம் உரைக்கும் மரபுவழி உரைக்கு வேறுவகையாலும் உரை கூறுவாரை 'இன்னொரு சாரார் இவ்வாறுரைப்ப' என்பார் பேராசிரியர் (செய். 11). ஆசிரியர் கூறும் இவ்விலக்கணம் பிறரால் இப்பெயரால் கூறப்படும் என்பதையும் சுட்டுதல் பேராசிரியர் உரைமுறைகளுள் ஒன்று. வடநூலாசிரியர் வழிமுறை இன்னதெனக் காட்டலும் உண்டு.

அசையும் சீரும் இசையொடு சேர்த்துதல் என்பதை வகையுளி என்று பிறர் கூறுவதைச் சுட்டுதல் முன்னதற்கு எடுத்துக்காட்டாகும் (செய்.11). குரு, இலகு என்பவற்றைச் சுட்டிப் **பிரத்தாரம்** முதலாக எடுத்துக் காட்டுவது பின்னதற்குச் சான்று (செய். 51).

### சொற்பொருள் விளக்கம்

சொற்பொருள் விளக்கம் தருதலில் பேராசிரியர் தனிச்சிறப் புடையவர். இவர் தரும் சொல் விளக்கத் தூண்டல் வழியாகவே "உரை யாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம்" என்றொரு நூல் எம்மால் தொகுக்கப்பட்டது. அதன் முன்னுரையில் "மெய்ப்பாடு என்னும் சொல் முதலாக அப்பேராசிரியர் தரும் சொற்பொருள் விளக்கம் 'நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து' தமிழ்ச் சொற்களின் தனியுயர் மாண்பில் தோய்ந்து கிடக்கச் செய்தது. அன்றே (ஆண்டு 1951) சொற்பொருள் விளக்கவித்து என்நெஞ்சத்தில் ஊன்றப் பெற்றது" என்பது அது. அப்பேராசிரியர் உரையால் நாம் முதற்கண் பெறவாய்த்தது 'மெய்ப்பாடு' என்னும் சொல்லின் விளக்கம்.

"மெய்ப்பாடென்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோ ராற்றான் வெளிப்படுதல்" என்பது (மெய்ப்.1).

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

என்னும் நூற்பாவில் (மெய்ப்.9),

"வீரத்தைப் பெருமிதம் என்றெண்ணினான். என்னை? எல்லா ரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம் எனப்படும் என்றற்கென்பது.

கல்வி என்பது, தவமுதலாகிய விச்சை.

தறுகண் என்பது, அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமை.

இசைமை என்பது, இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை.

*கொடை என்பது, உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்தல்"*

*இவ்வாறு பன்னூறு சொற்களுக்கு விளக்கம் வரைகிறார் பேராசிரியர்.*

**பேராசிரியர் சால்பு**

*நூலாசிரியர் எண்ணத்தைத் திட்டமாகத் தெளிய முடியாத இடத்தில் தாம் பொருள் கொள்ளும் முறையால் அவர்க்குக் குறை நேர்ந்துவிடக் கூடாதே என்னும் அச்சத்தால், '**நாம் பகுத்து எண்ணிக் கொண்டாம்**' எனத் தம்மேல் அக்கருத்துடைமையை அள்ளிப் போட்டுக் கொள்ளுதல் பேராசிரியர், 'பேராசிரியரே' என்பதை மெய்ப்பிக்கும் சான்றாம்.*

*'பிறப்பே குடிமை' என்னும் நூற்பா, ஒன்பது பொருள்களை எண்ணுகின்றது. அதனைப் பத்தாக்கிக் கொள்கிறார் பேராசிரியர். அதனால்,* "இங்ஙனம் ஓதிய வகையான் இவை ஒன்பதாகலிற் பத்தாமாறு என்னை எனின், காமவாயில் எனப்பட்ட இயற்கையன்பு, வடிவுபற்றி யல்லது தோன்றாமையானும் குணம் பற்றித் தோன்றுவன செயற்கையன்பு ஆகலானும் உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினான் ஆயினும், உருவு சிறப்புடைமையின் அதனை நாம் **பகுத்து எண்ணிக்கை கொண்டாம்** என்பது. என்னை?

> *"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ*
> *டைந்துடன் மாண்ட தமைச்சு"*

என்புழி, 'கற்றறிதல்' என்பதனை இரண்டாக்கி ஐந்தென்பவாகலின்" என்கிறார். (மெய்ப். 24).

**சிறப்புப் பெயர்கள்**

*பேராசிரியரின் பரந்த புலமை பெரிது. அதனை இவர் சுட்டும் நூற்பெயர்களும் சிறப்புப் பெயர்களும் காட்டும்.*

*அகத்தியர், அம்மானைப்பாடல், அவ்வையார், ஆனந்தவுவமை, இசைக்கூத்து, எழுகூற்றிருக்கை, ஏகபாதம், ஏழிற்கோவை, ஐயனாரிதனார், கட்டளைக் கலி, கடகண்டு, கடைச்சங்கத்தார், கலம்பகம், கலித்தொகை (நூற்றைம்பது கலி), களவியல், காக்கை பாடினியார், கானப்பேர், குறிஞ்சிப் பாட்டு, கைக்கிளைப் படலம், கொங்குவேளிர், கோவை, சக்கரம், சகரர், சங்கச்சான்றோர், சாய்க்காடு, சிற்றிசை, சிறுகாக்கை பாடினியார், சீத்தலைச்சாத்தனார், சுழிகுளம், தகடூர் யாத்திரை, நக்கீரர், நரிவெரூ உத்தலையார், நாடகச் செய்யுள், பட்டிமண்டபம், பதினெண்கீழ்க்கணக்கு,*

பரணி, பரிபாடல் (பரிபாடல் எழுபது), பாட்டும் தொகையும், பாட்டு மடை, பாவைப்பாடல், பெருந்தேவனார் பாரதம், பெருமானடிகள் (இறையனார்), பேரிசை, பொய்கையார், மாலை,. மிறைக்கவி, முத்தொள் ளாயிரம், மூவடி முப்பது, மோதிரப்பாட்டு, யாப்பதிகாரம், வஞ்சி, வசைக்கூத்து, வரி, விளக்கத்தார் கூத்து என்பனவும் பிறவும் இவர் சுட்டிச் சொல்லும் சிறப்புப் பெயர்கள்.

**உலகியலறிவு**

பேராசிரியர் கொண்டிருந்த உலகியலறிவு ஆங்காங்கு அறியக் கிடக்கின்றது. ஆரியர் கூறும் தமிழை நகைச்சுவைக்கு எடுத்துக்காட்டு கிறார் (மெய்ப். 1). சாதித்தருமம் போற்றுதலைக் குறிக்கிறார் (மெய்ப். 12). காடுகெழு செல்வி (காளி) வழிபாட்டைப் பல இடங்களில் கூறுகிறார் (மெய்ப். 12; செய். 149). நான்கு வருணங்களைக் குறிக்கிறார் (மெய்ப். 25). தமிழில் மந்திரப்பாட்டு இருந்ததைச் சுட்டுகிறார் '(செய்.158; 178). 'ஆரியம் நன்று தமிழ் தீது' என்றவன் சாவவும், உயிர்த்தெழவும் பாடிய பாட்டுகளை யுரைத்து, இவை "தெற்கண் வாயில் திறவாதபட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் சாவவும் பாடிய மந்திரம்" என்று குறிப்பு வரைகிறார் (செய்.178). சீட்டுக்கவி வரைதல் வழக்கை 'ஓலைப்பாயி (சு)ரம்' என்கிறார் (செய்.149). அவ்விடத்திலேயே களம்பாடு பொருநர் கட்டுரை, தச்சு வினைமாக்கள் சொற்றொடர் என்பவற்றையும் குறிப்பிடு கிறார். "ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடியது", "சிறுகுரீஇயுரை", "தந்திரவாக்கியம்" என்பவற்றையும் (செய். 173), யானை, கமுகு, நெருப்பு என்னும் பொருள் தரும் விடுகதைகளையும் (செய்.176), குறிப்பு மொழிக்கு 'யானை' என்பதையும் (செய்.179) இவர் எடுத்துக் காட்டுப் பாடல்களால் கூறுதல் அக்காலத்து மக்களிடை வழங்கிய வழக்கின் தொகுப்பு எனற் பாலன. புலவுத் துறந்த துறவோர் பொய் கூறார் என்று கூறுவதால் அக்காலத் துறவோர் சிறப்பும் (மர.94), புதல்வர்க்குப் பிணி இல்வழியும் எவனாங்கொல் என்று நடுங்குதல் அன்பான் நடுங்குதலாம் என்னும் உளவியல் செய்தியும் (மெய்ப்.12) கூறும் பேராசிரியர் உலகியல் திறம் பெரிதென அறியலாம்.

**இலக்கிய வன்மை**

'புகுமுகம் புரிதல்' முதலாக வரும் மெய்ப்பாடுகள் அனைத்துக்கும் முறையாய் அமைந்த எடுத்துக் காட்டுப் பாடல்கள் பேராசிரியர் இயற்றியன என்றே கொள்ள வாய்க்கின்றன; இவர்தம் இலக்கியப் படைப்புச் சீர்மையை விளக்குவனவாக அமைகின்றன. அன்றியும் இவர் சில இடங்களில் வரையும் உரையே பாவாக இயலுதல் காணக்கூடியனவாம்.

மெய்ப்பாட்டியல் பன்னிரண்டாம் நூற்பாவில்,

*"பார்ப்பா ராயிற்,*
*குந்தி மிதித்துக் குறுநடை கொண்டு*
*வந்து தோன்றலும்,*
*அரசராயின்,*
*எடுத்த கழுத்தொடும் அடுத்தமார்பொடும்*
*நடந்து, சேறலும்,*
*இடைய ராயிற்,*
*கோற்கையும் கொடுமடி யுடையும்*
*விளித்த வீளையும் வெண்பல்லு மாகித்*
*தோன்றலும்"*

என்பதும்,

*"அடக்கம் என்பது, ........*
*பணிந்த மொழியும் தணிந்த நடையும்*
*தானை மடக்கலும் வாய் புதைத்தலும் முதலாயின"*
*"வரைதல் என்பது,*
*காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும்*
*ஒழுக்கம்"*

என்பதும் ஆகிய இவற்றைப் பார்த்த அளவான் எதுகை மோனைத் தொடை நலம் கெழும நடைபயிலுதல் தெளிவாம்.

❖❖❖❖❖

**குறிப்புகள்**

<u>**குறிப்புகள்**</u>